அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Lic# M08007147 Mortgage Agent
Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com

# தாய் வீடு

THAIVEEDU பெப்பிரவரி 2010 HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®




RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு
வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000

MORTGAGE AND FINANCIAL SERVICE
Guaranteed Lowest rate
Considered as your mortgage is done
Please call @ 416-939-8789
Theven Kankesu
Mortgage intelligence

PMCI MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of
Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

Ahilan
Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002


"MAKING YOUR DREAM DEAL COME TRUE"
HOMELIFE HIGHER STANDARDS
மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்"
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
31 Progress Avenue Suite 210 ★ Toronto, Ontario, M1P 4S6
Phone: 416-298-3200 Fax: 416-298-3440
Vasanthy Niranjan
Direct:416-845-8272
Broker
vasanthyne@gmail.com
Kirew Kanagasabai
Office:416-298-3200
Broker of Record
Kirewk@yahoo.com
Warden/Finch
$159,900
2 Bedrooms, 2 Washrooms
Beautiful Location, Renovated
Brand new 5 Appliances
close to all amenities
Mclevin/Sewells
$285,000
Basement Finished/Sep Entrance
4 + 2 Bedrooms/ 4 Washrooms
Updated Main Floor Kitchen
with granite counter top
Ellesmere/Midland
$298,000
3 Bedrooms , 2 Washrooms
Basement Fin w/o
Fabulous Home in Demand
Midland Park Area
Finch/Midland
$309,000
4+2 Bedrooms, 3 Washrooms
Basement Finished
Close to School, All Transit
2-Car Garage
Lawrence/Victoria Park
$329,000
3+1 Bedrooms, 2 Washrooms
Basement Finished/Sep Entrance
Steps to Victoria Park & Lawrence
Min to TTC, School &Shops
Lawrence/Port Union
$334,900
3 Bedrooms, 3 Washrooms
L-Shape Deck And Fenced
Back Yard
Renovated Kitchen
Markham/Sheppard
$338,000
Basement Finished/Sep Entrance
4+1 Bedrooms, 2 Washrooms
Hardwood Floor Thru-Out
Stone Gas Fireplace
Finch/Middlefield/Mcnicoll
$339,000
3+1 Bedrooms, 3 Washrooms
Basement Apt. Finished
A minute walking to Middlefield
Renovated Home
Markham/Denison
$389,900
3+1 Bedrooms, 4 Washrooms
2 Kitchen/Basement Apt.
Premium Lot Backs On to
Park/ Prof. Finished
Markham/14th
$22.50 Per Sq Ft.
Multi-Use
Total Area:600 Sq Ft.
Zoning: Major Commercial
Garage:Outside/Surface
Bramlea/Sandalwood
$359,900
3+1 Bedrooms, 3 Washrooms
Semi-Detached/Stainless Appl.
Spacious House On Premium Lot.
Hardwood floor.
Mavis/Derry Rd
$369,900
3 Bedrooms, 3 Washrooms
Basement Finished/Semi-Detached
Hardwood Floor /Close to
Hwy, School, Transportation
Kennedy/Steeles Ave E.
$369,900
3 Bedrooms, 3 Washrooms
Updated Home w/New
Windows, Furnace/Well Kept
Close to Pacific Mall
Dixie/Bovaird
$373,000
4 Bedrooms. 3 Washrooms
2485 Sq. ft Ashley Model
Beautiful Cozy Family Room
Large Eat in Kitchen
Torbram/Bovaird
$375,800
4+2 Bedrooms, 4 Washrooms
Basement Finished sep entrance
Child Safe Street/new paint
Close to all amenities
Bovaird/Bramalea
$380,000
3 Bedrooms, 3 Washrooms
Well Maintained Home
Ceramic Tiles in Hallways &
Kitchen
Close to all amenities
Airport Rd/North Park
$384,900
4 Bedrooms, 3 Washrooms
Detached/Spacious & Bright
Huge Open Concept Living &
Dinning/ Appx. 4.5 Years New
W of Mccowan/ Bur Oak
$399,000
3 Bedrooms, 3 Washrooms
Living + Dining Combined
Family W/Gas Fireplace
9"ft Ceiling in Main Fl.
Close to all amenities
Markham Rd/Steeles Ave.
$399,900
3+1 Bedrooms, 2 Washrooms
Semi-Detached/ Basement Finished
Very Well Maintained/Bright &
Gorgeous, Double Door/Cov. Porch
Close to all amenities
TO PLACE
YOUR HOUSE HERE
CONTACT US NOW !
416 - 845- 8272
www.Homelifetoday.com
Thinking of a career change?
Or just starting out in Real Estate?
HomeLife Today Realty Ltd., Brokerage* Wants to Talk to YOU
Contact: Kirew Kanagasabai - Broker of Record Tel: 416-298-3200 E: kirewk@yahoo.com
VN Financial Service
Vasanthy Niranjan ★ Mortgage Broker ★ Lic. # M08010387 ★ Phone: 905-415-1676
Residential - First & Second Mortgages ★ First time Buyers ★ New Immigrants ★ Self Employed ★ Refinancing & Switching

## மனித அவலம்

மிகப் பெரிய ஒரு கொடுமையை இயற்கை ஹெய்ட்டியில் செய்து முடித்துள்ளது.

அந்த அப்பாவி மக்கள் மீது இயற்கைக்கு என்ன கோபம்?

ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்கள் இந்த இயற்கையின் கோரத்தால் கொல்லப்பட்டுள்ளனர். பல இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மண்ணில் இனியும் மக்கள் வாழ முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஹெய்ட்டியில் அந்த நாட்டின் நாளைய மனிதர்களான சிறுவர்கள், “நாம் இப்போதும் உயிரோடு இருக்கின்றோம்” என்று தெருக்களில் நின்று பசியோடு பாடல்களைப் பாடித்திரிகின்றனர். இந்த பாடல்கள் உலகெங்கும் உள்ள நல்ல மனிதர்களின் காதுகளில் அல்ல... இதயத்தில் விழ வேண்டும்.

ஈழத் தமிழர்கள் நாம், இந்தத் துயரத்தை உணர்வோம்.

சுனாமியில் பல்லாயிரக்கணக்கானவர்களை நாம் பலிகொடுத்தோம். தமிழருக்கும் இன்று மட்டுமல்ல என்றுமே மறக்க முடியாத ஒரு துயரச் சம்பவம் அது. துயரம் என்பது என்னவென்று எமக்கு நன்றாகவே தெரியும். அந்தத் துயரத்தின் வலி எம் நெஞ்சைவிட்டு இன்னும் அகலவில்லை.

நாம் துயருற்றிருந்த வேளையில் எமக்கு உதவியவர்கள் பலர். எமக்கு உதவவேண்டுமென்று நாம் பலரை எதிர்பார்த்தோம். ஆம் அந் நிலைதான் இன்று ஹெய்ட்டி மக்களுக்கு.

எல்லா மக்களும் தங்களால் இயன்ற அளவில் ஹெய்ட்டி மக்களுக்கு உதவ வேண்டும். பசியோடும், வாழ்வு இழந்தும் தெருக்களில் நிற்கின்ற இந்த மக்களுக்கு நாம் எம்மால் முடிந்ததைச் செய்ய வெண்டும்.

ஹெய்ட்டி மக்களுக்காக, கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தினர் சில மணிநேரத்தில் பல ஆயிரம் டொலர் சேகரித்து அனுப்பியுள்ளார்கள்.

ஒவ்வோர் அமைப்பினரும் தங்களால் முடிந்த உதவியைச் செய்யவேண்டும்.

III

அட்டைப்படத்தில் (மாதிரிக்காக)
பிரணவி பஞ்சலிங்கம், சிவமணி கந்தையா, வர்ணவி பஞ்சலிங்கம் ஆகியோர்.

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன்.

ஓவியங்கள் : ரமணி (இலங்கை), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), அருந்ததி ரட்ணராஜா (இங்கிலாந்து) மு.சு. சிவகுமாரன் (ஜேர்மனி

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Toronto விநியோகம் : கிளி (சிவராஜா)
Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா 1-514-299-3186
Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு 1-613 -276-7253

Tel : 416-646-3422, 416-400-6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

3D தொலைக்காட்சி

# பல தோற்ற மயக்கங்களோ.. வெறும் காட்சிப் பிழைதானோ...!





“காட்சிகள்” தொலைக்காட்சித் திரைக்கு வெளியே தோன்றும் நுட்பத்துடன் 3D தொலைக்காட்சிகள் சந்தைக்கு வரவிருக்கின்றன. நாம் தொலைக்காட்சி பார்க்கும் முறையையே இவை மாற்றிவிடலாம் என நம்பப்படுகிறது. இவற்றின் தொழில்நுட்பம், சமூகத்தாக்கங்கள் பற்றி ஆராய்கிறது இக்கட்டுரை.



### ஹெய்ட்டி - பேரழிவு பேராசை கொண்ட குறுநிலம்

- கந்தசாமி கங்காதரன்

ஹெய்ட்டியில் மிகப்பெரிய பேரழிவுக்கு, முக்கிய காரணம் நிலநடுக்கத்தினைத் தாங்கிக்கொள்ளக்கூடிய வகையிலான கட்டடங்களும் இல்லாததே. 23



### இன்பியலால் பரவும் நோய்கள்

- கந்தையா பரநிருபசிங்கம்


இன்பியலால் பரவும் பல நோய்கள் சரியான பாதுகாப்பு முறைகளைக் கையாளாததாலேயே உருவாகின்றது. 41



### விமானநிலையத்துத் துச்சாதனன்கள்

- குரு அரவிந்தன்

தீவிரவாத நடவடிக்கைகளால் விமானப் பயணிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விடுகிறது. மிகவும் இலகுவானதாகவே இருந்த விமானப்பயணத்தில் இப்போ பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கின்றன. 74



### மாறவிருக்கும் வாசித்தல் முறை: அப்பிள் அறிமுகப் படுத்தும் iPad

- கருணா

அப்பிள் நிறுவனம் வெளியிட்டிருக்கும் iPad, வாசித்தலில் பல மாற்றங்களை ஏற்படுத்தப்போகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியில் தாங்கள் அடிபட்டுப்போய் விடுவோமோ என்று அங்கலாய்த்த நூல்வெளியீட்டாளர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் புதிய உற்சாகம் பிறந்துள்ளது. 79

ஆறாவது ஜனாதிபதி தேர்தலின் பின்னணியில்... — அ. கணபதிப்பிள்ளை — 04
சிறுநீர் நோய்கள் — சிவாஜினி பாலராஜன் — 13
மனநிலை ஒழுங்கீனங்கள் — ஜீவா திசைராஜா — 27
H1N1 வைரசு நோய் — சிவா சுப்ரா — 43
குஸ்தி போட்டுக்கொள்ளும் ‘கூகிளும் சீனாவும்’ — மாறன் செல்லையா — 44
பதின்ம முன் வயதினரின் வளர்ச்சிப் படிநிலைகள் — சிவவதனி பிரபாகரன் — 54
சக்தி சேமிப்பில் Insulation — ரவி ரவீந்திரன் — 58
காப்புறுதியும் நம்பிக்கைத் தகைமை எண்ணும் — செந்தூரன் புனிதவேல் — 61
...ஆற்றலுள்ள செல்லிடத் தொலைபேசிகள் — பொன் பாலராஜன் — 73
லெமூரியாக் கண்டம் — முருகேசு பாக்கியநாதன் — 77
எமது கொல்லைப்புறத்துப் பலா — பொ.கனகசபாபதி — 81
நடிக்காத நாடகம் — K.S. பாலச்சந்திரன் — 83
கடன் — அ. முத்துலிங்கம் — 87
வில்லிசை வேந்தன் சின்னமணி — ‘சோக்கெல்லோ’ சண்முகம் — 94
காப்புறுதி .... குழப்பங்கள் — சிறீதரன் துரைராஜா — 98

மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

# ஆறாவது ஜனாதிபதி தேர்தலின் பின்னணியில் சிங்களவர்களின் அரவணைப்பும் தமிழர்களின் கேள்வியும்

- அ. கணபதிப்பிள்ளை -

இலங்கையில் ஆறாவது ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து திரும்பவும் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகி விட்டார். என்றும் பதவிபோகா ஜனாதிபதி என்று தன்னையேதான் புகழ்பாடியிருந்தாலும், அதற்கு நிலைமைகள் சாதகமாக இருந்து விட்டன.

மீண்டும் ஜனாதிபதி என்ற நிலையில் ஒற்றையாட்சி ஜனநாயகக் குடியரசின் அரசியற் திட்டத்தின் பாதுகாவலனும், பௌத்த சிங்கள முதன்மை நிலைக்கு தன்னை அர்ப்பணித்தவனும், இலங்கை என்ற ஒரு நாட்டை தமிழீழத்தைக் கைப்பற்றியதன் மூலம் பேரராசாக்கிய பெருமையுடையவனும் ஆகிய பெருமிதங்களுடன், இந்த நாட்டைக் கட்டி எழுப்பும் பணியினைத் தொடர மக்களாற் பணிக்கப்பட்டிருக்கிறார்.

தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 57.88 சதவீத வாக்குக்களைப்பெற்றுள்ளமை அவர் எதனையும் செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்ட நிலையில் இருக்கிறார் என்பதனைத் துலாம்பரப்படுத்தியிருக்கிறது. சுமார் மூன்றில் இரண்டு சதவீதமானவர்களின் ஆதரவு தனக்கு இருக்கிறது என்பதனைக்குறிப்பிடும் அளவுக்கு இந்த வெற்றியமைந்திருக்கிறது. இலங்கையில் 22 மாவட்டங்களில் 16 மாவட்டங்களில் முதலிடத்தினைப் பெற்றுள்ள இவர், சிங்கள மக்களின் ஏகோபித்த சம்மதத்தையும் பெற்று மகிந்த சிந்தனையின் முடிவுறாப் பகுதிகளை முடித்து வைக்க முடியும் என்ற முழு நம்பிக்கையுடன் இருக்கிறார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் நுவரெலியாவிலும் இவருடன் போட்டியிட்ட நான்கு நட்சத்திர இராணுவத் தளபதியும் விடுதலைப்புலிகளுடனான போரில் வெற்றியினை ஈட்டிக் கொடுத்தவருமான சரத் பொன்சேகா முதல் நிலையில் இருந்திருக்கிறார். மகிந்த ராஜபக்ச முதன்நிலையிருக்கும் சிங்கள மாவட்டங்களில் 70 தொடக்கம் 80 சதவீதமான வாக்குகள் பதிவாகியிருக்கின்றது. வடக்குக்கிழக்கு மாகாணங்களில் 4 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையிலான வாக்குகளே பதிவாகியிருந்தன. கிழக்கு மாகாணத்தில் 60 சதவீதவாக்குகளும் வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் 18 சதவீதத்துக்குக் குறைந்த வாக்குகளும் பதிவாகியிருந்தன. கிளிநொச்சியில் 4 சதவீதமும் முல்லைத்தீவில் 10 சதவீத வாக்குகளும் மன்னார், வவுனியாப் பகுதிகளில் முறையே 48உம் 40 சதவீதம் வரையான வாக்குகள் பதிவாயிருந்தன.

சிங்கள மாவட்டங்களில் தேர்தல் 'ஆட்சி மாற்றத்துக்கும் ஆட்சி மாற்றப்படாமைக்கும் இடையிலான ஒரு காரணத்தை முன்வைத்தே வாக்குகள் பதிவாகப் பெற்றன.' வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாக்குப் பதிவு செய்ய வேண்டியதன் எதிர்பார்ப்போ பலவாக இருந்தன.

தேர்தலில் பங்கு கொள்ளமுடியாது என்ற திடகாத்திரத்துடன் இருந்தனர் சிலர். அரசியற் திட்டத்தினை மாற்றுவதன்மூலம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவ முறையினை முதன்மைப்படுத்தி பிரதமருக்குக் கூடிய அதிகாரம் கொடுத்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையினை ஒழிக்க வேண்டும் என்ற எதிர்கட்சியின் கோரிக்கையினை ஏற்றுக் கொள்ளுவதன்மூலம் தேசிய ஜனனாயக முன்னணிக்கு வாக்களித்தனர் சிலர். போர்க் குற்றவாளிகளாக்கக் கூடிய, போரை நடாத்தியவரும் நடாத்த உத்தரவிட்டவரும் தமிழர் பார்வையில் ஒரே விதமானவர்களாகவேயிருந்தனர். அதில் சரத் வந்தால் ராஜபக்ச குடும்பத்தைக் கூட்டில் நிறுத்தலாம் என எதிர்பார்த்தனர் சிலர். டக்களஸ், கருணா இருவரையும் மந்திரிபதவியிலிருந்து வீழ்த்தவேண்டுமென்றிருந்தனர் சிலர், அதேபோல் அவர்களுக்குச் செஞ்சோற்றுக்கடன் தீர்த்தனர் சிலர். இருவரது அரசியலும், கூட்டணி அரசியலும் தனது எதிரும் புதிருமான செயற்பாடுகளின் விளைவுகளைக் கொடுத்திருந்தன. தமிழர்களுக்குப் பேரம்பேசும் குறைந்தபட்ச சக்தியையாவது பெறமுடியும் என எதிர்பார்த்தனர் சிலர்.

கிழக்கு மாகாண சபையின் தப்பிப்பிழைத்தலுக்கும், நடக்க போகும் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கும் ஒத்திகை போன்றதுமான ஒரு செயற்பாடாக இதனைப் பார்த்தனர் சிலர். வடக்குக் கிழக்கு வன்னிப்பகுதிகளில் குடியேற்றிய சிங்களவர்களும், இராணுவத்தினரும், இந்தத் தேர்தலில் சிங்களப்பெரும்பான்மை ஜனநாயகத்தின் செயற்பாடுகள் துலாம்பரமாகத் தெரியவேண்டும் என்றும் எதிர்பார்த்தனர். தமிழர்களைப் பயன்படுத்தி இத்தேர்தலில் வெற்றிபெற முடியுமென எண்ணினர் ஒருசிலர், ஒருவழியாக ஒற்றுமைப்பட்ட இலங்கையில் ஒருதேர்தலை நடாத்திக் காட்டி வடக்குக் கிழக்கு மக்களைப் பங்காளிகளாகக் காட்டவேண்டும் எனவும் எதிர்பார்த்தனர் ஒரு பகுதியினர்.

யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில், யார் ஆண்டாலென்ன யார் வெற்றிபெற்றாலென்ன ஒரே விதமான விளைவே கிட்டும் என்பதனை எதிர்பார்த்திருந்தனர். அதற்கு முகவுரை வழங்குவதுபோல் எந்த அரசாங்கம் பதவி பெற்றாலும் அதனுடன் சேர்ந்து இயங்கத் தயாராக இருப்பதாக இந்தியா தேர்தலுக்கு முன்னர் தெரிவித்திருந்ததனை நோக்கியிருந்தார்கள்.

எல்லாம் இழந்துவிட்ட நிலையிலிருக்கும் மக்கள் தங்களை மீளவும் வாழும் நிலைக்குள் கொண்டு வருவதற்குக் குறைந்தது ஐந்தாண்டு காலமாவது தேவை என்பதனை உணந்திருக்கிறார்கள். மரணபயத்தை மறந்து, இழப்புக்கள் கொடுத்த சோகங்களை மறந்து, உறவுகளை மீண்டும் ஒன்றாக்கி வாழ்வதற்கு இன்னமும் எத்தனை தலைமுறை கடந்தாக வேண்டியிருக்குமோ என்று ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

2005இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ச சகோதரர்கள் எமில்காந்தனூடாக 180 மில்லியன் ரூபாக்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்கித் தேர்தலில் வெற்றி பெற்றதாக டிரான் அலஸ் கூறியிருந்தமையும், சந்திரிகா ரணில் கூட்டுச் சேர்க்கையும், விடுதலைப்புலிப் பெண்போராளிகளை மான பங்கப்படுத்தியமை தொடர்பான ஒளிப்படங்கள் வெளியிட்டமையும், போர்க்குற்றங்கள் தொடர்பான 'டப்ளின்' தீர்ப்புக்கள் வெளிவந்தமையும், தமிழர்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியிருந்ததேயன்றி தமிழர்கள் கடந்தமுறை நிகழ்ந்தது போன்று முற்றாக வாக்களிக்காது விடும் நிலைமையினை ஏற்படுத்தியிருக்கவில்லை.

மகிந்தவுக்கும் சரத்பொன்சேகாவுக்கும் சமமாகக் கிடைக்கும் வாக்குகளின் விளைவாக தமிழர்களின் வாக்குகள் வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்காக இருக்கும் என்ற அடிப்படை உண்மையினை இந்தத் தேர்தல் பொய்யாக்கிவிட்டது. முழுச்சிங்களமக்களும் ஒருவருக்கே வாக்களிப்பதன் மூலம் சிறுபான்மையின் ஜனநாயகப் பங்களிப்பையும் பேரம்பேசும் நிலைமையினையும் புறந்தள்ள முடியும் என்பதனை பெரும்பான்மை ஜனநாயகத்தினூடாக நிரூபித்திருக்கிறார்கள். குறிப்

> **“ யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில், யார் ஆண்டாலென்ன யார் வெற்றிபெற்றாலென்ன ஒரே விதமான விளைவே கிட்டும் என்பதனை எதிர்பார்த்திருந்தனர். ”**

பாகத் தென்மாகாணங்களில் அம்பாந்தோட்டை 67 சதவீதத்தையும், பொலன்னறுவ, இரத்தினபுரி, குரநாகல், களுத்துறை ஆகிய இடங்கள் 65 சதவீத வாக்குக்களையும் மகிந்தவுக்குக் கொடுத்ததிருந்தன.

போரை நடாத்தி விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்கு சிங்கள அரசியல் வாதிகள் எல்லோரும் ஒன்றுபட்டு, இரகசியங்களை வெளியே விடாது செயற்பட்டார்களோ அதே போன்று சிங்கள மக்கள் ஒன்றுபட்டு போரின் பின்னைய செயற்பாட்டுக்குத் தமது அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறார்கள் என்றே குறிப்பிடமுடிகிறது. பெரும்பான்மையான சிங்களவர்களைப் பொறுத்த வரையில் இத் தேர்தல் விடுதலைப்புலிகளுக்கெதிரான மற்றுமொரு போர் என்ற செய்தியே புகுத்தப்பட்டிருந்தது என்பது தெளிவாகத்தெரிகிறது.

தமிழர்களின் அரசியற் பேரம் பேசும் நிலைமை குலைந்து போனதற்கு விடுதலைப்புலிகளின் செயற்பாட்டைப் பலமிழக்கச் செய்யப்பட்டமையைக் காரணமாகக் காட்டுகின்றவர்கள், சர்வதேசத்தையும் இந்தியாவையும் குறை சொல்லிக் கொள்ளுவதையே கருத்திலெடுத்துக் கொள்ளுகிறார்கள். சர்வதேசம் புலிகளைத் தோற்கச் செய்து விட்டதென்றும், இந்தியா சதிசெய்துவிட்டதென்றும் சொல்லும் பாங்கினை அவதானித்திருக்கிறோம்.

ஆனால் புலிகளின் தோல்விக்கு, சிங்களத் தலைவர்கள் எந்தமட்டத்திலிருந்தாலும் அவர்களது ஒற்றுமைகலந்த செயற்பாடுகளும், தமிழர்களில் பல மட்மங்களிலிருந்த தலைவர்களின் ஒற்றுமையின்மையுமே காரணமாக இருந்தது என்பது தெளிவாகத் தெரிந்த உண்மையாகும்.

அத்தகையதொரு புலியெதிர்ப்பு ஒற்றுமை என்ற சாதகமான சூழ்நிலையே இன்று மகிந்த ராஜபக்ஷாவின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கும் உதவுவதாக இருக்கின்றது.

## தேர்தல் முடிவுகள் கொடுத்திருந்த வெளிப்படையான உண்மைகள்.

- “எதிர்க்கட்சிகளுக்கு வழங்கும் வாக்கு தேசத்துரோகிகளுக்கு வழங்கும் வாக்கு” என்று கூறிய மகிந்த குழுவினரின் குரலுக்குச் சிங்கள மக்கள் செவிசாய்த்திருக்கிறார்கள்.
- இலங்கை அரசியற் திட்டத்தை மாற்றியமைக்கும் எண்ணம் எந்தச் சிங்கள மக்களுக்கும் இல்லை.
- போர்க்குற்றங்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்குச் சர்வதேசம் முயன்றாலும் சிங்களவர்களாகிய நாம் எதிர்த்து நிற்போம் என்பதில் உறுதி.
- இலங்கையினை யார் சுரண்டினாலும் எத்தகைய விலையேற்றங்களை அனுபவித்தாலும் தந்தையர் நாட்டின் பெருமையினை விட்டுக்கொடுக்காமை.
- நாம் சிங்களவர். எங்களுக்கு எந்தவிதத்திலும் மகிந்தவின் சிந்தனைபோன்றதொரு தேசப்பற்றுச் சிந்தனைக்கு முக்கியத்துவமளிப்போம்.

என்ற உறுதி சிங்கள மக்களிடையே இருந்திருக்கிறது

போரை முன்னின்று நடாத்திய இராணுவத்தினரைவிட போரின்மூலம் விடுதலைப்புலிகளை அழிப்பேன் நாட்டைப் பிரிவதற்கு விடேன் என்று கூறிய மகிந்தவின் உறுதி மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பத்திரிகையாளர் கொலை ஆட்கடத்தல் அரசியற் கொலைகள் போன்றனவெல்லாம் மறக்கப்படக் கூடியன.

கடந்த காலத்தை விட நிகழ்காலமே முக்கியமுடையது என்பதும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

கடந்த அறுபது வருட ஜனநாயக ஆட்சியில் புதிய ஜனநாயக முன்னணியில் இணைந்த ஐக்கியதேசியக் கட்சி, தமிழர்களுக்கு எந்தவொரு தீர்வுத்திட்டம் கொடுப்பதனையும் எதிர்த்து நின்றிருக்கின்றது. மறுபுறமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை உள்ளடக்கிய மக்கள் ஐக்கிய முன்னணி சிறுபான்மையினருக்குத் தீர்வுத் திட்டத்தைக் கொடுக்க முன் வந்திருக்கின்றனர். அதன்படி கடந்தகால வரலாறு மகிழ்ந்தாவின் தீர்வுத் திட்டம் ஓரளவுக்காவது வெளிவரக்கூடும் என்ற எதிர்பார்ப்பைக் கொடுத்திருக்கின்றது.

6ம் பக்கம் பார்க்க...

இணையத்தளத்திலும்
'தாய்வீடு'
www.thaiveedu.com

'தாய்வீடு' பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.
*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

இணைந்து கொள்ளுங்கள்
'தாய்வீடு' facebookஇல்
www.facebook.com/thaiveedu

## 3D தொலைக்காட்சி

# பல தோற்ற மயக்கங்களோ.. வெறும் காட்சிப் பிழைதானோ...!



நிமால் நாகராஜா

வெள்ளிக்கிழமை இரவு. வீட்டுத் தொலைக்காட்சியில் விஜய் வில்லன்களை புரட்டி புரட்டி எடுத்துக் கொண்டிருக்கிறார். கோயிலில் சாமி கும்பிட்டுவிட்டு வீட்டுக்கு வரும் பாட்டி, கண்ணை கூசிக்கொண்டுக் கதிரையைத் தொலைக்காட்சிக்கு அருகில் வைத்துவிட்டு படம் பார்க்கத் தொடங்குகிறார். கண்ணாடி போட்ட பேரக்குழந்தை ஒன்று பாட்டிக்கு கண்ணாடி ஒன்றை மாட்டிவிடுகிறது. இப்போது விஜயும் வில்லன்களும் தொலைக்காட்சிக்கு வெளியே வந்து பாட்டிக்கு முன்னால் சண்டை போடுகிறார்கள். வில்லன்கள் சுடுகின்ற தோட்டாக்கள் எல்லாம் பாட்டியின் கண்ணுக்கு நேரே வந்து கடைசி நேரத்தில் விலகிச் செல்கின்றன. (விஜய்க்கும்தான்). கதாநாயகி கண்ணுக்குள் வந்து “ஹலோ” சொல்லிவிட்டுப் போகிறாள். நயன்தாரா நீட்டும் ரோசாப் பூ கணவனின் கண்ணுக்கு அருகே வருவதைப் பார்க்கும் மனைவி முறைத்துக் கொள்கிறார். இதுவெல்லாம் தொலைக்காட்சிச் சந்தையில் தற்போது வந்து கொண்டிருக்கும் 3D TVஇன் உபயங்கள்.

திரையரங்குகளில் 3D படங்களை நீங்கள் ஏற்கனவே பார்த்திருப்பீர்கள். போன நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே 3D திரைப் படங்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. ஆனால், வீட்டுத் தொலைக்காட்சிகளுக்கு இந்த தொழில் நுட்பம் வருவது இதுவே முதல் முறை. தொலைக்காட்சி தொழில் நுட்பம் கறுப்பு, வெள்ளையில் தொடங்கி இன்று 3Dஇல் வந்து நிற்கிறது. அந்த காலத்தில் ஜே.ஆரின் ‘திறந்த பொருளாதார கொள்கை’ புண்ணியத்தில் இலங்கைக்கு தொலைக்காட்சிகள் படையெடுத்தன. ஒரு கறுப்பு வெள்ளை TVஇல் ‘பட்டாம்பூச்சி’ படத்தை ஆயிரம் பேருடன் அடிபட்டு பார்த்து புளகாங்கிதமடைந்த இரவொன்று இன்னும் நினைவில் நிற்கிறது. தொடர்ச்சியாக மாற்றமடைந்து வந்த தொலைக்காட்சி தொழில் நுட்பத்தில் இறுதியாக HDTV அறிமுகமாகியது. இது வரை கால மாற்றங்கள் எல்லாம் திரையின் அளவையும், காட்சியின் துல்லியத்தன்மையையும் தான் பெரிதும் அதிகரித்து வந்திருக்கின்றன. ஆனால் இம் முறை படதை பார்க்கும் முறையானது மாற்றமடைகிறது. இவ்வளவு காலமும் இரு பரிமாணக் காட்சிகளையே பார்த்துப் பழகிப் போன கண்கள், இனி முப்பரிமாணக் காட்சிகளைப் பார்க்கத் தயாராகின்றன.

தென் கொரியாவின் Samsung, LG நிறுவனங்களின் அபார வளர்ச்சி பாரம்பரிய Sony நிறுவனத்தை பின் தள்ளி விட்டது. கடந்த இரு ஆண்டுகளாகப் பாரிய நட்டத்தில் இயங்கி வரும் Sony, தனது வருமானத்தை அதிகரிக்க 3D TVயைப் பெரிதும் நம்பியிருக்கிறது. “இன்னும் 3 ஆண்டுகளில் தாங்கள் விற்கின்ற தொலைக்காட்சிகளில் 50%ஆனவை 3D தொலைக்காட்சிகளாக இருக்கும்” என Sonyஇன் தலைவர் கூறுகிறார். மற்றைய நிறுவனங்களைப் போலல்லாது Sony நிறுவனம் Playstation 3 எனும் Gaming Deviceஐயும் உற்பத்தி செய்கிறது. இதிலும் 3D நுட்பத்தை அறிமுகம் செய்வதால் இன்னும் கூடிய வருமானத்தை Sony நிறுவனம் பெற்றுக் கொள்ளும். இது தவிர Sony திரைப்படங்களையும் தயாரித்து வருகிறது. ‘3D படங்களைத் தயாரிப்பதன் மூலமும் தனது வருவாயைப் பெருக்கலாம்’ எனக் கணக்குப் போடுகிறது. இன்னும் 5 ஆண்டுகளில் உலகில் 3D தொலைக் காட்சிகளின் விற்பனை 15 பில்லியன் டொலரைத் தாண்டும் எனக் கணக்கிடப்படுகிறது. இத் தொகையின் கணிசமான ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொள்ள Sony தனது காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது.



அண்மையில் வெளிவந்த ‘AVATAR’ எனும் படம் 3D திரைப்பட வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைந்திருக்கிறது. ஒரு திரைப் படத்தைப் பார்க்கும் உணர்வைத் தராமல், காட்சிகளுக்குள் உங்களை அங்கமாக்கி பெரும் வெற்றியை பெற்றிருக்கும் இந்தப் படம் வசூலில் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது. உலக திரைப்பட வரலாற்றில் இதுவரை வசூலில் முதலாவதாய் இருந்த ‘TITANIC’ படத்தின் சாதனையை ‘AVATAR’ முறியடித்திருக்கிறது. (இந்த இருபடங்களையும் இயக்கியவர் James Cameron என்ற கனடியர்). இப்படத்தின் இமாலய வெற்றி 3D தொலைக்காட்சிகளை சந்தைப்படுத்த தயாராகி வந்த நிறுவனங்களுக்கு ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்தது. எல்லா நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் தயாரிப்புக்களை வேகமாக சந்தைக்குக் கொண்டு வருகின்றன. LCD, Plasma தொலைக்காட்சிகளின் வருகையின் பின் தன் முதன்மை தானத்தைத் இழந்த Sony நிறுவனம், இம்முறை 3D TVஇன் மூலமாக மீண்டும் தலைதூக்க முயற்சிக்கிறது.

‘இந்த 3D TV எப்படி வேலை செய்கிறது?’ என்று எழுகின்ற உங்கள் ஆவலைத் தீர்க்க சற்று விளக்கமாக இந்த தொழில்நுட்பத்தை பார்ப்போம். ஒரு பொருளை எமது இரண்டு கண்களாலும் பார்க்கும்போது, இரு கண்களும் அதே பொருளின் இரு வேறு காட்சிகளையே காண்கிறன. ஏனெனில் இரண்டு கண்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி காரணமாக, இந்தப் பொருளைப் பார்க்கும் கோணம் வேறுபடுகிறது. இரண்டு கண்களாலும் காணும் காட்சிகள் ஒன்றிலிருந்து ஒன்று சற்று விலகியிருக்கும். உங்களின் ஒரு கண்ணை மூடிக் கொண்டு, மற்றக் கண்ணால் உங்கள் முன்னால் இருக்கும் பொருளொன்றைப் பாருங்கள். இப்போது மூடிய கண்ணை திறந்து கொண்டு மற்றக் கண்ணை மூடியபடி அதே பொருளைப் பாருங்கள். இந்த இரண்டு காட்சிகளும் ஒன்றிலிருந்து ஒன்று சற்று விலகியிருப்பதைக் காண்கிறீர்கள் அல்லவா! இவ்வாறு காணப்படும் இரு காட்சிகளையும் உங்களது மூளை ஒன்று சேர்க்கும்போது பொருளின் முப்பரிமாணத் தோற்றம் கிடைக்கிறது. ஆகவே, ஒரு பொருளை முப்பரிமாணத்தில் பார்க்க வேண்டுமானால் மூளைக்கு இரு காட்சிகள் தேவை என்பது உங்களுக்குப் புரிகிறது. நீங்கள் 3D திரைப்படங்களைப் பார்ப்பதற்கு ஒரு கண்ணாடியை அணிய வேண்டிவரும். இந்த கண்ணாடியைக் கழற்றிவிட்டு திரைப்படத்தைப் பார்த்தீர்களாயின், திரையில் காட்சிகள் மங்கலாகவும், கலங்கலாகவும் தெரியும். ஏனெனில் இருவேறு Projectorகளினால் ஒரே நேரத்தில் ஒன்றிலிருந்து சற்று விலகியிருக்கும் இரு காட்சிகள் திரைக்கு காண்பிக்கப்படுகின்றன. நீங்கள் அணிகின்ற கண்ணாடியின் வலது பக்க Lens இந்த இரு காட்சிகளின் ஒரு காட்சியை மட்டும் உங்கள் கண்ணுக்கு அனுப்பிவிட்டு மற்றைய காட்சியை மறைத்து விடும். இதே போல் இடது பக்க Lens மற்றைய காட்சியை மட்டும் உங்கள் கண்ணுக்கு அனுப்பும். இப்போது மூளைக்கு இரண்டு காட்சிகள் ஒரே நேரத்தில் அனுப்பப்படுகின்றன. வழமைபோல் இந்த இரு காட்சிகளையும் ஒன்றிணைக்கும் மூளையானது, தான் ஏமாற்றப்பட்டது தெரியாமல், முப்பரிமாண காட்சியை உணரும். இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த முப்பரிமாண காட்சியின் “மூலமான” இரண்டு காட்சிகளும் தொலைக்காட்சித் திரையில் இருக்க, கண்ணின் மணிகள் இரண்டும் உங்கள் கண்களின் வெகு அருகில் மூளையின் மாயையால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் முப்பரிமாண காட்சியில் குவிந்திருக்கும்.

வீட்டுத் தொலைக்காட்சிகளில், 3D திரைப் படங்களைப் போன்ற இரு காட்சிகளை ஒரே நேரத்தில் ஒளிபரப்பும் நுட்பத்தைப் பயன்படுத்த முடியாது. HDTVஇன் வருகையின் பின்னால், தொலைக்காட்சிகளின் காட்சிகளை மாற்றும் வீதம் (Refresh Rate) மிகவும் கூடியிருக்கிறது. ஒரு செக்கனுக்கு 240 காட்சிகள் மாற்றும் தொலைக்காட்சிகள் மிகவும் துல்லியம் வாய்ந்தவை. இந்த அதிகரித்த காட்சி மாற்றம் 3D தொலைக்காட்சிகளை உருவாக்க உதவி

6ம் பக்கம் பார்க்க...

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


வாடகை இல்லமும் புதிய குடிவரவாளர்களும் — மகேன் சிங்கராஜா — 07
சொத்து மீதான முதலீடு — கிரு கிருபா — 09
GPSகளும் செல்போன்களும் — குமார் புனிதவேல் — 11
புகையைக் கண்டு பிடிக்கும் கருவிகள் — 11
கார்னேஷன் — செல்லையா சந்திரசேகரி — 14
சாதாரண முக அலங்காரம் — சசி நரேன் — 21
அற்றிக் பகுதியின் காற்றோட்டம், ஈரப்பதன், பனிஅணை — வேலா சுப்ரமணியம் — 19
மருத்துவக் கேள்வி பதில் — இராஜசேகர் ஆத்தியப்பன் — 28
குளிர் காலமும் செல்லப் பிராணியும் — மஞ்சுளா ராஜலிங்கம் — 30
சக்தியைச் சேமிக்க சில வழிகள் — சொக்கலிங்கம் பிரபாகரன் — 33
கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை — வி. சிறி — 37
உங்கள் வாகனம் எதற்காக சட்டரீதியாக பறிமுதல் செய்யப்படுகின்றது? — சிவ பஞ்சலிங்கம் — 38
பாலைவனத்தில் ஒலித்தது சீனப் பெருஞ்சுவரில் எதிரொலிக்குமோ? — ராகுலன் — 47
வருமான வரியும் அதன் பலாபலன்களும் — சக்திவேல் — 48
சொல்லாதே யாரும் கேட்டால் — திரு மகேசன் — 53
இயற்கை அழிவும் பொருளாதாரமும் — அலன் சிவசம்பு — 57
ரெய்கி - Reiki — பொன் குலேந்திரன் — 62
சமையலறையும் நாமும் — வி. லோகன் — 63
உள்ளங்களின் நுண்ணிய உணர்வெனும் அன்பு — உதயணன் — 69
சிந்திக்கச் சில நிமிடம் — கதிர் துரைசிங்கம் — 70
மறக்க முடியாத வழித்துணை — குமார் புனிதவேல் — 75
மனித வாழ்வு எதற்காக? — சத்குரு வாசுதேவ் — 76
கப்பலைத் தூக்கி அப்பால் இறக்கிவிட்ட விந்தை — தேவகாந்தன் — 89
இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள் — மகேன் சிங்கராசா — 90
வறுமை வரினும் வற்றாது அன்பு — வி. கந்தவனம் — 92
சங்கீதபூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் — ப.ஸ்ரீஸ்கந்தன் — 94

# பல தோற்ற மயக்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

புரிந்தது. இது எப்படி என்று பார்ப்போம்.

ஏற்கனவே நாங்கள் முப்பரிமாண தோற்றத்தை உருவாக்க இரு காட்சிகள் தேவை என்பதை பார்த்தோம். 3D திரைப்படங்களில் இந்த இரு காட்சிகளும் ஒரே நேரத்தில் ஒளிபரப்பப்படும். ஆனால் 3D தொலைக்காட்சியில் இந்த இரண்டு காட்சியில் ஒரு காட்சி முதலில் காண்பிக்கப்படும். இந்தக் காட்சியை உங்களது இரண்டு கண்களில் எந்தக் கண் மட்டும் பார்க்க வேண்டும் என்பதைத் தொலைக்காட்சியில் இருக்கும் ஒரு கருவி Infra Red கதிரின் மூலமாக நீங்கள் அணிந்திருக்கும் 3D கண்ணாடிக்கு அனுப்பும். அந்த தகவலைப் பெற்றுக் கொண்ட கண்ணாடி, தேவையான கண்ணுக்கு மட்டும் காட்சியை அனுப்பிவிட்டு மற்றைய கண் பார்ப்பதைத் தடுக்கும். அடுத்ததாக இரண்டாவது காட்சியை தொலைக்காட்சி ஒளிபரப்பிக் கொண்டு மற்றைய கண்ணுக்கு மட்டும் தெரியப்படுத்தும். இந்த இரு காட்சிகளும் மிக வேகமாக மாறுவதால் கண்ணுக்கு அவை மாறுகின்றன என்பது தெரியாது. இந்த இரு காட்சிகளும், ஒரே நேரத்தில் இரு கண்களாலும் பார்க்கப்பட்ட ஒரு காட்சி என்றே மூளை நினைக்கும். இப்போது இரு காட்சிகளையும் பெற்றுக்கொண்ட மூளை முப்பரிமாணக் காட்சியை உணரும். அட... இவ்வளவும்தானா என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது. மூளையின் மாயையில், கண்கள் நம்புவது தான் 3D TV என்பது தான் உண்மை. இதனால் தானோ “கண்ணால் பார்ப்பதை எல்லாம் நம்பாதே” என்று முன்னோர்கள் சொல்லி வைத்தார்களோ!

சரி, இப்போது 3D தொலைக்காட்சிகள் சந்தைக்கு வரத்தொடங்கிவிட்டன. அப்படியானால் எந்த Channelகளை பார்ப்பது? எப்போது 3D Channelகள் அறிமுகமாகும்? என்ற கேள்விகள் எழும். இவ்வாண்டு ஆரம்பத்தில் தென்கொரியா தனது முதலாவது இருபத்து நான்கு மணி நேர 3D Channel சேவையைத் தொடங்கிவிட்டது. இதுவே உலகின் முதலாவது இருபத்து நான்கு மணி நேர 3D Channel என்று வேறு மார் தட்டிக் கொண்டிருக்கிறது. (இலங்கையைவிட சற்றே பெரிதான, இயற்கை வளங்கள் பெரிதும் இல்லாத தென்கொரியா Electronics துறையில் பெரும் வளர்ச்சியடைந்தது ஒரு தனிக்கதை). அமெரிக்காவின் மிகப் பெரும் தொலைக்காட்சித்துறை ஜாம்பவான்களாகிய Discovery, Sony America மற்றும் Imax ஆகிய மூவரும் சேர்ந்து மிகப்பாரிய 3D Channel Network ஒன்றை உருவாக்க முடிவெடுத்திருக்கிறார்கள். இதன் மூலம் மிக அதிகளவிலான 3D Channelகள் அறிமுகமாகும். இதைவிட ESPN நிறுவனம் கோடை காலத்தில் நடக்கவிருக்கும் உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டிகளில் 25 போட்டிகளை 3Dஇல் ஒளிபரப்பும் என அறிவித்திருக்கிறது. இதைவிட Blue Ray DVD Association, எல்லா தொலைக்காட்சி நிறுவனங்களுடனும் ஆலோசித்து 3D காட்சிகளை எவ்வாறு தொலைக் காட்சிக்கு அனுப்புவது என்பதில் ஓர் உடன் பாட்டை எட்டியுள்ளது. இதனால் 3D DVD Player, DVDகளும் மிக விரைவில் சந்தைக்கு வந்து விடும். ஆகவே நீங்கள் 3D TV ஒன்றை வாங்கினால் நிகழ்ச்சிகளுக்குப் பஞ்சமிருக்காது என்றே தோன்றுகின்றது.

3D தொலைக்காட்சியை அதிகம் பயன்படுத்துவதால் ஏதாவது உடல் ரீதியாக பாதிப்புகள் வருமா என்பதையிட்டு பெரிதும் ஆய்வுகள் செய்யப்பட்டதாக தெரியவில்லை. ஆயினும் தொடர்ச்சியான அதிவேகக் காட்சி மாற்றத்தால், கண்கள் அசௌகரியத்திற்கு உள்ளாகலாம். குறிப்பாக ஒற்றைத் தலைவலி உள்ளவர்களுக்கு இந்தப் பாதிப்பு அதிகமாக இருக்கலாம். அண்மையில் Las Vegas நகரில் நடந்த 3D தொலைக்காட்சிக் கண்காட்சியொன்றில் 3D நிகழ்ச்சிகளை நீண்ட நேரமாக தொடர்ந்து பார்த்த விமர்சகர் ஒருவர் தன் கண்களில் அசௌகரியத்தை உணர்ந்ததாக தெரிவித்திருந்தார். இது தவிர உங்களுக்கு நாளாந்த பிரச்சனைகளும் உண்டு. 3D நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு தொலைக்காட்சியுடன் தொடர்பு கொள்ளக் கூடிய 3D கண்ணாடிகளையும் வாங்க வேண்டியிருப்பதால், அதிகளவு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தினருக்குச் செலவுகள் சற்று அதிகம். அத்துடன் வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் TV பார்க்க அமர்ந்துவிட்டால் உங்களுடைய கண்ணாடிகளை தியாகம் செய்ய வேண்டி வரலாம். இதை தவிர்க்க மிகச் சிறந்த வழி அவர்கள் வரும்போது அவர்களது 3D கண்ணாடிகளைக் கொண்டுவரச் செய்வதுதான்.

பெரும் தாரை, தப்பட்டைகளோடு ஆரவாரமாக அறிமுகமானாலும், இந்த புதிய தொழில் நுட்பம் முற்று முழுதுமாக வெற்றி பெறுமென்று அறுதியிட்டுக் கூறமுடியாது. ஏற்கனவே கூறியதுபோல் இந்த முறை தொலைக்காட்சியை பார்க்கும் முறை மாறுகிறது. இது எவ்வளவு காலத்திற்கு மக்களைக் கவர்ந்து வைத்திருக்கும் என்பது போகப்போகத் தான் தெரியும்.

எது எவ்வாறு இருப்பினும் பொழுது போக்கு உலகம் 3D தொலைக்காட்சியை வரவேற்க தயாராகிவிட்டது. நீங்களும் இப்போதோ அல்லது சற்று காலம் தாழ்த்தியோ அந்த அனுபவத்திற்குள் மூழ்கிவரத்தான் போகிறீர்கள்.

nimal.n@thaiveedu.com

■ ■ ■

# ஆறாவது ஜனாதிபதி...

4ம் பக்கத் தொடர்ச்சி...

சந்திரிகா, ரணில் இணைவின் மூலம் கொடுப்பவரும் தடுப்பவரும் இணைந்திருக்கிறார்கள். அதன் மூலம் தமிழர்களுக்கு ஒரு விடிவினைக் கொடுப்பார்கள் என்றதொரு தோற்றப்பாட்டினை உருவாக்கியிருந்தமையும், அதற்குத் தமிழர்கள் குறிப்பாகக் கூட்டணியினர் ஆதரவு வழங்கத் தீர்மானித்திருந்தமையும் புதுமையானதொன்றாக இருக்கமுடியாது. கடந்தகால அரசியலின் வாரிசுகளை இன்று எத்தனையோ விடயங்கள் வளமாக்கியிருக்கின்றன. அதே போன்று எத்தனையோ விடயங்கள் மாசுபடுத்தியும் இருக்கின்றன. இதன் வழி சிறுபான்மையினரும், தமது உரிமைகளும், வாழ்வதற்கு ஏற்ற சூழலை இன்றைய தலைவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்று எண்ணும் சிறுபான்மையினர் இந்த ஜனாதிபதி தேர்தலில் தோற்றுப் போய்விட்டார்கள்.

பேரம்பேசிப் பெறமுடியாதவற்றைப் பேசாமலிருந்து பெறவேண்டும் என்ற யதார்த்தத்துக்குள் தம்மை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## அடுத்த நடவடிக்கை என்ன?

என்ன என்ன என்ன எக்கத்துவெலா என்ன என்ற சிங்கள மக்களின் அழைப்பு ஒரு நாட்டைக் கட்டி எழுப்பவா என்பதான பாடலாக ஒலித்துக் கொண்டிருப்பதை எங்கும் கேட்கமுடிகிறது. இதனைக் கேட்கின்ற தமிழர்கள் “என்ன நடக்கும் எங்களுக்கு - எங்களின் பிள்ளைகளுக்கு என்ன நடக்கும்- எதிர்காலச் சந்ததிக்கு என்ன நடக்கும் என்ற கேள்வியினை அடுக்கிக் கொண்டு மனப்போராட்டங்களில் ஈடுபடமுனைகிறார்கள்.

சாத்வீகப் போராட்டம், ஆயுதப் போராட்டம் எல்லாம் கடந்த நிலையில், வாழ்க்கைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் இன்றைய தமிழர்கள்.

இயற்கைக்கு எதிராக நிமிர்ந்து நின்று தன்னை அழித்துக் கொண்ட மாமரங்களை அழித்து விட்டன. அவற்றைச் சுற்றி இயற்கையுடன் ஒன்றித் தலைநிமிர்ந்த நாணல்களும், மாமரங்களில் வளர்ந்த குருவிச்சைகளும் இன்று பெருகிக் காணப்படுகின்றன. அவற்றுக்கேற்றதான ஒரு தீர்வுத்திட்டத்திலே தங்கள் வாழ்வினை ஓட்டிவிடலாம் என்ற சிந்தனைதான் அச்சிறிய உயிரினங்களுக்கு இன்று தேவையானது.

## தமிழர்களாகிய நாங்கள் என்ன செய்யப்போகிறோம்?

போராட்டங்கள் நடாத்தி முடிக்கப்பட்டு விட்டன. மீண்டும் ஒருதடவை எந்தவிதமான சாத்வீக அல்லது ஆயுதப் போராட்டத்தை நடாத்துவதற்கு ஏற்ற சூழலை இந்தத் தேர்தல் வெற்றி கொடுத்திருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. சாம, தான, தண்ட, பேதம் என்ற நான்கு நிலைகளிலும், முதல் மூன்று நிலைமைகளையும் கடந்து, அதில் முதிர்ச்சி அடைந்து விட்டவர்கள் தமிழர்கள். பேதம் ஒன்றே இன்னமும் மிஞ்சியிருக்கிறது.

எங்கள் வீடுகளை, எங்களது பிரதேசங்களை, எமது கலாசாரத்தை நாங்களே கட்டிக் காத்துக் கொள்ளுவோம். எங்கள் வளர்ச்சி மூலம் மற்றவர்களிடமிருந்து எங்களைப் பேதப்படுத்திக் காட்டுவோம் என்ற உறுதிப்பாட்டினை எடுப்பதிலேயே தமிழர்களின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

RBC Royal Bank®

Switch your mortgage to RBC Royal Bank® and save. It's easy and I can show you how.



Switch today! We'll pay your switch out fees*!

Ram Krish
Mobile Mortgage Specialist
(416) 526-4996
ram.krish@rbc.com

CREATE
A FUTURE WITH PEACE OF MIND

All personal lending products and residential mortgages are offered by Royal Bank of Canada and are subject to its standard lending criteria. *Offer may be withdrawn, extended or changed at any time, without notice. Not available in combination with any other rate discounts, offers or promotions. Applicable to residential mortgages only. RBC will pay up to a maximum $225 switch out fee charged by your current financial institution. RBC will not pay any prepayment charge levied by your current financial institution. Minimum $100,000 mortgage to qualify for this offer. Other conditions apply. ® Registered trademarks of Royal Bank of Canada. RBC and Royal Bank are registered trademarks of Royal Bank of Canada.

# வாடகை இல்லமும் புதிய குடிவரவாளர்களும்



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

## கனடாவில் உங்களது முதலாவது வாடகை இல்லத்தை ஒழுங்கு செய்தல்

புதிய குடிவரவாளர்கள் அறிந்திருக்க வேண்டியவை

### ஆரம்பச் செயற்பாடு

நீங்கள் கனடாவிற்கு குடிவந்தவுடன், உங்களது முதலாவது வதிவிடம் பெரும்பாலும் ஓர் வாடகை வீடாகவே அமையும். ஓர் வதிவிடத்தை தேடுவதற்கு தொடங்குவதற்கு முன்பு, உங்களால் எவ்வளவு வாடகைப் பணத்தை செலுத்த முடியும். உங்களுக்கு எத்தனை அறைகள் தேவை, எந்த பகுதியில் வசிக்க விரும்பகிறீர்கள் ஆகிய விடயங்களை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்.

அதன் பின்பு பத்திரிகைகளில் ''வாடகைக்கு விடப்படும்'' என்ற பகுதிகளை வாசித்து, உங்களுக்கு ஆர்வமுடைய இடங்களை தெரிவு செய்து அவற்றை சுற்றி வட்டமிடுங்கள். இது தொடர்பாக உங்களுக்கு உதவி தேவையானால் உங்களது வளர்ந்த பிள்ளை, நண்பர் அல்லது ஒரு சேவையாளரின் ஆலோசனையை பெறுவது நன்று.

ஒரு வாடகை இல்லத்தை தெரிவு செய்வதற்கு முன்பு நீங்கள் பல்வேறு தொடர்மாடிக் கட்டிடங்களை பார்வையிடுவது மிகவும் அவசியம். இவ்வாறு செய்வதன் மூலம் உங்களுக்கும் உங்களது குடும்பத்திற்கும் பொருத்தமான இடத்தை தெரிவு செய்வதனை நீங்கள் உறுதிப் படுத்தமுடியும்.

### கூடிய கவனம் செலுத்தவேண்டிய விடயங்கள்.

- கதவுகள் சரியாக பூட்டப்படுகிறதா என சரி செய்து பார்த்தல்.
- சமையலறையில் Sink, Counter, Shelves ஆகியவை உங்கள் தேவைக்கேற்ப இருக்கிறதா என சரி பார்த்தல்.
- குளிர்சாதனப் பெட்டி (Refrigerator) Oven ஆகியவை சரியான முறையில் இயங்குகிறதா என உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- குழாய்களில் சூடான தண்ணீர் (Hot water) நன்றாக வடித்து ஓடுகிறதா?, குளியலறையில் Shower குளியல் தொட்டி என்பன உள்ளதா, Toiletகள் சரியாக இயங்குகிறதா என்று அவதானிக்கவும்.
- அறைகளில் உள்ள Closet பகுதியில் உங்களது உடைகளை வைப்பதற்கு தேவையான இடம் உள்ளதா என கவனியுங்கள்
- குளிர்காலத்தின் போது உங்களுக்கு தேவையான வெப்பம் அமையுமா என்பதனையும், அதற்காகவும் மின்சார பாவனைக்காகவும் செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

### கனடாவில் உள்ள வெவ்வேறு வகையான வாடகை வீடுகள்

- தனி நபர் அல்லது ஓர் நிறுவனத்திற்கு சொந்தமான வாடகைக் கட்டிடம்
- பாவனைப் பகுதிகளை பகிர்ந்து கொள்ளும் தன்மையான வீதிவிடம் இவ்வகையான வதிவிடங்களில் சமையலறை, குளியலறை என்பவை பலரது பாவனைக்கு பொதுவானதாக அமையும். அதே சமயம் உங்களுக்குரிய தனிப்பட்ட அறை ஒதுக்கப் பட்டிருக்கும்.

### வாடகைப்பண உதவி வழங்கப்படும் வீடுகள்.

வருமானம் குறைந்தவர்களுக்காக இவ்வகை வீடுகள் நகர சபையினால் அல்லது தர்மஸ்தாபனங்களால் வாடகைக்கு விடப்படுகின்றன.

> ❝ ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்கு முன்பு வதிவிடத்தில் இருந்து வெளியேறினால் உங்களது வதிவிடத்தில் இன்னொருவர் குடிபுகுவதற்கு நீங்களோ, அல்லது வதிவிட உரிமையாளரோ ஒழுங்கு செய்யவேண்டும். இல்லையேல், ஏற்பட்ட வாடகை இழப்பை நீங்களே செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். ❞

### வீட்டுரிமையாளரினதும், வாடகைக் குடியிருப்பாளரினதும் பொறுப்புக்கள்.

நீங்கள் வசிக்கும் வாடகைக் குடியிருப்பு ஒரு சிறிய கட்டிடமாக இருந்தால் அதன் உரிமையாளர், அக்கட்டிடத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருப்பார். அது ஓர் பெரிய கட்டிடத் தொகுதியாக இருந்தால் அந்தக் கட்டிட உரிமையாளரின் சார்பாக செயற்படும் சொத்து முகாமையாளர் (Property Manager) அந்த கட்டிடத்தை பராமரிப்பதற்கு பொறுப்பாக Superintendent என்று அழைக்கப்படும் ஒருவரை நியமிப்பார்.

உங்களது வாடகை வதிவிடக் கட்டிடத்தின் உரிமையாளர் உங்களிடமிருந்து வாடகைப் பணத்தை பெறுவார். அதே சமயம் அவர் அந்த கட்டிடத்தின் பாதுகாப்பு, திருத்த வேலைகள் என்பவற்றிற்கு பொறுப்பாக இருப்பார். அத்துடன் உங்களது வதிவிடத்தில் உள்ள குளிர்சாதனக் கருவி, stove அடுப்பு, துணி துவைக்கும் இயந்திரங்கள் என்பவை சரியாக இயங்குவதற்கும் அவர் பொறுப்புடையவராக இருப்பார்.

ஒரு வாடகை வதிவிடத்தின் உரிமையாளர் உங்களுக்கான வதிவிடத்தை வாடகைக்கு விடுவதற்கு முன்பு, வாடகைப் பணத்தை செலுத்துவதற்கான உங்களது தகுதி பற்றி அறிவதற்காக உங்களுக்கு நன்கு அறிமுகமான ஒரு சிலரின் பெயர் விபரங்களை உங்களிடமிருந்து கேட்பார். ஆனால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட கேள்விகளை அவர் உங்களிடம் கேட்கமுடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

- நீங்கள் எவ்வளவு காலம் கனடாவில் வசிக்கிறீர்கள்?
- உங்களது உறவினர்கள் இடைக்கிடை உங்களைச் சந்திப்பதற்கு வருவார்களா?
- நீங்கள் பிள்ளை பெறுவதற்கு திட்டமிட்டுள்ளீர்களா அல்லது மேலும் பிள்ளைகள் பெறுவீர்களா?

கனடாவின் ஒவ்வொரு மாகாணத்திலும் வாடகை வதிவிடங்களின் வீட்டுரிமையாளரின் உரிமைகள், கடமைகள் குடியிருப்பாளரின் உரிமைகள், பொறுப்புக்கள் என்பவை தொடர்பாக வெவ்வேறுபட்ட விதிமுறைகள் உள்ளன. எனவே நீங்கள் வசிக்கும் மாகாணத்தின் விதிமுகைளைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பது அவசியம்.

### வாடகை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல்.

உங்களுக்கான வதிவிடத்தை தெரிவு செய்த பின்பு ஓர் வாடகை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது அவசியம். ஏனெனில் இது உங்களுக்கும் வதிவிட உரிமையாளருக்கும் இடையிலான சட்டபூர்வமான ஒப்பந்தம். இதில் உங்களுடையதும் வதிவிடக் கட்டிட உரிமையாளருடையதுமான உரிமைகளும், பொறுப்புக்களும் பற்றி விபரிக்கப்பட்டிருக்கும். இந்த ஒப்பந்தப் பத்திரத்தில், வதிவிடத்திற்கான வாடகையின் அளவு, அந்த வாடகைக் கட்டணம் எவற்றை உள்ளடக்குகிறது (உதாரணமாக:- utilities கேபிள் தொலைக்காட்சி முதலியன) என்ற விபரமும் எப்போது வாடகை அதிகரிக்கும் என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நீங்கள் ஒவ்வொருமாதம் புதுப்பிக்கக் கூடிய வகையில் அல்லது ஒரு வருட அல்ல 2 வருட கால எல்லைக்குட்பட்டதாக வாடகை ஒப்பந்தம் செய்ய முடியும். பொதுவாக வாடகை ஒப்பந்தக்காலம் ஒரு வருடம் என்பதே வழமையாக செயற்படுத்தப்படுகிறது.

ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்கு முன்பு நீங்கள் உங்களது வதிவிடத்தில் இருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், உங்களது வதிவிடத்தில் இன்னொருவர் குடிபுகுவதற்கு நீங்கள் ஒழுங்கு செய்வதற்கு உங்கள் வதிவிட கட்டிட உரிமையாளர் அனுமதிக்கலாம். இது Subletting என்று அழைக்கப்படும். இதற்கு மாறாக வதிவிட உரிமையாளர் வேறு ஒருவர் வாடகைக்கு குடியேறுவதற்கு ஒழுங்கு செய்யலாம். இந்த இரண்டும் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டால் வதிவிடகட்டிட உரிமையாளருக்கு ஏற்பட்ட வாடகை இழப்பை நீங்களே செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

### வதிவிடத்தினுள் குடிபுகுதல் (Moving In)

நீங்கள் குடிபுகும் நாளில், நீங்கள் குடியேறவுள்ள Apartmentஇல் மின்சார outlets, மின் விசைகள் என்பன பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளனவா என்று பரிசோதிக்க வேண்டும். கதவுகள், நிலவிரிப்புக்கள் என்பவற்றில் துவாரங்கள் உள்ளனவா என்று அவதானித்து அந்த விபரங்களை குறித்துக் கொள்ளுங்கள் அல்லது பாதிக்கப்பட்ட பகுதிகளை புகைப்படம் எடுத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்களது புதிய வதிவிடத்தினுள் குடிபுகுந்த பின்பு தகுந்த வேலைகள் ஏதாவது செய்ய வேண்டி நேரிட்டால் நீங்கள் அதற்கான விண்ணப்பத்தை வீட்டுரிமையாளரிடம் கடித மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அக்கடிதங்களின் பிரதிகளை நீங்கள் வைத்திருப்பது அவசியம்.

அதுமட்டுமன்றி, உங்களுக்கான கடிதங்கள் விநியோகிக்கப்படுதல், Intercom தொடர்பு கழிவுப் பொருட்கள் அகற்றப்படும் நடைமுறைகள், மீள்சுழற்சி (Recycling), துணி துவைத்தல், வாகனத் தரிப்பிட ஏற்பாடு, உங்களது விருத்தினர்களுக்கான வாகனத் தரிப்பிட வசதி என்பன பற்றி உங்களது வதிவிட கட்டிட உரிமையாளர் அல்லது

13ம் பக்கம் பார்க்க...

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices



உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்

Sales - Service - Installations

Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| (We Do Any Colour Of Paint & Stain) | Roller Shades | And More |
| | And More | |

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:



தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# THE KING EAST

KING & PARLIAMENT



DOWNTOWN

## OPEN HOUSE "the king east" KING EAST & PARLIAMENT

SATURDAY FEB. 6th, 2010 FROM 12:00 pm TO 4:00 pm

## FOR ALL YOUR REAL ESTATE NEEDS

வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க!

To Buy or Sell Home, Business & Investment properties



**Homelife GTA Realty Inc**, Brokerage*

1711 Mccowan Rd, Suit # 206, Toronto, ON M1S 3Y3

416-321-6969



**Gnani Narasingham**
Sales Representative
416-937-8090

**Judy Gnanendran**
Sales Representative
416-321-6969

*Independently Owned and Operated, Realtor®

# சொத்து மீதான முதலீடு

## ஓர் பார்வை!



கிருபா
கனகசபை
- வீடு விற்பனைப் பிரதிநிதி

### சொத்து மீது முதலீடு செய்வது, பலனுள்ள முதலீடு தானா?

சொத்து மீது முதலீடு செய்வது பாதுகாப்பானது. நீங்கள் முதன்முதலாக உங்களுக்கு சொந்தமாக ஒரு வீடு வாங்குவதாக இருந்தாலோ, அல்லது சொத்து மீது முதலீடு செய்து சிறந்த லாபத்தை எதிர்பார்த்தாலோ, எவ்வகையிலும் முதலீடு செய்வதினால் கிடைக்கும் நன்மைகளை நீங்கள் குறைத்து மதிப்பிடக் கூடாது.

உதாரணமாக, நீங்கள் துணிந்து பங்கு மார்க்கெட் (stock exchange) வியாபாரத்தில் இறங்கி அதிக இலாபங்களை சம்பாதிப்பதாக இருந்தாலும், ஏதாவது சொத்து மீது முதலீடு செய்தால் ஒரு உறுதியான, நிரந்தரமான வருமானத்தை நீங்கள் பெறமுடியும். மேலும் முதலீட்டு தொகையையும் எந்நேரத்திலும் திரும்ப பெறும் ஒரு பாதுகாப்பான நிலையில் நீங்கள் இருப்பீர்கள். தொலை நோக்குப் பார்வையுடன் சிந்திக்கும் போது, சொத்து மீது முதலீடு செய்யப்படும் பணத்தை நீங்கள் ஒருபோதும் இழக்கும் சூழ்நிலை ஏற்படாது. சொத்தை விற்க வேண்டி வந்தால் மட்டுமே அதற்கான உகந்த நேரத்தை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டி வரும். ஆனால் சொத்து மீதுள்ள முதலீடு நீண்ட காலம் அப்படியே இருக்கும். அதில் நீங்கள் தவறுஏதும் செய்யும் வாய்ப்பில்லை. சுருங்க கூறினால், சொத்து குறிப்பிடத்தக்க காலம் வரையிலும் அழியாமல் ஸ்திரமாக இருக்கும். நீங்கள் பொறுமையுடன் காத்திருக்க தயாராக இருந்தால் அதன் மீது நிறையவே பணம் சம்பாதிக்கலாம்.

### நிதிசம்பந்தமான லாபம்:

நீங்கள் முன்யோசனையுடன் உங்கள் பணத்தை ஒரு சொத்தின் மீது நீண்டகாலம் முதலீடு செய்தால். நீங்கள் மிக கணிசமான அளவு பணத்தை அந்த முதலீட்டின் மூலம் இலாபமாகப் பெறமுடியும். மேலும் இதனால் கிடைக்கும் நன்மைகளில் மிக முக்கியமானது எதுவெனில், உங்களிடம் சிறிதளவு பணம் மூலதனமாக இருந்தாலே போதும். அதை வைத்து ஒரு சொத்தை வாங்கி அதன்மூலம் பெருமளவு தொகையை அடமானப் பணமாக நீங்கள் வாங்கிவிடலாம். இதுபோன்ற சில அடிப்படை விதிகளை பின்பற்றினாலே போதும், நீங்கள் செய்த முதலீட்டிற்கு ஒரு இடைத்தரகராக இருந்து பெருமளவு பணத்தை நீங்கள் இலாபமாக சம்பாதிக்க முடியும்.

உதாரணமாக உங்களிடம் 30,000 டாலர் சேமிப்பு பணம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதை நீங்கள் பரஸ்பர நிதி திட்டத்திலேயோ அல்லது சொத்து மீதோ முதலீடு செய்யலாம்.

### நீண்டகால இலாபங்கள்:

Real estate சொத்துகள் மீது நீண்டகால முதலீடு செய்வது, நிறைந்த இலாபம் தரும் ஒரு அரிய யோசனையாகும். மற்றைய சொத்து வகைகளை காட்டிலும் இதற்கு ஆரம்பகட்ட செலவுகள் மிக கூடுதலாக இருக்கும் என்பது உண்மை. ஆனால் சில வருடங்களிலேயே உங்கள் சொத்தின் விலை அது இருக்கும் இடத்தைப் பொறுத்து 50 முதல் 75 சதவீதம் வரை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. ஆயினும் சில சொத்துகளை பொறுத்தவரையில் அதன் விலை ஏற்றம் 'பூச்சியம்' அளவில் உள்ளது அல்லது சரிவடையவும் வாய்ப்பு உள்ளது. சரியான இடத்தில் நியாயமான விலையில் உங்கள் சொத்து இருந்தால், அதன் விலை மிகவும் உயர்ந்து விட்டால், உங்களுக்கு ஏராளமான இலாபம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இதற்கு நீண்டகால தொலைநோக்கு திட்டத்தை நீங்கள் கடைபிடிக்கவேண்டும். நீங்கள் சொத்தின் மீது செய்யும் நீண்டகால முதலீடு, விலைவாசி ஏற்றம் மற்றும் பணவீக்கம் ஆகியவற்றை முறியடித்துவிடும் என்பதை உறுதியாக நம்பலாம். மேலும் வரிச்சுமையிலிருந்தும் நீங்கள் பெரிதும் விடுபடலாம்.

### முதலீட்டின் மீது கிடைக்கும் இலாபம்.

சராசரியாக ஒரு வீட்டின் விலை மதிப்பு ஒவ்வொரு ஏழு வருடங்களுக்கு ஒருமுறை இரட்டிப்பு மடங்காகிறது என சில ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆனால் நீங்கள் உங்கள் வீட்டிற்கு சரியான விலை மதிப்பீடு செய்து, சரியான இடத்தில் வாங்கி இருக்க வேண்டும். அப்படியானால் நீங்கள் செய்யும் முதலீட்டிற்கு நீங்கள் சிறந்த இலாபத்தை பெறுவது நிச்சயம். அதனால் உங்களிடம் ஏராளமாக பணம் இருந்து அதை நீங்கள் முதலீடு செய்ய விரும்பனால், ஏதாவது சொத்தின் மீது நீங்கள் முதலீடு செய்வது மிக சிறந்த தீர்வு.

### வாடகையிலிருந்து கிடைக்கும் பணவருமானம்.

பங்கு மார்க்கெட்டிலிருந்து கிடைக்கும் dividend (இலாப ஈவுப் பணம்) பணத்தை விட, சரியான முறையில் வாங்கப்பட்டு நிர்வகிக்கப்படும் உங்கள் சொத்திலிருந்து கிடைக்கும் வாடகை பணம் அதிக நிரந்தரமானது, மற்றும் இலாபகரமானது.

Real estate சொத்துகளின் மீது முதலீடு செய்பவருக்கு பணம் சம்பந்தமான எந்த ஆபத்து நிலைகளும் ஏற்படுவதில்லை. சில வருடங்களில் மற்றும் சில பகுதிகளில் சொத்துகள் மற்றும் வீடுகளின் விலை மிகவும் வீழ்ச்சி அடைந்தாலும், தங்கள் சொத்துகளை வாடகைக்கு கொடுத்திருப்பவர்களுக்கு வாடகைப் பணம் குறைவு ஏதுமில்லாமல் ஒழுங்காக வந்துவிடும்.

> **"உங்கள் சொத்திலிருந்து நிறைய வாடகை பணத்தை வருமானமாக பொறுவதுடன் மட்டுமல்லாமல், உங்கள் சொத்தை அபிவிருத்திசெய்து அதன் விலை மதிப்பை அதிகரிக்கச் செய்யமுடியும். அதேநேரம் உங்கள் சொத்திற்காக நீங்கள் பெற்ற கடனை கொடுத்து தீர்ப்பதுடன் அதிக இலாபத்தையும் சம்பாதிக்க முடியும்."**

**இரண்டு வகையிலும் கிடைக்கும் இலாபங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.**
(**குறிப்பு:** விலைகளும் மற்றும் இலாபங்களும், வியாபாரச் சந்தையில் சற்று மாறுபடலாம். வட்டி தனிவட்டி முறையில் கணக்கிடப்பட்டுள்ளது.)

| **Description**<br>**விவரம்** | **Mutual Fund**<br>**பரஸ்பர நிதிதிட்டம்** | **Property**<br>**சொத்து** |
|---|---|---|
| Investment | $30,000<br>30,000 டாலர் | $30,000<br>30,000 டாலர் |
| Finance/Mortgages<br>நிதி/அடமான உதவி | $0<br>0 டாலர் | $270,000 @ 2.5% PA<br>270,000 டாலர்வருடம் 2.5 சதவீதம் வட்டி |
| Initial Value<br>ஆரம்ப மதிப்பு | $30,000<br>30,000 டாலர் | $300,000<br>30,000 டாலர் |
| Rate of Return<br>இலாப விகிதம் | 12%<br>12 சதவீதம் | 6%<br>6 சதவீதம் |
| Return over 5 Years<br>5 வருடங்களில் கிடைக்கும் இலாபம் | $18,000<br>18,000 டாலர் | $90,000<br>90,000 டாலர் |
| Cost of Finance<br>நிதிஉதவி சம்பந்தமான செலவு | $0<br>0 டாலர் | $37,500<br>37,500 டாலர் |
| Return less Cost of Finance over 5 Years<br>5 வருடங்களில் செலவு போக இலாபம் | $18,000<br>18,000 டாலர் | $52,500<br>52,500 டாலர் |
| Additional Return<br>அதிகப்படியான இலாபம் | No<br>இல்லை | Value in Appreciation<br>மதிப்புயர்வு விலை மதிப்பு |

### மதிப்புயர்வு காரணமாக சொத்துகளின் விலை அதிகரித்தல்.

Real estate சொத்துகளின் விலை வேகமாக உயர்ந்து வருகிறது என்பது பிரசித்திப் பெற்ற ஒரு விஷயம். ஆனாலும் இந்த விலை உயர்வு எப்போதும் ஒரே போக்கில் போய்க் கொண்டிருக்கும் என்று சொல்ல முடியாது. இடத்திற்கு இடம் விலை வித்தியாசமான மாறுபாட்டுடன் இருக்கும் என்பதே உண்மை.

### நீங்கள் முதலீடு செய்த சொத்தை அபிவிருத்தி செய்து அதிக விலைக்கு விற்பனை செய்தல்.

உங்கள் சொத்திலிருந்து நிறைய வாடகை பணத்தை வருமானமாக பொறுவதுடன் மட்டுமல்லாமல், நீங்கள் உங்கள் சொத்தை அபிவிருத்தி செய்து அதன் விலை மதிப்பை அதிகரிக்கச் செய்யவும் முடியும். உங்கள் சொத்தை வைத்து நீங்கள் பெற்ற கடனை கொடுத்து தீர்ப்பதுடன் அதிக இலாபத்தை சம்பாதிக்க முடியும்.

நீங்கள் முதலீடு செய்த ஒரு real estate சொத்து எவ்வளவு தோற்றப் பொலிவுடன் காட்சியளிக்கிறதோ அந்த அளவுக்கு அதன் விலை மதிப்பும் கணிசமாக உயரும். காலத்தின் போக்கு மாறும் போது வாடகைக்கு வருபவர்களை உங்கள் சொத்து கவர்ந்து இழுத்தாலே, அதன் விலை மதிப்பு உயர்ந்து விட்டது என்று தான் அர்த்தம்.

### பொருளாதார மந்தநிலையில் வாடகையின் பங்களிப்பு.

நீங்கள் வாங்கிய அடமானத் தொகைக்கான காலங்கள், மாதாந்தப் பணம் கட்டக்கட்ட சிறிதுசிறிதாகக் குறைந்து கொண்டே வரும்.

வீட்டை கட்டுவதற்கான கட்டுமானச் செலவுகள் பணவீக்கத்தின் காரணமாக அதிகரித்து விடும் போது வாடகைகளும் அதிகரித்து விடும். மேலும் மக்கள் தொகை பெருக்கத்தினால் வீடுகளுக்கான தேவை இன்னமும் அதிகரித்து விட்டது. அதனால் வாடகையும் கூடிவிட்டது.

### உங்கள் அடமானப் பணத்தை திரும்ப செலுத்துதல்.

நீங்கள் உங்கள் அடமானப் பணத்தை திரும்ப செலுத்தும் போது உங்கள் பங்குகளின் விலை உயர்வை நீங்கள் வேறு லாபகரமான திட்டங்களிலும் மற்றும் முதலீடுகளிலும் பயன் படுத்த முடியும். சொத்தின் விற்பனை விலையை பொறுத்து அது கணக்கிடப்படுவதாக இருந்தாலும். ஒரு real estate சொத்தின் மீது முதலீடு செய்தவர் equity loanகள் பெற்று பணத்தை வேறும் பல லாபகரமான திட்டங்களில் முதலீடு செய்யலாம்.

### 'Steal of a Deal' - நீங்கள் மிகக் குறைந்த விலைக்கு சொத்தை வாங்குதல்.

சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் உங்களுக்கு சரியாக அமைந்தால். நீங்கள் மற்றவர் சொத்தை Market விலையைவிட மிக குறைந்த விலைக்கு வாங்கலாம். நிறைய முதலீட்டாளர்களின் கனவே இதுதான். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் ஒரு விலை மதிப்பான சொத்தை தேர்ந்தெடுக்கும் அனுபவம் இருந்தால், எதைப்பற்றியும் யோசிக்காமல் அதை உடனே வாங்கிவிடுங்கள். அதனால் நீங்கள் செய்த முதலீட்டின் நிகர மதிப்பையும் மற்றும் வருமானத்தையும் உயர்த்த முடியும்.

kirew.kanagasabai@thaiveedu.com

■ ■ ■

# Buy & Sell Residential and Commercial Properties



**Raj. A. Rasaratnam** B.Com.

*Sales Representative*

**416-726-8055**

argaccountax@rogers.com

**HomeLife/ GTA Realty Inc.**
Real Estate Brokerage*

1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3

Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963

*Independently own and operated

**340,000**



McCowan & M. MacKenzie
Bedrooms: 4. Type: Townhouse.
Details: Close to Transit, Shopping Plaza, School and Parks. 3 Washrooms & 2 Car detached garage.

**$374,900**



Sheppard & Port Union
Bedrooms: 3+1. Type: Townhouse.
Details: Close to all amenities. Lots of upgrades, 12 foot living room ceiling & neutral colours.

**$375,900**




9th Line & 16th Ave.
Bedrooms: 5. Type: Townhouse
Details: Close to Schools, Amenities & Transportation. Soaring 10 ft ceilings, 5 large bedrooms and 2 fireplaces.

**$399,000**




Hwy 7 & 9th Line
Bedrooms: 4. Type: Semi-Detached (3 storey).
Details: Close to Hospital, Transit, Shopping & Hwy 407. Enclosed back porch, 2 car garage, rent in basement, 4 bathrooms & 9 ft ceilings.

**$435,000**



Steeles & Staines
Bedrooms: 4+1. Type: Detached.
Details: Close to All amenities, school, golf course, parks & TTC. Open concept home, upgrade kitchen & finished basement.

**$438,800**



Morningside & Old Finch
Bedrooms: 4. Type: Detached.
Details: Main floor laundry, door to garage, open concept family room+gas fireplace, oak staircase & pool sized backyard.

Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation

**(416) 726-8055**



# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

**Fax: 416 438 1612**

**1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6**

RBC Financial Group

# GPSகளும் செல்போன்களும்

- குமார் புனிதவேல் -

உண்மையில் யாராவது சொர்க்கத்தின் விலாசம் தெரிந்தால் உங்களை சொர்க்கத்திற்கே கொண்டு செல்லும் இந்த GPS!

இன்று அனேகமான வாகனச்சாரதிகள் GPS என்ற திசை அறி கருவியை பாவிக்கின்றார்கள். முன்பெல்லாம் தெரியாத ஒரு இடத்திற்கு செல்வதானால் ஒரு வரைபடப் புத்தகத்தை பாவித்துவந்தோம். ஆனால் திசை அறி கருவியில் செல்லவேண்டிய விலாசத்தை பதிந்தால், அது உங்களுக்கு பத்திரமாக வழிகாட்டும். தவறிவழியில் திருப்பினால் உடனே அக்கருவி மீண்டும் செல்லவெண்டிய இடத்திற்கான திசையை கணித்து அழைத்துச்செல்லும். என்ன நான் ஏதோ கருவி விற்பனைக்கு விளம்பரம் செய்கிறேன் என்று நினைக்கின்றீர்களா? இந்த கருவியின் மறுபக்கத்தை உங்களுக்கு தெரிவிப்பதே எனது நோக்கம்.

சில வாரங்களுக்கு முன் எனது நண்பர் ஒரு விடயத்தை எனக்குத் தெரிவித்தார். அவரது நண்பர் ஒரு உதைபந்தாட்டத்திற்குச் சென்று அருகிலுள்ள தரிப்பு நிலையத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு உதைபந்தாட்டத்தை காணச் சென்றுவிட்டார்.

அவர் திரும்பி வந்து பார்த்தபோது வானத்திலிருந்த GPS கருவியும் கராஜ்ஜின் ரிமோட் கருவியையும் யாரோ திருடிச்சென்றிருந்தார்கள். அவருக்கு ஏற்பட்ட இழப்பு இதனுடன் முடியவில்லை. அவர் வீடு திரும்பியபோது (தனது காரில்) வீடு திருடப்பட்டு அனைத்து பொருட்களும் களவாடப்பட்டிருந்தது.!!!

அவரிடம் திருடிய GPSஇன் உதவியுடன் (வாகனத்தில் இருந்த GPSஇல் வீட்டிலிருந்து உதைபந்தாட்டமைதானத்திற்கு programme செய்யப்பட்டிருந்தது.)அவர் வீட்டை அடைந்து அவரிடம் திருடிய ரிமோட்டினால் கராஜ் கதவைத்திறந்து வீட்டிற்குள் புகுந்து திருட்டு




நடந்தேறியுள்ளது. களவு செய்தவர்களுக்கு தெரியும் எப்போது விளையாட்டுப்போட்டி முடியும் என்று. ஆறுதலாக அனைத்தையும் சுனாமிபோல் அடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

உங்களிடம் GPS இருந்தால் அதில் வீட்டு விலாசத்தை விட்டுவைக்காதீர்கள். இதுமட்டுமல்ல, வாகனத்தில் ரெஜிஸ்ரேசன் பத்திரத்தையும் கள்வர்கள் எளிதாக எடுக்கக்கூடிய இடத்தில் வைப்பது உசிதமன்று.

அடுத்ததாக நாம் எல்லோரும் பாவிக்கும் ஒரு கருவி செல்போன்களாகும். நீங்கள் கவனித்திருப்பீர்கள் - சந்திமுனையில் இருந்து கொண்டு செல்போன் கதைக்கும் காலம் போய் இப்போதெல்லாம் டெக்ஸ்ட் செய்திகள் அனுப்பும் காலத்தில் உள்ளோம். இங்கும் நீங்கள் கவனமாயிருப்பதவசியம்.

ஒரு பெண்மணி தனது கைப்பையை தவறவிட்டு விட்டார். இதுபோன்ற அசம்பாவிதங்கள் பல நடந்து உள்ளன என்பதை யாரும் மறக்கமாட்டீர்கள். தொலைந்து இருபது நிமிடங்களுக்குப்பின் தனது கணவனை அழைத்து களவுபோனதை தெரிவித்தபோது அவர், “நீர் அனுப்பிய டெக்ஸ்ட் செய்தி சிறிது நேரத்திற்கு முன் கிடைத்தது. அதில் கேட்டபடி எங்கள் வங்கி Pin நம்பர் அனுப்பினேன்” என்றார்.

உடனடியாக அவர்கள் வங்கியை தொடர்பு கொண்டவேளை அவர்கள் கணக்கிலிருந்து எல்லாப்பணமும் மீளப்பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள். உண்மையில் செல்போனை திருடியவன் அதே திருடிய செல்போனபோல் கணவனுக்கு மனைவி அனுப்புவதுபோல் செய்தி அனுப்பி கணவரிடமிருந்து ‘Pin’ நம்பரை பெற்று திருட்டை செய்துள்ளார்கள்.

எப்போதும் டெக்ஸ்ட் செய்தியை நம்பி இரகசியமான விடயங்களை தெரிவிக்கவேண்டாம். நேரடியாக தொலைபேசியில் கதைத்து மற்றவர் யார் என்பதை உறுதி செய்த பின் முக்கிய விடயங்களை தெரியப்படுத்துங்கள். இந்த செய்தியை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் - திருட்டை தவிர்ப்பதற்கு உதவும்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

# புகையைக் கண்டு பிடிக்கும் கருவிகள்

### புகையை கண்டுபிடிக்கும் கருவிகள்.

பொதுமக்கள் சகஜமாக சென்றுவரும் கட்டிடங்களில் புகையை கண்டு பிடிக்கும் கருவிகளை வைக்கவேண்டும் என்பது அரசின் ஒரு நலம் அளிக்கும் சட்டமாகும். ஏனென்றால் புகை பற்றிய எச்சரிக்கைகள் மனித உயிர்களை பாதுகாக்கும். National Fire Protection Associationன் அறிக்கைபடி கடந்த சில வருடங்களிலிருந்து புகையை கண்டுபிடிக்கும் கருவிகளின் பயனாக வீடுகளில் ஏற்பட்ட தீ விபத்துகளினால் மரணம் அடைந்தோரின் எண்ணிக்கை பாதி அளவை விடக் குறைந்துவிட்டது. அமெரிக்காவில் 95 சதவீத வீடுகளில் குறைந்தது ஒரு புகையை கண்டுபிடிக்கும் கருவியாவது பொருத்தப்பட்டிருக்கும் 25 சதவீதவீடுகளில் தீ விபத்துகள் ஏற்பட்டுள்ளன. புகையை கண்டு பிடிக்கும் கருவிகளால் தீயைப் பற்றிய எச்சரிக்கைகள் விடப்படவில்லை. ஏனென்றால் அவைகள் சரியாக வேலை செய்யவில்லை. புகையை அறிவிக்கும் அலாரம் கருவிகள் இருந்தால் மட்டும் போதாது. அவை சரியான முறையில் பரிசோதனை செய்யப்பட்டு, ஒவ்வொரு வருடமும் அவற்றின் பட்டரிகள் மாற்றப்பட வேண்டும். உங்கள் வீட்டில் புகையை கண்டு பிடிக்கும் கருவியை பொருத்துவது தீப்பற்றி எரிவதை தடுப்பதற்கான மிக முக்கியமான நடவடிக்கையாகும்.

### புகையை கண்டு பிடிக்கும் கருவியை பொருத்தும் இடமும் மற்றும் பராமரிப்பும்.

- வீட்டில் ஒவ்வொரு முக்கியமான இடத்திலும் குறைந்தது ஒரு புகையை கண்டு பிடிக்கும் கருவியையாவது பொருத்த வேண்டும்.
- ஒவ்வொரு படுக்கை அறையின் வெளிப்புறத்திலுள்ள இடத்தில் கூடுதலாக ஒரு புகை அபாய அறிவிப்பு கருவியை பொருத்துங்கள்.
- அபாய அறிவிப்பு கருவிகளை ஒவ்வொரு மாதமும் சோதனை செய்யுங்கள்.
- வருடந்தோறும் batteryகளை மாற்றுங்கள்.
- ஞாபக மறதியால் மறந்து போகாமல் இருப்பதற்கு உங்கள் கடிகாரங்களுக்கு நீங்கள் batteryகளை மாற்றும் போது அபாய அறிவிப்பு கருவிக்கும் மாற்றுங்கள்.
- குடும்பத்தின் அனைத்து அங்கத்தினர்களும் அபாய அறிவிப்பு மணியின் ஒலியை பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.



- மேலேயுள்ள இடத்தில் எழும்பும் புகையை கண்டறிவதற்கு அபாய அறிவிப்பு மணிகளை உட்கூரையில் அல்லது சுவரின் உச்சி பாகத்தின் மீது பொருத்துங்கள்.
- ஜன்னல்கள், வெளிப்புறத்திலுள்ள கதவுகள் அல்லது வேறுவகை புகை வரும் எந்த இடத்திலும் அபாய அறிவிப்பு மணிகளை வைக்காதீர்கள்.
- புகையை கண்டுபிடிக்கும் கருவிகளின் மீது paint அடிக்காதீர்கள்.
- ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை புகையை கண்டுபிடிக்கும் கருவிகளை மாற்றுங்கள்.
- காதுகேட்கும் திறன் குறைவாக உள்ளவர்களுக்கென பிரத்தியேகமான புகை அபாய அறிவிப்பு மணிகள் விற்பனையில் கிடைக்கின்றன, அவற்றைப் பயன்படுத்துங்கள்.

புகை பற்றிய அறிவிப்பை முன்கூட்டியே தெரிவிப்பதால் புகையை கண்டுபிடிக்கும் கருவிகள் பல உயிர்களை காப்பாற்ற உதவுகிறது.

■ ■ ■

To get the key for the future...
2006, 2008, 2009 2007
Karuna Gopalapillai
Broker
Dir: 416.830.8520
ReMax Vision Realty Inc., Brokerage
Each office independently owned and operated
2210 Markham Rd., Unit 1, Toronto, ON M1B 5V6
Bus: 416.321.2228 Fax: 416.321.0002
web: www.lookhome.ca
e-mail: karuna@lookhome.ca



# Nada G. Nadarajah B.V.Sc

Commercial & Residential Sales Representative

## Call Me @ 416 616 8751

"An award-winning realtor with 14 years experiance".

HomeLife
Landmark Realty Inc., brokerage
5200 Finch Ave. E, Suite 106
Toronto, ON M1S 4Z4
Bus: 416 293 5093
nanadarajah@trebnet.com

HOMELIFE HIGHER STANDARDS



$224,000
**Markham & Nashdene**
Multi-Level Industrial Unit
Lower Maintenance
Approx. 1440 Sq. Ft



SOLD
**Keele & Grandravine**
Condo. Townhouse
3+1 Bedrooms - 3 Washrooms
Finished Basement



$153,900
**McClevin & Neilson**
Condo. Apartment
2 Bedroom - 2 Washroom
Approx. 1000 Sq. Ft



SOLD
**Markham & Tapscott**
Industrial Condo. Unit
Approx. 800 Sq. Ft
Well Maintained Complex



$262,000
**Hwy 401 & McCowan**
Condo. Apartment
2+1 Bedrooms - 2 Washrooms
Close to TTC & Town Centre



$446,000
**McCowan & 16th**
Detached 2-Storey
3 Bedrooms - 3 Washrooms
Finished Basement


## For all your Real Estate needs...



Buy or sell any properties with us and WIN this new BMW car and More prizes**




**Sasi Chelvaratnam**
Sales Representative
Direct: 416.858.4828



$ 154,900
**Neilson & McLevin**
- Luxury Condominium
- 2 Bedrooms & 2 Washrooms
- Renovated Unit
- 24 Hours Gate House Security
- Call **Ravi** For Details....



$ 109,900
**Bellamy & Lawrence**
- Excellent Convenience Store
- Well Established Business
- Good Lotto Commission
- Good Weekly Sale
- Call **Justin** For Details...



**Justin William**
Real Estate Broker
Direct: 416.803.7344



$ 317,900
**Steeles & McLaughlin**
- Beautiful Detached House
- Best Location In Brampton
- Spacious 3 Bedrooms
- New Hardwood Floor Throughout
- Call **Ravi** For Details....



$ 324,900
**Kennedy & St. Clair**
- Lovely Detached Home
- 3+1 Bedrooms
- Basement Apartment
- Walk To Subway
- Call **Ravi** For Details....



$ 239,900
**McCowan & Finch**
- 3 Bedroom Condo Townhouse
- Well Maintained And Spacious Hse
- Basement Apartment W/ Sep. Ent.
- Ttc At Your Door Step
- Call **Justin** For Details....



$ 236,900
**Pharmacy & Finch**
- 4 bedroom Condo Townhouse
- Totally Renovated
- Laminated Floor Throughout
- Convenient & Quiet Location
- Call **Justin** For Details...

## HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3

**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated

# சிறுநீர் நோய்கள்



சிவாஜினி பாலராஜன்

## Urine Incontinence

சிறுநீர் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் வட அமெரிக்கர்களிடையே உண்டு. சாதாரணமாக பெரும்பான்மையாக ஆண் பெண் இருபாலரிடமும் பொதுவாக இருப்பது நீரிழிவு நோய். இது தவிர பலருக்கு தங்களையறியாது அதாவது சில சமயங்களில் கட்டுப்படுத்த முடியாது சிறுநீர் போதல், அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் போல் உணர்வு இருத்தல் (இது கடந்த மார்கழி மாதக்கட்டுரையில் எழுதப்பட்ட விடயம். இந்த மார்கழி மாதக் கட்டுரை வாசித்துவிட்டு பலர் அதற்கு நன்றி சொன்னார்கள். மேலும் தாங்கள் அதில் தரப்பட்ட இணையத் தள முகவரியில் உலாவி மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொண்டதாக கூறியிருந்தனர். உங்கள் விமர்சனங்களுக்கும் ஆர்வத்திற்கும் நன்றி) சிறுநீர் உணர்வின்றி போவது, துர்நாற்றமுள்ள சிறுநீர் போன்று பல பிரச்சினைகள் உண்டு. இவ்வாறான பிரச்சனைகளுக்கு காரணம் என்ன? எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது ஒரு மிகவும் முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

கட்டுப்பாடின்றி சிறுநீர் கழிதல் வட அமெரிக்காவில் கிட்டத்தட்ட 17 மில்லியன் மக்களுக்கு இருப்பதாக வட அமெரிக்க சிறுநீர் வியாதிகளுக்கான ஆய்வு மையம் கூறுகின்றது. இது பொதுவாக மக்களிடையே ஒரு குற்ற உணர்வு, தாழ்வு மனப்பான்மையினை தோற்றுவிக்கின்ற போதிலும் அதனை எதிர்த்து செயற்பட வேண்டிய கட்டாயத்தினை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இவற்றிற்கு வைத்தியம் அல்லது பயிற்சிகள் கிடைப்பதால் நாம் இவ்வாறான வசதிகளைப் பாவித்து பயன் பெற வேண்டும். மேலும் வயதான படியால் தான் பிரச்சினை என பலர் நினைப்பதனால் இதனைப்பற்றி அதிகம் கண்டு கொள்வதில்லை. வயதானபடியால் இது ஏற்படுவதல்ல. ஆனால் வயதாகும்போது இதன் தாக்கம் இன்னமும் அதிகரிக்கும். அதனால் எதிர்காலத்தில் மிகவும் இடையூறாக இருக்கப் போகும் இந்த குறைபாட்டினை ஆரம்பகாலத்தில் அடையாளம் கண்டுகொண்டு நிவர்த்தி செய்துவிடல் வேண்டும்.

Urine Incontinenceஇனைத் தோற்றுவிப்பதற்கு பல காரணிகள் உண்டு. இவற்றுள் சில நிரந்தரமற்ற காரணிகளாகும். சிறுநீரக அல்லது சிறுநீர்வழியில் ஏற்படும் தொற்றுக்கள், சில மருந்து வகைகளும் அவற்றின் பக்க விளைவுகளும், மேலதிக caffeine, மதுபான வகைகள், செயற்கை இனிப்புகள் (artificial sweeteners), நுரையேற்றப்பட்ட பானங்கள் (carbonated beverages) போன்றவற்றினை உள்ளெடுத்தல், மலச்சிக்கல் போன்றவை முக்கிய காரணிகளாகக் கருதப்படுகின்றன. சரியான சிகிச்சை, பயிற்சி முறைகள், நாளாந்த பழக்க வழக்கங்களில் ஏற்படுத்தும் மாற்றங்கள் என்பவை இந்த நிரந்தரமற்ற காரணிகளால் ஏற்படும் Urine Incontinence இனை முழுமையாக குணமடையச் செய்யும்.

சிறுநீர்ப்பையினைத் தாங்கும் தசைகளின் வலுவற்ற தன்மை (Weakness of the muscles that hold the bladder in place), வலுவிழந்த சிறுநீர்ப்பை அல்லது அதனைச் சுற்றியுள்ள வளையமான sphincter எனப்படும் தசை (Weakness of the bladder and or the sphincter muscles), சில ஓமோன்களின் குறைவான சுரப்பு முக்கியமாக ஈஸ்ரஜின், நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் (Neurological disorders (ex: Multiple Sclerosis. Parkinson's Disease) போன்றவை நிரந்தர Urine Incontinence இனைத் தோற்றுவிக்கக் கூடியனவாக இருந்த போதிலும் இவற்றிற்கு வைத்திய வசதிகள் உண்டு என்பது மிகவும் நல்ல ஒரு விடயமாகும்.

மேலும் இந்த Urine Incontinence ஆனது Overflow Incontinence, Stress Incontinence, Mixed Incontinence, Fistula Incontinence எனப் பலவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## Overflow Incontinence.

Overflow Incontinence என்பது பொதுவாக முழுமையாக சிறுநீர்ப்பையினை வெற்றுமை ஆக்க முடியாத தன்மையாகும். இதனால் சிலருக்கு தொடர்ந்து மிக மிக சிறிய அளவில் அதாவது ஒரு புள்ளிபோல சிறுநீரானது கசிவடைதல் அல்லது இரவில் அடிக்கடி நித்திரை குழம்பி சிறுநீர் கழித்தல், சிறிதளவு சிறுநீரை வெளியேற்றுவதற்கு நீண்ட நேரம் எடுத்தல், சிறிதளவு சிறுநீர் கழிதலும் மேலும் சிறுநீர் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு இப்படி பல விதமான சிக்கல்களை இது தோற்றுவிக்கும்.

> “ கட்டுப்பாடின்றி சிறுநீர் கழிதல் வட அமெரிக்காவில் கிட்டத்தட்ட 17 மில்லியன் மக்களுக்கு இருப்பதாக வட அமெரிக்க சிறுநீர் வியாதிகளுக்கான ஆய்வு மையம் கூறுகின்றது. இது பொதுவாக மக்களிடையே ஒரு குற்ற உணர்வு, தாழ்வு மனப்பான்மையினைத் தோற்றுவிப்பதால், அதனை எதிர்த்துச் செயற்பட வேண்டிய கட்டாயத்தினை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ”

## Stress Incontinence.

Stress Incontinence எனப்படுவது இருமுதல், தும்முதல் போன்ற செயன்முறைகளினால், அடிவயிற்றில் அமுக்கம் அல்லது அழுத்தம் கூடும்போது சிறுநீர் எங்களையறியாது கசிந்துவிடல் ஆகும். இவ்வகையான குறைபாடானது பரம்பரை அலகுகளினால் (Genes) கடத்தப்படுவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## Mixed Incontinence.

இது ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளால் தோற்றுவிக்கப்படுவது. அதாவது Stress Incontinence, Overflow Incontinence போன்றவை இணைந்து தோன்றுவித்தல் ஆகும்.

## Fistula Incontinence

Fistula Incontinence என்பது அசாதாரணமான ஒரு தசை வளர்ச்சி இரண்டு அவயவங்களுக்கிடையே (the bladder or urethra and the vagina) ஏற்படுதலாகும். மேலும் pelvic cancer, pelvic radiation therapy, obstetric trauma போன்றவற்றின் காரணமாகவும் ஏற்படலாம்.

## நிவாரணம்.

முதலில் குடும்ப வைத்தியரிடம் ஆலோசனை பெறுவது நல்லது. இவ்வாறு ஆலோசனை பெறும்போது நோயின் தீவிரமறிந்து குடும்ப வைத்தியர் சிறுநீர்த்தொகுதி, சிறுநீர் பற்றிய பிரத்தியேக பயிற்சி பெற்ற வைத்தியரிடம் Urologist நோயாளியினை அனுப்பி வைப்பார்.

## வைத்திய பரிசோதனைகள்.

**Bladder Stress Test -** இதற்கு வைத்தியர் நோயாளியினை வெவ்வேறு விதமாக (அதாவது மெல்லியதாக பின்னர் சிறிது உரமாக பின்னர் அதனைவிட உரமாக) இரும வைத்து சிறுநீர் சிந்தும் அளவினை அவதானிப்பார்.

**Urinalysis and Culture -** சேகரிக்கப்பட்ட சிறுநீர் பரிசோதனைச் சாலைக்கு அனுப்பப்பட்டு தொற்று, சிறுநீரகக் கற்கள் போன்றவை உள்ளதா எனச் சோதிக்கப்படும்.

**Ultrasound -** சிறுநீரகம், சிறுநீர்ப்பை என்பன சோதிக்கப்படும்.

**Cystoscopy -** மெல்லிய குழாயுடன் சேர்ந்த படம்பிடி கருவி ஒன்றினை சிறுநீர் வழியினூடு செலுத்தி பரிசோதனை செய்தல்.

**Neuromodulation –** மருந்துகளுக்கு குணப்படாத வகையில் முள்ளந்தண்டிலிருந்து சிறுநீர்ப்பைக்கு செல்லும் நரம்புகளை தூண்டுதல் செய்வார்கள். இது சில நோயாளிகளுக்கு மிகவும் பலனளித்திருப்பதாக அறியப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி முறையானது Neuromodulation என அழைக்கப்படும். இதற்குப் பாவிக்கப்படும் உபகரணம் device interstim எனப்படும். இந்த பொருளானது அறுவைச் சிகிச்சை மூலம் உட்பதிக்கப்படும் என்பது மட்டுமல்ல மிகவும் செலவு கூடியது என்பதால் மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் அத்தியாவசியம் கருதி செய்யப்படுகின்றது. இது எமது வால் எலும்புக்கு சிறிது மேலாக பதிக்கப்படும்.

## துர்நாற்றமிகு சிறுநீர்.

சிலர் கழிவறைக்குப் போய்வந்தால் அவர்களைத் தொடர்ந்து போகும் நபர் கழிவறை நன்றாக மணக்கின்றது எனக் குறை சொல்வார்கள். அதிகாலைச் சிறுநீர் பொதுவாக சாதாரண சிறுநீரைவிட கலங்கலாகவும் அதே சமயம் மணம் கூடியதாகவும் காணப்படுவது இயற்கையான ஒரு விடயம். ஏனெனில் இரவில் நீண்ட நேரம் நாம் நீர் எதுவும் அருந்துவதில்லை. பின்னர் நேரம் போகப் போக நாம் அருந்தும் பானங்கள், நீர் என்பவற்றினால் இந்த கலங்கல் தன்மை தெளிந்து மணம் மாறி சிறுநீர் சாதாரணமாகி விடும். இருப்பினும் சிலர் இதற்கு விதிவிலக்காக இருப்பார்கள். நீரிழிவு நோயாளிகள், சிறுநீர் அல்லது சிறுநீரகத் தொற்று உடையவர்கள், அளவுக்கதிகமாக சில மருந்து வகைகள் எடுப்பவர்கள், ஏன் சில வகையான மரக்கறிகள் கூட இவ்வாறு சிறுநீரில் நாற்றத்தினை ஏற்படுத்தும். மிகவும் முக்கியமாக Asparagus உண்டால் அது தாராளமாக ஒரு நாற்றத்தினைத் தரும். ஈரல் புற்றுநோய் உள்ளவர்களது சிறுநீரும் கெட்ட நாற்றம் தரும் என ஆராய்ச்சிகள் கூறுகின்றன. எலிகளைவைத்து இவ்வாராய்ச்சி நடாத்தப்பட்டு உறுதி செய்யப்படிருப்பதாயும், மனிதர்களை வைத்து இன்னமும் ஆராய்வுகள், பரிசோதனைகள் நடாத்தப்பட்டுக் கொண்டிருப்பதாயும் அமெரிக்க புற்றுநோய் வைத்திய ஆராய்வு மையம் கூறுகின்றது. இது இன்னமும் முடிந்த முடிவல்ல. ஆகவே சிறுநீர் கலங்கலாகவும், நாற்றம் வீசுவதாயும் உணர்ந்தால் முதலில் நிறைய நீர் அருந்தி சில மணி நேரங்களில் போகும் சிறுநீரை அவதானிக்கலாம். அதில் திருத்தம் அல்லது முன்னேற்றம் இல்லையெனில் குடும்ப வைத்தியரை அணுகலாம்.

மேலதிக விபரங்களை இணைத்திருக்கும் இணையத்தளங்களில் பார்வையிடுவதன் மூலம் மிகுந்த பலாபலன்கள் கிடைக்கும்

http://www.embarrassingproblems.com/urinary_b.htm

http://www.babycenter.ca/pregnancy/antenatalhealth/physicalhealth/antenatalincontinenceq/

pon.balarajan@thaiveedu.com

■ ■ ■

# வாடகை இல்லமும்...

7ம் பக்கத் தொடர்ச்சி...

Superintendent இடம் அறிந்து கொள்ளுங்கள்.

## வாடகைப் பணம் செலுத்துதல்

வதிவிடக் கட்டிட உரிமையாளர்கள் பொதுவாக ஒவ்வொரு மாதத்தின் தொடக்கத்தில் பின்வரும் ஏதாவது ஒரு வழியில் வாடகைப் பணத்தை செலுத்தும்படி கேட்பார்கள்.

- பணமாக செலுத்தினால் நீங்கள் வழங்கும் முழுப் பணத்திற்குமான பற்றுச்சீட்டை பெறுவது அவசியம்.
- பின்திகதியிடப்பட்ட காசோலைகள் (Post Dated Cheque).
- உறுதி செய்யப்பட்ட காசோலைகள் (Entitled Cheques).

உங்களது வங்கிக் கணக்கில், இவற்றிற்கான பணம் உள்ளது என்பதை இவ்வகை காசோலைகள் உறுதி செய்யும். இதற்காக நீங்கள் உங்களது வங்கிக்கு சேவைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

வாடகைப் பணத்தை தவிர வதிவிடத்தினுள் வெப்பமேற்றுதல் குடிநீர்பாவனை, கேபிள், தொலைக்காட்சி, தொலைபேசி என்பவற்றிற்கும் கட்டணம் செலுத்த வேண்டி நேரிடலாம்.

## வாடகை வதிவிடத்தில் இருந்து வெளியேறுதல்.

நீங்கள் உங்களது வதிவிடத்தில் இருந்து வெளியேற விரும்பினால் வதிவிடக் கட்டிடத்தின் உரிமையாளருக்கு ஒரு மாதத்திற்கு முன் அறிவித்தல் வழங்க வேண்டும். நீங்கள் வெளியேறுவதற்கு முன்பு உங்களது Apartmentஐ சுத்தம் செய்வது அவசியம்.

நீங்கள் உங்களது Apartmentஇல் ஏதாவது பகுதிகளில் உடைவுகளை ஏற்படுத்தியிருந்தால் அந்த பகுதிகளை திருத்தி அமைக்க வேண்டும்.

நீங்கள் வாடகைப்பணம் பாக்கி செலுத்த வேண்டி இல்லாவிடில் நீங்கள் ஏற்கனவே செலுத்திய Security deposit பணத்தை வதிவிட உரிமையாளர் உங்களிடம் வழங்குவார்.

சில சந்தர்ப்பங்களில் உங்களது வதிவிடத்தின் உரிமையாளர் உங்களை வெளியேறும்படி உத்தரவிடலாம். அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். இவ்வாறான அறிவித்தல் சட்டபூர்வமானது. எனவே இது தொடர்பாக முறையீடு செய்ய விரும்பினால் தாமதிக்க வேண்டாம்.

வந்தவர்களையெல்லாம் வாரியணைத்து வாழவைக்கும் வனப்பு மிகு கனடாவில் உங்கள் வாழ்வு வளமாக அமைந்து வசந்தம் மலர எனது மனம் நிறைவான வாழ்த்துக்கள்.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■

# அழகிய பூஞ்செடிகள்

# கார்னேஷன்

# (Carnation)

## அறிமுகம்:

உலகில் ஒவ்வொருவரும் இதயப்பூர்வமாக விரும்பும் செடி கார்னேசன்(Carnation) ஆகும். இதன் தாவரவியல் பெயர், டயன்தஸ் (Dianthus). இவ்வர்க்கத்தில், ஏறக்குறைய 300 இனங்கள் காணப்படுகின்றன. Dianthus caryophyllus எனும் இனமானது பெரிய தண்டு-களையுடைய பூக்களைத் தருவது. இது குடும்பம் கரியோபில்லேசியே (Caryophyllaceae) யைச் சேர்ந்தது. இன்றைய உலகில், பூக்களின் வியாபாரச் சந்தையில் அதிபிரபல்லியமாக விளங்கும் பூக்கள் என்றால் கார்னேசனுக்கு நிகர் இன்னொன்றில்லை. இதற்குக் காரணம், கண்களைப் பறிக்கும் இதனது பூக்களின் நிறங்களும் நறுமணமுமே. இராணிஎலிசபத்-தின் காலம் தொடக்கம் தோட்டங்களில் வளர்க்கப்பட்ட செம்மஞ்சள் நிறப்பூக்களை-யுடைய வர்க்கம் பெரிதும் கவனத்தை ஈர்க்-கின்றன. ஐரோப்பா, ஆசியா போன்ற நாடு-களின் பூர்வீகமானது. சில இனங்கள் வட ஆபிரிக்காவிலும் ஒரு இனம் வட அமெரிக்கா-விலும் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டன.


## முக்கியத்துவம்:

இவ் இனங்கள் நீண்டகாலம் நிலைத்து வாழும் செடிகளாகும். சில, ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடமோ வாழக்கூடியவை. நன்கு இரண்டு முதல் மூன்று அடிவரை உயமாக வளரக்கூடியவை. அநேக கலப்பு இனங்கள் வேறுபட்ட பருமனில் பல நிறங்-களில் காணப்படும். வருடத்தில் சுமாரான குளிர் இருக்கும்போது கூடுதலாக பூக்களைத் தரும். பூந்தோட்டங்களில் கூடிய பரப்பில் வெட்டுப்பூக்களுக்காக வளர்க்கப்படும். பூக்கள் ஏறக்குறைய ஒருமாத காலம் அழகுடன் காட்சி தரும். கிறீக் நாகரிகத்தில் 'தெய்வீ-கப்பூ' (Divine Flower) என அழைக்கப்படுவது. ஸ்பெயின் ஒகையோ மாநிலம் போன்றவற்றின் தேசியப் பூவாகும்.

## வளர்த்தல்:

நன்கு பசளையுள்ள ஓரளவு அமிலத்தன்மை வாய்ந்த நிலம் பயிரிடுவதற்கு உகந்ததாகும். நீரோட்டம் உள்ள மண், தினமும் 4-5 மணித்தியாலம் கிடைக்கும் சூரியவொளி செடிக்கு அனுகூலமாக இருக்கும். இதனை, ஓரடி இடைவெளிகளில் அருகருகே நடலாம். பயிரிடும்போது, வித்துக்கள், வெட்டுத்தண்டு கள், பதிவைத்தல், பிரித்தல், இவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தேர்வு செய்யலாம். வளரும் செடியானது 6-9 மாதங்களில் பூக்க-ளைத் தரும். உலர்ந்தமண், உக்கிய இலை வகைகள், சிறிதளவு களித்தன்மை சேர்ந்த பசளை தேவை. ஒருமுறை செடியின் வளர்ச்-சியை ஏற்படுத்தி விட்டால், பின்னர் உங்களை அது, கைமாறு செய்துவிடும். கூடுதலாக நீர் விட வேண்டாம். 10-10-10 கூட்டுப்பசளை போடவும்.

## வீட்டுத் தோட்டம் - 24



செல்லையா சந்திரசேகரி





## முக்கியத்துவம் வாய்ந்த பூக்கள்:

பூக்களின் மகிமை எல்லைக்கப்பாலானது. விசேட வைபவங்களில் குறிப்பாக அன்னையர் தினம், திருமணநாள் போன்றவற்றில் பெண் கள் அழகாகச் சூழப்படுவது. பழமையான ரோம் நகரில் மக்கள், தங்களது காணிக்கை-யாக நம்பிக்கை வைத்துள்ள கடவுளுக்கு இப் பூக்களை வழங்குவர். கோரியா நாட்டில், பெற்றோருக்கு தமது அன்பையும் நன்றியையும் செலுத்துவதற்காகச் சிவப்பு, நிறப்பூக்களை பெற்றோர் தினமாகிய வைகாசி மாதம் 8ம் திகதி செலுத்துவார்கள். இளஞ்சிவப்பு நிறப் பூக்களை ஆசிரியர்களுக்கு தமது பாராட்-டையும், நன்றியையும் தெரிவிக்கும் வகையில் வைகாசி மாதம் 15ம் திகதி செலுத்துவார்கள். வெள்ளைப்பூ தூய அன்பு, நல்லதிர்ஸ்டம் போன்றவற்றை எடுத்துக் காட்டும். பிரான்ஸ் நாட்டில், அன்பாகப் பழகும் எவரது மரணத்-தின்போதும் பாரம்பரியமாக இவ்வெள்ளைப் பூவினை கொடுப்பது இயல்பாகும். ஒக்ஸ்பேட் பல்கலைக்கழகத்தில் எல்லாப் பரீட்சைகளிலும் நல்லதிர்டமாக மாணவர்கள் இப்பூவினை அணிவார்கள்.

இச்செடியினைப் பயிரிடுபவர்கள், பெரிய பூக்களையுடைய இனங்களையே நன்கு விரும்புவார்கள். இங்கு பூக்களின் தண்டுகள் மிகவும் நீளமானவை. இவ்வினங்களே வியா-பாரச் சந்தையில் முன்னின்று லாபமீட்டுகின்றது.

## நோய்களும் கவனித்தலும்:

செடிகளில் போசாக்கின்மை, இலையில் புள்ளிகள் தோன்றுதல், சிவப்புச் சிலந்தி, ஏப்பிட்ஸ், வெள்ளை ரிப்ஸ் போன்றவற்றின் தாக்கம் சாதாரணமாகக் காணப்படும். கெந்-தகம் பூசியுள்ள தடியை ஊன்றுவதால் சிவப்புச் சிலந்தியைத் தவிர்க்கலாம். மண்புழுக்களின-தும் பங்கசுக்களினதும் தாக்கம் இருக்கும். புகையிலை மணத்தாலும் நிக்கொற்றீன் தெளிப்பதாலும் இவற்றை ஓரளவு கட்டுப்-படுத்தலாம்.

sekari.s@thaiveedu.com

■ ■ ■



### Family Moraceae

# முள்முருக்கு மரம்

**(Botanical name: Erythrina variegata : Eng.Name: Coral tree)**

முள்முருக்கு மரம் குடும்பம் மோறேசியேயைச் (Family Moraceae) சேர்ந்தது. இது முதன் முதலாக ஆண்டு 1829இல், பதிவுக்கு வந்தது. இது பிராசில், பேரு போன்ற நாடுகளின் சுதேசிய மரமாக விளங்கியபோதிலும் பின்னர் வெப்பமண்டலப் பகுதிகளிலும் வேறு பல நாடுகளாகிய இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, வடக்கு அவுஸ்திரேலியா போன்றவற்றிலும், முட்களைக் கொண்ட ஒரு அழகூட்டும் மரமாக வளர்க்கப்படுகின்றது. இதற்கு, Erythrina indica என மாற்றுப் பெயரும் உண்டு. நடுத்தர உயரமாக, 10-20 மீற்றர் வரை வளரக் கூடியது. மூன்று சிற்றிலைகளுடன் கூடிய கூட்டிலை வடிவம் கொண்ட இதன் இலைகளின் காம்பு நீளமானவை. கொத்துக்களாக அழகிய செந்நிறப்புக்கள் அடர்த்தியாகக் காணப்படும். அவரை போன்ற பருப்புக் கனிகள் நீளமான உருளை வடிவம் கொண்டவை. மரத்தண்டுகள் எல்லாம் கூரிய முட்களையுடையவை. மொத்தமான தண்டுகள் வீடுகளில் வேலிகளுக்கு (கதியால் எனப்படுவது) நிரையாக நடப்படும். காலவரையறையின்றி தண்டினை வெட்டி எப்பொழுதும் உண்டாக்கலாம்.

இதன் இலைகள் கால்நடைகளுக்கு சிறந்த உணவாகின்றன. தடிகளைப் புனிதமாகக் கருதி, திருமணவைபவங்களின் போது கன்னிக்காலாக நடுவார்கள். இலைகளும், பூக்களும் நரம்பு, நுரையீரல், ஈரல், மண்ணீரல் போன்றவற்றைச் சாந்தப்படுத்தும் தன்மை வாய்ந்த சிறந்த மருந்தாகக் கருதப்பட்டன. மனநோய், மனச்சோர்வு, தூக்கமின்மை, குருதியமுக்கம் போன்றவற்றிற்கும் இதனது பகுதிகள் உபயோகமாகின்றன.

# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்



## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant

**We Will**

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "**Yes**" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

VERICO TMP

**Siva Ratnasingam**

*Lic: M08002133*
*Brokerage # 11156*

SENIOR MORTGAGE CONSULTANT

***2005,2006,2007,2008 Diamond Award Winner***

**416.520.1214**



# வீடு வாங்க விற்க Buy or Sell

## Residential, Commercial & Rental

### Steeles & Staines






Excellent 5 Bedroom Fully upgraded,
Backing onto Ravine,
Brick Built , 9' Ceiling,
Upgraded 3 1/2" Strip Cabreuva exotic hardwood for Ground and 2nd Floor
Oak Stairs with upgraded railing
Double Detached Garage-direct access to home,
Finished Basement-2 b/r, w/r & kitchen,
Extras: Stainless Steel (2 Fridges & 2 Stoves, B/I Dishwasher), Washer, Dryer,
All Electrical Light Fixtures, Central Air Conditioning,
Central Vacuum and all accessories, Humidifier, Electronic Air cleaner
Custom made California Shutters
Around $175,000 worth of upgrades
**Lot Size: 44.64' x 88.91' feet**
**Taxes: $4,543 (2010)**

**$795,000**

### Weston & Major Mackenzie



Brand new 5 Bedroom with attached washrooms,
Stucco, Brick and Stone exterior-4,381 sq. ft
Custom Designed Kitchen with Granite Counter
10' Ceiling-Ground and 9' Ceiling-2nd Floor,
Upgraded 3 1/2" Strip Hardwood thru' out
Oak Stairs with upgraded railing
Double Garage-direct access to home,
Lot Size: 50.2' x 104.99' feet

**$1,299,000**



*Rudy Ruthran*
*416-587-5583*
*rudy@ruthran.com*

COLDWELL BANKER
COLDWELL BANKER EXCEPTIONAL REAL ESTATE SERVICES
Brokerage
Each office is independently owned and operated

3107 Sheppard Ave East, Toronto. ON. M1T 3J7
Tel: 416.497.9794, Fax: 416.497.5949



*Logan Velumailum*
*416-410-1620*
*vlogan599@yahoo.com*


HONDA
HELLO.
We're Honda Owners.
The only car we'd give up our old Honda for, is a new 2010 Honda.
We all love to drive our Hondas. We all love Honda's RELIABILITY. Most of all, we love Honda's AFFORDABILITY! And now, this great new 5-year purchase offer cuts financing costs dramatically! So, we're even more anxious to test drive the new 2010 models and take advantage. Join us today!
JUST ANNOUNCED Purchase Financing FOR 5 YEARS 0.9%†
2010 CIVIC
PRICE LOWERED BY $1,000¥
TURN-KEY PRICE‡ $17,420 For Civic DX Sedan
Includes Freight & Fees
Civic 12
BEST SELLING CAR IN CANADA 12 YEARS IN A ROW*
LEASE FOR / APR $148 @ 2.9%
NEW OFFER
PER MONTH FOR 48 MONTHS WITH $3,726 DOWN ON APPROVED CREDIT
Includes $1,430 Freight & Fees
2010 ACCORD
PRICE LOWERED BY $500¥
TURN-KEY PRICE $26,475 For Accord LX Sedan
Includes Freight & Fees
LEASE FOR /APR $248 @ 2.9%
NEW OFFER
PER MONTH FOR 48 MONTHS WITH $5,286 DOWN ON APPROVED CREDIT
Includes $1,685 Freight & Fees
2010 CR-V
PRICE LOWERED BY $1,500 ¥
TURN-KEY PRICE $28,015 For CR-V LX 2WD
Includes Freight & Fees
LEASE FOR /APR $268 @ 2.9%
NEW OFFER
PER MONTH FOR 48 MONTHS WITH $5,083 DOWN ON APPROVED CREDIT
Includes $1,725 Freight & Fees
FIND OUT WHAT HONDA OWNERS ALREADY KNOW.
LOW COST OF OWNERSHIP • HIGH RESALE VALUE • AFFORDABLE • RELIABLE • FUEL EFFICIENT • ADVANCED SAFETY • FUN TO DRIVE!
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465
HONDA

# Residential, Commercial & Investments...

LOCATION! LOCATION!! LOCATION!!!

மேலதிக வர்த்தக அங்காடிகள்
வாடகைக்கும்
விற்பனைக்கும் உண்டு



## HWY 401 & MORNINGSIDE AVE

இலங்கை தமிழ் கடை வியாபாரம் ஆரம்பிப்பதற்கு ஏகபோக உரிமையுடன் (Exclusive use) உள்ள ஒரு புதிய கடை வாடகைக்கு உண்டு.

இலங்கை, இந்திய உணவு பொருட்கள்
இறைச்சிமீன், கடல் உணவு
போன்ற வியாபாரம் ஆரம்பிக்கலாம்




EXCLUSIVE LISTINGS-
CONFIDENTIALITY AGREEMENT REQUIRED.

(a) Toronto- 85 Suites Apartment Building 100% Occupied.
(b) Toronto East – Medical Building Available
(c) Toronto West- Site Plan approved Banquet Hall site. Ready to build

Kitchen FOOD FAIR

Looking for a Convenience Store Franchise Opportunity?




New locations coming to Aurora, Ajax, Brampton

Call now for more info!
Dir: 416.560.4728

CITYSCAPE
REAL ESTATE LTD, BROKERAGE
25 Watline Avenue, Suite 402, Mississauga, ON

A MEMBER OF
Commercial Division
Toronto Real Estate Board
www.trebcommercial.com

CCIM

**Neel Surendran** CCIM
Broker of record.
Cell: 416.560.4728
Bus: 905-241-2222
ici@rogers.com









HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE*
Independently owned and Operated REALTOR ™
31 Progress Avenue Suite 210 ★ Toronto, ON M1P4S6
Phone: 416-298-3200

HOMELIFE HIGHER STANDARDS

| Ellesmere/Morningside | Neilson/Mclevin | Brimley/Lawrence |
|---|---|---|
|  |  |  |
| $139,900 | $219,900 | $279,000 |
| 1+1 Bedrooms, 2 Washrooms<br>Open Concept,Bright & Clean<br>Very Well Maintained Home<br>in Well Managed Luxury Building<br>24 Hr Security<br>Close to Centenial College | 3+1 Bedrooms, 3 Washrooms<br>An Excellent Starter Home<br>Located Near Every Aminity<br>You Would Need.Fridge,<br>Stove, Washer, Dryer, Elf's.<br>New High Eff. Gas Furnace | 2 Bedrooms, 1 Washrooms<br>Easy Access To Transportation<br>All Electric Light Fixtures<br>All Window Treatments<br>Most Windows Replaced |

| Finch/Markham | McCowan/Denison | Promotional Offer 2010! |
|---|---|---|
|  |  | For all my Buyers & Sellers<br>I will pay<br>Your Lawyer Fee<br>&<br>Moving Expense* |
| $318,000 | $375,000 | |
| 4+1 Bedrooms, 3 Washrooms<br>Close To Amenenities<br>Totally Renovated & Upgraded<br>Seller Willing To Rent Bsmt<br>For $600 ,Fully Fenced B/Yard<br>Bdrm Bsmt Apt Sep Ent | 3+1 Bedrooms, 5 Washrooms<br>Well Kept Home In A Great<br>Location!,Huge Driveway<br>**Great Markham Location**<br>Finished Basement<br>With A Bedroom & Washrooms | |

VALLIKKANNAN MARUTHAPPAN
Salesperson
DIRECT:
416-623-4989/416-880-6051
★★★★★

* Some conditions apply - Offer ends at December 31, 2010.
** Not intended to solicit buyers or sellers already under contract

ALPHAWEB SOLUTIONS.CA / PHONE: (416) 238-7288


Let me sell your house in
1 week*
Recent Sales by me
231 Doubtfire Cres,
Listed for $419,900 Sold for $435,300
4 B/R, 2.5 W/R
2050 Sq. Ft,
Unfinished Basement
229 Doubtfire Cres,
Listed for $439,900 Sold for $443,800
4 B/R, 2.5 W/R
2050 Sq. Ft,
Unfinished Basement
38 Bryant Street,
Listed for $640,500 Sold for $691,000
4 B/R, 3.5 W/R
2 Storey, Needs Work
Finished Basement
புதிய வருடத்தில் உங்கள் வீட்டை விற்பதற்கோ அல்லது ஒரு புதிய வீட்டை வாங்குவதற்கோ எண்ணுகின்றீர்களா?
அப்படியாயின் உடனே என்னை தொடர்பு கொள்ளுங்கள்.
அஜக்ஸ், ஸ்காபுறோ, மார்க்கம், வூட்பிறிட்ஜ், மிசிசாகா, பிறம்ரன் ஆகிய பகுதிகளில் வீடுகள் உடனடியாக தேவை.
*Some conditions apply
Ken Kirupa
Sales Representative
INSPIRED BY YOU
Thinking of Selling?
Contact Me Today.
Direct 416 294 9322
Office 416 491 4002
RE/MAX
Re/Max Crossroads Realty Inc., Brokerage
905areahomes.ca 416homes.ca
Call me to get the
Best Interest Rate for you
2.25%


வீடு வாங்கவும், விற்கவும்.......
$158,900
Neilson/Mclevin
2 Bedrooms, 2 Washrooms
Approx 1077 Sq. Ft. With Balcony
$249,900
Hurontario/Burhamthorpe
1+1 Bedrooms, 2 Washroom
Well Maintained Unit
$335,000
Dixie / Clark
4 Bedrooms, 3 Washrooms
Good Location. Well Maintained
$374,900
Yonge/Yorkmills
1+1 Bedrooms, 1 Washroom
Approx. 818 Sq Ft
$345,000
Keele/Sheppard
3 Bedrooms,3 Washrooms
Near To Hwy 401, 407
$145,900
Golf/Kingston/Eglinto
3 Bedrooms, 2 Washrooms
Mintes To Subway, Go Station
சகல விதமான படிவங்களும் நிரப்பிக் கொடுக்கப்படும்
இரஞ்சன் or செல்வா
416.816.1220
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Services
RANJAN FRANCIS XAVIER
Sales Representative
Cell: 416.816.1220
Office: 416.284.5555
880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.
வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......

# அற்றிக் பகுதியின் காற்றோட்டம், ஈரப்பதன், பனி அணை.

# (Attic Venting Attic moisture and Ice dams)

**வீடும் விடியலும் - 48**



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -


கனேடியர்கள் வீட்டின் அற்றிக் பகுதிக்குள் பிரவேசிப்பது மிக அரிதாகவே காணப்படுகிறது. பல வருடங்களாக ஒரே வீட்டில் வசித்து வந்தாலும் மேல்மாடிக்கும் முகட்டுக்கும் இடைப்பட்ட அற்றிக் பகுதி எப்படி இருக்கின்றது என்று எட்டிப்பார்க்காதவர்கள் தான் அதிகம். இங்கிலாந்து போன்ற நாடுகளில் இந்தப் பகுதி பெரும்பாலும் வசிப்பிடமாக மாற்றப்பட்டு விடும் என்பது வேறு விடயம். கனடா போன்ற நாடுகளில் அற்றிக் பகுதி பெரும்பாலும் வெறுமையாக விடப்பட்டு முறையான Insulation (தடைப்படுத்தல்) மூலம் குளிரில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பது கட்டிட நியமமாக பேணப்பட்டு வருகின்றது. பொதுவாக இரண்டு காரணங்களுக்காக அற்றிக்கைப் பார்வையிடுவதே வழக்கமாக இருக்கின்றது.

- மேல் மாடியின் மேற்பகுதியில் இருந்து நீர்க்கசிவு ஏற்படும் போது
- அணில், வெளவால், ரக்கூன் போன்ற பிராணிகளின் பிரவேசத்தைக் கண்டறிவதற்காக.

ஆனால் அண்மைக்காலமாக வெப்பமாக்கல் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் தரும் நன்கொடையைப் பெறும் நோக்கத்தோடு INSULATIONன் நிலையைக் கண்டறிய அற்றிக்கைப் பார்வையிடும் தேவை அல்லது விழிப்புணர்வு ஏற்பட்டு இருக்கின்றது என்று கூறலாம்.

## வீட்டின் மேற்பகுதியில் உள்ள "Ceiling" இருந்து தண்ணீர் கசிவு ஏற்பட்டால் என்ன செய்யலாம்?


முதலில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ள இடத்தை குறிப்பாகக் கண்டறிய வெளிப்புறச் சுவரில் இருந்து கசிவு ஏற்பட்ட இடத்தை அறிந்து குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அற்றிக்கினுள் சென்று அதனை உறுதி செய்து கொள்ள வேண்டும். அற்றிக்குள் பிரவேசிப்பதற்கான கதவு பொதுவாக உடுப்புக்கள் போடுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதியில் (Closet) அல்லது உடுப்பு அறையில் இருப்பது வழக்கம் ஏணிகளின் துணை கொண்டு அற்றிக்கிற்குள் பிரவேசிக்கலாம். ஆனால் அற்றிக்குள் பிரவேசிக்கும் போது மிக அதிக கவனம் தேவை.

வீட்டிற்குள் இருக்கக் கூடிய உஷ்ண நிலையை விட குளிர்காலத்தில் அதிக குளிராகவும் வெப்பகாலத்தில் மிக வெப்பமாகவும் இருக்கக் கூடிய அற்றிக்குக்குப் போகும் போது அதற்கேற்ப உடை அணிந்து போக வேண்டியது மிக முக்கியம்.

உடல் நலத்தைக் கருத்திற்கொண்டு தூசு தடுக்கக் கூடிய முகமூடி அணிந்து கொள்ள வேண்டியது அவசியம்.


ஒரு நல்ல நிலையில் உள்ள சக்தி மிக்க Flasks lightஐயும் வைத்திருத்தல் வேண்டும்.

அற்றிக்கிற்கு மேல் கால் வைக்கும் போது மிக அவதானம் தேவை அற்றிக் முழுவதும் INSULATION ஆல் மூடப்பட்டிருக்கும் பொதுவாக ஒவ்வொரு 16'' அங்குலத்திற்கு இடையிலும் மரச் சட்டங்கள் பொருத்தப்பட்டிருக்கும் (Wooden Joist) அந்த மரச்சட்டங்களில் மட்டுமே கால் வைத்து நடக்க வேண்டும். தவறி வெளியில் கால் வைத்தால் மிக அதிக வேகத்தில் கீழே வீழ்ந்து விட வாய்ப்பு இருக்கிறது. மாதிரிப்படம் கீழே தரப்படுகிறது.










## நீர் ஒழுக்கு ஏற்படக் கூடிய இடங்கள்.

- அற்றிக்கு ஊடாகச் செல்லும் புகைப் போக்கியினைச் சுற்றிய பகுதிகள்.
- தண்ணீர் குழாய்கள் அல்லது காற்றோட்டத்திற்காக பொருத்தப்பட்டிருக்கும் குழாய்களை அண்டிய பகுதிகள்.
- குளியலறையில் இருந்து அல்லது சலவை அறையியிலிருந்து காற்றை வெளியேற்ற பொருத்தப்பட்டிருக்கும் குழாய்களை (Duct vent) அண்டிய பகுதி.
- வீட்டை புதிதாக விரிவுபடுத்தி நிர்மாணம் செய்திருந்தால் பழைய சுவருடன் பொருத்தப்பட்டிருக்கும் பகுதி.
- இரண்டு வேறு மட்டங்களில் (Split Level) கூரைகள் பொருத்தப்பட்டிருந்தால் இரு மட்டங்களும் சக்திக்கும் பகுதிகள்
- மின்சாரக்கம்பிகள் அல்லது பொருத்துக்களை அண்டிய பகுதிகள்.
- வெளிச்சம் ஊட்டும் (Sky Light) யன்னல்கள் பொருத்தப்பட்டிருந்தால் அதனை அண்டிய பகுதிகள்

இத்தகைய பகுதிகளை முக்கியமாகக் கருத்திற் கொண்டு அவதானித்தால் தண்ணீர் கசிவிற்கான தடயங்களையும், கசிவிற்கான இடங்களையும் கண்டு கொள்ளலாம். முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும் ஆரம்பத்தில் எங்கே நீர்க்கசிவைக் கண்டு அதனைப் பார்க்க முற்பட்டோமோ அதற்கு மேலாகத்தான் நீர்க்கசிவு ஆரம்பித்திருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. ஒரு இடத்தில் ஆரம்பித்த நீர்க்கசிவு மரப்பலகை அல்லது வெளிப்புற குழாய்கள் வழியாக வழிந்து ஓடி தூர இடத்தில் வெளிப்பட்டிருப்பதற்கான வாய்ப்பும் உள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும் எனவே இடைப்பட்ட பகுதியில் இருக்கக் கூடிய Insulationஐக் கிழப்பி அல்லது ஒதுக்கிப் பார்த்தே உண்மையான கசிவுக்குரிய இடத்தைக் கண்டு பிடிக்க முடியும். அதன் பின்னர் உரிய வழிமுறைகளைக் கையாண்டு நீர்க்கசிவைத் தடை செய்தல் வேண்டும். தண்ணீர்க் கசிவைப் பொறுத்து அதனை நிறுத்தும் வழிமுறைகள் Caulking, filling, flashing என பல வேறுபட்டதாக அமையும்.

## பிராணிகளின் நடமாட்டம் காணப்பட்டால் என்ன செய்யலாம்?

ரகூன், வெளவால், புறா, அணில் போன்றவற்றின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டால் அதன் எச்சங்களால் அற்றிக் பகுதி அசுத்தமடைந்து Mold, பக்றீரியா போன்றவை உற்பத்தியாகி பாரதூரமான வியாதிகளைத் தரக் கூடிய நிலை உருவாகும் அபாயம் இருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பத்தில் உரிய Pest Control பகுதியினரை அழைத்து உரிய நடவடிக்கைகளிலும் தொற்று நீக்கிச் சுத்தம் செய்தலிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

## அற்றிக்கில் ஈரலிப்புத்தன்மை அதிகரித்துக் காணப்பட்டால் என்ன செய்யலாம்.

பொதுவாகக் கூறுவதனால் அற்றிக் குளிர்காலத்தில் குளிராகவும் அதே நேரத்தில்

20ம் பக்கம் பார்க்க...







# அற்றிக் பகுதியின்...

19ம் பக்கத் தொடர்ச்சி...

வரட்சித்தன்மை பொருந்தியதாகவும் இருத்தல் வேண்டும்.

அற்றிக் ஈரலிப்புத்தன்மையுடையதாக இருப்பதற்கு பலவகையான காரணங்களைக் குறிப்பிடலாம். தொடர்ச்சியாக இருக்கக் கூடிய ஈரலிப்புத்தன்மையால் பல விதமான பாதிப்புகள் ஏற்படவாய்ப்புண்டு Mole உற்பத்தியாகியிருந்தால் அற்றிக்குள் பிரவேசித்தவுடன் இருக்கக் கூடிய துர்மணத்தை வைத்தே இத்தகைய ஈரலிப்புத்தன்மையை உணர்ந்து கொள்ளலாம் மேற்பகுதியில் உள்ள பலகை, (Sheathing) மரச் சட்டங்கள் என்பவற்றில் Mold படிமானங்கள் நீர்க்கறைகள் இருப்பதைக் காணக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் Insulation அமர்ந்து குறிப்பிட்ட உயரத்தைவிட குறைந்த அளவிலேயே காணப்படும். நிலைமை மோசமானால் கோடை காலத்தில் அதிகரித்து வரும் 'சக்கு' மணத்தின் தன்மையை வீட்டிற்குள்ளேயே உணரக் கூடியதாகவும் இருக்கும் தொடர்ந்து அதிரித்து வரும் ஈரலிப்புத்தன்மையால் மரப்பலகைகள் சட்டங்கள் உக்கிப் பழுதடையவும் Sheathing உக்கிப் போகவும் வாய்ப்பு இருக்கிறது எனவே Shingles மாற்றும் போது அதற்கு அடியில் இருக்கக் கூடிய Sheathingஐயும் மாற்ற வேண்டிய சூழ்நிலை கூட உருவாகலாம்.

## மேலதிக ஈரலிப்புத்தன்மைக்கான காரணங்கள்.

Spring காலப்பகுதியில் அதாவது கூரையில் இருக்கும் பனி கரையும் காலத்தில் ஈரலிப்புத்தன்மை ஏற்பட்டால் Shingles மாற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதுதான் அறிகுறி. எனவே மேலதிக பாதிப்புக்கள் ஏற்படமுன்னர் உடனே shinglesஐ மாற்றியாக வேண்டும் என்பது அர்த்தமாகும்.

காற்றின் வேகத்தால் சில பகுதியில் shingles இல்லாமல் போய் விட்டால் அந்தப் பகுதியில் இருந்து கூட கசிவு ஏற்படலாம் எனவே அவற்றை நிவர்த்தி செய்தல் வேண்டும்.

முக்கியமாக வீட்டின் 2வது மாடியின் Celingல் இருக்கக் கூடிய ஒழுக்குக் காரணமாக பொதுவாக மேலே இருக்கும் சூடான காற்று அற்றிக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு இருக்கின்றது. Celingல் ஓட்டைகள் இருக்கலாம் அல்லது Ceiling சுவருடன் பொருந்தும் இடங்களில் பாரிய வெடிப்புகள் இருக்கலாம் இத்தகைய காரணங்களால் அற்றிக்குள் செல்லும் சூடான காற்று பல பாதிப்புக்களை உண்டு பண்ணும். குறிப்பாக நீர்ப்படிமானங்கள் ஏற்பட்டு (Condensation) அதிக ஈரலிப்புத்தன்மை உருவாகும்.

முறையாக Insulate பண்ணாது தமக்குத் தெரிந்த மட்டமான அறிவை வைத்துக் கொண்டு சிலரால் மேல்மாடியில் போடப்படும் Pot Lightகளால் பல விதமான பாதிப்புக்கள் காலப் போக்கில் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இத்தகைய செயல்களால் ஒருபுறம் பாதுகாப்பு நியமங்கள் மீறப்படுகின்றன. மறு புறம் Pot lightsல் இருக்கக் கூடிய இடைவெளியின் ஊடாக குளிர்காலம் முழுவதும் அமுக்கம் காரணமாக வெப்பமான காற்று எப்போதும் மேற்பகுதியில் இருந்து வெளித்தள்ளப்பட்டுக் கொண்டே இருக்கும். இதனால் அற்றிக்குள் ஏற்படும் பாதிப்பு ஒரு புறம் மறுபுறம் வெப்பமாக்கல் செலவும் அதிகரித்துக் காணப்படும்.

குளியல் அறையின் காற்றுப் போக்கி (Fan) அல்லது துணி உலர்த்தியின் காற்றுப் போக்கி (Duct vent) அற்றிக்கு ஊடாகப் பொருத்தப்படலாம் ஆனால் அதற்குரிய Metal Duct உரிய முறைப்படி Insulate பண்ணப்பட்டு முகட்டுக்கு வெளியே பொருத்தப்படல் வேண்டும். வளையக் கூடிய (FLeX DUCT) பாவிப்பதும் அவை சீராக நேராகப் பொருத்தப்படாதிருப்பதும் பாதகமானது. சில பழைய வீடுகளில் இவை அற்றிக்குள் விடப்பட்டிருப்பதையும் அல்லது இடைப் பட்டகாலத்தில் அவை முறிந்து தொங்குவதையும் பார்க்கக் கூடியதாக உள்ளது. மேலதிக ஈரலிப்பதனை உருவாக்குதில் இதுவும் முக்கியமானது.

போதிய காற்றோட்டமின்மை என்பது பொதுவாக அற்றிக்குரிய ஈரத்தன்மைக்குரிய காரணமாகக் கூறப்படுகின்றது. ஆனால் ஈரலிப்பை உருவாக்கும் காரணிகளைக் கண்டறிந்து பரிகாரம் தேடாமல் காற்றோட்டத்தைக் கூட்ட முனைவது இருக்கக் கூடிய சிக்கலை பன்மடங்காக மாற்றுவதாக அமையும். 300 சதுர அடி அற்றிக் பகுதிக்கு ஒரு Ventilation போதுமானது. பொதுவாக Attic ventilator என்பது இயற்கையாக வெளியில் உள்ள காற்றின் விசையால் இயக்கப்படுகிறது. (Driven by Wind) தொப்பிவடிவில் கூரையில் சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு வகை Ventilatorகளைப் பலரும் அவதானித்திருக்கலாம்.

## பனிக்கட்டி அணை / Ice Dam

கனடா போன்ற பனிப்பொழிவு கூடிய இடங்களில் கூரையின் மேற்பகுதியிலும் கூரையின் அடிப்பாகத்தில் நீர் வழிந்தோடும் பீலிகளை (Gutter) அண்டிய பகுதிகளிலும் ஏற்படக்கூடிய பனிக்கட்டி அணைகளால் பல பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. பனி உருகும் போதும் அல்லது மழை பெய்யும் போதும் நீரோட்டம் தடைப்படுவதால் போக வழியறியாத நீர் வீட்டுக்குள் பிரவேசிக்க வாய்ப்புக்கள் உள்ளன. அத்தகைய சூழ்நிலைகள் உருவாகும் இடத்து அவற்றை முறையாகக் கையாளுதல் வேண்டும். முறையாக Insulate பண்ணப்படாததும் வெப்பக்காற்று ஒழுக்கும் உள்ள வீடுகளிலேயே இத்தகைய Ice Damming பொதுவாக ஏற்படுகின்றது. கூரையில் உள்ள பனிக்குவியல்கள் அற்றிக்குள்ளிருந்து வரக்கூடிய வெப்பக் காற்றின் தன்மையால் உருகத் தொடங்குவதாலேயே இத்தகைய சிக்கல்கள் ஏற்படுகின்றன.

முற்றாக Insulate பண்ணப்படாத வெளிப்புற தனிக் கார் கொட்டகைகளிலும் பூரணமாக Insulate பண்ணப்பட்ட காற்றொழுக்கு இல்லாது உள்ள வீடுகளிலும் Ice Dam ஏற்படுவது அரிது. சீரற்ற அமைப்புகள் கொண்ட கூரைகள், குழப்பம் நிறைந்த வடிகால்களைக் கொண்ட கூரைகள், மாறுபட்ட கூரை அமைப்புக்கள் Cathedral ceiling என்பனவும் Ice Dam ஏற்பட வழி வகுக்கின்றன. மாறி வரும் காலநிலை காரணமாக இதனால் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக் குறைவாக இருந்த போதும் இது பற்றி அறிந்திருத்தல் பலவிதத்திலும் நன்மை பயக்கும். சில சந்தர்ப்பங்களில் நாம் எடுக்கும் சிறு முயற்சியால் எதிர்பாராதவாறு அதிகபலன் கிடைக்கும் சந்தர்ப்பமும் உண்டல்லவா? கண்ணுக்கு முன்னே தெரியக் கூடிய பனிக்கட்டி அணைகளை தட்டிவிடக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதனால் ஏற்படக்கூடிய பலன் பாரியதாகக் கூட அமைந்து விடலாம்.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

இப்போது இணையத்திலும்
'தாய்வீடு'
www.thaiveedu.com



## நாம் அழகாய் இருக்க

# சாதாரண முக அலங்காரம்

**தொடர் 06**




சசி நரேன்
Cosmetologist & Aestheticia


**Face massage (முக அலங்காரம்) வீட்டில் செய்வதற்குத் தேவைப் படும் பொருட்கள்.**

- கிளன்சிங் கிறீம் அல்லது கிளன்சிங் Milk
- Scrup
- எண்ணெய்க் கசிவான சருமம் உடையவர்களுக்குக் கொழுப்புச் சத்து இல்லாத கிரீம்
- உலர்ந்த சருமம் உடையவர்களுக்கு, ஏதாவது நர்ஷிங் கிறீம்
- சாதாரண சருமம் உடையவர்களுக்கு ஏதாவது ஒரு Massge Cream
- Eye Cream
- பஞ்சு
- குளிர்ந்த நீர்
- ஆவி பிடிக்க வெந்நீர்
- Mask
- Hair Band

தலை முடி நெற்றியில் விழாமல் முதலில் Band போடவேண்டும், அல்லது டவலால் தூக்கிக் கட்ட வேண்டும். முகத்தை நன்கு கழுவிய பிறகு, கிளன்சிங் கிறீம் அல்லது கிளன்சிங் Milk உபயோகித்து பஞ்சினால் துடைத்துவிடவேண்டும்.

பின், Scrupஐ முகத்தில் எல்லா இடமும் பரவலாக பூசிய பின் மசாஜ் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

இதற்கு சில வகை மசாஜை செய்ய வேண்டும்.

● முதலில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்து கொள்ள வேண்டும். கையின் இரண்டு பெரு விரல்களையும் தவிர்த்து மற்ற விரல்களை எதிர் எதிராக வைத்துக் கொண்டு நெஞ்சிலிருந்து மேல் தாடையை நோக்கி மிகவும் அழுத்தாமல் மசாஷ் செய்ய வேண்டும் (Chest to chin நெஞ்சிலிருந்து தாடை நுணிவரை).

● தோள்ப் பட்டையிலிருந்து ஆரம்பித்து மேல் தாடை வரை கொண்டு சென்று உடனே உங்கள் கைகளை மேல்நோக்கி எடுக்க வேண்டும் (Shouldar to chin தோள்ப்பட்டை மேல் தாடை வரை).



● தாடையின் நுனியிலிருந்து தாடையின் ஓரமாகச் சென்று (Ear lobe காதின் அடிப் பாகத்தில்) 'தோடு' போடும் இடத்திற்கு அருகில் கொண்டு செல்ல வேண்டும். ஆரம்பிக்கும்போது நான்கு விரல்களால் ஆரம்பித்து முடிக்கும்போது இரண்டு விரல்களால் முடிக்க வேண்டும். முடிக்கும்போது விரல்களில் உள்ள மென்மையான பகுதியால் லேசாக அழுத்திச் சிறிய வட்டம் போடுவது போல் இரண்டு முறை சுற்ற வேண்டும். இது ரோட்டரி மூவ்மெண்ட் (Rotary Movement) என்பதாகும் (Chin to ear lobe தாடையிலிருந்து காதின் அடிப்பாகத்திற்கு அருகில்).

● மேல் உதட்டின் மேல்பாகத்தில் நான்கு விரல்களாலும் அழுத்தி மசாஜ் செய்ய ஆரம்பித்து, கீழ் கன்னத்தின் வழியாக (Ear lobe) காதின் அடிப்பாகத்திற்கு அருகில் வரை சென்று, இரண்டு விரல்களால் முன் போலவே சுற்ற வேண்டும். (Upper lip to ear lobe) மேல் உதட்டிலிருந்து காதின் அடிப்பாகத்திற்கு அருகில்).

● உள் கண் ஓரத்திலிருந்து மூக்கின் ஓரமாக கீழ் கன்னத்தின் வழியாக பொட்டுக்குச் சென்று முன் செய்தது போல் விரல்களால் சுற்ற வேண்டும். மேற் சொன்ன பயிற்சிகள் எல்லாம் காதின் அடிப்பாகத்திற்கு அருகில் வந்து சேரும்.

Either side of the nose to temple
மூக்கின் பக்கவாட்டிலிருந்து பொட்டு வரை.

● நடு நெற்றியில் விரல்களால் ஆரம்பித்துப் புருவங்களின் மேல் வழியாக பொட்டுக்குச் சென்று முன்போல் விரலால் சுற்ற வேண்டும் (Centre eye to brow bone).

● புருவத்திலிருந்து விரல்களால் மேல் நோக்கி நெற்றியின் கடைசிவரை கொண்டு செல்ல வேண்டும் (Fore head stroke).

● இப் பயிற்சி மிகவும் முக்கியமானது. விரல்களினால் உள் கண்ணிலிருந்து ஆரம்பித்து பொட்டு வரை செல்ல வேண்டும் (Relaxing stroke).

ஒவ்வொரு பயிற்சியையும் சுமார் மூன்றிலிருந்து ஐந்து முறை செய்யலாம். பின் ஆவி பிடிக்க வேண்டும். 10 நிமிடம் வரை ஆவி பிடிக்கலாம்.

அடுத்ததாக Massage Creamஐ அவர்களின் சருமத்திற்கு ஏற்ற மாதிரிப் பாவித்து மேலுள்ள முறையிலேயே செய்யவேண்டும்.

- Kunckling
- Piching – கிள்ளுவது போல்
- Putting – வேலகமாக கையால் மசாஷ் செய்வது
- Smooting – விரல்களின் நுணியால் வெளி நோக்கி சுற்றியே செய்யவேண்டும்.
- Flying – கைகளின் ஓரங்களினால் வெட்டுவது போல் முகத்திலும் கழுத்திலும் செய்ய வேண்டும்.

இவற்றிற்கு பின் Mask பூசி 15 நிமிடம் வரை விட்டுக் கழுவ வேண்டும். பின்னர் ஏதாவது Face Cream போட வேண்டும். Face massage செய்த பின் முகம் பார்ப்பதற்கு அழகாகவும், கவர்ச்சியாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

இவை அனைத்தும் தகுந்த பயிற்சியுடன் செய்யப்படவேண்டும் என்பது கவனிக்கத்தக்கது.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■




# ஹெய்ட்டி: பேரழிவு பேராசை கொண்ட குறுநிலம்



கந்தசாமி கங்காதரன்

உலக ஊடகங்கள் எல்லாவற்றுக்கும் அவ்வப்போது சூறாவளி, மழை, வெள்ளம், ஆட்சிக்கவிழ்ப்பு, கலகம் என்று செய்திகளைத் தொடர்ச்சியாகத் தந்துகொண்டிருந்த ஹெய்ட்டி ஜனவரி 12ஆம் நாளன்று தலைநகர் போர்த் ஒ பிரின்சில் நிகழ்ந்த 7.0 ரிக்டர் அளவிலான பெருநிலநடுக்கத்தின் மூலம் முழு உலகையுமே பேரதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது. ஒரு கிழமையின் பின் ஜனவரி 20 அன்று 5.9 ரிக்டர் அளவிலான ஓர் அதிர்வு ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தவர்களைப் பீதியிலாழ்த்தி அலறியடித்துக் கொண்டு வீதிகளுக்கு ஓட வைத்திருக்கின்றது.

கரீபியன் கடலில் அமைந்திருக்கும் நாடுகளில் கியூபா, டொமினிகன் குடியரசுக்கு அடுத்த பெரியநாடு இந்த ஹெய்ட்டி. 1492இல் கிறிஸ்தோபர் கொலம்பஸ் கண்டு, உலகுக்கறிவித்த ஹிஸ்பனியோலா தீவின் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கின்றது. கியூபாவுக்கு அடுத்து கனடியர்கள் அதிகளவு உல்லாசப் பயணம் மேற்கொள்ளும் டொமினிக்கன் குடியரசு தீவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. ஒரு தீவு இரு நாடுகள் இரண்டுக்கிடையே 360 கி.மி எல்லை.

கொலம்பஸ் புதிய தீவைக் கண்டுகொண்டபின் இது ஸ்பானிய முடியாட்சிக்குட்பட்ட பிரதேசமானது. ஹிஸ்பனியோலா தீவின் பூர்வ குடிகள் Taino Indians. மில்லியன்கணக்கில் இருந்த அவர்கள் தொடக்கத்தில் ஸ்பானியர்களை இன்முகத்தோடு விருந்தோம்பத் தலைப்பட்டனர். ஆனால் விருந்தினர்களின் போக்கு நல்லதாகத் தென்படாததை உணர்ந்தபின் எதிர்க்கத் தொடங்கினர். ஸ்பானியர்களால் பரப்பப்பட்ட நோய்களாலும் திட்டமிட்ட இன அழிப்பினாலும் பூர்வகுடிகள் அழிக்கப்பட்டனர். பின்னர் கரும்பு விளைச்சல் போன்ற விவசாயத்தேவைகளுக்காக ஆபிரிக்க அடிமைகளை ஸ்பானியர்கள் இறக்குமதி செய்யத் தொடங்கினர். அமெரிக்கக் கண்டத்தின், கறுப்பின அடிமைகளைக் கொண்ட முதலாவது பிரதேசமாக ஹிஸ்பனியோலா தீவு ஆனது.

பிரெஞ்சுக்காரரும் குடியேறத் தொடங்கினர். அவர்களது ஆதிக்கம் கூடக்கூட ஸ்பானியர்களோடு முறுகல் நிலை உருவானது 1697இல் இரு தரப்பும் கூடிப்பேசி ஹிஸ்பனியோலா தீவின் மேற்கே மூன்றிலொரு பகுதியை பிரெஞ்சுக்காரர்களும் ஏனைய பகுதியை ஸ்பானியர்களும் பங்கிட்டுக் கொண்டனர். பிரெஞ்சுக்காரர்கள் தங்களுக்குக் கிடைத்த பகுதிக்கு (இன்றைய ஹெய்ட்டிக்கு) Saint Domingue என்று பெயரிட்டனர். டொமினிகன் குடியரசின் தலைநகர் Santo Domingo அல்ல இது.

பிரெஞ்சுக்குடியேற்றம் மேலும் அதிகரித்து 1713 – 1787க்குள் 30,000க்குப் மேற்பட்ட பிரெஞ்சுக்காரர் குடியேறினர். (1763இல் கனடாவில் குடியேறியிருந்த பிரெஞ்சுக்காரர்கள் 65,000 பேர்) 1790 அளவில் கரும்பு, கோப்பிப் பயிர்ச்செய்கைகளாலும் நீலச்சாய உற்பத்தியினாலும் கிழக்கைவிட மேற்கு மக்கள் தொகையிலும் பொருண்மியத்திலும் மேலோங்கியிருந்தது கனடியப் பிரெஞ்சுக் குடியேற்றங்களிலும் வளமான குடியேற்றமாக இது இருந்தது. ஆனாலும் கறுப்பின அடிமைகளுக்கெதிரான கொடூரமான சட்டதிட்டங்கள் இருந்தன. 14ஆம் லூயி மன்னன் அனுதியளித்த Code Noir (Black Code) என்ற கறுப்பின அடிமைகளுக்கு உரிய விதிமுறைகள், இன்னாளிலும் குடியேற்ற அடிமைகளுக்கெதிராக வழங்கியிருந்தது விதிமுறைகளில் மிகவும் குரூரமானவையென்று கருதப்படுகின்றன. கொண்டு வரப்பட்ட அடிமைகளில் மூன்றிலொரு பங்கினர் சில ஆண்டுகளுக்குள்ளேயே இறந்து விடுமளவுக்கு இருந்தன அந்தக் கொடும் விதிமுறைகள்.

பிரெஞ்சுப் புரட்சியின் பின் புதிய சிந்தனை, அடிப்படை மனித உரிமைகள், அடிமைகளின் விடுதலை போன்றவற்றுக்கு ஒரு புதியபாதையைத் திறந்தது Saint Domingueஇன் வட பகுதியில் 1791இல் அடிமைகளின் புரட்சியும் புதிய சிந்தனைக்குத் தூண்டுகோலாக இருந்தது. 1793இல் பிரெஞ்சு மன்னன் 16ஆம் லூயி புரட்சியாளர்களால் கொல்லப்பட, பிரித்தானியர்களும் Saint Domingueஇல் தரையிறங்கியது பதற்றத்தினை அதிகரித்தது. Toussaint l'ouverture என்ற ஒரு முன்னை நாள் அடிமையும், புரட்சித் தலைவனும் தளபதியுமான ஒருவன் கலகங்களை யடக்கியதோடல்லாமல் பிரித்தானியர்களையும் விரட்டியடித்தான். ஆனாலும் பிரெஞ்சுக்காரருக்கும் அடிமைப் புரட்சியாளர்களுக்குமிடையே பதற்றம் தொடர்ந்தது. அருகே உருவாகியிருந்த ஐக்கிய அமெரிக்கா நல்ல பிள்ளையாக இருதரப்போடும் வணிகம் செய்தது. பிரான்சில் புதிய அரசனான நெப்போலியன் போனபார்ட், பண்ணையார்களின் தூண்டுதலினால், கட்டுப்பாட்டை இழந்துகொண்டிருக்கும் குடியேற்றத்தினை கட்டுக்குள் கொண்டுவருவதற்காகவும் அடிமை முறையை மீள நிலைநாட்டவும் தன் மைத்துனன் ஜெனரல் Charles Leclerc தலைமையில் 20,000 படையினரை அனுப்பினான். புரட்சித் தலைவன் L'Ouvertureஐ சமாதானம் பேசவருமாறு அழைப்புவிடுத்து, வஞ்சகமாகக் கைது செய்து பிரான்சுக்கு அனுப்பினான் ஜெனரல் Leclerc. 1803இல் L'Ouverture காசநோய் - நெருப்புக்காய்ச்சல் - போசாக்கின்மை இந்த மூன்றில் ஒன்றால் சிறையிலே மரணித்தான். இதற்கிடையே பெரும்பாலான பிரெஞ்சுப் படையினரை மஞ்சட் காய்ச்சல் பலியெடுத்துக் கொண்டிருந்தது. புரட்சியாளர்களுடனான போரால், 18 ஜெனரல்கள் உட்பட 50,000 படையினரை பிரான்ஸ் இழந்தது. புரட்சித் தலைவன் இல்லாத நிலையிலும் புரட்சி தொடர்ந்தது.

தப்பிப் பிழைத்திருந்த சில பூர்வகுடியினரும் அடிமைகளுடன் இணைந்து தாக்கினர். பல முனைகளிலும் பிரெஞ்சுக்காரர் தோற்கடிக்கப்பட்டனர். உரிமைகளுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் நடைபெற்ற போர் வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது. இந்தப் புரட்சியில் 100,000 கறுப்பினத்தவரும் அங்கு வாழ்ந்த ஐரோப்பியக் குடியேறிகள் 40,000 பேரில் 24,000 பேரும் கொல்லப்பட்டனர்.

Taino Indiansஆல் ஹிஸ்பனியோலா தீவுக்கு வழங்கப்பட்ட பெயர்களில் ஒன்று Ajiti. மலைகள் நிறைந்த இடம் என்று பொருள். பூர்வகுடிகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் உலகின் முதலாவது கறுப்பின மக்களின் குடியரசுக்கு ஹெய்ட்டி – Haiti என்று பெயர் சூட்டப்பட்டது.

ஜனவரி 1 1804 ஹெய்ட்டி தோற்றம் பெற்றது.

இப்போது ஜனவரி 12, 2010க்கு வருவோம்.

உள்ளூர் நேரப்படி பி.ப. 4.53க்கு (ரொறன்ரோ நேரமும் இ.்.தே) 7.0 ரிக்டர் அளவில் நிகழ்ந்த இந்த நில நடுக்கம் கடந்த 200 ஆண்டுகளில் ஹிஸ்பனியோவா தீவில் நிகழ்ந்த மோசமான நிலநடுக்கமென்று கருதப்படுகின்றது. ஹெய்ட்டி தலைநகர் போர்த் ஓ பிரின்சுக்குக் கிழக்கே Leogane நகருக்கருகே 13 கி.மீ. ஆழத்தில் இந்த நில நடுக்கத்தின் மையப்புள்ளி இருந்ததாக அமெரிக்கப் புவியியல் ஆராய்ச்சி மையம் கூறுகின்றது.



கரீபியன் புவி மேலோடும் வட அமெரிக்கப் புவி மேலோடும் கிழக்கு மேற்காக ஒன்றுடனொன்று உராய்ந்து செல்லும்போது ஏற்பட்ட விளைவே இந்த நிலநடுக்கம்.

கரிபியன் புவி மேலோடு, வட அமெரிக்கப் புவி மேலோடு மற்றும் ஏனையவற்றோடு ஒப்பிடும்போது மிகச் சிறியது. எனவே, பெரு நில நடுக்கங்கள் இப்பகுதியில் மிக அரிது. அரிதான ஒரு பெரு நிலநடுக்கம் இம்முறை பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

உயிரிழப்புக்கள் குறித்து உறுதியான தரவுகள் இல்லை. எல்லாமே கணிப்புத்தான். பெரும்பாலான கணிப்புக்கள் 200,000 என்கின்றன.

24ம் பக்கம் பார்க்க...

### ஹெய்ட்டி அடிப்படைத் தகவல்கள்

- மக்கள் தொகை (2008 – கணிப்பு) 9.8 மில்லியன்
- எழுத்தறிவு 65.9%
- தொடக்கப் பாடசாலையில் இணையும் சிறார்கள் - 67%
- 6ம் வகுப்புக்குச் செல்வோர் 30%
- பட்டதாரிகளில் புலம்பெயர்வோர் 80%
- சனத்தொகையில் ஆபிரிக்க வம்சாவளியினர் 90-95%


### பொருண்மியம்

- தனிநபர் வருமானம் அமெரிக்க டொலர் 750.00
- செல்வந்தர்கள் 1%
- செல்வந்தர் வசமிருக்கும் நிலம் 50%

### புலம்பெயர்ந்த ஹெய்ட்டி நாட்டவர்

- டொமினிக்கன் குடியரசு 800,000
- ஐக்கிய அமெரிக்கா 600,000
- கனடா 100,000
- பிரான்ஸ் 80,000
- பஹாமாஸ் 80,000




HOMELIFE FUTURE REALTY
7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8
Office: 905-201-9977
Fax: 905-201-9229
"Call me for all your Mortgage needs! Whether it is your First or Second"
"Looking for a home in Hamilton, Ottawa or Waterloo? Contact Me!"
Brimley/Ellesmere
$315,900
3 Bedrooms.
2 Washrooms.
Luxurious Condo
Close to all Amenities
Large Eat-In Kitchen
Morningside/Finch
$430,500
4+2 Bedrooms.
4 Washroom.
Modern Kitchen
Finished Basement,
Includes Sep.Ent.
Kennedy/Denison
$398,000
3 Bedrooms
3 Washrooms
Close to all Amenities
Finished Basement
New Appliances
LOKAN SUNDARAM
Broker
416-450-3984
lokan.homelife@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS


முழு நேர வீடு விற்பனை முகவர்
Neilson & Finch
$364,900
4 Bedrooms, 3 Washrooms
Basement Apt.
Hardwood Flooring
Fully Renovated
Neilson & Finch
$359,900
3 Bedrooms, 3 Washrooms
New House
Family Room in 2nd Floor
Semi Detached
Neilson & Finch
$259,900
3 Bedrooms, 3 Washrooms
Basement Apt.
Sept. Entrance
Fully Renovated
Neilson & Finch
$179,900
3 Bedrooms, 2 Washrooms
Basement Apt.
Close to TTC, MALL
Schools
Medowvale & Sheppard
$309,900
3 Bedrooms, 3 Washrooms
Basement Apt., Sept.Ent
Hardwood Flooring
Fully Renovated
Kipling & Finch
$159,900
2+1 Bedrooms,
2 Full Washrooms
NO DOWN PAYMENT
Fully Renovated
Midland & Lawrence
$159,900
3 Bedrooms, 2 Washrooms
Parquet Flooring
2 Balconies, Central Air
NO DOWN PAYMENT
Century 21
Affiliate Realty Inc. Brokerage*
416.290-1200
Shiamala Ratnasabapathi
Sales Rep.
PUNCH SOCKALINGAM - 416-786-2463
Broker

# ஹெய்ட்டி: பேரழிவு...

22ம் பக்கத் தொடர்ச்சி...

பேரழிவு நிகழ்ந்து 12 நாட்களுக்கு மேலாகியும் ஆயிரக்கணக்கான உடலங்கள் இடிபாடுகளிலிருந்து அகற்றப்படாமலிருந்தன. துர்நாற்றத்தைப் பொறுக்கவியலாது பலர் தங்கள் மூக்கின் அடியில் பற்பசையைப் பூசிக்கொண்டு திரிந்தனர்.



உயிரிழந்த கனடியர்களில் மத்திய காவல்துறையினர் (RCMP), பேராசிரியர், ஐ.நா பணியாளர் எனப் பல்வேறு தரப்பினரும் அடங்குகின்றனர். ஹெய்ட்டியின் நீதி அமைச்சர், போர்த் ஓ பிரின்ஸ் நகரப் பேராயர் என்போரும் இறந்திருக்கின்றனர். ஜனாதிபதி மாளிகை இடிந்து வீழ்ந்தாலும் ஜனாதிபதி Rene Preval காயங்களேதுமின்றி தப்பியிருக்கின்றார். நாடாளுமன்றம், போர்த் ஓ பிரின்ஸ் நகரப் பேராலயம் (Cathedral), ஐக்கிய நாடுகளின் ஹெய்ட்டி தலைமைச் செயலகம், பல அரச அலுவலகங்கள், அரச மருத்துவமனைகள், நாட்டின் முதன்மைத் துறைமுகம் என்பன முழுதாக அழிந்து போயுள்ளன. துறைமுகம் இயங்குவது இப்போதைக்குச் சாத்தியமில்லை எனவும் சொல்லப்படுகின்றது. ஜனாதிபதி மாளிகை வளாகமும் விமான நிலையமும் அமெரிக்கப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ளன. உள்வரும் உதவி விமானங்களைச் சமாளிக்க முடியாமல் விமான நிலையம் திணறியது. உதவிப்பொருட்களை இறக்கிக்கொண்டிருக்கும் விமானங்கள் மேலெழும் வரையில் உதவி கொண்டுவந்த விமானங்கள் சுற்றிக்கொண்டிருந்தன. கொண்டுவரப்படும் உதவியின் அடிப்படையிலேயே விமானங்கள் தரையிறங்க அனுமதிக்கப்பட்டன. நடமாடும் மருத்துவமனை உபகரணங்களோடு வந்த பிரெஞ்சு விமானமொன்று திரும்பிச் செல்லவேண்டியிருந்தது.

மிகப் பெரிய சிக்கல் என்னவென்றால் அரச இயந்திரத்தின் செயலற்ற தன்மை. சட்டம், ஒழுங்கு என்றால் "அப்படியென்றால் என்ன?" என்று கேட்கக்கூடிய நிலை. எங்கும் களவு, கொள்ளை, வன்முறை தலைவிரித்தாடுகின்றன. தண்ணீர்தான் முதன்மைத் தேவையாக இருந்தது. குடிநீரின்றி பலர் தாகத்தினால் நாவரண்டு போயிருந்தனர். உதவிப்பொருட்களில் தண்ணீருக்குத்தான் முன்னுரிமை.

கொல்லப்பட்டவர்களில் தங்கள் வளவுகளிலேயே அடக்கம் செய்யப்பட்டோர். பாக்கியவான்கள் என்கிறார். ஓர் உதவிப் பணியாளர். ஏனையோர் யார் யாரென்று தெரியாமல் குழிகளில் அடக்கம் செய்யப்பட்டனர்.

உலக ஊடகங்கள் மிகமிக விரைவாக நிலைமையை எடுத்துச் செல்கின்றன. "இந்தஅழிவுக்கு முன்னமே, 'பிறரின் உதவியோடு கூரிய வாள்முனையில் நடப்பது' போன்ற அளவுக்கு ஹெய்ட்டியின் பொருண்மியம் சிதைந்து போயிருந்தது" என்கிறார் ஓர் ஊடகவியலாளர். தலையில் கொங்கிறீட் துண்டு ஏறி ஆபத்தான நிலையில் அமெரிக்கக் கடற்படையின் USS Carl Vinson விமானந்தாங்கிக் கப்பலுக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு சிறுமிக்கு அவசர சத்திரசிகிச்சை தேவையாயிருந்தது. கப்பலில் அவ்வளவு நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர் இருந்திருக்கவில்லை. தகவல்கள் பரிமாறப்பட்டு ஹெய்ட்டியில் கடமையிலிருந்த C.N.N இன் மருத்துவ நிருபரும் தொழில் முறை நரம்பியல் நிபுணருமான சஞ்சய் குப்தாவைத் தேடிப் பிடித்துக்கொண்டு வந்து சிறுமிக்குக் கப்பலில் வைத்து சிகிச்சையளித்துக் காப்பாற்றினர்.

இன்னுமோர் ஊடகக் குழுவுக்கு பாதிக்கப்பட்ட மக்கள், 'எங்களுக்கு ஊடகவியலாளர்கள் வேண்டாம், மருத்துவர்கள்தான் வேண்டும்' என்று ஆவேசமாகச் சொன்னார்களாம். ஊடகங்களின் சேவையால் நிலைமை வெளிக்கொணரப்பட்டு உதவிகள் அதிகரிக்கின்றன. கனடாவில்கூட ஜனவரி 22 மாலை 7 மணிக்கு பல தொலைக்காட்சிகள் சேர்ந்து Canada for Haiti நிகழ்வின் மூலம் ஒரு மணி நேரத்தில் 2.5 மில்லியன் டொலரைச் சேகரித்தன. அமெரிக்கத் தொலைக்காட்சிகள் Hope for Haiti என்ற நிகழ்வை நடத்தின. வெளியேயிருந்து உதவிகள் வந்துசேரும் அதேவேளை மேற்காபிரிக்க நாடு செனகல் பாதிக்கப்பட்டவர்கள் செனகலில் குடியேற விரும்பினால் நிலம் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. ஆபிரிக்கர்கள், ஆபிரிக்காவுக்கே திரும்பவேண்டும் என்ற Rastafarian கொள்கையையும் செனகல் நினைவூட்டியிருக்கின்றது.

ஹெய்ட்டி மக்களுக்காக கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் ஒரு நிதி சேகரிப்பு நிகழ்வை நடத்தியிருந்தது. 4 மணிநேரத்தில் 12,000 டொலர் சேகரிக்கப்பட்டது.

போர்த் ஓ பிரின்ஸ் பேராலயம் இடிந்து போனாலும் பேராலய முன்றலில் ஜனவரி 17 ஞாயிற்றுக்கிழமை வழிபாடுகள் நடைபெற்றன. அமைச்சரவைக் கூட்டம்கூட ஒரு காவல் நிலைய முன்றலில் நடைபெற்றது. உடைந்து வீழ்ந்து கிடந்த கொங்கிறீட் தூண்களில்தான் அமைச்சர்கள் அமர்ந்திருந்தனர். வெளிநாட்டுத் தூதுவர்களும் தொண்டு நிறுவனப் பணியாளர்களும் அமைச்சரவை கூட்டத்தில் இணைந்திருந்தனர்.

2008இலேயே டொமினிக்கன் குடியரசில் நடைபெற்ற ஒரு மாநாட்டில், 'விரைவில் 7.2 ரிக்டர் அளவிலான அல்லது அதனிலும் கூடியளவிலான நிலநடுக்கம் இந்தப் பிராந்தியத்தில் ஏற்படலாமென்று நிபுணர்கள் எதிர்வு கூறியிருந்தனர். சரியான கவனம் கொடுக்கப் படவில்லை. கனடாவில்கூட வடஅமெரிக்கப் புவி மேலோடும் பசுபிக் புவி மேலோடும் உரசக்கூடிய வாய்ப்புள்ள தென்மேற்கு பிரிட்டிஷ் கொலம்பிய மாநிலப் பகுதிகளிலும் அமெரிக்க வோஷிங்டன் மாநிலத்தின் வட மேற்குப் பகுதியிலும் நிலநடுக்கத்திற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக வோஷிங்டன் பல்கலைக் கழக ஆய்வுவென்று கூறுகின்றது. (நன்றி: www.sciencedaily.com)

ஹெய்ட்டியில் பேரழிவுக்கு, முக்கிய காரணம் நிலநடுக்கத்தினைத் தாங்கிக்கொள்ளக்கூடிய வகையிலான கட்டடங்கள் இல்லாததே. இனியாவது மீளக் கட்டியெழுப்பும்போது, இந்த விடயம் கவனத்திற் கொள்ளப்படுமென நம்புவோம். ஹெய்ட்டி மக்கள், இந்தத் துயரிலிருந்து மீண்டு அவர்கள் வாழ்வு மேம்பட வேண்டுமென்று அவாவுறும் அனைவரோடும் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

### ஐ.நா. அமைதிப்படையினர்

2004 இலிருந்து 9,100 ஐக்கியநாடுகளின் அமைதிப் படையினர் ஹெய்ட்டியில் நிலை கொண்டுள்ளனர்.

பேரழிவையடுத்து மேலும் 3,500 படையினரை அனுப்ப ஐ.நா.பாதுகாப்புச் சபை ஒப்புதலளித்துள்ளது.

சிறார் மீதான பாலியல் குற்றங்களுக்காகவும் பெண்கள் மீதான வல்லுறவுக் குற்றங்களுக்காகவும் ஐ.நா.அமைதிப் படையிலிருந்த 114 இலங்கைப் படையினர் ஹெய்ட்டியிலிருந்து திருப்பி அனுப்பப் பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

### ஆட்சிக் கவிழ்ப்பும் மாற்றமும்

1844-1915 வரை ஹெய்ட்டியில் பதவி வகித்த 22 ஜனாதிபதிகளில் ஒருவருமே பதவியிலிருந்து அகற்றப்படவோ கொலை செய்யப்படவோ இல்லை. ஆனால், டொமினிக்கன் குடியரசில்1844–1930 வரையில் 50 ஜனாதிபதிகள் பதவியிலிருந்தனர். 30 புரட்சிகளும் நடைபெற்றன.

1844-1915 வரையான காலகட்டம் தவிர்த்து இன்றுவரை 32 ஆட்சிக் கவிழ்ப்புக்கள் ஹெய்ட்டியில் நடைபெற்றிருக்கின்றன. அப்படி இருந்த ஹெய்ட்டி இன்று இப்படியாகிவிட்டது.

### ஹெய்ட்டியில் தொடர்ச்சியான பேரழிவுகள்

- 1970 – நிலநடுக்கம்
- 1842 – ஹெய்ட்டி, டொமினிக்கன் குடியரசின் வடபகுதியில் பெரு நில நடுக்கத்தினால் பேரழிவு.
- 1935 – சூறாவளி 200 பேர் பலி.
- 1946 - இரு நாடுகளையும் 8.1 ரிக்டர் நில நடுக்கம் தாக்கியது. அதனால் ஏற்பட்ட ஆழிப்பேரலையில் 1,790 பேர் பலி.
- 1954-சூறாவளி–நூற்றுக்கணக்கானோர் பலி.
- 1963 – ஹெய்ட்டியிலும் கியூபாவிலும் சூறாவளியினால் 6,000 பேர் பலி.
- 1994–சூறாவளி–நூற்றுக்கணக்கானோர் பலி.
- 1998 - சூறாவளியினால் 80 வீதமான பயிர்கள் அழிக்கப்பட்டன. 400 பேர் பலி.
- 2004 மே - 3 நாட்கள் பெருமழை. வெள்ளத்தினால் 2,600 பேர் பலி.
- 2004 செப்ரெம்பர் - புயல், மழையினாலும் நிலச் சரிவினாலும் 1,900 பேர் பலி. 200,000 பேர் வீடிழப்பு.
- 2007 ஒக்ரோபர் - புயல் மழையினாலும் நிலச் சரிவினாலும் 57 பேர் பலி.
- 2008 ஓகஸ்ட். செப்ரெம்பர் - 3 சூறாவளிகள், 800 பேர் பலி. பயிர்கள் நாசம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நட்டம்
- 2010 ஜனவரி – பாரிய நில நடுக்கம்




House for Sale

Birchmount & Lawrence
3+1 Bedrooms,
2 Washrooms

S.K. BALES

416 801 3219

Canadian Home Appraisals Inc.
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

MY PROFESSIONAL DESIGNATIONS:
- CRA (Canadian Residential Appraiser)
Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
- Car: ( Certified Appraisal Reviewer)
Designation with Canadian National Association of Real Estate Appraisers.
- MVA( Market Value Appraiser-Residential
Designation with The Canadian Real Estate Association
- FRI (Fellow of the Real Estate Institute)
Designation with Real Estate Institute of Canada
- CRES ( Certified Real Estate Specialist)
Designation with Real Estate Institute of Canada
- RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21.
Affiliate Realty Inc.

S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member



வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
RE/MAX
SOLD
Kennedy/Eglinton
$164,800
Luxury Rainbow Village Condo With 24 Hrs Gate House Security, Day Care Facility And Close To All Amenities.
Markham Ellesmere
$319,000
Detached Bungalow Bed rooms 3+1, Washrooms 2 Solid Brick Bungalow In A Very Desirable Area..2 Min. To Kg School; 5 Min To Sec. School
16th Ave/Markham Bypass
$339,900
Townhouse, 2 Story Bed rooms 2+1, Washroom 3 Immaculate Townhouse - Walk To New Shoppes In Cornell
Mccowan/Steeles
$349,900
Link 2 story, Bed rooms 3+1, Washrooms 3 This Has Been Updated.Seperate Entrance To Finished Basement With One Bdrm,Kitchen
Burr Oak & Ninth Line
$419,000
Detached 2 Story Bedrooms 3, Washrooms 3, Across The Street From Public School,Large Bedrooms,
16th/9th Line
$429,000
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3 Walking Distance To School & Public Transportation Double Car Garage
Morningside / Old Finch
$438,800
Detached 2 Story, Bed rooms 4 Washromss 3, Approx. 1900 Only 7 Years Old! Approx. 2800 Sq.Ft., 4 Large Bedrooms
Mccowan / Highglen
$439,900
Detached 2 Story, Bed rooms 3+2 Washrooms 4. Steps To Schools, Park, Bus & Shopping. Finished Bsmt Had 2 Bdm & 1X4 Pc Wash-
Markham & Steeles
$444,900
Detached 2 Story, Bed rooms 4+2, Washrooms 4 2 Min.To Ttc & SteelesClose To Shopping And Schools, Second Floor Balcony
Ninth Line/Kenilworth/Hwy 7
$449,000
Detached 2 story, Bed rooms 4 Washrooms 3, High Demand Location Closer To All Amenities 2 Minutes To Markham/Stoufville Hospital
Middlefield/Denison
$449,900
Detached 2 Story, Bedrooms 4+2, Washrooms 3, Home Approx. 2400 Sqft. Near Schools
Middlefield/14th
$459, 900
Link 2 Story, Bed rooms 4+1, Washrooms 4 Aprox.2100 Sqft Of Luxury,Approx 10 Yrs Old, Enclosed Front Porch
Markham/Major Mackenzie
$469,500
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, 4 Bedroom Brick Home Full Of Luxury Upgrades Prof.Finished Interlock
Finch/Neilson
$475,000
Detached 2½ Story, Bedrooms 3+1 Washrooms 4,3.5 Years New All Brick Home, Separate Entrance To Basement With Large Bed-
Mccowan/14th Ave
$ 529,900
Detached 2 Story, Bedrooms 5+2, Washroom 4 Corner Lot, Finished Bsmt With Sep. Ent. + 2 Bedroom + Kitchen + 4Pc Bathroom
9th Line/16th Ave
$549,900
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4, Only 2 Years New 4 Bedroom Home Approx 2900Sqft With 3 Full Baths
Markham Road/14th Ave
$639,000
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 5 3400 Sq.Ft, Two Ideally Built Basement Apartments Bring Rental Income
9th Line/14th Ave
$928,800
Detached Bungalow, Bedrooms 4+1 Washrooms 4, Built'spacious Bungalow In Prestigious'legacy'community Fin.Bsmt W/Br,Rec
Harwood S. Of Tounton
$325,000
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3 Upgrated Whith Hardwood Floor And Modern Apliances, Quiet Neghborhood
Markham & Eglinton
$329,900
Townhouse 2 Story Bed rooms 3, Washrooms 2, No Maintenance Fee, New Flooring , Minutes To All Amenities , Close To Schools
Hoover Park/Weldon
$309,900
Townhouse. Bed rooms 3, Washrooms 2, Beautiful Mattamy Freehold Open Concept Home. Gorgeous Kitchen
Hwy 7/East Beaver Cr
$544,900
Heart Of Richmond Hill. Well-Known Sheraton Parkway Mall. Was A Restaurant Unit.Space Can Also Be Used For Retail/Office Purpose
Sales of Business
Shell
$525,000 For Sale
Sale Of Business Without Property Gas Stations. Full Service Gas Station On A Very Busy Highway 41
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'




# Kannan Kankesu

REAL ESTATE & MORTGAGE BROKER

**Cell: 416 418 5189**

Bus: 416 284 5555

For more info www.bestinfo.ca

RED CARPET
Royal Realty Ltd, Brokerage
Independently Owned and Operated

880 Ellesmere Road, Suit 204, Toronto, ON

kkankesu@gmail.com

**9th & 14th**





**$654,000** 4 Bedroom
4 Years Old Library
3000-3500 4 Washrooms
On Boxgrove 110k+Upgrades

**McCowan/Denison**



**$599,000** 4+2 Bedroom
3000-3500 Sep Entrance

**Chinguacousy/Botavia**



**$349,000** $$$$ Spent on upgrades
4Years Old High End S.S Appl.

**9th Line/Hoover Park**




**$399,900** 9 Month Old
4 Bed Room 3 Washrooms

**McCowan/Denison**




**$364,900** FinishedBasement
3+2 Bedroom 2 Washrooms

**Kennedy/401**





**$1100** 2Bed Room Condo
Incl: Heat, Hydro, Water, TV, Prking.

**McCowan/Eglinton**




**$24,900+** Sale of Business
Low Rent Long lease

**Westney/Rossland**



**$424,900** Hardwood Floor
4 Bed Room 3 Washrooms

**Dixe/Bloor**



**$144,900** Maint $498
2+1 Bedroom 2 Washrooms

# INSURANCE SERVICE

## Life Insurance



உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்

**Thana Manickavasagar**

*Broker*

**Cell: 416-728-5772**

**மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி**

**New Low Rates**
**Approved within 48 Hours**

**85 வயத்துக்கு உட்பட்ட யாரும் நிராகரிக்கப்பட மாட்டார்கள்**



Business: 416-290-1200
thana7@gmail.com
www.thana.ca

## 'சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகள்' இனங்காணுதலும் இணைந்துவாழ்தலும்

# மனநிலை ஒழுங்கீனங்கள் (Mood disorders)

ஜீவா திசைராஜா



**தொடர் 3**

நாம் எல்லோரும் காலத்திற்குக் காலம் துக்கம் (sad) அல்லது விசனத்திற்குட்படுவது (melancholy) இயல்பானதாகும். ஆனால் துக்கத்தின் வலி விட்டுவிட்டு ஆனால் தொடர்ந்து ஏற்படுவதாகவும் (Chronic) தாங்க முடியாததுமாக இருப்பின் அதனால் பாதிக்கப்படுபவருக்கு அது 'மலை போன்றதொரு வலி' யாகவே இருக்கும்.

மனநிலை ஒழுங்கீனங்களானவை, பொதுவாக மனஅழுத்தமும் (Depression) இரு துருவ அறிகுறிகளாகவும் (Bi-polar syndromes or manic- depression) காணப்படுகின்றது. இரு துருவ அறிகுறிகள் எனும்போது அளவுக்கு மீறிய துக்கம் மற்றும் மனஅழுத்த நிலையிலிருந்து அளவுக்கதிகமான பதட்டநிலையாக மாறி மாறி ஏற்படுவதைக் குறிக்கும். இம் மனநிலை ஒழுங்கீனங்கள் 7 பேரில் ஒருவரைத் தாக்குவதாக கூறப்படுகின்றது. இந்நிலை காலம் செல்ல செல்ல மாறாததாகவும் அந்நபரினுள் ஊடுருவிய ஒரு மனநிலையாகவும் காணப்படும்.

### பிள்ளைகளும் மனநிலை ஒழுங்கீனமும்

7-14%மான பிள்ளைகள் 15 வயதை அடைவதற்கு முன்னர் பாரிய மனஅழுத்த நிகழ்வுகளை அனுபவிக்கின்றனர். 20-30%மான வளர்ந்த இருதுருவ நோயாளிகள் தமது முதலாவது நிகழ்வு 20 வயதை அடைவதற்கு முன்னர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர்.

100,000 வளரிளம் பருவத்தினரில் 2,000 தொடக்கம் 3,000 பேர் மனநிலை ஒழுங்கீனங்களைக் கொண்டவர்களாக இருப்பதுடன் இவர்களில் 8-10 பேர் தற்கொலை செய்கின்றனர்.

8%மான வளர்ந்தோர் பாரிய மனஅழுத்தத்தை தமது வாழ்வின் எந்த ஒரு கட்டத்திலேனும் அனுபவித்தவர்களாக இருப்பர். கிட்டத்தட்ட 1%மானோர் இருதுருவ மனநிலை ஒழுங்கீனங்களைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

மனநிலை ஒழுங்கீனங்கள் பொதுவாக வளரிளம் பருவத்திலேயே ஆரம்பமாகின்றது. மனநிலை ஒழுங்கீனங்களால் பாதிக்கப்படும் பிள்ளைகளும் வளர்ந்தோரும் சமூகத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட முடியாதவராக இருப்பர். மனஅழுத்தத்திற்குட்படும்போது வாழ்வில் ஆர்வத்தை இழப்பதோடு சந்தோஷ மற்றும் காணப்படுவர். இருதுருவ மனநிலை ஒழுங்கீனங்களைக் கொண்ட நபருக்கு இம் மனநிலை ஊசலாட்டங்கள் அவர்களின் வாழ்வில் மட்டுமல்லாது அவர்களைச் சுற்றியுள்ள அனைவரது வாழ்வின் எல்லா கட்டங்களிலும் ஓர் அழிக்கும் செல்வாக்கைச் செலுத்துவதாக இருக்கும்.

இத்தகைய இருதுருவ மனநிலை ஒழுங்கீனங்கள் பரம்பரையானதாக காணப்படுகின்றது. எனினும் இந்த மரபணுவைக் கொண்ட அனைவரும் இம் மனநிலை ஒழுங்கீனங்களால் பாதிக்கப்படுவார்கள் என்று கூறமுடியாது. மனஅழுத்தங்களும் சந்ததி சந்ததியாக தொடர்வதாக கூறப்படுகின்ற போதும், இத்தகைய நோய் காணப்படாத குடும்பங்களில் உள்ளவர்களையும் இது பாதிக்கின்றது. பாரிய மனஅழுத்த ஒழுங்கீனமானது மூளையின் நரம்பியல் - இரசாயன சமநிலையின்மையுடன் தொடர்புபட்டுள்ளதாக பொதுவாக ஆய்வுகள் கூறுகின்றன.

> "மனஅழுத்தங்களும் சந்ததி சந்ததியாகத் தொடர்வதாக கூறப்படுகின்ற போதும், இத்தகைய நோய் காணப்படாத குடும்பங்களில் உள்ளவர்களையும் இது பாதிக்கின்றது. பாரிய மனஅழுத்த ஒழுங்கீனமானது மூளையின் நரம்பியல் - இரசாயன சமநிலையின்மையுடன் தொடர்புபட்டுள்ளதாக பொதுவாக ஆய்வுகள் கூறுகின்றன."

### மனநிலை ஒழுங்கீனத்தின் அறிகுறிகள்

**மனஅழுத்த அறிகுறிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:**

- துக்கம்,
- களைப்பு,
- நம்பிக்கையிழத்தல்,
- அதைரியப்படல்,
- உணவுண்ணலில் இருக்கும் விருப்பத்தில் ஏற்படும் மாற்றங்கள்,
- வாழ்வில் ஆர்வம் இழத்தல்,
- நித்திரை செய்வதில் கஷ்டம்,
- தாழ்வுணர்வு,
- பெருப்பிக்கப்பட்ட குற்றவுணர்வு,
- தான் எதற்கும் தகுதியற்றவர் என எண்ணுதல்,
- திறமையாக செயற்பட முடியாமை.

**இரு துருவ அறிகுறிகள் மேற்கூறப்பட்ட அனைத்தையும் அடக்குவதோடு பின்வரும் பதட்ட அறிகுறிகளையும் மேலதிகமாகக் கொண்டிருக்கும்:**

- அதிகரித்த பலமும் சக்தியும்.
- குறைந்த நித்திரை.
- அளவுக்கதிகமாக எரிச்சலடைதல்.
- விரைவான, எதிர்வு கூறமுடியாத உணர்வு மாற்றங்கள்.
- மிக விரைவான எண்ணங்கள், சிந்தனைகள், செயல்பாடுகளில் அதிகரித்த ஆர்வம்.
- அளவுக்கதிகமாக செலவழித்தல், ஆடம்பரத் தன்மை.
- தன்னை உயர்வாக நினைத்தல்,
- அளவுக்கதிகமான பாலியல் உணர்வு,
- எதையும் சரியான முறையில் மதிப்பிட முடியாமை.

### மனஅழுத்தமும் இருதுருவ மன நிலை ஒழுங்கீனங்களும் எவ்வாறு கண்டறியப்படுகின்றன?

ஓர் பட்டியல் வினாக்களை வினவுவதன் மூலம் வைத்தியர்கள் மன அழுத்தத்தை கண்டறிகின்றனர். இந்த கண்டறிதலில் ஒன்று 'பெக்கின் மனஅழுத்த பட்டியல்' (Beck's Depression Inventory) என அழைக்கப்படுகின்றது. இவ்வாறு பல்வேறு பட்டியல் வினாக்கள் வினவப்பட்டு நோயாளியையும் நோயாளியை பராமரிப்பவர்களையும் நேர்முகம் (interview) காண்பதன் மூலம் நோயின் அளவு மதிப்பிடப்படுகின்றது. இந்த மதிப்பீட்டில் நோயாளியின் முழு மருத்துவ வரலாறும் ஆராயப்படுவதுடன், உடலியல் பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகின்றது.

**பின்வரும் பட்டியல் பிள்ளைகளின் மன அழுத்தத்தின் அளவை அறிவதற்கு பயன்படுத்தப்படுகின்றது:**

- ஓர் தொடர்ந்த துக்கமான, பதகளிப்பான அல்லது 'வெறுமை'யான மனநிலை காணப்படுதல்.
- சாதாரண நடவடிக்கைகளில் ஆர்வம் இழத்தல்.
- சக்தி குறைந்து களைப்படைதல்.
- நித்திரை செய்வதில் பிரச்சனை (நித்திரையின்மை அல்லது அளவுக்கதிக நித்திரை).
- உணவுண்பதில் பிரச்சினை (அளவுக்கதிகமாக நிறை குறைதல் அல்லது நிறை கூடல்).
- கிரகித்தல், நினைவில் வைத்திருத்தல் அல்லது தீர்மானம் எடுப்பதில் கஷ்டம்.
- நம்பிக்கையிழத்தல் அல்லது எதிலும் எதிர்மறையான கருத்துக்களைக் கொண்டிருத்தல்.
- குற்றமனப்பான்மை, தகுதியற்றவரென்று எண்ணுதல்.
- இறப்பு அல்லது தற்கொலை எண்ணங்கள் அல்லது தற்கொலை முயற்சிகள்.
- எரிச்சலைடைதல்.
- அளவுக்கதிகமாக அழுதல்.
- மருந்துகளுக்கு கட்டுப்படாது அடிக்கடி வலிகளும் நோவும் ஏற்படல்.
- சந்தோஷத்தை அனுபவிக்க இயலாதிருத்தல்.
- பாலியலில் ஆர்வம் குறைதல்.
- சுயமதிப்பு குறைந்து போதல்.
- எதுவும் செய்ய முடியாத நிலைக்குப் பின் திடீரென அளவுக்கதிகமாக சுறுசுறுப்பாக இயங்குதல்.
- எல்லாவற்றிலிருந்தும் விலகி ஒதுங்குதல்.
- உடலியல்ரீதியாக மெதுவடைதல்.
- நாளின் அதிகமான பகுதியில் மனஅழுத்தத்திற்குட்பட்டிருத்தல்.
- அளவுக்கதிகமாக இயங்குதல் அல்லது சோர்வுடன் இருத்தல்.
- நண்பர்களிடமிருந்தும் குடும்பத்திடமிருந்தும் விலகுதல்.
- தமது தனிப்பட்ட வெளித்தோற்றத்தைக் குறித்து அலட்சியமாக இருத்தல்

மனஅழுத்தத்தை அனுபவிக்கும் அனைவரும்

32ம் பக்கம் பார்க்க...


ALL YOUR FINANCIAL NEEDS



V.S. Thurairajah
President, Commissioner of Oaths
COMMUNITY FINANCIAL SERVICE GROUP INC.
Serving You, For Your Secure Future
416-548-7300 / 647-829-4044
2100 Ellesmere Road, Unit 105,
Scarborough, ON. M1H 3B7
@ Markham & Ellesmere (North West Corner)

ALL YOUR MORTGAGE NEEDS
RBC Royal Bank
Logi Thurairajah
Mobile Mortgage Specialist
Royal Bank of Canada
1761 Victoria Street East,
Whitby, ON L1N 9W4
logi.thurairajah@rbc.com
Cell : 416-278-2972
Fax : 416-548-7865

# மருத்துவக் கேள்வி பதில்



இராஜசேகர் ஆத்தியப்பன்

**எனக்கு வயது 31. நீரிழிவு நேய் இருக்கிறது. கல்யாணமாகி 5 வருடங்களாகியும் குழந்தை இல்லை. நீரிழிவு இருப்பதுதான் காரணம் என்கிறார்கள். எனக்குக் குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லையா?**

சாமுத்ரிகா.

நீரிழிவு என்பது ஆண், பெண் இருவரையும், எந்த வயதினரையும் தாக்கலாம். தலையிலிருந்து, கால் வரை அத்தனை பாகங்களுக்கும் பாதிப்பை உண்டாக்கும் விஷயம் அது. நீரிழிவால் பாதிக்கப் பட்டிருக்கும் பெண்களுக்கு கர்ப்பம் தரிப்பதில் சிக்கல்கள் இருக்கத்தான் செய்கிறது. அப்படியே கருத்தரித்தாலும், பிரசவம் வரை, தாய்க்கும், சேய்க்கும் பல பிரச்னைகளை உண்டாக்கும். நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டியது மிக அவசியம். அடுத்து உடல் பருமன் அதிகமாக இருந்தால், அதைக் குறைத்தே ஆக வேண்டும்.

சர்க்கரையின் அளவுக்கேற்ப, உங்கள் மருத்துவரிடம் கேட்டு, மாத்திரையோ, இன்சுலினோ எடுத்துக் கொள்ளுங்கள். கர்ப்பம் தரித்தால், வழக்கத்தைவிட சற்று அதிகமாக இன்சுலின் தேவைப்படலாம்.

கர்ப்ப காலம் முடிகிற வரை, மிக மிக அவதானமாக இருக்க வேண்டியது அவசியம். மருத்துவரின் கண்காணிப்பில் இருப்பது நல்லது. பிரசவம் முடிந்ததும், சர்க்கரையின் அளவுக்கேற்ப, அதற்கான மருந்துகளைத் தொடரவேண்டியதும் முக்கியம்.

நீரிழிவு என்பது மரபணு சம்பந்தப்பட்டது என்பதால், உங்களிடமிருந்து, உங்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் அது வரலாம். இது தவிர, சில பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் மட்டும் நீரிழிவு ஏற்படும். அது தற்காலிகமானது. பிரசவத்துக்குப் பிறகு சரியாகிவிடும்.

ஆனாலும் அதை அலட்சியப்படுத்தாமல், பிரத்யேக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். நீரிழிவுக்கான மருந்துகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இராஜபாளையம் சாஸ்வ மருந்து உங்களுக்கு மிக விரைவான பலனைத் தரும். சர்க்கரையின் அளவைக் கட்டிப்பாட்டில் வைத்து, சரியான எடையுடன், ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு மாறினாலே உங்களுக்கு கர்ப்பம் தரிக்கும். கவலை வேண்டாம்.

**நான் காதலிக்கும் பெண்ணின் தாத்தா, அம்மா இருவரும் புற்று நோயால் இறந்தவர்கள். இதனால் அந்தப் பெண்ணை எனக்குத் திருமணம் செய்துவைக்க என் பெற்றோர் மறுக்கின்றனர். புற்றுநோய் பரம்பரை வியாதியா? என் காதலியையும் புற்றுநோய் பாதிக்குமா? பரிசோதனை மூலம் புற்றுநோய் வரவே வராது என்று உறுதிப்படுத்த முடியுமா?**

பூபதி.

புற்றுநோய் என்பது பரம்பரை நோய் கிடையாது. சராசரி ஆரோக்கியத்துடன் இருக்கும் எல்லரையும் புற்றுநோய் தாக்கும் அபாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், பெற்றோருக்கு இருந்தால், குறிப்பாக அம்மாவுக்குப் புற்றுநோய் இருந்தால் மகளைப் புற்றுநோய் தாக்குவதற்கான வாய்ப்பு 0.2 முதல் 0.3 சதவிகிதம் மட்டுமே. அதற்கான அந்தப் பெண்ணுக்குக் கட்டாயம் புற்றுநோய் பாதிக்கும் என்று அர்த்தம் கிடையாது.

நீரழிவு நோய் போல நிச்சயம் பாதிக்கும் பரம்பரை நோய் கிடையாது புற்றுநோய். எனவே பரம்பரைச் சிக்கல் கவலைகளை விட்டுத் தள்ளுங்கள். நீங்கள் உறுதியாக இருந்து உங்கள் காதலியைத் தாராளமாக மனைவியாக்கிக் கொள்ளுங்கள். புரோக்களி தினமும் உணவில் சேர்த்துக்கொள்ளவும். நெல்லிகாயும் அடிக்கடி எடுத்து கொள்ளவும். ஆனால் அவருடைய 30 வயதுக்கு மேல் தவறாமல் பரிசோதித்துக் கொள்ளுங்கள்!

**எனக்கு பத்து ஆண்டுகளுக்கு முன் இருதய சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. தற்போது எனது உடலில் கொழுப்பின் அளவு LDL 86 mgs. HDL அளவு 25mgs என வந்துள்ளது. இது சரிதானா?**

செல்வராஜா.

சத்திரசிகிச்சை செய்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டாலும், உங்கள் வாழ்க்கை முறையை சரியாக பார்த்துக் கொள்வது மிக முக்கியம். உணவில் எண்ணெயை தவிர்ப்பது, மனநிம்மதி, தினமும் உடற்பயிற்சி, ஒரு வேளைகூட தவறாமல் மருந்து உட்கொள்வது. ஆறு மாதத்திற்கு ஒருமுறை இருதய வைத்தியரைச் சந்திப்பது அவசியம்.

உங்கள் கொழுப்பின் அளவை பொறுத்தவரை, LDL எனும் கெட்ட கொலஸ்ட்ரால் அளவு சரியாக உள்ளது. HDL எனும் நல்ல கொலஸ்ட்ரால் அளவு மிக குறைவாக உள்ளதால், அதை அதிகரிக்க முயற்சி செய்வது அவசியம்.

Niacin என்ற மாத்திரையை எடுத்துக்கொண்டால், நல்ல கொலஸ்ட்ராலின் அளவை அதிகரிக்கலாம். குளிரூட்டியில் வைத்த உணவைச் சாப்பிடாதீர்கள். ஒமேகா -3 எடுத்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர், எனக்குத் தோல் நோய் உள்ளது. பக்கவிளைவற்ற இயற்கை மருத்துவத்தில் மருந்து ஒன்று சொல்லுங்கள்.**

- மீனா.

உலகில் பக்க விளைவு அற்றது தண்ணீர் – சுத்தமான நீர்! கழிவுப் பொருட்களை அகற்ற, உடல் வெப்பநிலையை பாரமரிக்க என பல தொழில்களுக்கு நீர் அவசியம் தேவை. கண்ட கண்ட பானங்களை அருந்தாமல், சுத்தமான நீரை நாளொன்றுக்கு குறைந்த பட்சம் 5 லிட்டர் அருந்தவும். அருகம்புல் எடுத்துக் கொண்டால் உங்கள் தோல் நோய் தீரும்.

**டாக்டர் எனக்கு வயது 33. உடல் பலவீனம் என் வாழ்வை சோகமாக்கியுள்ளது. நரம்புத் தளர்ச்சி நீங்க இயற்கை மருத்துவம் என்ன?**

- இரவி மணிகுனம்.

வல்லாரைக் கீரையை அடிக்கடி உணவுடன் சேர்த்து உண்டு வர நரம்பு தளர்ச்சி நீங்குவதுடன் மன தைரியமும் ஆண்மையும் பெருகும்.

செம்பருத்திப் பூவைப் பொடி செய்து அத்துடன் தேன் அல்லது தண்ணீர் சேர்த்துக் கலந்து உண்டு வர நரம்புத் தளர்ச்சி நீங்குவதுடன் இதய சம்பந்தமான நோய்களும் தீரும்.

எலும்பிச்சம் பழச் சாற்றுடன் சிறிது திப்பிலி சர்க்கரை இவற்றைச் சேர்த்து அரைத்து அளவாய் உண்டு வர நரம்பு தளர்ச்சி தீரும்.

வல்லாரை, தூதுவளை ஆகியவை சம எடை எடுத்து உலர்த்திப் பொடித்து பசுவின் மோரில் கலந்து குடித்து வர நரம்பு தர்ச்சி தீரும்.

வெடிக்காத தென்னம் பாளையில் உள்ள பிஞ்சுடன் பசுவின் பாலைச் சேர்த்து நன்றாக அரைத்து சிறிதளவு அருந்தி வர நரம்புத் தளர்ச்சி நீங்கும்.

மாதுளம் பழச் சாற்றுடன் சுத்தமான தேன் சேர்த்து உண்டு வர நரம்பு தளர்ச்சி தீரம்.

சுக்கு, மிளகு, திப்பிலிகோடம், அதிமதுரம், சீரகம், ஏலம், வால்மிளகு, கராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்ரி இவைகள் வகைக்கு 10 கிராம் வீதம் எடுத்து இள வறுப்பாக வறுத்து சூரணம் செய்து வைக்கவும்.

700 கிராம் சீனா கற்கண்டை 700 மில்லி பசுவின் பாலில் போட்டு பாகு செய்து வைத்துக் கொள்ளவும்.

மேற்கண்ட இரண்டு சூரணங்களையும் பாகில் தூவிக் கிண்டி பின் நெய் 175 கிராம் விட்டு நன்றாகக் கிளறிக் கொடுத்து கீழே இறக்கி வைத்து சுத்தமான தேன் 175 கிராம் விட்டுக் கிண்டி ஜாடியில் பத்திரப் படுத்தவும். இதில் வேளைக்கு நெல்லிக்காய் அளவு காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி நீங்குவதோடு வயிறு மந்தம், அஜீரணம் இவைகளும் நீங்கும்.

**டாக்டர், திடீரென்று தலைவலி வந்தால் என்ன செய்ய வேண்டும்?**

- வனஜா.

ஐந்தாறு துளசி இலைகளோடு ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம், சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் உங்கள் தலைவலி குணமாகும்.

**டாக்டர், தொண்டை கரகரப்பு தீர வீட்டு வைத்யம் சொல்லுங்களேன்.**

- சிகுஞ்சிதா.

சுக்கு, பால், மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை நன்கு வறுத்துப் பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட்டால் தொண்டை கரகரப்பு குணமாகும்.

**எனது மகனுக்கு நெஞ்சு சளி பிரச்சினை மிகவும் தொல்லை கொடுக்கின்றது.**

- சதிஸ் குமார்.

தேங்காய் எண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆற வைத்து நெஞ்சில் தடவினால் குணமாகும்.

**எனக்கு தொடர் விக்கல் - இந்த பிரச்சினைக்கு பாட்டி வைத்யம் உண்டா?**

- மகாதேவன்.

நெல்லிக்காய் இடித்துச் சாறு பிழிந்து, தேன் சேர்த்துச் சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.

**தீராத வாய் நாற்றம் எனக்கு. இதனால் மற்றவர்களுடன் பேச தயக்கம். எனது பிரச்சினைக்கு எளிய தீர்வு வேண்டுகின்றேன்.**

- மைத்ரேயன்.

சட்டியில் படிகாரம் போட்டுக் காய்ச்சி ஆறவைத்து, அதனை ஒரு நாளைக்கு மூன்று வேளை வாய் கொப்பளித்து வந்தால் வாய் நாற்றம் போகும். 'பியர்ல் ட்ராப்ஸ்' என்று கடையில் கேட்டு வாங்கி உங்கள் பற்பசையுடன் சேர்த்து பல் துலக்குங்கள்.

**டாக்டர், எனக்கு எல்லா நாட்களிலும் உதட்டு வெடிப்பு துன்புறுத்துகின்றது.**

- பார்தாஸ்.

கரும்பு சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவி வந்தால் உதட்டு வெடிப்பு குணமாகும்.

**டாக்டர், எனக்கு அஜீரணம் இருக்கின்றது, என்ன செய்ய வேண்டும்?**

- இ. நாயகம்.

ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம் ஆகிய மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடித்தால் அஜீரணம் சரியாகும்.

**பி.கு: மேற்கூறிய குறிப்புக்களை வைத்தியரின் ஆலோசனையுடன் பின்பற்றுவதே சிறந்தது.**

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■





# கேரளா ஆயுர்வேதா

314-4005, டான்மில்ல்ஸ் ரோடு, டான்மில்ல்ஸ்/ஸ்டீல்ஸ்
தொலைபேசி: 416 995 01416
www.ayurvetha.com / www.timherbals.com
ayurvetha@gmail.com



## தைலம்


| வ. எண் | பெயர் | நோய்கள் மற்றும் பயன்கள் | பயன்படுத்தும் அளவும், முறையும். |
|---|---|---|---|
| 1. | அஸ்வகந்தி லேகியம் | உடல் பலவீனம், கை, கால் நடுக்கம், இரத்தக் குறைவு. சிறந்த உடல் தேற்றி. | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிட்டு விட்டு பால் சாப்பிடவும். |
| 2. | இஞ்சி லேகியம் | செரியாமை, வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, பசியின்மை. | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிடவும். |
| 3. | சதாவரி லேகியம் | சிறுநீர்ப்பாதை நோய்கள், உடல் சூடு, மாதவிடாய்க் கோளாறுகள். | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிடவும். |
| 4. | தாதுகல்ப லேகியம் | விந்து குறைபாடு நோய்கள் தீரும். நரம்புத்தளர்ச்சியைப் போக்கும். ஊட்டச் சத்து மருந்து | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிட்டு விட்டு பால் சாப்பிடவும். |
| 5. | தூதுவளை லேகியம் | சளி, இருமல், இளைப்பு நோய். | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிடவும். |
| 6. | தேற்றான் கொட்டை லேகியம் | மூலம், பவுத்திரம் நீங்கும். சிறந்த உடல் தேற்றி. | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிட்டு விட்டு பால் சாப்பிடவும். |
| 7. | நெல்லிக்காய் லேகியம் | நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தி ஆரோக்கியத்தை உண்டாக்கும். சளி, இருமல் தீரும். | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிட்டு விட்டு பால் சாப்பிடவும். |
| 8. | வல்லாரை லேகியம் | ஞாபக சக்தி குறைவு, மேக நோய்கள் நீங்கும் மூளை நரம்புகளைப் பலப்படுத்தும். | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிடவும். |
| 9. | வெண்பூசணி லேகியம் | உஷ்ண நோய் நீங்கும், உடல் தேறும், உடல் சூடு தணியும். | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிடவும். |
| 10. | அதிர்ஷ்ட ரசாயம் | மூலம், குதிகால் வாதம், தோல் நோய்கள் | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிடவும். |
| 11. | திப்பிலி ரசாயம் | நாட்பட்ட இருமல், கப நோய்கள். குழந்தைகளின் சளி இருமல் தீரும். | காலை, இரவு உணவுக்குப் பின் 5 கிராம் அளவு சாப்பிடவும். |

## மாத்திரை, கேப்சூல்

| | | | |
|---|---|---|---|
| 1. | அமுக்கராச் சூரண மாத்திரை | நரம்புத்தளர்ச்சி, உடல்சோர்வு, பலவீனம், கை, கால் எரிவு, கபம் வாத நோய்கள். | காலை, இரவு உணவுக்குப் பின் 2 மாத்திரைகள் தண்ணீருடன். |
| 2. | காக்கட்டி மாத்திரை | பல்லசைவு, பல் சொத்தை, பல் கூச்சம், பல்வலி, ஈறு வீக்கம், வாய்துர்நாற்றம். | தினமும் 3 வேளைகள் உணவுக்குப்பின் 1 மாத்திரை சுவைத்து சாப்பிடவும். |
| 3. | சீரண சஞ்சீவிச் சூரண மாத்திரை | சீரணக் கோளாறுகள், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், அஜீரண பேதி. | காலை, இரவு 2 மாத்திரைகள் உணவுக்குப்பின் தண்ணீருடன். |
| 4. | தாளிசாதி வடகம் | இருமல், தொண்டைக்கபம், பசியின்மை. | தினமும் 3 வேளைகள் 1-2 மத்திரைகள் வீதம் சுவைத்து சாப்பிடவும். |
| 5. | நீர்க்கோவை மாத்திரை | சைனஸ் நீர், சேர்த்தல், தலைபாரம், தலைவலி, மூட்டுவலி. | வலியுள்ள இடத்தில் 1 அல்லது 2 மாத்திரையை வெந்நீர் (அல்லது) இஞ்சி சாற்றில் குழைத்து பற்றிடவும். |
| 6. | பொன்னாவரைச் சூரண மாத்திரை | மலக்கட்டு, குடல் பூச்சி, சரும நோய்கள், குருதியைச் சுத்தம் செய்யும். | இரவு படுக்கும் முன் 2 மாத்திரைகள் பாலுடன் கலந்து மென்று சாப்பிடவும். |
| 7. | கரிசாலைக் கற்ப சூரணம் மற்றும் மாத்திரை | 18 வகைக் காமாலை, பார்வைக்கோளாறு அனைத்து தோல் நோய்கள் தீரும். காய கற்ப மருந்து. | காலை, இரவு 1 கிராம் தேனுடன் உணவுக்கு முன் (அல்லது) 2 மாத்திரைகள் தண்ணீர் (அ) பாலுடன். |
| 8. | வல்லாரை (ஞானவல்லி) கேப்சூல்ஸ் | ஞாபக சக்தி குறைவு தீரும். மூளையின் வளர்சிதை மாற்றத்தை அதிகரித்து செயல் திறனை அதிகரிக்கும். | காலை, இரவு 1 கேப்சூல்ஸ் தண்ணீருடன் உணவுக்குப் பின் இரண்டு வேளைகள் (12 வயதுக்கு குறைந்தவர்கள் 1 வேளை மட்டும்). |
| 9. | திரிபலாக் கற்பச்சூரணம் மற்றும் மாத்திரை | குடல்புண், தொண்டைப்புண், வாய்ப்புண், நெஞ்செரிச்சல். | காலை, இரவு உணவுக்கு முன் 1 கிராம் அளவு தேனுடன் (அல்லது) 2 மாத்திரைகள் காலை, இரவு உணவுக்கு முன் தண்ணீருடன். |
| 10. | வில்வம் மாத்திரை | சர்க்கரை நோய், சர்க்கரை நோயினால் உண்டாகும் எரிச்சல், மதுமதுப்பு. | காலை, இரவு உணவுக்குப் பின் 2 மாத்திரைகள் தண்ணீருடன். |

# சிறு நீரகக் கோளாறா?

- ✓ சிறுநீரகக் கல், மூத்திரக் குழாய் அடைப்பு போன்றவை அறுவை சிகிட்சை இன்றி எளிதில் குணப்படுத்தலாம்.
- ✓ அடிக்கடி சிறுநீர் கழிக்கும் உபாதையா?
- ✓ டயாலிசிஸ், மாற்று சிறுநீரகம் போன்ற வேதனையான சூழ்நிலையா?



நல்லதொரு தீர்வு இங்கே! சித்தா & ஆயுர்வேதத்தின் முன்னணி மரபுவழி வைத்யம்.
சின்னமலை புனித தோமாவுக்கு அருளப்பட்ட வரம் - அகஸ்தியர் (Augustin) அறிந்தது.
பொதிகை மாலை சாரலில் இருந்து உங்களுக்காக!

ஜீவ சப்தம் ஆஸ்ரமம், குற்றாலம் (Living Voice Ashram) தென் இந்தியா.

கனடாவில் தொடர்பு கொள்ள: டாக்டர் இராஜசேகர் ஆத்தியப்பன்.
416 995 0416
www.ayurvetha.com / ayurvetha@gmail.com

# குளிர் காலமும் செல்லப் பிராணியும்



மஞ்சுளா ராஜலிங்கம்


குளிர்காலம். சித்திரை மாதம் வரை குளிரை வெல்ல நாம் எவ்வளவோ முன்னேற்பாடுகளை மேற்கெள்கிறோம். உதாரணமாக, வீட்டை குளிர்காலத்தில் பக்குவமாக வைத்திருத்தல், வாகனங்களுக்கு குளிர்காலத்திடையே பார்க்க வேண்டிய திருத்த வேலைகள் என்ற பலவிதமான கருமங்களையும் முன்னெச்சரிக்கையுடனே கருத்தில்கொண்டு அவற்றைச் செய்தும் முடிக்கின்றோம். நம் மனதில் முக்கியமாக பதியவேண்டிய இன்னொரு ஜீவன் யார் எனில் அது நாம் வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகள்!

நாம் வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகள் மனதில் என்ன இக்கிறது என்பதை நம்மால் முழுதாக அறிந்துகொள்வதென்பது இயலாத காரியம். உதாரணமாக நாய்களைப் பார்ப்போம். சில நாய்களுக்கு வெண்பனி என்றால் கொள்ளைப் பிரியம். ஆனால், சில நாய்களுக்கோ இம்மாதிரி கடுங்குளிர் காலங்களில் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கப் பிடிக்கும்.





அவற்றின் விருப்பங்கள் எதுவாக இருந்தாலும் நம் வீட்டுப் பிராணிகளைப் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பது நம் கடமையாகும். உங்கள் இனிய நண்பரை சந்தோஷமாக வைத்திருப்பதற்கு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சில குளிர்கால கவனிப்புக் குறிப்புக்கள் சிறப்பாக உதவலாம் என நம்புகிறேன்.

முதலில் சீதோஷணத்தின் அளவைப் பார்க்கலாம். உதாரணத்துக்கு ஒரு மனிதனை எந்த ஆடைகளும் இன்றி, காற்று மணித்தியாலத்துக்கு 20 கி.மீ வீசும் கடுங்குளிர் நேரத்தில் வெளியே போய் நிற்கச் சொன்னால் எப்படி இருக்கும்? அதே நிலைதான் கூடுதலான நாய்களுக்கும் இருக்கும். எல்லா இன நாய்களுக்கும் அடர்ந்த ரோமம் இருப்பதில்லை. இவ்வளவு ஏன்? சில நாய்களுக்கு உரோமம் என்பதே கிடையாது. இம்மாதிரி நாய்களுக்கென்று பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட குளிர் மேல் அங்கிகள் வீட்டுப் பிராணிகளுக்காகவே இயங்கிவரும் அத்தியாவசியப் பொருட்களை விற்கும் கடைகளில் கிடைக்கும். இவற்றை வாங்கி வைத்து, நாய்களை வெளியே நாம் அழைத்துப்போகும் தறுவாயில் அவற்றை நிச்சயம் பயன்படுத்த வேண்டும். ஒரு குளிர்கால நாளில், நாம் வாசற் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு குளிர்கிறது என உணர்ந்தால் அதே உணர்வைத்தான் நாய்களும் அனுபவிக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும்.

அடுத்து நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது நாயின் பாதப் பகுதிகளாகும். நாய்கள் வெறுங் கால்களுடனே உறைபனி, உப்பு, தண்ணீர், பனி உருகும்போது ஏற்படுகின்ற திண்மத் திரவ நிலை போன்றவற்றில் நடக்கின்றன. இதன்மூலம் ஒரு நாய் வருடத்தில் ஒரு முறையாவது தன் பாதங்களைக் காயப்படுத்திக் கொள்ளும் அபாயம் உள்ளது. நாம் உறைபனி கரைவதற்காகத் தூவும் உப்பில் இரசாயனப் பொருட்கள் மிதமாக உள்ளன. இவை நாயின் பாதங்களுக்கு சேதம் விளைவிக்கக்கூடியவை. இந்த நாய்களின் பாதத்திற்கென்றே விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கால் உறைகள் கடைகளில் விற்கப்படுகின்றன. இவற்றை நாய்களின் கால்களில் அணிந்து கொண்டால், பார்க்க கொஞ்சம் விநோதமாகத்தான் இருக்கும். ஆனால், காயங்கள், குளிர்தரும் அவஸ்தைகள் போன்றவற்றிலிருந்து பாதங்களை நன்றாகப் பாதுகாத்துக் கொள்ளலாம். ஆனாலும் ஒரு கஷ்டம் என்னவெனில் நாய்கள் தாங்களாகவே இந்த கால் உறைகளைக் கழற்றிப் போட்டுவிடலாம். அல்லது இவ்வுறைகள் தாமாகவே கால்களை விட்டு நழுவிவிடுவதும் உண்டு. இதற்கு ஒரு உத்தி உள்ளது. அதாவது சிறு குழந்தைகள் பாவிக்கும் கையுறைகள் தொலைந்துவிடாமல் ஜோடியாக வைத்திருக்க, கடைகளில் ஒரு நாடா இரண்டு பக்கங்களிலும் 'பிடிக் கொக்கி'-களுடன் கூடியதாக விற்கப்படுகின்றது. அதை வாங்கி இருபுறமும் காலுறைகளைக் கொழுவி விட்டால் தொலைந்து போகாது. நாயின் பின்புறக் கால்களில் இருபாத உறைகளை மாட்டிவிட்டு, பின் வெளிப்புறக் கால்களிலுள்ள காலுறைப் பகுதிகளில் பக்கத்துக்கு ஒன்றாக இம்மாதிரி நாடாக்களைப் பயன்படுத்தி, முதுகின் இடையின் மேலாகக் கொண்டுவந்து பொருத்திவிட்டால் உறைகள் நழுவிவிழ வாய்ப்பில்லை. இவை இழுபடக் கூடிய நாடாக்கள் என்பதால், நாய்கள் இதில் அசௌகரியத்தை அனுபவிப்பதில்லை. அழகிய, பூப்போட்ட விதவித வடிவங்களில் உள்ள காலுறைகளைத் தேர்ந்தெடுக்காமல் மிகவும் எளிமையும் சாதாரண அமைப்பும் கொண்ட கால் உறைகளையே உங்கள் நாய்க்குத் தெரிவு செய்யுங்கள்.

ஒவ்வோர் முறையும் உங்கள் நாய் வீட்டுக்குள் நுழையும்பொழுதும், அதன் பாதங்களைத் தண்ணீரால் நன்றாகக் கழுவி, நாய்களுக்கென்று தனிப்பட வைத்திருக்கும் துவாலையால் பாதங்களை நன்றாக நீர்போகத் துவட்டுங்கள். பாத இடுக்குகளை ஆராய்ந்து கவனமாகக் கழுவிவிட வேண்டும். நாய்களின் பாதக் குளம்புகள் வெடிக்காமலிருக்க இரண்டு நாட்களுக்கொரு முறை இவற்றிற்கென்ற பிரத்தியேகமாக விற்கப்படும் விசேடமான களிகளை வாங்கி தடவிவரவேண்டும். குளம்புகள் குளிரின் உக்கிரம் தாளாமல் வெடித்து விடும் வாய்ப்புகள் உண்டு. இவை தாளாத வேதனையை நாய்களின் கால்களுக்குத் தருவதோடு, அதில் இருந்து வடியும் இரத்தம் நம் வீட்டையே பாழாக்கிவிடும் அபாயமும் உள்ளது. உங்கள் நாய் உங்கள் வீட்டுச் சுற்றுப் புறத்தில் அதிகமாக புழங்கும் இடங்களில், கூடுமானவரை உப்பு போன்றவற்றை உபயோகிப்பதை அறவே தவிர்க்கப் பாருங்கள். அல்லது அம்மாதிரி இடங்களில் அவை அடிக்கடி போகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். ஆனால், உப்பைத் தூவாமல் இருந்தால் நீங்கள் விழுந்து கைகால் முறித்துக்கொண்டு விடலாமே! இரண்டையும் கருத்தில்கொண்டு சமயோசிதமாக செயல்படுங்கள்.

உறைபனி கடுமையாகக் கொட்டிக் கிடக்கும் நாட்களில் பனியானது நாலைந்து அடி உயரத்திற்கு மேடிட்டு நிற்கும். இதில் அபாயங்கள் உண்டு. பக்க வீடுகளில் வேலிகள், சிறு மதில்கள் ஓரமாக மண்டிக் கிடக்கும் உறைபனியை உடனடியாக அப்புறப்படுத்துங்கள். ஏனெனில், நாய்களுக்கு வேலிதாண்டித் தொலைந்து போக நேரமாகாது. இந்த உறைபனி அகற்றப்படாமலே இருந்தால் இதில் இன்னொரு அபாயமும் உண்டு. பனி கொட்டியிருந்தாலும் மிகவும் மிருதுவாக இருக்கும். இதற்குள் ஏறுவதற்கு முயன்று, எதிர்பாராமல் நாய்கள் உள்ளே விழுந்து புதைந்து போகும் அபாயமும் உண்டு. எனவே, நாய்களை எப்பொழுது வெளியே விட்டாலும் அவற்றின் மேல் தீர்க்கமாக ஒரு கண் வைத்துக்கொள்ளுங்கள். அதேபோல், உங்களையும் வெளியே வரக்கூடிய மாதிரி தயார் நிலையில் வைத்துக்கொள்ளுங்கள். அவைகளுக்கு ஏதும் ஒன்று நிகழ்ந்து விட்டால், அவற்றைக் காப்பாற்ற நீங்கள் ஓடி வர வேண்டாமா? அதற்காகத்தான் இந்த முன்னேற்பாடு.

உறைபனி தரும் இன்னோர் அபாயம் என்ன தெரியுமா? உறைபனியானது கொட்டும் காலங்களில் வீட்டின் மேற்கூரைகளில் கெட்டியாகத் தங்கிவிடும். இவை இளவெயில் மெதுவாக எட்டிப் பார்க்கும் வேளைகளில் தன்னிச்சையாக கரையத் தொடங்கும். எதிர்பாரா ஒரு வேளையில் முழு உறைபனியும் திண்மமாகவே தரைநோக்கி விழும் அபாயங்கள் நிறையவே உண்டு. இது வெளியில் நடமாடும் எந்த ஒரு உயிரினத்தின் மேலும் விழுந்து விபத்தை ஏற்படுத்த வல்லது. இதையும் மனதில் நாம் கொண்டு எப்படி நம் வீட்டு செல்லப் பிராணிகளைப் பாதுகாக்கலாம் என்பதை நாம் ஆராய்தல் நலம். நாய்கள் பதுங்கக்கூடிய இடங்களிலும்கூட பனி வெகுவாக இருப்பின், அவற்றை அகற்றிவிடப் பாருங்கள். ஆனால், அது இயலாதபட்சத்தில், பிராணிகளை அப்பகுதிகளில் நடமாடாதவாறு பார்த்துக்கொள்ளல் மிக அவசியம். அல்லது ஏதாவது தடுப்புக்களை அமைத்து, நாய்கள் அம்மாதிரி இடங்களை அண்டாதவாறு பார்த்துக்கொள்ளலாம். தடுப்புக்களை குளிர் காலம் ஓயும்வரை அப்படியே அகற்றாமல் வைத்திருப்பது நல்லது.

நம் வீட்டு வாகனம் நிறுத்தும் வாகனத் தரிப்பிட அறையில் (கராஜ்) நாம் வண்ணப் பூச்சு நிறைந்த வாளிகள், நம் வாகனப் பராமரிப்புக்கான எண்ணெய் வகைகள், மற்றும் வேறு இரசாயனக் கலவைகள் போன்றவற்றை வைப்பதுண்டு. இம்மாதிரிக் குடுவைகளின் பக்கம் நாய்களைச் செல்ல விடாதீர்கள். ஒரு துளிபோல இவற்றை நாய்கள் சுவைத்தாலும் மரணத்தையோ உடல்உபாதைகளையோ அவை தழுவிக்கொள்ள வல்லவை. அவற்றை பிராணிகளின் வாய்க்கும், மூக்குக்கும் எட்டாத வகையில் ஒழுங்குபடுத்தி வைத்தல் மிக அவசியம்.

குளிர்காலங்களில், நாய்கள் கூடுமானவரை குறைந்த அளவு உணவை உண்ணுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். குண்டாக இருக்கும் நாய்களுக்கு குளிர்காலங்களில் நெஞ்சில் அமுக்கம் ஏற்படுவதுண்டு. இவ்வளவு கவனத்தையும் உங்கள் நாயின் மேல் பிரயோகித்தாலே போதும்; குளிரை எளிதாக வெல்லலாம்!

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■


சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A

Broker

**Ottawa: 613.276.SALE (7253)**

**Toronto: 416.659.SELL (7355)**

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# MORTGAGE

- *1st & 2nd Mortgages*
- *New Immigrants / Self Employed*
- *Refinance*
- *Equity Line of Credit*
- *Renewal*
- *All other Financial Arrangement*

**Kethes Sivasubramaniyam**
Mortgage Agent - (Lic # M08006105)
**Cell : 416.873.5780**

Via Financial Services Inc. (Lic # 10669)



5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5
Tel : 416-548-8005 Fax : 416-548-8006
Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7

# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice





**KETVAR**
**TAX & ACCOUNTING**
304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-873-5780 / 416-548-8005**
Email : ketvar@gmail.com

# வீடு வாங்க விற்க






3 Bedrooms 3 Washroom
Finished Basement



**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**


**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**




3 Bedrooms 2 Washroom
Finished Basement




4 Bedrooms 3 Washroom
Finished Basement




HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd., Brokerage***
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

# மனநிலை ஒழுங்கீ...

27ம் பக்கத் தொடர்ச்சி...

இவ் எல்லா அறிகுறிகளையும் கொண்டிருப்பர் எனக் கூறமுடியாது. 6 அல்லது அதற்கு மேற்பட்ட அறிகுறிகள் சில வாரங்களாக அல்லது மாதங்களாக தொடர்ந்திருந்தால் அது மனஅழுத்தத்தையே குறிக்கும்.

### எவ்வாறு மன அழுத்தங்களுக்கு சிகிச்சை செய்யப்படுகின்றது?

மனநிலை ஒழுங்கீனங்களுக்கு Medication (மருந்து), உளவியல் சிகிச்சை (Psychotherapy) மற்றும் இவ்விரண்டும், அதாவது மருந்தும் உளவியல் சிகிச்சையும் இணைந்தும் சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

மிகவும் கடுமையான அறிகுறிகளை கண்டறிந்து அவற்றிற்கு அதிக கவனம் செலுத்தி சிகிச்சையளிக்கப்படுகின்றது. இந்த அறிகுறிகளின் அளவிற்கேற்ப கடுமையான மன அழுத்தம், நடுத்தர அளவான மனஅழுத்தம், குறைந்த மனஅழுத்தம் என வகைப்படுத்தப்படுகின்றது.

### கடுமையான மனஅழுத்தம்:

எல்லா அறிகுறிகளும் ஒரு நபரில் இருக்கும் போது அது கடுமையான மனஅழுத்தமாக கொள்ளப்படுகின்றது. அத்துடன் இம் மன அழுத்தம் அவர்களை நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள விடாது தடுப்பதாகவும் இருக்கும்.

### நடுத்தர மன அழுத்தம்:

மனஅழுத்த அறிகுறிகளில் அனேகமானவை ஒரு நபரில் காணப்படும்போதும், அவர்கள் செய்ய வேண்டிய செயல்களைச் செய்ய விடாது மனஅழுத்தம் அவர்களைத் தடுக்கும் போதும் அது நடுத்தர அளவான மனஅழுத்தம் எனப்படுகின்றது.

### குறைந்த மனஅழுத்தம்:

மனஅழுத்த அறிகுறிகளில் ஒரு சிலவற்றை ஒரு நபர் கொண்டிருக்கும்போதும் அவர்கள் செய்ய வேண்டிய நாளாந்த நடவடிக்கைகளைச் செய்ய மிகுந்த பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியிருந்தால் அது குறைந்த மனஅழுத்தம் எனப்படும்.

இருதுருவ மனநிலை ஒழுங்கீனத்தைக் கண்டறிய நோயாளியின் கடந்த கால வரலாறுகள் மற்றும் மனஅழுத்த, பதட்ட சம்பவங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மனஅழுத்தம் மற்றும் இருதுருவ மனநிலை ஒழுங்கீனங்களுக்கு பல்வேறு மருந்துகள் வைத்தியர்களால் சிபார்சு செய்யப்படுகின்றன. இதனை விட வெளிநோயாளர் சிகிச்சை பிரிவில் நோயாளிகட்கு சிகிச்சையும் ஆதரவும் பகுதிநேர அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

மனநிலை ஒழுங்கீனங்களால் பாதிக்கப்படுபவர்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக இயலாத்தன்மை (Disability) உடைய நபர்கள் அதிகரிப்பது குடும்பங்களின் சந்தோஷத்தை மட்டுமன்றி நாட்டின் பொருளாதாரத்தையும் அதிகளவில் பாதிக்கின்றது. அநேகமான மன நிலை ஒழுங்கீனங்கள் சரியான முறையில் சிகிச்சையளித்து குணப்படுத்த முடியுமாக இருந்த போதும், இம் மனநிலை ஒழுங்கீனங்களால் பாதிக்கப்படுபவர்கள் சிகிச்சை பெறுவதை தாமதப்படுத்துவதனால் நிலைமை மேலும் மோசமடைகின்றது.

- உங்கள் வைத்தியரை அல்லது குழந்தை மருத்துவரை சென்று பாருங்கள்.
- உங்கள் பிள்ளைக்கேற்ற சரியான நிகழ்ச்சித் திட்டங்களை (Program) கண்டறிவதற்கு ஓர் கல்விசார்ந்த ஆலோசகருடைய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ஓர் உளவியல் சிகிச்சையாளருடன் கலந்தாலோசியுங்கள்.
- உங்கள் பிள்ளையின் தற்போதைய பாடசாலை நிலைமையுடன் உங்களுக்கு உதவுவதற்காக கல்வி ஆலோசகர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

பிள்ளைகளுகளின் உளவியல் ஆலோசனைகளுக்கென பல்வேறு விடுதிவசதியுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. இவை பல்வேறு பிரச்சனையான சந்தர்ப்பங்களில் எவ்வாறு முரண்பாடுகளை எதிர்கொள்வது, எவ்வாறு தெரிவுகளை மேற்கொள்வது, எவ்வாறு பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது என்பவற்றை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கின்றன. தங்கியிருக்கும் காலம் 9-18 மாதங்கள் வரை வேறுபடலாம். இக்காலம் முடிவடையும் போது அவர்கள் பழையபடி தமது பாடசாலைக்குத் திரும்பலாம் அல்லது விடுதியுடன் கூடிய பாடசாலையில் தங்கிப் படிக்கக் கூடியதாக இருக்கும். சாத்தியமான சந்தர்ப்பங்களில் பிள்ளை அப் பாடசாலையில் படிக்கும் காலம் முழுவதும், பெற்றோர் பாடசாலை ஊழியர்களுடனும் தமது பிள்ளையுடனும் தொடர்பு கொள்ளக் கூடியவாறான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

மனநிலை ஒழுங்கீனங்களால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுபவர்களில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட ஒன்றரை மடங்கு அதிகமாக இருக்கின்றது. இது ஆண், பெண் இருபாலாரிலும் 15-24 வயதிற்கிடைப்பட்டவர்களில் பொதுவாக அதிகமாக உள்ளது. பெண்களைப் பொறுத்தவரையில் 35-49 வயதடையும் போது இவ் ஒழுங்கீனங்கள் உச்ச கட்டத்தை அடைகின்றது. இம் மனநிலை ஒழுங்கீனங்களே தற்கொலைக்கும் வழிவகுப்பதாக அமைகின்றது.

பிரச்சினைகள் கூடும்போது அதனை சமாளிக்க முடியாவிட்டால் பொதுவாக மனஅழுத்த மற்றும் இருதுருவ மனநிலை ஒழுங்கீனங்கள் அனைவருக்கும் ஏற்படக்கூடியதே. இதனையிட்டு வெட்கப்படவோ துக்கப்படவோ தேவை இல்லை. இதற்கான நிபுணத்துவ உதவிகளை காலத்தை வீணாக்காது பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.

**உசாத்துணை:**

http://www.nationalyouth.com/mooddisorders.html

http://www.mooddisorders.on.ca/anxiety.html

www.kidsmentalhealth.ca/resources/parent_resources.php

தொடரும்...

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

இப்போது இணையத்திலும்

'தாய்வீடு'

www.thaiveedu.com

**Computek College**

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1997

www.computek.edu

A Career College near you ...

**Get ready for job in 6 - 12 months !**

*If you are :*

*- Currently receiving E.I. benefits*

*- Received E.I. within 3 yrs*

*- Received maternity benefits within 5 yrs*

*You may be eligible for HRDC funding*

***Are you not qualified for HRDC Funding Assistance ?***
***Is your HRDC funding REJECTED?***

***You may still qualify for other Financial Assistance***
***Please call us for details***

**Looking for a Career in a Bank!**

*Bank Teller*

*Personal Banking Officer*

*CSC (Canadian Securities Course)*

*IFIC ( Investment funds Institute of Canada)*

*FOREX Trading*

**SAP Training**

**- FI & CO**

**- BPC**

*Canadian Payroll Assoc (CPA) - Exam Prep*

*Food Handler Certification*

*A+ ( Computer Assembly &Troubleshooting )*

*CCNA (Cisco Certified Network Admin)*

*Programming (C++ / JAVA)*

**Network Engineering**

- CompTIA A+
- CCNA
- Linux 1
- MCP, MCSA, MCSE
- Network +

**Personal Support Worker (PSW)**

*"In six months I was able to complete my diploma program in Personal Support Worker (PSW). I was able to find a job at the same nursing home where I had received the clinical training as a part of the PSW Diploma program" ,*

***Shamim Patel, Leisure World***

**Early Childcare Asst.(ECA)**

*" I always wanted to work with children. With my Diploma in Early Childcare Assistant(ECA) from Computek College, my dream was fulfilled. Thanks to Computek, today I am working with children"*

***Sara, Lee Wiggins Childcare Centre, York University***

**PSW, ECA**

**Weekend & Evening Classes!**

*( Financial assistance available for those who qualify)*

**Computerized Accounting**

**Business Administration**

**Medical Office Admin (MOA)**

For details of financial assistance, please contact our Financial Aid Officer

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 202 - 7 Eastvale Drive. | 301-2347 Kennedy Road | 248-2390 Eglinton Ave E |
| Markham L3S 4N8 | Scarborough M1T 3T8 | Toronto M1K 2P5 |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES

# சக்தியைச் சேமிக்க சில வழிகள்


சொக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

வீடு வாங்கும்போது வாங்கும் வீடு சக்தி சேமிப்புடையதா என்பதை உறுதி செய்து வாங்குவது, சக்தி இழப்பால் ஏற்படும் வீண் விரயங்களிற்கு இடமளிக்காதிருக்க உதவும். குறிப்பாகப் புதிதாகக் கட்டப்படும் வீடுகள் இன்று சக்தி சேமிப்பை மனதில் கொண்டு கட்டப்படுகின்றன. இருப்பினும் வீடு கட்டுபவர்களிடம் இதனைக் கேட்டு உறுதிசெய்வது நன்று. வீடு கட்டுனரிடம் வீடு வாங்குபவர்கள் கேட்க வேண்டிய சில சக்திபற்றிய வினாக்களாவன:

- எத்தகைய வீடு கட்டுனராலும் சக்தி சேமிப்பு வீடுகளைக் கட்ட முடியும். உண்மையிலேயே நீங்கள் கட்டும் வீடுகள் சக்தி சேமிப்புத் திறனுடைய வீடுகளா? எங்ஙனம் அதனை எனக்கு உறுதிப்படுத்துவீர்கள்?
- அனைத்து வீடு கட்டுனர்களும் Building Codesக்கு அமையவே வீடுகளைக் கட்டுகின்றனர். எனினும் உங்களுடைய வீடுகள் இதர வீடு கட்டுனர்களின் வீடுகளில் இருந்து எங்ஙனம் மாறுபடுகின்றன?
- உங்களுடைய வீடுகட்டும் யுத்திகள் அண்மைக்காலத் தொழில்நுட்ப வளர்ச்சியினை எங்ஙனம் பிரதிபலிக்கின்றன?
- கட்டும் வீடுகள் சக்தி சேமிப்புடையனவாக இருப்பதற்காக எத்தகைய படிநிலைகளை நீங்கள் கையாளுகின்றீர்கள்?
- உங்களால் கட்டப்பட்டு நான் வாங்கப் போகும் வீட்டிற்கு மாதாந்த சக்திச் செலவு எவ்வளவு வரும் என உங்களால் அனுமானிக்க முடியுமா?
- இதர கட்டுனர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சுற்றுச்சூழலைப் பாதிக்காமல் பேணும் வகையில் உங்களால் கட்டப்படும் வீடுகள் அதிசிறப்புடையவை என எங்ஙனம் நீங்கள் எமக்கு உறுதிப்படுத்துவீர்கள்?
- சக்தி சேமிப்பு வீடுகளைக் கட்டுவதற்கு உங்களுக்கு அனுமதிப்பத்திரம் (Licensed by the government) உண்டா?
- Government – Backed energy labelஐ எங்களுக்குக் கட்டப்படும் வீட்டில் பொருத்துவீர்களா?
- அனுமதிப்பத்திரமுள்ள சிறப்பு வல்லுனர்களான பரிசோதகர்களால் (Independent Licensed Professionals) உங்களால் கட்டப்படும் வீட்டின் தரம் பரிசோதிக்கப்பட்டதா?
- உங்களால் கட்டப்படும் வீடுகளுக்கு Energuide rating எனப்படும் சக்தி சேமிப்புத் தரத்தை மதிப்பிடும் புள்ளிகள் 80 ஆகவோ அல்லது அதற்கு மேலாகவோ இருக்கின்றனவா?

இந்த பத்துக் கேள்விகளையும் உங்கள் வீடு கட்டுனரிடம் கேட்டு அவர்களின் பதில்களிலிருந்து உங்கள் வீடு சக்தி சேமிப்புடையதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். எதிர்காலத்தில் சக்தி சேமிப்பு வீடுகள் மட்டுமே கட்டப்படும் வண்ணம் சக்தி சேமிப்பு விழிப்புணர்வுக் கருத்தினுள் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் சக்தி சேமிப்பு உத்தரவாதமற்ற வீடுகள் பெறுமதியிழக்கும் நிலை ஏற்படவும் வாய்ப்புண்டு. அந்தவகையில் இன்று கட்டப்படும் வீடுகளை சக்தி சேமிப்புடையனவாகக் கட்டும்போது அவை நாட்டுக்கும் வீட்டுக்கும், சக்தியையும் பணத்தையும் விரயமாக்காமல் பாதுகாக்கின்றன என்பதனால் அத்தகைய வீடுகளைக் கட்ட முனைப்பாக இருப்பது நன்மை தரும்.

சக்தி விரயத்தால் ஏற்படக்கூடிய எதிர்கால அபாயநிலை குறித்த விழிப்புணர்வை நாம் பெற்றிருப்பது அவசியமாகும். சக்தி சேமிப்புத் திட்டத்தில் பங்கேற்பது இந்நாட்டில் வாழும் ஒவ்வொருவரதும் பிரதான கடமைகளில் ஒன்றாகும்.

சக்தி சேமிப்பு வீடுகளின் தரத்தை எங்ஙனம் மதிப்பிட்டு புள்ளி வழங்கி ஊக்குவிப்பது என கனடிய அரசின் இயற்கைவள அமைச்சு ஒரு மதிப்பீட்டுத் திட்டத்தினை வகுத்துள்ளது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் வீடுகளின் சக்தி சேமிப்புத் தரமானது மதிப்பீடுகள் மூலம் மதிப்பிடப்படுகின்றது. நீங்களும் உங்கள் வீடுகளின் சக்தி சேமிப்புத் தரத்தினை Energuide rating system அடிப்படையில் அறிந்து வைத்திருங்கள்.

இதனை எவ்வாறு அறிவதெனின் மேற்கூறிய வினாக்களைக் உங்கள் வீடு கட்டுனரிடம் நேரடியாகக் கேட்டு அவர்கள் பதிலில் இருந்து அறியலாம். இல்லையேல் Natural Resources Canadaவின் இணையத்தளப் பக்கத்தில் உள்ள www.newhomes.nrcan.gc.ca என்ற இணையத்தளப் பக்கத்திற்குச் சென்று அதில் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களூடாக உங்களை அறிவுறுத்தி அறிவதோடு அவ் இணையத்தளத்தினூடாக இது குறித்த விடயங்களை உள்ளடக்கிய கைநூலையும் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். இந்த கைநூலில் மேலே கூறிய வினாக்களுக்கு உங்கள் வீடு கட்டுனர்கள் (Builders) எத்தகைய பதிலை அளித்து உத்தரவாதமளிக்க வேண்டும் என்ற விபரங்களும் உள்ளன. Federal Governmentஆல் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்திற்கமைய உங்கள் வீட்டைக் கட்டி நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை செய்யுங்கள். Natural Resources Canadaவை தொலைபேசியில் தொடர்புகொண்டும் இது குறித்த கைநூலைப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கு நீங்கள் 1-800-387-2000 என்னும் இலவச தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்க வேண்டும்.

இங்கனம் சக்தி சேமிப்புடைய வீடுகளைக் கட்டுபவர்களுக்கு கனடிய அரசு பல சலுகைகளையும் வரிவிலக்குகளையும் வழங்கி ஊக்குவிப்பதனால் அத்தகைய அனுகூலங்களையும் பெறுவதோடு நாட்டின் சக்தியைச் சேமித்து இந்நாட்டின் நற்குடிகளாகவும் வாழலாம்.

prabaharan.s@thaiveedu.com


■ ■ ■


Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)

உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

For Buying and Selling
Commercial, Residential & Investments...
Call: 416•522•3314

Sockalingam Prabaharan
Sales Representative
PROPERTY MAX
Realty Inc. Brokerage
3321 McNicoll Ave.
Toronto, ON M1V 5B3
Tel: 416 291 3000
Fax: 416 298 9963
For Listing Lowest Commission Starting from 1%

$295,900
Brimorton/Lawrence

$325,000
Bellamy/Lawrence

$379,900
Birchmount/Steeles

$384,900
Markham & Steeles

$429,900
Markham & Steeles

$439,900
Mccowan/Highglen

$439,900
Middlefield/ Dension

$524,900
14 Ave /Markham

$543,900
Brimley/Steeles

# Trusted for Service and Respected for Results

22 Years Real Estate Experience & Multi Award Winner



RED CARPET®
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON.

**Karu Kandiah** FRI. CRES.
Real Estate Broker / President

Bus: 416-284-5555 Dir: 416-616-7278

## To Buy or Sell your Home for the Right Price please call me...



3 Bedrooms, 3 Washrooms
Low Maintenance Fee Condo



4 Bedrooms, 3 Washrooms
Walk To Public Transit, School



4 Bedrooms, 3 Washrooms
Pot Lights In Family Room



2 Bedrooms, 1 Washroom
Demand Location



1 Bedroom, 1 Washroom
Investment Potential



3+1 Bedrooms, 2 Washrooms
Well Maintained Large Unit



2 Bedrooms, 2 Washrooms
Well Maintained Spacious



3 Bedrooms, 3 Washrooms
Good Location, Steps To Lake



2 Bedrooms, 2 Washrooms
Approx 1077 Sq. Ft. With Balcony



1+1 Bedrooms, 2 Washroom
Well Maintained Unit



4 Bedrooms, 3 Washrooms
Good Location. Well Maintained



4+1 Bedrooms, 4 Washrooms
Over 3000 Sqft With Breaktaking View



1+1 Bedrooms, 1 Washroom
Approx. 818 Sq Ft



3 Bedrooms,3 Washrooms
Near To Hwy 401, 407



3 Bedrooms, 2 Washrooms
Mintes To Subway, Go Station



2 Bedrooms, 2 Washrooms
Walk To Schools, Transit

## Looking for a New Real Estate Career

*Join a winning team for your success*

- Free Real Estate Classes
- Regular Sales Training from Experts
- Referral leads
- Help & guidance for newly licensed agents

# நல்ல தருணம் இது... நழுவ விடலாமோ?

மிகக்குறைந்த வட்டி வீதம்
கட்டுபடியாகும் அடமானக் கட்டணங்கள்
புதிய வீடு வாங்கவும்,
ஏற்கனவே வீடு வைத்திருப்பவர்கள் கடன் பழுவைக் குறைத்துக் கொள்ளவும்
**நல்ல தருணம் இது... நழுவ விடாதீர்கள்...**



**Veriable Rate • Fixed Rate • Closed Mortgage • Open Mortgage • Short Term • Long Term • Cash Back Mortgage**
எதைத் தேர்ந்தெடுப்பது என்று குழப்பமாக இருக்கிறதா?

ஒவ்வோருவருடைய அடமானத் தேவைகளும், சூழ்நிலைகளும் வேறுபட்டவை. தனித்துவமானவை. உங்களுக்குப் பொருத்தமான அடமான வகையைத் தேர்ந்தெடுக்க அனுபவமும், நம்பிக்கையும் நிறைந்த ஒரு முகவரை நாடுங்கள்

- digi Media -

## Das Narayanasamy



Mortgage Broker

**416-543-6614**

Fax: 1-888-511-8960
E-mail: das@centumoptima.com

Lic# M08007147

CENTUM
Optima Mortgages Inc.
Lic# 10894

**என் பணி கடன் செய்து கொடுப்பதே!**

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**SRI**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை

## (Personal Bankruptcy in Canada)

பகுதி - 3



வி. சிறி

### Consumer Proposals

கனடாவில் வங்குரோத்து நிலைக்கு செல்லும் ஒருவர், அவருக்கு கடன் வழங்கியவர்களுக்கு, கடனை திருப்பி செலுத்துவது தொடர்பாக முன்வைக்கும் ஆலோசனைகள் (Consumer Peoposal) - இது உங்களுக்கான பொருத் தமான தீர்வா? (Consumer Proposals – The Solution For you?)

### நீங்கள் பின்வரும் சூழ்நிலைகளை எதிர்நோக்குகிறீர்களா?

- உங்களுக்கு ஒரு நல்ல வேலை இருந்தும், உங்களது Billsகளுக்கான பணத்தை செலுத்துவது உங்களுக்கு கடினமாக உள்ளதா?
- நீங்கள் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்தல் தொடர்பாக சிந்திக்கிறீர்கள், ஆனால் உண்மையில் நீங்கள் அவ்வாறு செய்ய விரும்பவில்லை.
- உங்களது கடன்களை எவ்வாறு கையாளுவது என்பது பற்றிய வழிமுறைகளை பற்றி நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?

### அப்படியானால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

- தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் இவ் வாறான சூழ்நிலையை நீங்கள் எதிர்நோக்கினால், கடனை மீளச் செலுத்துவது தொடர்பாக சில ஆலோசனைகளை கடன் வாங்கியவர்களிடம் நீங்கள் சமர்ப்பிப்பது பொருத்தமாக அமையக்கூடும்.

### Consumer Proposal என்ற செயற்பாடு உங்களுக்கு பொருத்தமானதாக அமையக்கூடிய சூழ்நிலைகள்.

- உங்களது கடன் $5,000க்கும், $250 000க்கும் இடைப்பட்டதாக இருத்தல். (உங்களது வீட்டு அடைமானக் கடனை உள்ளடக்காமல்).
- நீங்கள் கடன் பெற்ற அனைவருக்கும் அவர்களது கடனையும் வட்டியையும் செலுத்த முடியாமல் இருக்கிறீர்களா.
- உங்களுக்கு ஓர் நிரந்தரமான வேலை இருந்தும் கூட, உங்களது கடன் தொகை மிகவும் அதிகமாக இருப்பதனால் - கடனை ஒருங்கிணைக்கும். கடனை (Debt Consolidation Loan) பெற முடியாத நிலையில் இருக்கிறீர்களா.

நீங்கள் வங்குரோத்து நிலைக்கு செல்ல விரும்பவில்லை ஏனெனில்:

- உங்களது அதிகளவு வருமானம் காரணமாக நீங்கள் மேலதிக வருமானம் பெறுவது தொடர்பான (Surplus income) தெண்டம் விதிக்கப்படும் ஒரு சூழ்நிலைக்கு உட்படுத்தப்படலாம்.
- நீங்கள் உங்களது வீடு அல்லது கார் போன்ற பெறுமதியான சொத்துக்களை இழக்கமாட்டீர்கள்.

> “வங்குரோத்து நிலைக்கு செல்வதைவிட Consumer Proposal என்ற செயற்பாடு, உங்களது கடன் பெறும் தகைமையில் (Credit Rating) குறைந்த அளவிலான பாதிப்பையே ஏற்படுத்தும்.”

### Consumer Proposal என்ற நடவடிக்கையினால் கடன் பெற்றவருக்கு ஏற்படும் நன்மைகள்

- உங்களது கடனின் ஒரு பகுதியை மீளச் செலுத்துவது தொடர்பாக நீங்கள் கலந்துரையாடி ஓர் முடிவுக்கு வரமுடியும்.
- நீங்கள் இந்த நடவடிக்கையை தொடங்கும் திகதியில் இருந்து வட்டி செலுத்துவது நிறுத்தப்படுகிறது.
- உத்தரவாதமின்றி பெறப்பட்ட உங்களது கடன்கள் (Unsecured Debts) யாவும் உள்ளடக்கப்படும் (குறிப்பிட்ட ஒரு சில வகை கடன்களை தவிர). கடன் அட்டை கடன்கள் (Credit card), வங்கிக் கடன்கள், சம்பளத் தினக் கடன்கள், வருமான வரி என்பவையும் உள்ளடக்கப்படும்.
- கடனைத் திரும்ப செலுத்த வேண்டிய ஆகக்கூடிய காலம் 5 வருடங்கள்.
- சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுதல் (Wage Garnishment) உட்பட, கடன் வழங்கியவர்கள், கடனைத் திரும்ப பெறுவதற்கான செயற்பாடுகள் யாவும் (தாபரிப்புப் பணம், பிள்ளைகளுக்கான உதவிப்பணம் என்பவை தவிர) உடனடியாக நிறுத்தப்படும்.
- உங்களது வீடு அல்லது ஏனைய சொத்துக்களை இழக்கமாட்டீர்கள்.

வங்குரோத்து நிலைக்கு செல்வதைவிட, Consumer Proposal என்ற செயற்பாடு, உங்களது கடன் பெறும் தகைமையில் (Credit Rating) குறைவான அளவான பாதிப்பையே ஏற்படுத்தும்

### உங்களுக்கு கடன் வழங்கியவர்கள் ஏன் Consumer Proposal திட்டத்திற்கு ஒப்புக் கொள்ளுகின்றார்கள்?

ஏனெனில் நீங்கள் வங்குரோத்துக்கு நிலைக்கு சென்றால், உங்களுக்கு கடன் வழங்கியவர்கள் உங்களிடமிருந்து மீண்டும் பெறக்கூடிய அளவு பணத்தைவிட Consumer Proposal மூலம் கூடிய அளவு பணத்தை பெறமுடியும்.


### Consumer Proposal என்ற செயற்பாட்டினால் செய்யமுடியாதவை எவை?

இத்திட்டத்தின் மூலம் பின்பருவனவற்றை செய்யமுடியாது.

- உங்களுக்கு கடன் வழங்கியவர்களில் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் கடனை திரும்ப செலுத்த வேண்டும் என்று நீங்கள் தெரிவு செய்ய முடியாது.
- உங்களது மனைவி, பிள்ளைகள் ஆகியோருக்கு செலுத்த வேண்டிய உதவி பணம் வழங்குவது தொடர்பான பொறுப்புகளில் இருந்து நீங்கள் விடுபட முடியாது.
- கல்விச் செலவுக்காக மாணவர்கள் அரசாங்கத்திடம் இருந்து பெற்ற கடன் (Student Lone) பொறுப்புக்களில் இருந்து விடுபடமுடியாது.

sri.v@thaiveedu.com

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD

திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9




Saree Blouse

உங்கள் சகலவிதமான சாறி புளவுஸ் (Saree Blouse) தைப்பதற்கும் அழையுங்கள்.

416 264 6400

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# உங்கள் வாகனம் எதற்காக சட்டரீதியாகப் பறிமுதல் செய்யப்படுகிறது?



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

### தங்கள் வாகனம் எதற்காக கனடாவில் சட்டரீதியாக பறிமுதல் செய்யப்படுகிறது?

அன்றொரு நாள் ஓரிடத்தில்...
வீதியில் ஓடிக்கொண்டிருந்த குறிப்பிட்ட ஒரு வாகனத்தினை அடையாளம் தெரிந்து பொலிசாார் இடைமறிக்கின்றனர்.

"வாகனம் பறிமுதல் உத்தரவு ஆணை" (Vehicle Seize Order) என்னும் சட்டரீதியான பத்திரத்தினை காட்டி அந்த வாகனம் பொலிசாரால் பறிமுதல் செய்யப்படுகின்றது. வாகனம் ஓட்டி சென்ற அந்த வாகனத்தின் உரிமையாளருக்கு ஒன்றுமோ புரியவில்லை.

இன்னொரு நாள் இன்னொரிடத்தில்...

இரவு நேரம் தமது வீட்டில் நன்றாக தூங்கி விட்டு மறுநாள் விடிந்த பின்பு ஒரு ஆச்சரியம். வீட்டின் முன்னால் நிறுத்திய தமது சொந்த வாகனத்தினை காணவில்லை.

சட்டரீதியாக பறிமுதல் செய்ய வேண்டிய ஆணையினை வைத்து இரவோடு இரவாக அதனை அபகரித்துக் கொண்டு போய் விட்டார்கள்.

எதுவித கள்ளம் கபடம் அற்ற நிலையில் வாகனத்தின் உரிமையாளராக இருந்த அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

இறுதியாக தங்களின் வாகன உரிமை என்பது சந்தேகமேயில்லாது "சட்ட ரீதியாக பறிமுதல் செய்யப்பட்டு விட்டது" என்பது மட்டுமே அவர்களிற்கு சில மணி நேரத்தின் பின்பு தெரியவந்தது.

இந்த வாகனத்தின் முன்னைய உரிமையாளர் வங்கியிலோ அல்லது ஏதாவது ஒரு நிதி நிறுவனத்திலேயோ கடன் எடுத்து இவ் வாகனத்தை வாங்கிய இருக்கின்றார். அந்த வாகனம் முற்று முழுதாக கடன் கட்டித் தீர்க்குமுன் விற்கப்பட்டிருக்கின்றது. இவ் விடையம் வாகனம் வாங்கியவருக்கு, அதாவது தற்போதைய உரிமையாளருக்குத் தெரிந்திருக்கவில்லை.

(ஒருவர் வங்கியிலோ அல்லது ஏதாவது ஒரு நிதி நிறுவனத்திலேயோ கடன் எடுத்து வாகனம் வாங்கியிருந்தால், அந்த கடன் முற்று முழுதாக கொடுத்து தீர்க்கும் வரை இவ் வாகனம் குறிப்பிட்ட இந் நிதிநிறுவனத்திற்கு அல்லது வங்கிக்கு ஈடாகவே எழுதப்பட்டிருக்கும். இவ் ஈட்டுக் கடனை ஒழுங்கான முறையில் செலுத்தி தீர்த்துகொள்ள தவறினால் முதலில் கடிதம் வரும்! தொடர்ந்து தொலைபேசி அழைப்பு வரும்! இறுதியாக எச்சரிக்கை கடிதம் வரும். கடைசி முடிவு "பறிமுதல் ஆணை" (Seize order) பிறப்பிக்கப் படும். இது தான் நடந்துள்ளது!)

வாகனத்தின் உரிமையாளரே இவ் வாகனம் வாங்குவதற்காக பெற்ற ஈட்டு கடனை ஒழுங்காக திருப்பி செலுத்த தவறியிருக்கின்றார். அதனால் எச்சரிக்கைகளின் பின்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்ற நிலையில் இருந்திருந்தால் அவர்களுக்கு இந்த சம்பவம் ஆச்சரியமாக என்றும் இருக்க மாட்டாது. திடீர் என வாகனத்தினை பறிமுதல் செய்வது என்பது எதிர்பார்த்த ஒன்றாகவே பொதுவாக அவருக்கு இருந்திருக்கும்.

**தகவல் தொடர் - 37**

ஆனால் முழுதாக பணம் கொடுத்து வாங்கிய ஒரு அப்பாவியின் ஏக்கம் இந்த இடத்தில் எப்படியிருந்திருக்கும்? வாகனம் வாங்கும் போது அவர் தவறினை விட்டிருக்கின்றார்.

பொதுவாக வாகனம் வாங்குபவர்கள் இரு வழிகளில் வாகனம் வாங்கிக் கொள்வார்கள்.

- எவரோ ஒருவரிடமிருந்து ஏற்கனவே உபயோகித்த ஒரு வாகனத்தினை வாங்கிக் கொள்வார்கள் (Buying from Curbsiders)
- அரச அனுமதிப்பத்திரம் பெற்ற விற்பனை யாளரிடமிருந்து (Licensed Car Dealer) உபயோகித்த வாகனத்தினையோ அல்லது நேரடியாக கம்பனியிடமிருந்து (Manufacturing Company Dealers) புதிய வாகன மாகவோ அல்லது உபயோகித்த வாகன மாகவோ வாங்கிக் கொள்வார்கள்.

### எவரோ ஒருவரிடமிருந்து ஏற்கனவே உபயோகித்த ஒரு வாகனத்தினை வாங்கி கொள்ளுதல் (Buying From Curbsider).

எவரோ ஒருவரிடமிருந்து ஏற்கனவே வங்கிக் கடனில் எடுத்து உபயோகித்த ஒரு வாகனத்தினை வாங்கியிருப்பார். அது பலரின் கைகளுக்கு மாறப்பட்ட வாகனமாக இருக்கலாம். அவ்வாகனம் இறுதியில் இவ் அப்பாவியின் கைகளுக்கும் மாறியிருக்கும். இத்தகைய நிலையில் இருப்பவர்களே அனேகமாக நிரபராதியான நிலையில் இன்னொருவரின் வங்கிக் கடனில் ஈடாக உள்ள வாகனம் சட்டரீதியாக பறிமுதல் செய்யப்படும் நிலையில் நிர்க்கதியாவது வழமையாகும்.

எந்தவொரு வாகனத்தினையும் எவரோ ஒரு வரிடம் இருந்து பணம் கொடுத்து வாங்கி கொள்பவர்கள் குறிப்பிட்ட அவ் வாகனத்தின் வரலாற்றுக் குறிப்பினை (Vehicle History) எடுத்து முதலில் பரிசீலனை செய்யாது வாங்கிக் கொள்ள தவறியதாலேயே இங்கு இவர்கள் தங்கள் வாகனத்தினை பறிமுதலுக்கு கொடுக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட வேண்டியுள்ளது.

ஒவ்வொரு வாகனத்திற்கும் முன் கண்ணாடியின் உட்பக்கத்தில் (Front Dash Board) உள்ள இலக்கமும், ஆங்கில எழுத்தும் சேர்ந்து மொத்தம் பதினேழு எழுத்தில் (1981 ஆம் ஆண்டுக்கு பின் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களுக்கு இந்த முறையில் இருக்கும்). ஒரு அடையாள குறியீட்டு இலக்கம் இருக்கும். இதனை ஆங்கிலத்தில் Vehicle Identification Number (VIN) அல்லது Vehicle Serial Number என குறிப்பிடுவார்கள்.

உதாரணமாக ஒரு வாகனத்தின் குறியீட்டு அடையாள இலக்கத்தினை இங்கு எடுத்துக் கொள்வோம்

> "பறிமுதல் செய்யப்படும் நிலையில் உள்ள உங்கள் வாகனம் திருடப்பட்ட வாகனமாக இருந்தால், எவரிடம் வாங்கினோம் என்ற ஆதாரங்களை நாம் நிரூபிப்பதற்கு தயாராக இல்லையேல், வாகனத்தினையும் இழந்து, குற்றவாளியாகவும் நிற்கும் நிலையும் ஏற்படும்."

1T1YY3252T5600198 இப் பதினேழு இலக்கத்தின் ஒவ்வொன்றும் வாகனத்தின் ஒவ்வொரு பகுதி அம்சத்தினையும் அடையாளப்படுத்துகின்றன. அதாவது, உதாரணமாக: எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது, அல்லது உருவமைக்கப்பட்டது, எந்த வகையான வாகனம், எந்த வருடம், உற்பத்தி இலக்கம், அமைப்பு, இயந்திரத்தின் குறியீடு.., இப்படியே இப் பதினேழு குறியீட்டு அடையாளமும் ஒவ்வொரு வாகனத்தினையும் பிரத்தியேகமாக அடையாளம் காட்டி கொடுக்கின்றது.

இவ் அடையாள குறியீட்டினை வைத்து வாங்கபோகும் வாகனம் ஒன்றின் வரலாற்று குறிப்பினை எடுத்து முதலில் பரிசீலனை செய்து கொள்ளல் வேண்டும். இவ்வாறான வாகனங்களின் வரலாற்று குறிப்பினை எடுத்து பரிசீலனை செய்து பார்க்கும் போது பின் வரும் விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தங்கள் கையில் வந்து சேரும். அதன் பின்னர் வாகனத்தினை பணம் கொடுத்து வாங்குவதா? இல்லையா? என்பதனை முடிவு செய்யலாம்.

- வாகனம் தொடர்பான விபரங்கள். அதன் தற்போதைய பதிவு செய்யப்பட்ட அண்ணளவான விலை (Upto date price).
- வாகனத்தின் முன்னாள் உரிமையாளர்கள் எத்தனை பேர் என்ற விபரங்கள்.
- ஏதாவது ஈட்டுக் கடனில் இன்று இருந்தால் அது பற்றிய விபரங்கள்
- உபயோகிக்கப்பட்டு இறுதியாக பதிவு செய்யப்பட்ட ஓடப்பட்ட தூரங்களை அளவிட்ட மீற்றரின் முடிவுகள் (Odometer Readings).
- இதன் தூர அளவில் ஏதாவது மோசடி செய்யப்பட்டு அது பதிவில் இருந்தால் (Odometer tempering) அது பற்றிய விபரங்கள்.
- திருடப்பட்ட வாகனமாக இருந்தால் அது பற்றிய உண்மை தகவல்கள்.
- ஏற்கனவே பாரிய விபத்துக்கு உள்ளாகியிருந்தால் அது பற்றிய விபரங்கள்.
- வாடகைக்கோ (Rental car) அல்லது வர்த்தக சேவைகளுக்கு உபயோகிக்கப்பட்டிருந்தால் அது பற்றிய விபரங்கள்.

இப்படி ஒரு வாகனத்தின் வரலாற்று சரித்திரத்தினையே கையில் பெற்றுக் கொள்ளலாம். இவ் வரலாற்றுச் சரித்திரத்தினை ஆய்வு செய்த பின்பு இக் குறிப்பிட்ட வாகனத்தினை வாங்குவதா? இல்லையா? என்பதனை இலகுவாக முடிவு செய்யலாம்.

### ஒரு வாகனத்தின் வரலாற்று பதிவுகளை எப்படி பெறுவது?

பின்வரும் நிறுவனங்களினூடாக ஒரு வாகனத்தின் அடையாள குறியீட்டினை வைத்து அதன் வரலாறுகளை பெற்றுக் கொள்ளலாம்.

### ஒன்ராறியோ மாகாண போக்குவரத்து அமைச்சின் அலுவலகங்கள்

வாகன இலக்கங்கள் (Vehicle License Plate), மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கும் மாகாண போக்குவரத்து அமைச்சின் அலுவலகங்களில் நேரடியாக சென்று, வாங்கப் போகும் வாகனத்தின் பதினேழு இலக்க குறியீட்டினை வழங்கி இதன் வரலாறுகளை பெற்றுக்கொள்ளலாம் (இவ் அடையாள இலக்கம் வாகன உரிமைப்பத்திரத்திலும் இருக்கும்). இதனை ஆங்கிலத்தில் "Used Vehicle Information Package" (UVIP) என குறிப்பிடுவார்கள். $20 கட்டணம் அறவிடப்படும். இவ் அலுவலகம் பல இடங்களிலும் உள்ளது.

### மேற்குறிப்பிடப்பட்ட போக்குவரத்து அமைச்சின் அலுவலகம் தவிர பின்வரும் இரு நிறுவனங்களில் ஏதாவது ஒன்றின் மூலம் வரலாற்று பதிவுகளை பெற்றுக் கொள்ளலாம்.

***Car Fax Inc.***
***5860, Trinity Parkway***
***Suite # 600***
***Centreville***
***VA 2010, USA***
இணையதளம்: ***www.carfax.com***
மின்னஞ்சல்: ***historyreport@carfax.com***
தொலைநகல்: 1-866-756-0733

அமெரிக்காவிலிருந்து இயங்கி கனடா, அமெரிக்கா முழுவதும் தகவல் வழங்கும் இந் நிறுவனத்திற்கு தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ள முடியாது. மின் அஞ்சல் அல்லது தொலைநகல் அல்லது கடிதமூலமே தொடர்புகொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

இந் நிறுவனத்தின் இணைய தளத்தினூடாக பரிசீலனை செய்து கொள்ளும் போது வாகனங்களின் வரலாறுகள் மட்டுமல்ல, உபயோகித்த வாகனத்தினை வாங்க விரும்பும் உங்களுக்கு நீங்கள் வசிக்கும் விலாசத்திற்கு அருகில் உள்ள விற்பனை நிலையம் எது என்பதற்கான வழிகாட்டல்களும் இவ் இணையத் தளத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

Car Proof Inc.
130, Dufferin Ave, Suite # 204
London, Ontario. L6A SR2
தொலைபேசி: 1-519-675-1415

42ம் பக்கம் பார்க்க...

உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும் விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
**Siva Panchalingam,** B.Com.
(Licensed Insurance Broker)
Office: 905-479-3400 Ext. 132
Home: 416-321-0999, Cell: 416-990-4908
800, Denison Ave., Suite 201, Markham, ON



# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...

**$269.900** — Rehab Buisness with Property — Scarborough

**$499,800** — Photo Not Available — Markham/Castlemore, 4 Bedrooms 3 Washroom, Finished Basement

**$429,900** — BRAMPTON — Torbram & Father Tobin, 4 Bedrooms 3 Washroom

**$339,900** — Brimorton/Scarborough Golf, 3 Bedrooms, 2 Washroom, Finished Basement, Sep.Ent.

**$429.900** — Rutherford / Weston, 3 Bedrooms, 3 Washroom

**In Cambridge** — GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE — $845.000

**In Toronto** — GAS STATION Cango — $950.000

**In Brighton** — ESSO GAS STATION with House & Store — $650.000

**In Baxter** — OLCO GAS STATION with Apt, Store & Restaurant — $1550.000

**In Peterboro** — ESSO GAS STATION — $1,200.000

மேலும் பல GAS STATION களும் விற்பனை நிலையங்களும் விற்பனைக்குண்டு

நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

*Some conditions may apply



## சத்தி மருதப்பா

Sales Representative

[முழுநேர வீடு விற்பனை முகவர்]

# 416-816-1500

Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900

Century 21




# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $89,500 | $132,500 BANK SALE | $178,900 | $750.00 Lease | $183,900 | $229,900 Sale |
| Markham/Mcnicoll 3 Separate Offices | Jane/Sheppard 3 Bdrm & 2 Wrm | Sheppard/Tapscott 3 Bdrm & 1 Wrm | Midlefield/Mcnicoll 3 Separate Offices | Lawrence/Midland 2Bdrm & 2 Wrm | Warden/Sheppard 3 Bdm & 2 Wrm |
| $349,700 | $364,900 | $198,900 | $359,400 | $459,900 | $439,000 |
| Brimley/Steeles 3+1 Bdm & 2 Wrm | Mccowan/Denision 3 Bdm & 2 Wrm | Mccowan/Eglinton 3+1 Bdm & 2 Wrm | Conlins/Ellesmere 3 Bdm & 2 Wrm | VictoriaPark/Finch 4+1 Bdm & 4 Wrm | Middlefield/Finch 4+1 Bdm & 4 Wrm |

## Are You Invester?

**You Want to Buy New Condos With VIP Price Call Krish For More Details..**

OPEN HOUSE SAT & SUN 2 -5



MIDDLEFIELD/FINCH
2 Bdm & 2 Wrm

## More houses visit :- www.krishome.ca



**Krish Sivapatham**
Sales Representative
Full Time Realtor
Direct : 416-895-4457
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229

HOMELIFE HIGHER STANDARDS

Indepently Owned and Operated, REALTOR
This is not intended to solicit properties Currently under conract/ some conditions may apply



## CENTUM
Gold Mortgages
Looking out for your best interest

இது ஒரு நல்ல சந்தர்ப்பம், உங்கள் நிதிப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு...

- 1st, 2nd, 3rd MORTGAGES *
- COMMERCIAL MORTGAGE *
- LINE OF CREDIT *
- POWER OF SALE *
- SELF - EMPLOYED *
- BRIDGE FINANCING *
- SWITCHING *
- REFINANCING *
- BAD CREDIT *

All Mortgages Needs
☎: 416- 844-8692
supen71@hotmail.com

Prime -0.40% for Variable with close

PRIME +.50% FULLY OPEN mortgage

Fixed rate
5yrs 3.75%
3yrs 3.5%
(some conditions may apply)
2nd mortgae can arrange without income qualified



**Supen Subramaniam**
Mortgage Consultant (MO8006045)
*Some Condition Apply



# Shan Thayaparan

*Sales Representative*

**Dir: 416.567.7675**
**Bus: 416.321.2228**

www.shan123.com
E mail: Shan123@rogers.com


RE/MAX Above the Crowd!
Vision Realty Inc.
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6

## Scarborough



**Largest Unit**
Well kept & Well managed Condo. No worries about reserve funds. Newly painted, Newer Floor,Newer Appliances.

## Markham


**2800 Sqf. New Starlane Home**
Larger 4 Bedrooms, 3 Full Washrooms Upgraded Large Kitchen, Oak Staircases Formal Living and Dining & More

## Ajax


**2371Sqf. Prestige Area**
4 Bedrooms & Sunken Family room Double Garage, Walk-Put Basement, Full Brick Only 10 Minutes from Scarborough!!!

## Brampton


**Aprox. 2500 Sqf.**
Large 4 Bed Rooms, 2 Full Wash Rooms Steps to all schools, transit & shopping Double garage, Entrance to Garage

## Brampton


**Affordable Semi**
Large 3 Bed Rooms, Finished Basement 5 years new, Spacious, Bright House. Close to Schools, Go Station

## Scarborough


**Great Starter Home!!!**
2 Bedrooms, Steps to Schools, Mall. Upgraded Kitchen, Newer Floor, Ensuite Laundry and more...

## Scarborough



**Extra Large/Finished Bsmt**
Large 3 Bed Rooms & 3Bedrooms in the Basement. Close to Scar. Town center School 401,& TTC

## Ajax


**Gorgeous House**
Large 3 Bed Rooms, Walk-Out Basement Looks like a model house. Large deck in the back. Minutes to 401 & 10 Minutes from Scarborough

## Scarborough



**$Excellent Value$**
4 Bed Rooms, Double door entry, Open concpt Close to Schools, UofT,TTC, Shopping & 401

## Markham



**Lovely 4Br. Family Home**
High demand location, Bright Eat-in- Kitchen Detached Double Garage. Over 2000Sqf.

## Scarborough


**Mattamy Built/ 4+2 Bedrooms**
4 Bed rooms, 3 Full washrooms Finished Basement/ Separate Entrance Close Schools, TTC & Shopping

## Scarborough


**$$$Excellent Value$$$**
4 Bed+2Bedrooms, 4 washrooms Finished Basement. Steps to School, Park TTC. Close to shopping, 401

## Scarborough


**McCown/Finch**
Full Brick Renovated Home, Large Driveway Close to TTC, Temple, Schools & Shopping 3 Bedrooms with Finished Basement


## Scarborough


**$$Excellent Value$$**
4 Large Bedrooms, 3 Washrooms Aprox. 2400 Sqf. New Painting, New Deck Steps to School & TTC

**Need a House**

## Ajax


**One Year Old Semi**
Very Spacious, Well Maintained House Upgraded Kitchen, Washrooms, Stainless Appliances. Close to Transit, Shopping & 401

## Daisy Mart


**Real Money Maker**
Steady Weekly Sales $10,000. Ideal Family Business.

## Stouffville


**Beautiful Semi.**
3 Large Bed rooms, 2 Full washrooms Upgraded Kitchen, Upgraded Washroom Stainless Appliances. Close to GO Station

**Need a House**


**Spotless House**
3 Large Bed rooms, 2 Full washrooms $$$ Spend on Hardwood floors, Kitchen Washrooms. Close to GO Station

RE/MAX Above the Crowd!
Vision Realty Inc. Brokrage
2210 MARKHAM ROAD, UNIT 01 TORONTO,ONTARIO M1B 5V6

# Viki Velauthan

*Sales Representative*

**Dir: 416.457.7162**
**Bus: 416.321.2228**
E mail: vvelauthan@yahoo.com



# இன்பியலால் பரவும் நோய்கள்
# (Sexually Transmitted Diseases)

இன்பியல் எமது பொருள்சார் (materialistic) வாழ்வின் மிகமுக்கிய பகுதிகளில் ஒன்று. எல்லா வயதினரிடையேயும் இன்பியல்த் தொடர்பு நாட்டம் இயற்கையான ஓர் உந்துதலால் (Drive) ஏற்படுகின்றது. எனவே இதனை முழுக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல் சாத்தியம் அற்றதுடன் அவ்வாறு கொண்டுவர எத்தனித்தால் பல உளவியல் சிக்கல்களை தோற்றுவித்துவிடலாம். இதனால் இன்பியற் தொடர்புகள் வாழ்வின் யதார்த்தம் (Reality) என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறான விவரணநிலை (Scenario)யில் இன்பியற்தெடர்புகளால் ஏற்படும் நோய்கள் பற்றிய விழிப்புணர்வு (Awareness) முக்கியமானது ஏனெனில் இந்நோய்கள் பல மனிதரின் நலவாழ்விற்குக் குறுக்கே நின்றும், பலமனித உயிர்களுக்கு உலைவைக்கவும் நேரிடும்.

பண்டைய காலத்திலிருந்து மனிதருக்கு பரீட்சயமான சில இன்பியற்தொடர்பு நோய்கள் இருந்துவருகின்றன. இவை நேரடியான இன்பியற்தொடர்பால் ஏற்படுபவை. ஏனெனில் இந்நோய்க்கள் இன்பியற்றொழிலால் (sex-work) பரவிவந்தவை. இவற்றை மேக நோய்கள் (Venereal Diseases) என அழைத்துவந்தார்கள்.

ஆனால் இன்று நேரடியான இன்பியற்றொடர்பாலோ (Sexual interconse) அல்லது மற்றைய பரிசத் (bodily) தொடர்புகளாலோ ஏற்பட்டு மனிதரின் பாலியல் உறுப்புக்களையும், உடலின் மற்றைய பகுதிகளையும் பாதித்துவரும் முப்பதிற்கு மேற்பட்ட இன்பியல் தொடர்பு நோய்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் இன்பியலால் பரவும் நோய்கள் அல்லது தொற்றுக்கள் (sexually Transmitted Diseases or Infection, STD's or STI's) என்ற பொதுப் பெயரால் அழைக்கப் படுகின்றன.

இக்கட்டுரை மூலம், கட்டுரை ஆசிரியர் மனிதனுக்கு அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தி வரும் சில இன்பியலாற்பரவும் நோய்கள் பற்றிய விழிர்ப்புணர்வினை ஏற்படுத்த விழைகின்றார். இவ்வியாதிகளின் விழிர்ப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இவற்றின் காரணிகள் எவை, குணம்குறிகள் எவை, எவ்வாறு வரு முன் காக்கலாம் போன்ற விடையங்களை மட்டும் கருதி, இந்நோய்களின் இனம்காணல் சோதனைகள் (Diagnostic Tests) அவை வந்தபின் அவற்றிற்கு பரிகாரணம் (Treatment) போன்றவற்றை தகுதிவாய்ந்த வைத்தியர்களின் ஆலோசனைக்கு விட்டுவிடுகின்றார்.

கருதவிருக்கும் சில நோய்களை இக்கட்டுரை ஆசிரியர் அவற்றின் பரம்பல்முறை, தாக்கமுக்கியத்துவம் போன்றவற்றின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிக்கின்றார்:

- நேரடி இன்பியற்றொடர்பினால் ஏற்படும் நோய்கள்.
- நேரடித்தொடர்பு மட்டுமல்லாமல், பிற உடற்றொடர்பாலும் ஏற்பட்டு பாலியல் உறுப்புக்களையும் மற்றும் பிற உடலுறுப்புக்களையும் பாதிக்கும் நோய்கள்.
- ஏமநோய் (Acquired Immuno deficiency Syndrome) (AIDS)

## நேரடி இன்பியற்தொடர்பால் ஏற்படும் நோய்கள் (STD's Through Sexual Intercourse)

- **கிளமைடியா (Chlamydia)**

**நோய்க்காரணி:**
இது கிளமைடியா எனும் பக்ரீறியாவின் ஓர் இனம்.

**நோயின் குணம்குறிகள்:**
பெண்களில் பெரும்பாலும் குணம் குறிகள் காணப்படமாட்டாது. ஆண்களில் முதற்குணம் குறிகளாக சிறுநீர் கழிக்கும் போது நோவு, சிறுநீர்வெளிச் செலுத்தியிருந்து (Urethra) சிறுநீர் செல்லும் போது கடுப்பு, இடுப்புவலி, பெண்குறி (vulva) வீக்கம் மற்றும் தோழில் மூட்டுவலி நோயில் (Arthritis) ஏற்படுவது போல் வலி போன்றவையும் ஏற்படும். ஆண்களில் சிறுநீர் செல்லும் போது கடுப்பு, சிறுநீர் வெளிச் செலுத்தியிருந்து சீழ்போன்ற வெளியீடு வரும்.

### ஹேர்பீஸ் (Herpes)

**நோய்க்காரணி:**
ஒருவகை வைரசு.

**நோய்க் குணம்குறிகள்:** கரப்பான் அல்லது சொறி (Rash) யோனி, யோனியின் கழுத்து, ஆண்குறி, வாய், குதம் அல்லது

> திருமண பந்தத்தில் இணையவிருக்கும்
> ஆணும், பெண்ணும்
> தங்களுக்கு இன்பியலால் பரவும் நோய்த்தொற்று
> இல்லை என்பதை உறுதிசெய்ய வேண்டும்.
> இதனால் கணவன், மனைவியரையும்,
> இவர்கட்குப் பிறக்கப்போகும் பிள்ளைகளையும்,
> இவர்கள்சார்ந்த சமூகத்தையும் பாதுகாக்கலாம்.

சீழ்வரும்.

### புறப்பாலுறுப்புக்காய்களும், மனிதப்பப்பிலோமா வைரசும் (Genital warts & Human pappillomavirus, HPV)

**நோய்க்காரணி:**
மனிதப்பப்பிலோமா வைரசு.

**நோயின் குணம்குறிகள்:**
மென்மையானதும், தட்டையானதுமான காய்கள் சிறுசீர்வெளிச் செலுத்தி, யோனியின் உட்பகுதி, குதம், தொண்டை ஆகியவற்றில் காணப்படும். இவை அநேகமாக கண்ணிற்குப் புலப்படமாட்டாது ஆனால் சொறியினை ஏற்படுத்தும்.

### கொணொறியா (Gonorrhea)

**நோய்க்காரணி:**
ஒருவகை பக்ரீறியா

**நோய்க் குணம்குறிகள்:**
பெண்களில் பச்சை அல்லது மஞ்சள் பச்சை வெளியீடு (discharge) யோனியிலிருந்து வரும்.

உடலின் மற்றைய பகுதிகளில் கொத்துக் கொத்தாக வெண்ணிற கொப்புள் (blisters) புண்கள் காணப்படும். இவ்வகைச் சொறியினால் வலி, சொறி, எரிவு உணர்ச்சி, சுரப்பிகள் வீக்கம், காய்ச்சல், தலைவலியுடன் நலிந்த உணர்வும் ஏற்படும்.

## நேரடி இன்பியற் தொடர்பால் மட்டுமல்லாது பிற உடற்தொடர்பாலும் ஏற்படும் இன்பியலாற் பரவும் நோய்கள்.

### கிரந்திப்புண் (Syphilis)

**நோய்க்காரணி:**
Treponema Pallidum எனப்படும் சுருளிவடிவ, நத்தைபோன்ற நுண்ணுயிர்.

**நோய்க் குணம்குறிகள்:**
இந்நோய் மூன்று நிலைகளில் காணப்படும். முதலாம் நிலையில் வட்டவடிவமான, நோவற்ற, உறுதியான புண்கள் இந்நுண்ணுயிர்கள் உடம்பில் உட்புகும் இடங்களான உதடுகள், வாய், நாக்கு, முலைக்காம்பு, குதம் அல்லது புறப்பாலுறுப்புக்களில் காணப்படும்.

இந்நிலை தொற்று ஏற்பட்டு, ஒன்பது தொடக்-



கந்தையா
பரநிருபசிங்கம்

கம் தொண்ணூறு நாட்களின் பின் ஏற்படும். இதைத்தொடர்ந்து ஆறுதொடக்கம் பத்துக் கிழமைகள் வரை எதுவித குணம்குறிகளும் காட்டப்படாத மறைப்புக் காலம் (Latent Period) ஆறு கிழமையிலிருந்து ஆறு மாதங்கள் வரை தொடரும்.

இதனைத் தொடர்ந்து இந்நோயின் இரண்டாம் நிலை ஆரம்பமாகும். இந்நிலையில் வெவ்வேறு வகையான கடியற்ற சொறிகள் (rashes) உருவாகி தழும்புகள் இன்றி குணமடையும். இந்நிலையில் இந்நோய்க்குக் காரணமான நுண்ணுயிர்கள் குருதியிச்சுற்றோட்டம், நிணநீர்த்தொகுதி ஆகியவற்றிற் கூடாகச் சென்று உடலின் எல்லா இழையங்கள், அங்கங்களுக்கும் பரவியிருக்கும். இந்நிலையைக்குப் பின் குணம்குறிகள் காட்டப்படாத மறைப்புக் காலம் தொடரும். இது வாழ்நாள் வரை அல்லது பல வருடங்கள் நீடிக்கும்.

மூன்றாம் நிலையில் இந்நோய் நரம்பு மண்டலத்தைத்தாக்கும். அத்துடன் தோல், எலும்பு மூட்டுக்களைத் தாக்கி அழிப்பதுடன் மூளைக்குச் செல்லும் குருதி வினியோகத்தை தடை செய்யும் கிரந்திப் புண்நோய் இறுதிநிலையில் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது.

### பூப்பென்பிடப் பேன்கள் (Pubic Lice)

**நோய்க்காரணி:**
பூப்பென்பிடப் பேன்கள்.

**நோய்க் குணம்குறிகள்:**
இவற்றின் கடி அகோர சொறிகளை ஏற்படுத்தும், இப்பேன்கள் குண்டூசித் தலையளவு பருமனும் சாம்பல் நிறமாகவும், நீள்வட்ட வடிவமாகவும் இருக்கும். ஆனால் குருதியைக் குடித்திருந்தால் தோடம் பழ நிறத்தில் இருக்கும்.

### இடுப்பு வீக்கநோய் (Pelvic Inflamatory Disease)

**நோய்க்காரணி:**
கொணெறியா, கிளமைடியா, போன்ற நோய்களின் கிருமிகள் புறப்பாலுறுப்புக்களில் இருக்கும் போது அவை கண்டறியப்பட்டு (diagnose) அவற்றிற்கு பரிகாரம் (treatment) செய்யாதவிடத்து இந்நோய் ஏற்படும்.

**நோய்க் குணம்குறிகள்:**
காய்ச்சல், குலப்பண், வாந்தியெடுத்தல், அடிவயிற்றில் நோவு உடலுறவின் போது நோவு, மதவிடாய், சிறுநீர்க்கழிப்பிற்கிடையில் நோவு. மாதவிடாயின் போது அதீத குருதிப் பெருக்கு, வெளியீடு அல்லது குருதியுறைதல்

42ம் பக்கம் பார்க்க...

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable




உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்படாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344

# இன்பியலால் பரவு...

41ம் பக்கத் தொடர்ச்சி...

கானப்படும். வழமைக்குமாறான யோனி வெளியீடுகளும் காணப்படலாம்.

### ஈரலழர்ச்சி B (Hepatitis B)

**நோய்க்காரணி:**
ஒருவகை வைரசு.

**நோய்க் குணம்குறிகள்:**
உயர்தொற்று நிலையில் குணம்குறிகள் காட்டப்படமாட்டாது. ஈரல் மச்சையாக்கப்பட்டு, கொடூர ஈரல் நோயை உருவாக்கும். இது இறப்பைக்கூட ஏற்படுத்தலாம்.

### திரிக்கோமோனியாசிஸ் (Trichomoniasis)

**நோய்க்காரணி:**
திரிக்கோமோனியட்ஸ் என்ற நுண்ணுயிர்கள்.

**நோய்க் குணம்குறிகள்:**
நுரைபோன்ற, மதுமணம் கொண்ட வெளியீட்டுடன் யோனிப் பகுதியில் சொறிதல் ஏற்படுதல். சில வேலைகளில் சிறுநீர் கழிக்க வேண்டுமென்ற உந்துதல் அதிகரிப்பு. ஆனால் பெரும்பாலான பெண்களில் குணம்குறிகள் காட்டப்படாமல் இருக்கலாம். அத்துடன் ஆண்கள் குணம்குறிகாட்டுதல் அரிது.

### யோனியழல்ச்சி (Vaginitis)

**நோய்க் காரணிகள்:**
பல வித்தியாசமான உயிரங்கிகள் (Organisms) இதற்குக் காரணமாக அமையலாம்.

**நோய்க் குணம்குறிகள்:**
யோனிவாசலில் (Vulva) எரிவு அல்லது சொறி அத்துடன் விரும்பத்தகாத மணம்.

### பெறப்பட்ட நோயெதிர்புக் குறைபாட்டுக் குணம்குறிக்கூட்டு. (Acquired Immuno Deficiency Syndrome) (AIDS)

AIDS நோயைக்கு தமிழில் ஏமநோய் என்ற பதத்தை பாவிக்கலாம் என்று தமிழ் வல்லுனர்கள் பலர் கூறுகின்றர்கள். எனவே இந்நோய் ஏமநோய் என்றே இனிவரும் பந்திகளில் அழைக்கப்படும்.

**நோய்க் காரணிகள்:**
மனித நோயெதிர்புக் குறைபாட்டு வைரசு (Human Immo Deficiencey Virus) (HIV)

இந்த வைரசு ஒருவரிலிருந்து மற்றவருக்கு இருபாற்சேர்க்கை, ஒருபாற் சேர்க்கை அல்லது கருதிப்பாச்சல் மூலம் பரவியும். இந்த வைரசு தொற்று இருந்தால் HIV+ve என்றும் இல்லாமல் இருந்தால் HIV–ve என்று அழைப்பார்கள். HIV+ve ஆக இருந்தால் அவருக்கு AIDS என்ற ஏமநோய் உள்ளதாக எண்ணக்கூடாது. ஒருவருக்கு எப்பொழுது ஏமநோய் இருப்பதாகக் கருதப்படுமெண்றால் அவருடைய நோயெதிர்ப்புத் தொகுதி மனித நோயெதிர்ப்புக் குறைபாட்டு வைரசுக்களால் தாக்கப்பட்டு வலுவிழக்கச் செய்யப்படும்போது சில சந்தர்ப்பவாத (Opportunistic) நோய்களான, நீயூமோனியா (Pneumonia), காசநோய் (Tubercolosis) ஏற்பட்டு அவை மாறாமல் இருந்தால் அவருக்கு ஏமநோய் இருப்பதாகக் கருதப்படும். ஏமநோய் ஒரு நோயல்ல. இது உண்மையில் குணம் குறிகளின் கூட்டு (Syndrome). இது இன்று ஆட்கொல்லி நோய்களில் ஒன்றாக இருந்து வருவதால் இது சிறப்பாகக் கருதப்படவேண்டிய ஒன்று.

**நோய்க் குணம்குறிகள்:**
HIV தொற்றுகளுள்ளாகும் பொழுது முதலில் அதிக காய்ச்சல், சுரப்பிகள் வீக்கம், இரவில் வியர்த்தல் போன்றவை இருக்கும் சில வருடங்களின் பின்பு ஏமநோய்க் குறிகள் காணப்படும்.

இப்பொழுது இன்பியலால்ப் பரவும் நோய்கள் எங்களிடையே பரவாமல் எப்படி வருமுன் காக்கலாம் (Prevent) என்பதைக் கருதுவோம் இங்கு மனகுறி கொள்ளவேண்டியது எல்லோருக்கும் தெரிந்த முதுமொழி. “Prevention is better than cure”.

பதின்ம வயதினரும் (Teens), திருமணமாகாத இழையோரும் தங்களது இன்பியல் வேட்கையைத் தணிக்க ஒரு வடிகாலைக்காண வேண்டும் என்பது யதார்த்தமானதே. இதனால் சிலர் புறப்பாலுறுப்புக்கைத்தூண்டற்கிளறல் (Masturbation), சிலர் இருபாற்சேர்க்கை, வேறு சிலர் ஒருபாற்சேர்க்கை போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். முதலாவது மேற்கூறிய நடவடிக்கையைத் தவிர்த்து மற்றையவற்றில் ஈடுபடுவோர் பாதுகாப்புறைகளைப் பாவிக்க வேண்டும். அனால் இந்த உறைகள் நூறு வீதம் பாதுகாப்பானவையல்ல. ஏனெனில் இவை வெடிக்கலாம், ஆண்குறியின் முழு நீளத்தையும் போர்க்காமல் இருக்கலாம். பாற்சேர்க்கையின் போது முன் விளையாட்டுகளுக்கு (Fore play) உந்தப்பட்டால் இதன் மூலம் சில இன்பியலால் பரவும் நோய்கள் தொற்றலாம். எனவே மேற்கூறப்பட்ட வகையினருக்கு புறப்பாலுறுப்புக்கைத் தூண்டற்கிளறலே பாதுகாப்பானது.

மணமானவர்களைக் பொறுத்த மட்டில் இயலுமானவரை திருமணத்திற்குப் புறம்பான இன்பியற் தொடர்புகளை பேணாது இருத்தல் இந்த நோய்கள் பரவாமல் தடுப்பதற்குச் சிறந்த வழி. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையால் தவறுசெய்ய நேரிட்டால் பாதுகாப்பான முறையில் இன்பியற்றொடர்பில் ஈடுபட வேண்டும்.

மேற்கூறியவை மட்டுமல்ல, திருமண பந்தத்தில் இணையவிருக்கும் ஆணும், பெண்ணும் தங்களுக்கு இந்த நோய்கள் இல்லை என்பதை உறுதிசெய்ய வேண்டும். இதற்கு இருவரும் தன்னிச்சையாக வந்து தங்களைச் சோதனை செய்து இவ்வியாதிகள் இல்லை என்று உறுதிசெய்ய வேண்டும். இது ஒன்றும் பிரச்சினைக்குரிய விடையமல்ல, ஏனெனில் முன்னைய காலத்தில் சில இனக்குழக்களுக்கிடையே கன்னிச் சோதனை (Virginity test) செய்தார்கள். இதைவிட மிகவும் முக்கியமானது இன்பியற்லாப் பரவும் நோய்த்தொற்று அற்ற கணவனோ அல்லது மனைவியோ. ஏனெனில் இதனால் கணவன், மனவியரையும், அவர்கட்குப் பிறக்கப்போகும் பிள்ளைகளையும் பாதுகாக்கலாம்.

மேலும் இந்த வியாதிகளின் தொற்று ஏதோ வகையில் ஏற்பட்டுவிட்டால், தொற்று ஏற்பட்டவர் மற்றவர்களுக்கு இந்த நோய்களை ‘‘தான் பெற்ற துன்பம் பெறுக மற்றவர்’’ என்ற தார்ப்பரியத்துடன் இவற்றைப் பரப்ப எத்தனிக்க கூடாது. இது தண்டனைக் குரிய குற்றமுமாகும். அதே நேரம் தொற்று ஏற்பட்டவரை அவர்தம் சமுதாயம் வசைபாடி ஒதுக்கி விடக்கூடாது. செய்ய வேண்டியது என்னவெனில் தொற்று ஏற்பட்டவரை சமுதாயம் அனுசரிப்பதுடன், அவர் தனது பகுதிக்கு வைத்திய அலோசனையை உடனடியாகப் பெற்று தன்னையும், தன்னைச் சூழவுள்ள மற்றவர்களையும் காப்பாற்றவேண்டும்.

“ஒழுக்கம் இன்பியல் நோய் தராததால் அது இயலுமான வரை கடைப்பிடிக்கப்படவேண்டும்”

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■

# உங்கள் வாகனம்...

38ம் பக்கத் தொடர்ச்சி...

தொலைநகல்: 1-519-675-1043
மின்அஞ்சல்: info@carproof.com
இணைய தளம்: www.carproof.com

கனடாவில் ஒன்ராறியோ மாகாணத்தின் லண்டன் நகரில் இருந்து இயங்கும் இந் நிறுவனம் மின்னஞ்சல் மூலமாக மிக விரைவில் தாங்கள் கேட்கும் வாகனங்களின் தகவல் பதிவுகளை அனுப்பி வைப்பார்கள்.

(1981ஆம் ஆண்டுக்கு பின்பு உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே இலகுவாக இந் நிறுவனங்களினூடாக தகவல்களை பெறலாம்).

### அரச அனுமதிப்பத்திரம் பெற்ற வாகன விற்பனையாளரிடமிருந்து (Licensed Car Dealer) உபயோகித்த வாகனத்தினையோ அல்லது நேரடியாக குறிப்பிட்ட வாகன நிறுவனத்தின் விற்பனையாளரிடமிருந்து (Manufacturing Company Dealer) புதிய வாகனத்தையோ அல்லது உபயோகித்த வாகனத்தினையோ வாங்குதல்.

இவர்களிடமிருந்து வாங்கும் போது விலைகள் என்பது சில நேரங்களில் வித்தியாசப்படலாம். ஆனால் வாங்கபோகும் வாகனம் என்பது எழுத்துகள், உடன்படிக்கைகளுடன் கைமாறப்படுகின்றது என்பதால் பாதுகாப்பு என்பதும் வலிமையாகவே இருக்கும்.

பாதுகாப்பு என்பது அரச கண்காணிப்பு நிறுவனம் ஒன்றும் சேர்ந்து உத்தரவாதத்துடன் இவர்களினூடாக வாகனம் வாங்குபவர்களுக்கு வழங்குகின்றது. ஆபத்து என்பதே இருக்க மாட்டாது. வாடிக்கையாளர் ஒருவர் ஏதாவது ஏமாற்றத்தினை இவர்களிடம் இருந்து எதிர் கொண்டால் பின்வரும் விலாசத்தில் இருக்கும் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்யலாம். தீர்வு தேடி வரும். அதன் விபரங்கள் பின்வருமாறு:

Ontario Motor Vehicle Industry Council (OMVIC)
789, Don mills Road, Suite# 800
Toronto, Ontario M3C 1T5
தொலைபேசி: (416) 226 4500 அல்லது 1-800-943-6002
தொலைநகல்: (416) 226 3208
இணைய தளம்: www.omvic.on.ca

இந் நிறுவனம் ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள சுமார் 8,800 லைசென்ஸ் பெற்ற வாகன விற்பனையாளரின் செயல்பாடுகளை கண்காணித்து வருகின்றது.

முறைப்பாடுகளை முன்னெடுக்கும் போது சகல தேவையான பத்திரங்களையும் சாட்சிக்குரிய ஆதாரமாக (Complaint Support Documents) இணைத்து வழங்கினால் மட்டுமே முறைப்பாட்டினை சாதகமாக நிருபிக்க கூடியதாக இருக்கும்.

திருட்டு வாகனங்களை விற்பனை செய்பவர்கள் தொடர்பான சந்தேகங்கள் எங்கேயாவது தெரிந்திருந்தால் இங்கு முறைப்பாடு செய்யலாம். சட்டத்தின் உதவியுடன் இந் நிறுவனம் நடவடிக்கையெடுக்கும்.

வாகனம் வாங்கும் வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்கப்பட்டு அது சரியாக நிரூபிக்கப்படும் போது பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்க என ஒரு “நட்ட ஈட்டு நிதியம்” (Compensation fund) இந்நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்றது. ஆகக் கூடுதலாக $45,000 வரை பாதிப்புகளுக்கு ஏற்ற மாதிரி நட்ட ஈடு வழங்கும்.
ஆனால் லைசென்ஸ் பெற்ற வாகன விற்பனையாளரிடமிருந்து (License Car Dealer) வாகனங்களை வாங்குபவர்கள் எதிர் கொண்டு நிரூபிக்கும் இழப்புகளுக்கு மட்டுமே இந் நிதியத்திலிருந்து நட்ட ஈடு பெறலாம். தனி நபரிடமிருந்து வாகனம் வாங்கி ஏமாற்றப்பட்டால் இந் நிதியத்தில் நட்ட ஈடு பெற முடியாது.

தனி நபர் எவரிடமிருந்தேனும் வாகனம் ஒன்றினை பணம் கொடுத்து வாங்கும் போது அவர் பற்றிய பெயர் விபரங்கள், அடையாள பத்திரங்கள், எழுத்து மூல உடன்படிக்கைகள் இருந்தால் மட்டும் மேலே குறிப்பிட்ட மாதிரி சட்ட ரீதியான வாகனம் பறிமுதல் செய்யப்படும் ஒரு நிலை ஏற்பட்டு நிரபராதியான நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டால் வேறு வழியில் அதாவது “சிறு நட்ட ஈடு கோரும் நீதிமன்றம்” (Small Claims Court) மூலம் விற்பனை செய்தவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்து பணத்தினை அறவிட முயற்சிக்கலாம். உடன்படிக்கை ஆதாரங்களும் ஆவணங்களும் கையில் இல்லையேல் சிக்கல் தான்!

ஆனால் பறிமுதல் செய்யப்படும் நிலையில் உள்ள வாகனம் திருடப்பட்ட வாகனமாக இருந்தால் எவரிடம் வாங்கினோம் என்ற அடையாளங்கள், ஆதாரமும் நிருபிப்பதற்கு தயாராக இல்லையேல் பணம் கொடுத்து வாங்கிய வாகனத்தினையும் இழந்து குற்றவாளியாகவும் நிற்கும் நிலையினையும் எதிர் கொள்ளலாம்.

இப்படி அகப்பட்டவர்கள் கனடாவில் ஏராளம்பேர்! எதற்கும் ஜாக்கிரதை!!

siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# H1N1 வைரசு நோய்

- சிவா சுப்ரா -

H1N1 வைரசு நோய் நோய்களை கட்டுப்படுத்தவும், முற்றாக இல்லாமல் ஒழிக்கவும் உலகம் முழுவதும் சுகாதார நிறுவனங்கள் எவ்வளவுதான் முயற்சி எடுத்தாலும் அதையும் மீறிக்கொண்டு புதிய நோய்கள் உருவாகிக் கொண்டுதான் இருக்கின்றன.

கடந்த ஆண்டு திடீரெனப் பரவி இதுவரை உலகம் முழுவதிலும் 14,711 பேரை பலி கொண்டுள்ளது H1N1 என்ற புதிய நோய். அமெரிக்காவில் மாத்திரம் இந்நோயினால் 7,166 பேர் மரணத்தைத் தழுவியுள்ளனர். கனடாவில் இதுவரை 426 இறந்துள்ளனர். (ஒன்டாரியோவில் 127 பேரும், கியூபெக்கில் 108 பேரும் இதில் அடங்குகின்றனர்.)

2009 வசந்தகாலத்தில் மனிதர்களைத்தாக்கிய இந்த நோய் ஒரு வகை வைரசினால் வருகின்றது. வழமையாக பன்றிகளையே இந்த வைரசு தாக்கிவந்தது. பன்றிகளில் இருந்து பரவி இப்போ மனிதர்களையும் தாக்குகின்றது. இந்த வைரசு ஒருவருக்கு தொற்றிவிட்டால், இந்த வைரசின் பாதிப்பில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள இயற்கையாக எந்த எதிர்ப்புச் சக்தியும் மனிதர்களுக்குக் கிடையாது என்பது அதிர்ச்சிகரமான விடயம்.

இந்த நோய் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டது என்பதற்கு சில அறிகுறிகள் தெரியும். இருமல், காச்சல், தொண்டை நோ, தலையிடி, தடிமன், சத்தி, தலைச்சுத்து, வயிற்றுப்போக்கு என்பன இந்த அறிகுறிகளாகும். தொற்று ஏற்பட்டு ஏழு நாட்களில் இந்த அறிகுறிகள் ஒருவருக்கு ஏற்படும் என்று நம்பப்படுகின்றது.

பொதுவாக இத்தகைய வைரசுகளின் தாக்கத்தில் இருந்து எம்மை நாமே காப்பாற்றிக் கொள்வதற்காக கனேடிய சுகாதாரமையம் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

- வீட்டை விட்டு வெளியில் போகுமுன்பும், வந்தபின்பும் கைகளை நன்றாகக் கழுவ வேண்டும்.
- கை விரல்களை எப்போதும் முகம், மூக்கு, வாய், கண்ணுக்குக் கிட்டப் போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.
- இதற்கு மேலாக இந்த நோயின் பிடியில் இருந்து தம்மை மக்கள் பாதுகாத்துக் கொள்ள தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு கனடா சுகாதாரமையமும், உலக சுகாதார மையமும் அறிவித்து, அதற்குரிய ஏற்பாடுகளை செய்துள்ளன.



கனடா அரசு இந்த நோய் தடுப்பு மருந்தில் 50.4 மில்லியன் doses, adjuvanted மருந்தை வாங்கியுள்ளது. கருத்தரித்த தாய்மாருக்காக விசேட தடுப்பு மருந்தான unadjuvantedயில் 1.8 மில்லியன் Doses வாங்கியுள்ளது.

ஒருவர் தடுப்பூசி போட்டு பத்து தினங்களில் அவருடைய உடலில் H1N1 நோய்க்கு எதிரான எதிர்ப்புச் சக்தி உருவாகிவிடும்.

ஆனால் இந்த தடுப்பூசியை போட்டுக்கொள்வதில் மக்களுக்கு ஒரு தயக்கம் ஏற்பட்டுள்ளது. அது இந்த தடுப்பூசியை பற்றிய கதைகளினால் ஏற்பட்டுள்ளது.

H1N1 நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து இந்த நோய் வருவதை தடுக்காது என்ற கதை உள்ளது. இதில் ஓரளவு உண்மை உள்ளது என்று கனேடிய சுகாதாரமையம் தெரிவித்துள்ளது. இந்த தடுப்பு மருந்து ஏற்றப்பட்டவர்களில் 10-15 வீதமானவர்களுக்கு மட்டும் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் அவர்களின் உடல்வாகு ஆகும். ஆனால் ஏனையவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உருவாகி இந்த H1N1 நோய் பரவுவது தடுக்கப்பட்டுள்ளது.



இந்த தடுப்பு மருந்தைப் போட்டவர்களுக்கு பாரிய பின்விளைவுகள் ஏற்படும் என்று ஒரு அபிப்பிராயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதை கனேடிய சுகாதாரமையம் மறுத்துள்ளது. மெல்லிய காச்சல், தோளில் நோ போன்ற குறுகிய கால பாதிப்புகள் ஏற்படவாய்ப்புகள் உள்ளது என்றும், கடுமையான நீண்டகால பாதிப்புகள் எவையும் ஏற்படாது என்றும் தெரிவித்துள்ளது.

இந்த மருந்து புதிய மருந்து என்பதால் இது பற்றிய அறிவு கனடா சுகாதாரமையத்துக்கு கிடையாது என்பனையும் கனடா சுகாதார மையம் மறுத்துள்ளது. இந்த மருந்து பற்றிய போதிய அறிவு தமக்கு உள்ளது என்றும், எந்தவித தீங்கும் இதனால் ஏற்படாது என்று தெளிவுபடுத்தப்பட்டதின் பின்னரே இந்த மருந்தை பாவனைக்கு விட்டுள்ளதாக கனடிய சுகாதாரமையம் தெரிவிக்கின்றது. அத்தோடு உலக சுகாதார நிறுவனமும் இந்த தடுப்பு மருந்துபற்றி தெளிவாக ஆராய்ந்த பின்னரே அனுமதித்துள்ளது.

இந்த நோய் ஏற்பட்டால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை உணர்ந்து கொண்டு தடுப்பு மருந்தை அனைத்து மக்களும் ஏற்றிக்கொள்ள



வேண்டும் என்று கனடா சுகாதாரமையம் அறிவித்துள்ளது.

H1N1 நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தின் பாவனைக்குப் பின்னர் இந்த நோயின் பரவல் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதும், இந்த நோயின் பாதிப்பு இன்னமும் குறையவில்லை. தற்போது கிழக்கு ஐரோப்பியா, தென் ஐரோப்பா மற்றும் வட ஆபிரிக்கா நாடுகளில் இந்த H1N1 நோய் பரவிவருகின்றது. எதிர்ப்பு சக்கி குறைந்தவர்கள், வயோதிபர்கள், மற்றும் இந்த நோய்க்கான தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் பலர் தொடர்ந்தும் மரணம் அடைந்து வருகின்றனர்.

siva.subra@thaiveedu.com

■ ■ ■



# குஸ்தி போட்டுக்கொள்ளும் 'கூகிளும் சீனாவும்'



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -


அமெரிக்காவின் வங்கிகளுக்கு கொள்ளையாக வருகின்ற இலாபத்தில் கவனம். அதிபர் பராக் ஒபாமாவுக்கு சீனர்களின் சினத்துக்குப் பயந்து வருகை தந்த தலாய் இலாமாவைச் சந்திக்க அச்சம். இதையெல்லாம் பார்க்கும் போது உலகின் மனித சுதந்திரத்தின் காவலனாக தன்னை தானே நிறுத்திக் கொண்ட அமெரிக்காவின் நிலை கேள்விக்குறி.

ஆனால் இது கூகுள் நேரம். சீனாவின் இணையத்தள அடக்குமுறைக்கு ஆணித்தரமாக உண்டா இல்லையா என இனிமேல் சீனாவின் தணிக்கைச் சட்டதிட்டங்களுக்கு ஒழுகப் போவதில்லைஎன அறிவித்திருப்பது அதிசயத்தை தருவதாகும். இதன் கருத்து கூகுள் சீனச் சந்தையில் இருந்து நீங்க நேரிடலாம். இது கூகுள் நிர்வாகத்திற்கு முதுகெலும்பு இருப்பதைக் காட்டுகிறது. இது மிகச் சில நிறுவனங்களுக்கோ, அரிதாக சில அரசாங்கங்களுக்கோதான் இருக்கிறது.

ஆனால் சீன மக்களிடையே ஏற்பட்ட தாக்கம் உடனடியானது. இளைய தலைமுறையினர் பீகிங்கில் இருக்கும் கூகுளின் தலைமையகத்திற்கு வந்து மலர்செண்டுகளை வைத்துச் செல்கிறார்கள். சீன நிர்வாகம் உடனடியாக தணிக்கை விவாவதத்தை தணிக்கை செய்ய முற்பட்டது. ஆனால் Twitterல் ஒரு சீன இளைஞர் சொன்னார் "இது கூகுள் சீனாவில் இருந்து பின்வாங்குவது அல்ல சீனா உலகில் இருந்து பின்வாங்குவது" என்று எல்லா நேரத்தையும் போல குறைகூறுபவர்கள் இல்லாமல் இல்லை. சீனச் சந்தையில் வேகமாக முன்னேற முடியாத கூகுள் தனது அடையாளத்தை மேம்படுத்தச் செய்த நடவடிக்கை என்று சொல்வோரும் உண்டு. உள்நோக்கம் எதுவாக இருப்பினும் யாகூ நிறுவனம் பல புரட்சிக் கருத்துக் கொண்டோரை சிறைக்கு அனுப்ப உதவி செய்தது போல தரக்குறைவான செயல் அல்ல இது.

"நான் சேவை செய்யத் தொடங்கிய கடந்த 20 வருடங்களில் இதற்கு இணையாக ஒன்றைக் காணவில்லை" என்றார் Dui Hua Foundationஐ சேர்ந்த John Kamm. இந்த நிறுவனம் சிறையில் வாடும் அரசியல் கைதிகளுடன் வேலை செய்து வருகிறது. அவர் மேலும் கூறுகையில் மேற்கு நாடுகளின் நிறுவனங்கள் மேற்கு நாட்டு விழுமியங்களை சீனாவில் காத்துக் கொள்ள இன்னும் பல வேலைகளைச் செய்யலாம் என்றார்.

கூகுளின் இந்த முடிவு கூகுளின் இலத்திரனியல் கடிதக் கணக்குகளின் (Email accounts) மீது அவற்றின் இரகசியங்களை அறிய சீனாவில் இருந்து ஊடுருவல்கள் மேற்கொள்ளப்பட்டதால் எடுக்கப்பட்டது. இதிலிருந்து இரு முக்கிய விடயங்கள் புலனாகின்றது. முதலாவது சீனர் இணையத்தள யுத்தத்திற்கு தயாராகிவருவதைக் காட்டுகிறது. மரபுவழி யுத்தத்தில் அமெரிக்க இராணுவத்துக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் அமெரிக்காவிற்கு இணையாக நிற்க இது ஒரு மலிவான வழியாகும். அமெரிக்க இராணுவமும் சீன இராணுவமும் எப்போதாவது நேருக்கு நேர் மோத நேர்ந்தால் வடஅமெரிக்காவில் ஏவுகணைகள் விழுவதற்குப் பதிலாக மின்சார விநியோகத்தைத் தடைப்படுத்தவும் தொலை தொடர்புகளைக் குழப்பவும் அணைக்கட்டுகளின் கதவுகளைத் திறந்துவிட்டு பயத்தை உண்டாக்க இணையத்தள தாக்குதல்கள் நடைபெறும். அத்துடன் சீனத் தளபதிகள் இந்த தாக்குதலை அவசரகாலப் பாவனை என்று தயாராக்கி வைக்கவில்லை. இதை அவர்கள் இப்போதே முழுமூச்சுடன் பாவிப்பதாகத் தெரிகிறது. பல வெளிநாட்டு தூதுவராலயங்கள் தலாய் இலாமாவின் அலுவலகம் என்பவற்றில் நடந்த இணையத்தள தாக்குதல்களை சீன இணையத்தள ஊடுருவலாளர்களால் நடத்தப்பட்டதாக தடயங்கள் காட்டுகின்றன. நூறுக்கு மேற்பட்ட நாடுகளில் இருந்த கணினிகளில் நடாத்தப்பட்ட இந்த தாக்குதல்கள் சீன உளவுத்துறையின் கைங்கரியம் என்று கருதப்பட்டாலும் அதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை.

இரண்டாவதாக சீனா திறந்த கொள்கைகளுக்கும் பொருளாதார வினைத்திறனுக்கும் இடையேயான சமநிலையை மாற்றுகின்றது. சீன பொருளாதாரச் சீர்திருத்தங்களின் தந்தை டெங் ஷியாவோபிங் பல்லைக் கடித்துக் கொண்டு நவீனமயப் படுத்துதலின் தேவைக்காக பல மாற்றங்களை ஏற்றுக் கொண்டார். ஆனால் தற்போதய தலைவர் கூ(Hu) ஒரு மேதாவியாக இருந்த போதும் கூட 20 வருடங்களுக்குப் பின்னால் சீனா எப்படி இருக்க வேண்டும் என்ற தீர்க்க தரிசனம் இல்லாதவராக உள்ளார். இவர் ஒரு பலவீனமான தலைவராக இருப்பாரோ என எண்ணும் வண்ணம் நடந்து கொள்ளுகிறார்.

ஆனால் துணிவு மிக்க சீனத்து இணையத்தள வாசிகள் மிகவும் துணிவுடன் கருத்துக்களைப் பரிமாறுகிறார்கள். படங்களை twitter போன்ற வசதிகள் மூலமாகவும் பங்கிட்டுக் கொள்கிறார்கள். ஒருநேரத்தில் தகவல், கல்வி அறிவு, தொழில் நுட்பம் என்பவை சேர்ந்து சீனாவின் இந்த பிற்போக்குத்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும். அதுவரையில் குறுகிய காலத்தில் சீன மக்கள் கட்சி வெல்லுவது போல இருக்கலாம் தூரத்து நோக்கில் நடைபெறும் மாற்றங்களை நீண்ட காலத்திற்கு கட்டுப்பாட்டில் வைக்க முடியாது.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■


இணைந்து கொள்ளுங்கள் 'தாய்வீடு' facebookஇல்
www.facebook.com/thaiveedu



வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்
Mortgage Life Insurance

**வங்கிக் கடன் காப்புறுதி**

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

**லண்டன் லைஃப் காப்புறுதி**

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



பாலா பாலசுந்தரம் B. Eng
சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்
Office: 416-291-0451 Ext.227
Cell: 416-518-9489
300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3
E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.


TWO FULL TIME REALTORS
ONLY ONE COMMISSION
Mccowan &Steels
$ 209,000
2+1 Bedrooms + 2 Washrooms
Brimly & Mcnicoll
$ 325,000
3 Bedrooms + 2 Washrooms
Bichmount & Ellesmere
$ 258,000
2+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & Eglinton
$199,000
3+1 Bedrooms + 2 Washrooms
Medowvale & Ellesmere
$ 599,000
4 Bedrooms + 4 Washrooms
Kennedy & Steels
$ 578,000
4 Bedrooms + 3 Washrooms
Mccowan &Sheppard
$ 209,000
2 Bedrooms + 2 Washrooms
Brimley & Ellesmere
$ 289,000
2+1 Bedrooms + 2 Washrooms
Westney & Magill
$ 319,900
3+1 Bedrooms +3 Washrooms
Kingston & Eglinton
$ 219,000
2+1 Bedrooms + 2 Washrooms
Dundas & Garrard
$ 99,900
Sale of Business (Pizzeria)
Westney & Rossland
$ 370,000
3 Bedrooms + 3 Washrooms
Markham &Major.Mac
$ 439,000
4 Bedrooms + 3 Washrooms
Bramalea & Sandalwood
$ 400,000
4 Bedrooms + 3 Washrooms
9th Line &14th Ave.
$ 569,900
4 Bedrooms + 4 Washrooms
Kingston Rd & Audley Rd.
$ 375,000
4 Bedrooms + 3 Washrooms
Mondeo & Ellesmere
$ 228,000
2 Bedrooms + 2 Washrooms
Brimley & Borough.
$ 318,000
2+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & 16th Ave.
$ 557,900
4+2 Bedrooms + 5 Washrooms
Banquet Hall
OVER 500 SEATS
$ 425,000
Call us for more details.
முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள்,
வீடு வாங்க..விற்க..அழையுங்கள்
Experience,Knowledge,Professionalism,Team work & No Pressure
Sell Top Dollars
Save More Dollars
You Know How ?
Call Us Now !!!
Thamil Suberamaniam
Salesrepresentative
Direct: 416-358-6200
Mugunthan Nadarajah
Salesrepresentative
Direct: 416-276-8025
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr, Suit 205,Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
*Independently Owned and Operated
SOLD

# Esa Completes Ten Years As A Realtor
## (Feb 2000 - Feb 2010)


Esa receiving the Presidents Award - 2005 from Mr.Andrew Cimmerman,Founder and CEO of Homelife International


Esa with Mr.Andrew Cimmerman, Founder and CEO of Homelife International and Mr.Paul Randhawa, Broker of Record of Homelife Superstars R.E.Ltd


Esa receiving the Civic Service Award - 2007 from Ms.Dorothy Mason,President of Toronto Real Estate Board


Esa addressing a large gathering at the Homelife Superstars 21st Annual Christmas Party in 2009



Esa on Billboard at Major Intersections in Toronto and Greater Toronto Area


Esa receiving the AMP certificate from Mr.Jim Murphy,President & CEO of CAAMP

## Testimonials

*Esa Para is a unique giver, a one of a kind real estate broker. Homelife is very fortunate to have a member who is actively involved in helping so many others in the community. We are proud to be associated with him and having him part of our member network. With sincere appreciation, we wish to congratulate Esa on his goodwill work and for being an exemplary Homelife member.*
***Mr. Andrew Cimmerman, Founder & CEO of Homelife International***

*Esa is one of over 450 Real Estate Representatives/Brokers working for my brokerage – Homelife Superstars Real Estate Ltd in Toronto, Brampton and Mississauga. Esa brings a lot of energy and enthusiasm to the job and is always willing to help his fellow realtors. Esa's honesty, integrity, excellent service combined with dedication, commitment and sheer hard work have been the key to his continued success. Congratulations Esa!*
***Mr. Paul Randhawa – Broker of Record - Homelife Superstars Real Estate Ltd***

*"Articulate, persuasive, ability to deal effectively with people from all walks of life – this in a nutshell is how I would describe Esa. His professionalism and continued commitment to clients is known to lawyers and clients alike. Best wishes.*
***Thelma Williams, Barrister & Solicitor***

*"Within few days he was able to find a home that we liked and negotiated a good price and the closing date, which was important to us. He was able to arrange the mortgage, home inspector and the lawyer and made our life easy in finding the right house. He was very flexible with his timings and made himself available to suit our convenience. We saw in him a lively personality, knowledgeable and good negotiating skills. Esa had a good understanding of our needs. We are pleased with his service and will not hesitate to recommend him to anyone."*
***Dennis J. Rice & Sylvia Rice***

*"House was listed and sold within a week, for 100% of asking price after multiple offers!!!! Service was excellent and professional, always available to answer questions or concerns. For first time sellers it is a very smooth and comfortable process. Thanks Esa."*
***Frank and Trudy Mohammed***

HOMELIFE SILVER AWARD 2001 · HOMELIFE GOLD AWARD 2002 · HOMELIFE PLATINUM AWARD 2003 · HOMELIFE EMERALD AWARD 2004 · HOMELIFE PRESIDENT AWARD 2005 · HOMELIFE COMMUNITY SERVICE AWARD 2006 · HOMELIFE PLATINUM AWARD 2006 · HOMELIFE PRESIDENT AWARD 2007 · HOMELIFE PRESIDENT AWARD 2008 · HOMELIFE PRESIDENT AWARD 2009

*Congratulations & Best Wishes - Management & Staff - Homelife Superstars Real Estate Ltd. Brokerage*

| Toronto | Brampton | Mississauga |
|---|---|---|
| 416.740.4000 | 905.792.7800 | 905.629.0000 |

# பாலைவனத்தில் ஒலித்தது சீனப் பெருஞ்சுவரில் எதிரொலிக்குமோ?

**முதலில் துபாய் இப்போது ஷாங்காய்.**

துணிவுடன் அதிக விலை கொடுத்து சீனர்கள் வீடுகளை வாங்குவது, துபாயில் நடந்ததைப் போன்றவொரு ஆபத்தைத் தோற்றுவித்து-விடுமோ என்ற அச்சத்தை பொருளியல் அறிஞர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

ஒரு இளம்ஜோடி, தங்களது வீடு விற்பனை முகவரிடம் இருந்து, அவர்கள் விரும்பிய வீடு விற்பனை செய்யப்பட்டு விட்டதாகவும், ஆனால், விற்பனையாவதற்குச் சற்று முதல் விலைகூட பாரியளவு உயர்ந்துவிட்டதாகவும் செய்தியைப் பெற்றுக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டது என்னவென்றால் அவர்கள் வீடு தேடுவதை விட வீடுகள் குடியிருப்பாளர்களைத் தேடுகின்றன என்று. இப்படிப்பட்ட கட்டுபடியான வீடுகளைத் தேடும் இளம் ஜோடிகளின் கதை தொலைக்காட்சிக்கு பொருந்தாத கதையாக இருக்கலாம் ஆனால் கடந்த சூலை மாதம் நடந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி "நத்தைவீடு" பெரும்புகழ் பெற்றது. இதில் வரும் இரு சகோதரிகள் ஒரு பெரும் நகரில் தங்கள் வாழ்விடத்தை அமைத்துக் கொள்ளப் போராடுவதைக் அடிப்படையாகக் கொண்ட இந்தக் கதையை அதிகாரிகள் அச்சம் அடைந்து அரைவாசியில் நிறுத்திவிட்டார்கள். ஆனால் இது இணையத்தளத்தில் இணைக்கப்பட்டு 30 மில்லியன் பார்வையாளர்கள் இதைப் பார்த்துவிட்டார்கள். இந்த நிகழ்ச்சியின் வெற்றி இருபதாம் நூற்றாண்டின் ஒரு வெற்றிக்கதையின் அத்திவாரத்தில் இருக்கக்கூடிய ஊறுகளைக் காட்டுகிறது.

உலகம் முழுதும் பொருளாதார பின்னடைவால் தாக்கம் அடைந்துள்ளபோது, சீனாவின் பொருளாதாரக் கொள்கையின் வெற்றிகளை; குறிப்பாக 8% வளர்ச்சியைக் காட்டுவது - சாதாரண தொழிலாளர் வர்க்கம் இந்த வெற்றியையும் பொருளாதார வளர்ச்சியையும் தங்கள் வாழ்க்கைத்தர உயர்ச்சியாக மாற்றாதது குறித்து கவலை கொண்டிருக்கிறது.

பொதுமக்களுக்கு இருக்கக்கூடிய முதலாவது கரிசனைக்குரிய பிரச்சினையாக வீடமைப்பு மாறியிருக்கின்றது. ஒரு இளம் பட்டதாரி அவர் வேலை செய்யும் அலுவலகத்தின் கழிப்பிடத்தில் உறைவிடத்தை அமைத்துக் கொண்டதை படங்களுடன் இணையத்தளத்தில் வெளியிட்டதைத் தொடர்ந்து அவர் ஒரு நட்சத்திரமாகவே மாறிவிட்டார். அண்மையில் வெளியிடப்பட்ட கருத்துகணிப்பு ஒன்றில் 10,000 பேரில் 47%மானவர்கள் வசதியான வீடு ஒன்று கிடைக்குமானால் இன்னொரு வருடன் படுக்கையை பகிர்ந்து கொள்ளவும் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்கள்.

பல்லாயிரக்கணக்கான வீட்டு அலகுகள் அண்மைக்காலமாக அமைக்கப்பட்டிருந்த பொழுதும் சீனாவின் நெருக்கமான நகரங்களில் வீடுகளின் விலைகள் சாதாரணமான சீன மக்களுக்கு கட்டுப்படியாகமலே போய்க் கொண்டிருக்கிறது. சராசரியாக ஒரு சதுர மீற்றர் $2,200 அமெரிக்க டொலராக விற்பனையாகின்றது. இது ஒரு சாதாரண ஊழியரின் வருடாந்த சம்பளத்தின் மூன்றில் ஒன்றாகும். ஆனால் வீடமைப்பு நிறுவனங்கள் இலாபத்தை அள்ளிக் கட்டிக் கொண்டிருக்கும் போது பல கட்டிடங்கள் பகுதியாகவோ முழுமையாகவோ வெறுமமையாகவே இருக்கின்றது.

பீகிங் நகரில் நடைபெற்ற விற்பனை பரிமாற்றங்களில் அரைவாசிக்கு மேல் வெளி நகரங்களைச் சேர்ந்தவர்ளே வாங்குபவர்களாக இருக்கிறார்கள். 20%மானவை முதலீட்டுத் தேவைக்காக வாங்கப்பட்டது. ஷாங்காயில் விலைகள் இன்னும் அதிகமாக 60% அதிகரித்துள்ளன. பீக்கிங்கில் 90வீதமான வீடுகளை மக்கள் வாங்குவதற்கு கட்டுப்படியாகாது. அரசாங்கம் தனது கொள்கைகளை மாற்றி சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவராவிட்டால் பாரிய சமூகப்பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என கலாநிதி Yi Xianrong தெரிவித்தார். அத்துடன் அரசின் பொருளாதார தூண்டுதல் செலவீனங்கள் தான் இதற்குக் காரணம் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

கடந்த இலையுதிர் காலத்தில் தொழிற்சாலைகள் அடைக்கப்பட வேண்டிய நிலையில் அரசாங்கத்தின் தூண்டலின் பேரில் வங்கிகள் கடன் கொடுத்தலை இலகுவாக்கினார்கள். அதைத் தொடர்ந்து வீட்டு கட்டுமானத் திட்டங்கள் 121 வீதம் அதிகரித்தன. அபிவிருத்தி செய்யப்படும் நிலத்தின் அளவு 15.8%த்தால் அதிகரித்தது. அபிவிருத்தி செய்யப்படும் நிலத்தின் அளவு நியூயோர்க் நகரின் பரப்பளவை விட அதிகமாகும்.

ராகுலன்
- Accountant -



துபாயைப் போலவே சீனாவிலும் வங்கிகளின் அதிக கடன் கொடுத்தலால் இந்தச் சொத்துக்களின் பெறுமானங்கள் அதிகரித்துள்ளன. துபாயைவிட இங்கு இது பெரிய பிரச்சினையாகும். அரசாங்கம் இதை அவதானிக்காவிட்டால் ஒரு பாரிய பிரச்சினைக்கு இடமிருக்கின்றது என்றார் பேராசிரியர் யி. இன்னொரு பாரதூரமான விடயம் என்னவென்றால் இந்த வாங்குதல் விற்றலில் அரச நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. அத்துடன் துபாய் மக்கள், சீன மக்களைவிட செல்வம் செழிப்புகூடிய மக்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் எனறார் அவர்.

ஆனால் அரசாங்கம் எதுவும் செய்யக்கூடிய நிலையில் இல்லை. வட்டிவீதங்களையோ கடன் கொடுக்கும் கொள்கைகளையோ மாற்றினால் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முகம் கொடுக்க வேண்டிவரும். ஆக அரசாங்கம் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறது. இருபிரச்சினைகளையும் ஒரே நேரத்தில் கையாள அவர்களிடமும் எந்தக் கருவிகளும் இல்லை.

ragulan@thaiveedu.com

■ ■ ■



# வருமான வரியும் அதன் பலாபலன்களும்



சக்திவேல்
- ஆயுட் காப்புறுதி முகவர் -

2009இற்கான R.R.S.P கடைசி விண்ணப்பத்திகதி March 1ஆம் திகதி என்பதை நாம் யாவரும் அறிவோம். இந்த கடைசி விண்ணப்பத் திகதி மார்கழி மாதம் 31ஆம் திகதியிலிருந்து 60 நாட்களாகும். இவ்வருடம் மாசி மாதத்தில் 28 நாட்கள் என்ற படியால் March 1ஆம் திகதியே கடைசி நாளாகக் கருதப் படுகிறது. இதற்கான ஒதுக்குத் தொகை உங்கள் கைவசம் இல்லாவிடின் இந்த தொகையை வங்கியிலிருந்தோ அல்லது காப்புறுதி நிறுவனம் மூலமாகவோ கடனாக எடுத்து அந்த கடன் தொகையை உடனடியாக மறு மாதத்திலிருந்து அல்லது 3 மாதத்திற்கு பின் அல்லது 6 மாதத்திற்கு பின் கட்டுவதற்கான ஒழுங்குகளை செய்யலாம். இந்த மாதிரியான ஒழுங்குமுறையை Deferred Payment Plan என ஆங்கிலத்தில் அழைக்கிறோம். இப்படியான ஒழுங்குமுறையை செய்வதனால் உங்கள் வருமான வரியை ஓரளவு குறைக்கலாம். பதிலாக, உங்கள் பெயரில் எடுக்காமல் உங்கள் கணவன் அல்லது மனைவி குறைந்த சம்பளத்தில் இருப்பவராயின் சம்பளம் குறைந்த அந்த நபரின் பெயரில் எடுப்பதனால் வருமானவரிக்கான கட்டுத்தொகையை மேலதிகமாக குறைக்கலாம். இந்த மாதிரியான ஒழுங்குமுறை ஆங்கிலத்தில் Spousal RRSP என அழைக்கப்படும்.

**FIRST TIME HOME BUYER'S TAX CREDIT (HBTC)**

இந்த ஒழுங்குபாடு January 27ஆம் திகதி 2009ஆண்டிற்கு பின்னர் வீடு வாங்குவோருக்கு கொடுக்கப் படும் சலுகையாகும். இந்த வீடு கனடாவில் ஏற்கெனவே கட்டிய வீடாகவோ அல்லது புதிதாக கட்டப்படும் வீடாக இருக்க வேண்டும். இது தனிவீடாகவோ அல்லது CONDOMINIUM ஆகவோ, அடுக்கு வீடுகளாகவோ, MOBILE HOME ஆகவோ இருக்கலாம். ஆனால் இந்த வீடு உங்கள் பெயரில் அல்லது உங்கள் கணவன் அல்லது மனைவி பெயரில் அல்லது கல்யாணம் செய்யாமல் உங்களுடன் வதியும் ஆண் / பெண் பெயரில் பதிந்திருக்க வேண்டும். ஏதாவது குறிப்பிட்ட காரணத்தையிட்டு நீங்கள் வீட்டிற்கான மாதாந்த பணத்தை செலுத்தி இன்னொருவர் பெயரில் வீட்டை வாங்கினால் இந்தச்சலுகை செல்லுபடியாகாது. இந்த சலுகை குறைந்த வருமான வரியான 15 வீதத்தை 5,000இனால் பெருக்கினால் கிடைக்கும் தொகையாகும். அதாவது 15% X 1500 = $750 ஆகும். இதற்கான ஆதாரம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லையென்றாலும் வருமானவரி இலாகா நிருபிக்கும் படி கேட்டால் கொடுக்க வேண்டும்.

**HOME RENOVATION TAX CREDIT (HRTC)**

இந்த சலுகை 2009இற்கு மட்டுமே செல்லுபடியாகும். இதன்படி வாங்கிய வீட்டிற்கு ஏதாவது திருத்தங்கள், வேலைப்பாடுகள் மேலதிகமாக செய்ய இருப்பின் கிடைக்கும் சலுகையாகும். இந்த சலுகை January 27ஆம் திகதி 2009இற்கு பிறகும் February 1ஆம் திகதி 2010இற்கும் இடையில் செய்த உடன்படிக்கையாக இருக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. வாங்கிய உபகரணங்கள் January 2010இற்குப் பின்னர் பொருத்தியிருந்தாலும் இந்தச் சலுகை செல்லுபடியாகும். பதிலாக, ஒரு பகுதி மட்டும் Febuary 1ஆம் திகதி 2010இற்கு முன்னர் பொருத்தியிருந்தால் அந்த செலவு மட்டுமே சலுகைக்கு கருத்தில் கொள்ளப்படும். இந்த செலவு $1,000இலிருந்து $10,000 வரை இருக்க வேண்டும். இந்த அதிகப்படியான சலுகை $1,350 ஆகும். அதாவது (10,000 - $1,000) X15% ஆகும்.

**CHILDREN'S FITNESS AMOUNT (CFA)**

இதன்படி கிடைக்கும் சலுகை அதிகபட்சம் $500 ஆகும். இதற்கான செலவை நீங்கள் 2009இற்கு கட்டிய ஆதாரம் இருக்க வேண்டும். இது உங்கள் கணவன் / மனைவி, பிள்ளை அல்லது கல்யாணம் செய்யாமல் ஒரு வீட்டில் வாழும் ஆண் / பெண் ஆகியோரின் பிள்ளையாக (Child of Common Law Spouse) இருக்க வேண்டும். உதாரணமாக உங்களுக்கு 3 பிள்ளைகள், அதில் ஒருவர் ஊனமுற்று இருப்பவராக இருந்து இந்த 3 பிள்ளைகளையும் தேகப் பயிற்சிக்கு 2009இல் சேர்ந்திருந்தால் ஒவ்வொரு பிள்ளைக்கான செலவு $500இற்கு மேலாக இருப்பின் ஒவ்வொரு பிள்ளைக்கான சலுகை அதிக பட்சம் $500 ஆகவும் ஊனமுற்று இருக்கும் பிள்ளைக்கு இதற்கு மேலதிகமாக $500இனை மீளப் பெறலாம்.

**PUBLIC TRANSIT AMOUNT**

2009 ஆம் ஆண்டு பயணிகள் அன்றாடம் உபயோகிக்கும் பேரூந்து, புகையிரதம், LOCAL FERRIESஇற்கு நீங்கள் செலவழிக்கும் முழுத் தொகையும் இந்த சலுகையில் கருத்திற்கு கொள்ளப்படும். இதற்கான செலவு கனடாவிற்குள் எங்கு சென்றாலும் கருத்தில் கொள்ளப்படும். இந்த செலவு உங்களுக்கும், உங்கள் கணவன் / மனைவிக்கும் 19 வயதுக்கு உட்பட்ட (மார்கழி 31ஆம் திகதி 2009இற்குள்) பிள்ளைகளுக்கும் செல்லுபடியாகும். வருமான வரி இலாகா இதற்கான அத்தாட்சியை கோட்டால் நீங்கள் கட்டியதற்கான ரசீதை கொடுக்க வேண்டும்.

**DEDUCTION FOR TOOLS**

உங்கள் வேலைக்கு உபகரணம் தேவைப்படின் அதற்கான செலவு அதிகபட்சம் $500 சலுகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். உதாரணமாக உங்கள் தொழில் கட்டடத்தொழிலாக இருந்து உங்கள் சம்பளம் $40,000 ஆகவும் அதில் நீங்கள் $2,500 உபகரணம் வாங்கியதற்கான (2009இற்கு மட்டும்) ரசீது இருப்பின் அதிகபட்சமாக $500இனை சலுகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

**TAX FREE SAVINGS ACCOUNT (TFSA)**

இதன்படி வருடாவருடம் $5,000 வரை வருமான வரியின்றி வளரும் சேமிப்பு திட்டத்திற்கு ஒதுக்கி வைக்கலாம். ஒரு குறிப்பிட்ட வருடம் ஒதுக்க முடியாமல் போனால் அடுத்த வருடம் மொத்தமாக $10,000 வரை ஒதுக்கி வைக்கலாம், இந்த சேமிப்பின் வட்டி வளர்ச்சிக்கு வருமான வரி கட்ட வேண்டிய அவசியமில்லை. இந்த திட்டம் பெரும்பாலும் சம்பள உத்தியோகத்தில் இருப்போருக்கு சாலவும் சிறந்தது. காரணம், அவர்களது RRSPஇல் அதிகப்படியான ஒதுக்கீடு மாறாது (சம்பளம் மாறாமல் இருந்தால்) ஆனால் கமிஷன் (SELF EMPLOYED) மூலம் பிழைப்பவர்களுக்கு அதிகப்படியான ஒதுக்கீட்டை ஒதுக்கிய பின் மேலதிமாக பணம் இருப்பின் இந்த TFSAஇல் வருடாவருடம் செலுத்தலாம். இந்த மாதிரியான ஒழுங்கீடு காப்புறுதி நிறுவனங்கள் மூலம் செய்வது எதிர்காலத்தில் மன ஆறுதல் திட்டமாக அமையும். காரணம், காப்புறுதி நிறுவனம் மூலம் ஒழுங்குபடுத்தும் இந்த சேமிப்பு திட்டம் "காப்புறுதி செய்யப்பட்ட" சேமிப்பு திட்டம் (INSURED SAVINGS). அத்துடன், காப்புறுதி நிறுவனங்கள் மூலம் ஒழுங்கு படுத்தப்படும் இந்த திட்டங்களில் கடனாளியோ, அரசாங்கமோ எக்காரணம் கொண்டும் அபகரிக்க முடியாது (CREDITOR PROOF). இந்த கெடுபிடியாக நிபந்தனைகள் பிரத்தியேக நிறுவனங்களிடமோ அல்லது வங்கிகளிலோ கிடையாது. சுருங்கக் கூறின் வட்டி வளர்ச்சி கூட்டித் தருகிறார்களேயென்று இப்பணத்தை அவர்களிடம் ஒதுக்குவதற்கு பதிலாக எதிர்காலத்தில் பலத்த பாதுகாப்புள்ள சேமிப்பு திட்டத்தில் போடுவது நிச்சயமாக மன ஆறுதல் திட்டமாக அமையும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அடுத்த இதழில் FINANCIAL PLANNING TIME MANAGEMENT பற்றிய விளக்கம் கொடுபடும்.

saththivel@thaiveedu.com

■ ■ ■

சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 144 துரித காப்புறுதி இழப்பீடுகள். 20 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

- சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912
Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurense), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

மருத்துவ ரீதியின்றி
ஆயுள் காப்புறுதி

.85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.

.சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).

.பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.

.மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.

.நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)

.அதிகூடியான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

சக்திவேல்
416 706 3530

# Your One Stop Solution!



ஒரே கூரையின் கீழ் பல சேவைகள்

## Consumer Proposals

கடன் பிரச்சனைகள் அனைத்துக்கும் ஒரு சுமூகமான தீர்வு.

- Reduce your debts up to 75%
- Stop collection calls & legal actions
- Salary Garnishments
- Protect your home, car, RRSP & RESP
- One monthly payment without bankruptcy

## Tax & Financial Services

உங்கள் வருமான வரி, கணக்கியல், சேமிப்பு தேவைகளும்...

- Personal & Corporate Tax
- Estate Tax, Trust Tax & Incorporation
- Tax Audits
- Tax Amnesty
- RRSP, RESP, Life Insurance

## Immigration Services

குடியமர்வு குடிவரவு திணைக்களத்துடன் கூடிய சேவைகளுக்கும்...

- Family Sponsorship
- Business class
- Caregiver
- Skill Worker
- Canadian experience

## Legal Services

சட்ட தேவைகளுக்கும், குடும்ப வழக்குகள் மற்றும் விவகாரத்து பெறுவதற்கும்...

- Family Law (divorce, separation, custody)
- Civil Litigation (negligence, personal injury)
- Commercial Law (leases, contracts, incorporation)
- Other legal services (please inquire)

**அனைத்து சேவைகளும் தமிழில் வழங்கப்படும்.**



CRC

**Suren Sornalingam**
Director of Operations

**416 264 1272**

55 Town Centre Court, Suite 700 Scarborough ON M1P 4XP
Tel: 416.264.1CRC(272) Fax: 416.332.0914
E-mail: info@creditrecoverycanada.com, creditrecoverycanada.com

# "Top Producing Team"

2009 இல் மட்டும் 10 மில்லியனுக்கும் மேலான Real Estate பரிமாற்றங்களை திறம்பட நிறைவேற்றிய அநுபவசாலிகள்

*Count on the team that transacted over $10 Million Dollars in year 2009 alone !!!*





**Homelife Future Reality Inc.**

## Quiz of the Week

**How much will you lose in 25 years if you secure a mortgage 0.2% higher than your friend on a $400k mortgage amortized over 35 years?**

a: $200 b: $500 c: $1600 d: over $15,000

Answer D

தொலைநோக்கும் நிபுணத்துவமும் வாய்ந்த இவர்களின் சேவையால் என்போன்றோர் அதிகளவு பயன்களை பெற்றுள்ளோம். ஒவ்வொரு தடவையும் இவர்களின் சேவையை பெறும்போது இவர்கள் மீதான மதிப்பு இன்னும் உயர்கிறது.

**கந்தையா இராமசந்திரன்**

Absolutely amazing experience. Knowledgeable, skillful and resourceful. It is my privilege to get a chance to work with them. I will Confidently refer them to all my friends and family.

**Peter Amiconn**

**Dirresh Krishnapillai** *B.Sc., MBA, CMA*
*Broker*
Dir **416.819.4373**

**Naanan Sathiyamoorthy** *B.Sc.(Eng) Ctext, ATI*
*Sales Representative*
Dir **416.795.4663**





## Services Offered ...

- Property Management
- Accounting & Tax advisory
- Mortgages
- Lease & Rental

# பாதுகாப்பான மற்றும் சௌகரியமான உறக்கம்



**ஐம்பது வீதத்துக்கும் அதிகமான பணத்தை மீளப்பெற ஒரு வாய்ப்பு**

உங்கள் Furnace, Air Conditionerஐ Energy efficient systemதிற்கு மாற்றினாலும், தண்ணீர் சூடேற்றியை Tankless Systemமாக மாற்றினாலும் Rebates & Grantsஆக பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதை விட **15%** அரசாங்க grant பெறலாம். நீங்கள் செலவளிப்பதில் இருந்து ஐம்பது வீதத்திற்கும் அதிகமான பணத்தை பெற்றுக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு.

Furnaceக்கு **$1845**

Air Conditionerக்கு **$750 - $900**

Tankless Systemக்கு **$950 - $1050**

Solutions of Home Security Inc.

Authorized Dealer ADT Security Services

## பாதுகாப்பு

### How do Burglars Get into your home?

Statistics show that burglars enter homes using the following entrances,

- 2% from the 2nd floor
- 4% from the basement
- 6% using unlocked entrances
- 9% from the garage
- 22% from the back door
- 23% from the 1st floor windows
- 34% from the front door

E-mail: info@quickhomesecurity.com
Web: www.quickhomesecurity.com

## சுத்தம்

### For all kind of Vacuums

- Central Vacuum Systems
- Commercial Vacuums
- Comfortable & easy to use Vacuums
- Clean hard-to-reach areas
- Great for pets and allergens
- Environmentally friendly products
- Less Energy and Resources
- Whole house cleaning convenience
- Central Vacuum Power Units
- Central Vacuum Yellow Jacket

**Contact Raman Appliances for all your Cleaning needs and enjoy the comfort of your home.**

EUREKA® Invented for the way you clean
Authorized Dealers



## இதமான காலநிலை



### For all your Heating Needs

**Gas Furnaces:**
Every model in our Freedom® Furnaces family is designed to provide maximum heat for minimum fuel usage. The ultimate models even reduce temperature swings and short cycling.

**Oil Furnaces:**
Our oil furnaces are durably constructed with only the finest materials and components. So you can rest easily and warmly. Freedom® 80 oil furnaces heat your home quickly and efficiently, even during the toughest winters.



### For all your Cooling Needs

Stay cool and save a comfortable amount of money with American Standard Air Conditioning's line of Allegiance® air conditioners. Our air conditioners range in efficiency from 13 to 18+ SEER - among the highest efficiency ratings in the industry.

Our Allegiance® family offers a wide range of comfort choices, plus exclusive state-of-the-art technology the quietly, meticulously and efficiently conditions your air. Get ready for a level of comfort you and your family may never have experienced before.

American Standard HEATING & AIR CONDITIONING
Authorized Dealers

Heating & Air-conditioning Contractors.
Raman Appliances Inc.
www.raheatingcooling.com

**Raman Appliances**

# Raman Chelliah

3021 Markham Rd. Unit 51, Scarborough ON. M1X 1L8
**Tel: 416.332.1989**
**Cel: 647.893.4414**
Fax: 416.332.4967
E-mail: info@raheatingcooling.com





Toronto - Abudhabi - Colombo
From $965 + Tax

Toronto - Abudhabi - Chennai
From $715 + Tax

Toronto - London - Colombo
$1230 + Tax
SriLankan Airlines

Toronto - Dubai - Colombo
$1280 + Tax
Emirates

Toronto - Brussels - Chennai
$725 + Tax
JET AIRWAYS

Toronto - Dubai - Chennai
$925 + Tax
Emirates

Colombo - Jaffna
Expo Aviation Tickets Avialble Here

Toronto - London - Colombo - Chennai $1230 + Tax
Sri Lankan AirLines

SPECIAL GUIDED TOURS
India • Malaysia • Thailand • Cambodia • Indonesia
Vietnam • Laos • Myanmar • Hongkong
China • Korea • Japan



- digi Media -

Serandib Travel
Your satisfaction is our success

2075 Lawrence Ave, E, Suite 202,
Toronto, ON
(Warden & Lawrence)
416.750.0009

7 Eastvale Drive, Unit 207
Markham, ON
(Markham & Steeles)
905.201.6660

New Location

TICO 50012691

www.serandibtravel.com

Montréal : 514-448-1389, Calgary: 403-770-9647
Vancouver: 604-625-0495, Mississagua: 905-564-7564

* Travel period is upto March 31, 2010. Tickets should be purchased before February 15, 2010. Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of the seats. Taxes vary from $325 - $375.

# சொல்லாதே யாரும் கேட்டால்



திரு மகேசன்

சில மாதங்களாக உங்களை வீட்டில் காணவில்லையே என்று சிலர் கேள்வியாகவே கேட்டார்கள், நெஞ்சம் ஒரு முறை திடுக்கிட்டே விட்டது. ஒவ்வொரு நாளும் வீட்டிற்குத்தானே வேலை முடிந்து போகின்றேன், வேலைக்கும் வீட்டுலிருந்துதானே வருகின்றேன், என்றேன். அதைச் சொல்லவில்லை வீடு பத்திரிகையில் உங்கள் கட்டுரையைக் காணவில்லை, அதைத்தான் கேட்டேன் என்றார்கள்.

இன்னமும் பொறுமைகாத்தால் ஆளைக் காணவில்லை என்று பத்திரிகையில் விளம்பரம் வேறு கொடுத்துவிடுவார்கள் போலிருக்கிறது. இப்படியெல்லாம் நல்ல மனம் படைத்த உள்ளங்களும் நம்பக்கத்தில் நிற்கின்றார்களே என்பதை விளக்கும் போது மனம் ஆறுதடைகின்றது.

எங்கே கேட்டாலும் ‘ஐயோ நம்பிக் கெட்டேனே’ என்ற ஓலம் தான் எம் சமூகத்தின் மத்தியில் பலமாகக் கேட்கிறது நாமும் அந்த வரிசையில் அடங்குவதால் தான் மனம் எழுதத் தூண்டுகின்றது.

‘நம்பினோர் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு’ என்பது உண்மைதான் இது கலிகாலம் பொறுமையாக இருங்கள் என்றால் ‘பாவிப்பயல் இப்படிப் பண்ணிவிட்டான் பொறுக்கச் சொல்கின்றீர்களே’ என்கின்றார்கள். ஏமாற்றப் பட்டவர்கள் நல்ல நண்பர்களைத் தேடிப்பிடிப்பதென்பது இன்றைய நடைமுறையில் சாத்தியமான ஒன்றல்ல. பக்திப் பழங்கள் கூட திருடர்களாக மாறும் கலிகாலம் இது. பல ஜோதிட விற்பன்னர்களே கூடச் சொல்லியிருக்கின்றார்கள், இவ்வாண்டு சாமிவேடம் போடும் ஆசாமிகள் இவ்வுலகில் அவதரிப்பார்கள், அவர்களால் நல்லவர்கள் கூட சோதனைத் தீயைத் தாண்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்று.

எனவேதான் பலரும் நம்மிடம் நம்பிக் கெட்டேனே என்று துக்கப்படும் போது சிரிக்கத் தான் தோன்றுகின்றது. யார் செய்த குற்றம் இது? அதனால் தான் சொன்னார்கள் ‘நம்ப நட நம்பி நடவாதே’. நம் சமூகத்தில் ஆன்மீகம் பற்றிய தேடல்கள் அதிகம் இல்லாமல் போய்விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. குற்றம் குறைய ஆன்மீகம் களையெடுக்க வேண்டும். ஆனால் அதற்காக ஆன்மீகத் தேடலை வியாபாரமாக்கிவிடக் கூடாது.

இவ்வளவு துன்பங்கள் துயரங்கள் பட்டபின்பும் நாம் மாறவில்லை என்றால் இனி மாறவே மாட்டோம் என்பது தான் அர்த்தமா? யாரையும் துன்பப்படுத்தக் கூடாது, வேதனைப்படுத்தக் கூடாது என்ற சிந்தனை ஏன் நம்மிடத்திலே வளரவில்லை.

புத்தாண்டு பிறந்து விட்டது பொங்கலும் வந்து போய்விட்டது என்றாலும் ஒரே நிசப்தம், மயான அமைதி, உண்மையில் சந்தோசத்தை கொண்டாட நமக்குத் தெரியவில்லை. புத்தாண்டு நாளின் தொடக்கத்திலேயே ‘தண்ணி’ அடிப்பதற்கு வேண்டிய ஆயத்தங்கள் நடக்கின்றன. நாம் வேறு எதையுமே சிந்திப்பதற்கு முயற்சிப்பதே இல்லையா? புத்தாண்டு விடியும் நேரம் கலையாத முகத்துடன் எழுந்து உட்கார்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைக்கு LCBO பக்கம் போகத் தயாராகிவிடுகிறோம். பலர் அடுத்த நாள் மதியம் வரை அடித்த போதை கலையும் வரை நித்திரை கொள்கின்றாகள். குழந்தைகள் சேர்ந்து விளையாட ஆட்கள் இல்லாமல் தொலைக்காட்சி முன் அமர்ந்து அமர்ந்து DORAவும் BARNCYஉம் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

சில குடும்பத்தவர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து கடவுளிடம் இந்த ஆண்டுக்கான முழுக் கோரிக்கைகளையும் முன் வைத்து கும்பிடு போடுகின்றார்கள். வெளியே வந்து JACKETஐ காணவில்லை, சப்பாத்தை காணவில்லை என்று அலறி கோயிலுக்கு வந்த நோக்கத்தை மறந்து, வாயில் வந்த வார்த்தைகளால் கோயில் என்றும் பாராது வசைமாரி பொழிகின்றார்கள். கைவிடப்பட்ட அப்பாவும் அம்மாவும் முதியோர் இல்லத்தில். யாரோ கொண்டு வந்து கொடுத்துவிட்டுப்



போன இனிப்புக்களை சாப்பிடாது, தமக்கு மகனோ, மகளோ வரமாட்டார்களா? என்று வாசலைப் பார்த்து வெறித்தபடி இருக்கின்றார்கள். நண்பர் ஒருவருக்குப் புத்தாண்டு வாழ்த்துச் சொல்லிவிட்டு எப்படி இருக்கிறது LIFE என்றேன், அப்பப்பா மனிதன் எரிமலையாக வெடித்தே விட்டார். நல்ல நண்பர், யாருக்கும் எதற்கும் முன்னே நிற்பவர், நல்லதற்கு முன்னுக்கு நிற்காவிட்டாலும் யாரும் கஷ்டத்தில் இருக்கும் போது கைகொடுக்க வேண்டும் என்று பலருக்கு பாடம் சொல்லிக் கொடுப்பவர், அவரே வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டது, இந்த மனிதர்களே நடிகர்கள் தான், காலத்திற்கு ஏற்ப பாத்திரம் போட்டு பக்காவாக நடிக்கின்றார்கள், நேரத்திற்கு ஏற்றால் போல் நம்மை ஏமாற்றுகின்றார்கள், எனவே என்னை நானே மாற்றிவிட்டேன், இப்போது பேசுவதை குறைத்துவிட்டேன், நானும் எனது குடும்பமும் என்று ஒரு சின்னவட்டத்திற்குள் வாழ்கின்றேன், அமைதி கிடைக்கிறது, நிம்மதி நிறைகிறது என்று ஒரு பெரிய பிரசங்கமே செய்து விட்டார்.

இது நியாயமா என்று சிந்திக்கும் போது சரியாகவே படுகின்றது. நம்மவரில் பலர் இப்படித்தான் மாறிவிட்டார்கள், இது உண்மையே. நேரத்திற்கு நேரம் நிறம் மாறுவதும் நல்லது செய்தவர்களை தூக்கிப் போட்டு மிதிப்பதும் நம் சமூகத்தின் சாபக்கேடா? பலர் சொல்லி வேதனைப்படும் போது மனம் இறுகித்தான் போகிறது. நல்லவர்களை இழந்து, காலப் போக்கில் ஐயோ இவர் இப்போது இங்கே இருந்திருந்தால் நல்லாய் இருக்குமே என்று வெந்து வேதனைப்பட்டவர்கள் நிறையப் பேரைக் கண்டிருக்கின்றேன்.

நம்மை மாற்றிக் கொள்வதற்கு முக்கிய தேவை நம் வார்த்தைகளே. எதை எப்படிப் பேசவேண்டும் என்பதை அறிந்திருக்கவில்லை, நாம் மனதில் உள்ளதை, மனம் நோகாமல் வெளிப்படுத்தும் சொற்களை அறிந்திருக்கவில்லை. அல்லது நாம் அறிந்தும் அறியாமல் இருக்கின்றோம். நாம் விதைக்கும் வார்த்தைகள் வெறும் சத்தங்கள் இல்லை, இவை விதைகள், அதை இடம் அறிந்து விதைத்தால் அதில் இருந்து மிகப் பெரிய விருட்சமே நமக்குப் பலனாகக் கிடைக்கும். இங்கு நாம் எதை விதைக்கின்றோம் என்பதுதான் முக்கியம்.

பலருக்கும் வார்த்தைகள் தரும் நம்பிக்கை அலாதியானது. மருத்துவர் தன்முன்னே உட்கார்ந்து இருக்கும் நோயாளியைப் பார்த்து ‘உனக்கு ஒன்றும் பயப்படும்படியாக இல்லை நீ குணமாகிவிடுவாய்’ என்று சொல்லும் வார்த்தைகளே நோயாளியை நூறு மடங்கு குணமாக்கிவிடும். மருந்தை விட வலிமையானது அந்த வார்த்தைகள். உன்னால் படிக்க முடியும் நீ முட்டாள் அல்ல என்று ஆசிரியர் சொன்ன வார்த்தைகள், இன்றைக்கு உலகுக்கு மிகப் பெரிய மேதாவிகளைத் தந்திருக்கிறது. ஒவ்வொருவரும் யாரோ கொடுத்த வார்த்தை வாழ்த்துக்களால் தான் இன்றைக்கு மேலே வந்திருக்கின்றீர்கள். அதுபோல் கடும் சொற்கள் தந்த அவமதிப்பால், புறக்கணிப்பால் தோற்றுப்போய் இருக்கின்றோம். போக விட்டு புறம் சொல்லியே வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் நாங்கள். நல்லதைச் செய்துவிட்டு, வார்த்தைகளால் நாலுபேர் முன்னால் நல்ல மனிதர்களைப் போகவிட்டு நையாண்டி மேளம் வாசிப்பவர்கள் நாங்கள். நம்மோடு நின்று நையாண்டி மேளம் வாசிக்கும் நால்வர் நாளை இன்னொருவரோடு சேர்ந்து நம்மை பற்றிக் காண்டம் வாசிக்காலம்.

நமது வார்த்தைகளை அறிவதும் பயன்படுத்துவதும் ஓர் கலை. மகாபாரதத்தில் வரும் விதுரன் மிக அழகாத சொற்களின் தூய்மை பற்றி பேசுகின்றான். நம் மனதின் அழுக்கும், கசப்பும், அருவருப்பும், அடுத்தவர்கள் மீது படிந்து விடுகின்றன. சொற்களை அஸ்திரம் போலவே பயன்படுத்துகின்றோம், அது மிகப் பெரிய தவறு. சொற்கள் உளன்று கோள்கள் போன்றவை, அதைக் கொண்டே நாம் வாழ்க்கையை கடந்து போகின்றோம். நல்ல ஒரு வார்த்தைக்காக காத்திருப்பதும், பெறுவதும் மனிதனின் முக்கியமான கடமை என்கிறான் விதுரன்.

நாட்டை விட்டு வெளியேறி கானகத்தில் துறவியாக அலையும் போது விதுரன் தன்னுடைய நாக்கில் தன்னை அறியாமல் செற்கள் புரண்டு வந்துவிடக்கூடாது என்று கூழாங் கற்களை இடுக்கிக் கொண்டு மௌனமாக இருந்தான். அந்த மகா மௌனம், பூமியில் புதையுண்ட கரித்துண்டு கால ஓட்டத்தில் வைரமாக மாறிவிடுவது போல விதுரனின் உடலையும் ஒளி கொள்ள வைத்தது என்கிறது மகாபாரதம்.

10 வருடங்களுக்கு முன்பு ஆபிரிக்க நாடான மாலியில் உள் நாட்டுக் கலவரம் பற்றி ஒரு நீதி விசாரணைக்கு அரசு உத்தரவு இட்டது. அதற்காக கைது செய்யப்பட பலர் கொண்டு வரப்பட்டனர். அதில் வயதான ஆதிவாசி ஒருவர் நீதிமன்றத்தில் இருந்த சாட்சிக் கூண்டைப் பார்த்தபடியே இருந்தார். தீடீரென்று சாட்சிக் கூண்டில் ஏறி பேசத் தொடங்கிவிட்டார். நீதிபதிகள் அவரிடம் “நாங்கள் கேட்கும் போது மட்டும் பேசுங்கள்” என்று சென்னார்கள்.

அதற்கு அந்த ஆதிவாசி “நீங்கள் அழைக்கும் போது என் மனதில் வார்த்தைகள் வாராது, மனதில் வார்த்தைகளை வெளிக் கொட்டாது தேக்கி வைத்திருப்பது மிகப் பெரிய வேதனை. அந்த சொற்கள் விஷம் போல என் உடலை வருத்துகின்றன. அதனால் தான் எந்த சொற்களையும் உடனேயே வெளிப்படுத்தி விடுவோம்” என்றான் அது மட்டுமல்ல தன் மனதில் உள்ள உண்மைகளை கொட்டித்தீர்தான்.

உண்மையில் நம்மில் பலரும் ஆபிரிக்க மனிதரைப் போலவே வாழ்கின்றோம். மனதில் வலி நிரம்பிய சொற்களை சுமந்து கொண்டு அழுகின்றோம். நம் குடும்பத்தவரிடையே பேசுவதற்கான வார்த்தைகளை நமக்கு பயன் படுத்தத் தெரியவில்லை.

நமது வார்த்தைகளை கொண்டே மற்றவர்கள் நம்மை எடை போடுகின்றார்கள். வாழ்க்கையில் எப்படியும் வாழலாம் என்பதற்காக நய வஞ்சமான வாரத்தைகளை, நஞ்சு தடவிய வார்த்தைகளை பாவித்து நம்மில் பலர் ரணகளமாக பலரின் நெஞ்சை கூறுபோடுகின்றோம். இப்படியே நயவஞ்சகமாக மற்றவர்களின் பலவீனத்தை அல்லது அவர்களின் மனத்தை தமது (ஆ)சாமி வேடங்களில் ஆசை வார்த்தைகள் கூறி மோசம் செய்வதை நாம் இன்னமும் நிறுத்தவில்லை. நன்மை செய்தவர்களுக்கு நன்றியாக இருக்காவிட்டாலும் நயவஞ்சகமாக முதுகில் குத்தும் திருட்டுப் புத்தி ஒழிந்தால் தவிர நாம் திருந்தப் போவது இல்லை. திருட்டுப் புத்தியோடு நல்லவர்களாக நடித்து, வார்த்தை யாலம் காட்டி, உள்ளதையும் அள்ளிக்கொண்டு ஒடுபவர்களை ஆண்டவனால்கூடக் காப்பாற்ற முடியாது. இப்படித்தான் நடப்போம் என்று வானத்தை பார்த்து நடப்பவர்களை என்ன செய்வது. நம்மோடு பழகிய பாவம் என்று இடறி விழும்போது தூக்கி விடுவதைத் தவிர நம்மால் வேறு என்ன செய்ய முடியும்.

ஆபத்தில் கை கொடுக்கும் நல்ல உள்ளங் களை, தானம் கொடுத்த பசுவை பல்லைப் பிடித்துப் பார்ப்பது போல் நோ கடித்தால் நம் வாழ்வில் என்றும் அமைதி நிலைக்காது.

எனவே நல்லதை நினைப்போம்.
நல்லதை செய்வோம்.
நல்லவர்களாய் நடப்போம்.

“இன்னா செய்தாரை ஒறுத்தல்
அவர் நான நன்னயம் செய்து விடல்”

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■



# பதின்ம முன் வயதினரின் வளர்ச்சிப் படி நிலைகள்

**தொடர் 9**



சிவவதனி
பிரபாகரன்

பெற்றவர்களுக்குப் பிள்ளைகள் என்றுமே குழந்தைகள் தான். இதனை அழகாகச் சொல்கின்ற வகையில் வழி வழியாக வந்த ஒரு அழகான கதை உண்டு. அனைவரும் அறிந்த கதை தான் ஆனால் ஆழமாக உணர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டிய கதை.

மரணப்படுக்கையில் இருந்த ஒரு மூதாட்டி தன் மகன் கால் தடக்கி விழப்போவது கண்டவுடன் “ஐயோ மகனே” என துடிதுடித்து எழுந்தோடி வந்தாள் என்பதே அக் கதையாகும். இது உண்மைக்கதையா கற்பனைக் கதையா என்பது முக்கியமில்லை. ஆனால் இதில் உள்ள உண்மை வெறும் கற்பனாவாதமல்ல. குறிப்பாக எமது சமூகத்தில் “தாயன்பின்” சிறப்பானது, இக்கதையையும் விஞ்சியதாக உள்ளமை கண்கூடு.

அன்பை அடிப்படையாகக் கொண்டு தாய்மையை போற்றி வளர்க்கும் பண்பாடு தமிழர்களுடையது. ஆனால் மேற்கத்தைய சூழலில் வளரும் எமது பிள்ளைகள் பெற்றோரின் அரவணைப்புக்குள் பொத்திப் பாதுகாக்கப்படும் கோழிக் குஞ்சுகளாக வாழ விரும்புவதில்லை. தமக்குள் கிளர்ந்தெழும் சுதந்திர தாகத்திற்கு தமது இறக்கைகளை பெற்றோராலும் மற்றோராலும் கட்டிப்போட விரும்பாத சுதந்திரப் பறவைகளாக தன்னிச்சையாக பறக்க விரும்புபவர்களாகவே புலம்பெயர்ந்த தேசங்களில் வாழும் இளையவர்கள் வாழ்கின்றனர். இவ்வண்ணமே கனடியச் சூழலில் வாழும் தமிழ்ச்சிறார்களில் பெரும்பாலானோரின் வளர்ச்சிப்படிநிலையின் ஒரு வெளிப்பாடாகவுள்ளது. பெற்றோர் இது குறித்து அஞ்சத் தேவையில்லை. நாம் நல்ல பெற்றோராக எப்படி வாழப் போகின்றோம் என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதும்.

பதின்மமுன் பருவத்தை எட்டியவுடனேயே (அதாவது 9 வயதிலேயே) பெற்றோரின் திணிப்புகளில்லாமல் சுயபொறுப்புடன் வளரும் மனஉந்தலிற்கு சிறுவர்கள் தள்ளப்படுகின்றனர். “நான் என் நண்பர்களுடன் தனியாக பாடசாலையிலிருந்து வரலாமா?”, “வகுப்புகளுக்கு சக மாணவர்களுடன் போகலாமா?”, “எங்களை விளையாட்டுத்திடலில் இறக்கி விட்டு பின் முடிந்தவுடன் ஏற்ற வாருங்கள்” என ஆரம்பித்து “நான் சைக்கிளில் கடைக்குப் போய் வரவா?”, “அடுத்ததெரு நண்பர் வீட்டுக்கு போய் விளையாடி வரவா?” என தனியாக சென்றுவர ஆசைப்படுவார்கள் இவ் வயதினர்.

கனடியர்களில் சில பெற்றோர் இதை அனுமதிப்பதுண்டு. ஆனால் 12 வயதுக்கு முன்பாக ஒரு பிள்ளையை சுயபொறுப்பில் பெற்றோர் கண்காணிப்பின்றி விடுவது சரியல்ல. ஓரளவுக்கு பண்பாடாக வளர்க்கப்பட்ட சிறார்கள் “ஏன் நான் இதைச் செய்யக்கூடாது?”, “எனக்கு வேண்டுமென்றால் வேண்டும்” என சிறிது முரண்டுபிடிப்பர். சில குடும்பங்களில் இதைவிட மோசமாக முரட்டுத்தனமான போக்கிலும் பிள்ளைகள் நடப்பதுண்டு. மோசமாக வாயாலும் உடலாலும் பெற்றோரைத் தாக்கும் பல கனடியச் சிறார்கள் உள்ளனர். கடுஞ் சொல், கட்டுப்படாத முரட்டுத்தனம் போன்ற எதிர்ப்புகளை பெற்றோரால் சகித்துக் கொள்ள முடியாமல் வன்முறைகளை அவர்கள் தம் சிறார் மீது கையாண்டு அடக்க முயல்வதுண்டு. இது முற்றிலும் தவறான ஒன்றாகும். வலியோர் (பெற்றோர்), எளியோர் (சிறுவர்கள்) மீது தமது வலிமையைக் காட்டி வன்முறையை பிரயோகிப்பதானது எதிர்மறை விளைவுகளுக்கே வழிவகுக்கும். சிறுவர்களுக்குள்ள எதிர்ப்புக் குணமானது இதனால் மேலும் அதிகரிக்கின்றது. “இவர்களை இங்ஙனம் வாய் காட்டி எதிர்த்துப் பேச அனுமதிக்கலாமா?” என பெற்றோர் கேட்பது புரிகின்றது. ஒன்றைப் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தை வளர்ப்பு என்பது ஒவ்வொரு பருவத்தில் ஒவ்வொரு வகையான சவால்களைக் கொண்டுள்ளது. அந்த வகையில் பதின்ம முன் பருவம், பதின்ம வயதுப் பருவம் என்பன சவால்களின் உச்ச பருவமாக பெற்றோருக்கு அமைவது இயல்பானதும், இயற்கையானதுமாகும். பெற்றவரும் ஒரு நாளில் பிள்ளைகளாக இருந்து வந்தவர்களே என்பதனால் இந்த உண்மை பெற்றோர் எல்லோருக்குமே நன்கு புரிந்திருக்க வேண்டும். உண்மைகள் கசப்பானவையாயினும் அவற்றை ஏற்றுக்கொள்ளவும் எதிர்கொள்ளவும் பழகவேண்டும். இரண்டு வயதுக்குழந்தைகளின் சேட்டைகளை “terrible two” என்பது போல் பதின்ம முன் வயதுப் பருவத்தினரின் பிரச்சனைகளை “Pre-teen probs” எனக் கூறுவர். இத்தகைய பருவ குழப்பங்களை இயல்பானது எனப் புரிந்து கொள்ளாத போதுதான் எமக்கு இவ்வயதினரின் நடவடிக்கைகள் அதிர்ச்சியூட்டுகின்றன.

12 வயதினர்கூட முழுமையாக சுயபொறுப்புடையவராக தம்மைப் பாதுகாக்கத் தெரிந்தவராக இருப்பர் என்று கூறிவிடமுடியாது. எனினும் படிப்படியாக அவர்களை பொறுப்புள்ளவர்களாக இவ்வயதுகளில் மாற்ற முயலாவிட்டால் என்றுமே அவர்கள் பொறுப்புள்ளவர்களாக மாறமாட்டார்கள். தமது சிறிய சகோதரர்களை மேற்பார்வை பார்க்கும் பொறுப்பு, தமது பாடசாலை வீட்டு வேலைகளைத் தாமே செய்யும் பொறுப்பு, தமது உடைகளைப் பொருட்களை பாத்திரப்படுத்தி பாதுகாக்கும் பொறுப்பு என சிறிய சிறிய பொறுப்புக்களை இவ்வயதினருக்கு கொடுத்துப் பழக்குவது நன்று.

வாதமிட்டு சாதிக்க ஆரம்பிக்கும் இப்பிடிவாத வயதினர்க்கு புரியும் வகையில் விளக்கி கூறி இறுதி முடிவுகளை எடுப்பவர்கள் பெற்றோராகவே இருப்பது அவசியம். சரியான வகையில் சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டிய முறையில் சொன்னால் சரியாகப் புரிந்து கொள்ளக்கூடிய அளவு நியாயவாதிகளாக இவ்வயதினரில் பெரும்பாலானோர் இருப்பர். எனினும் பட்டாம் பூச்சிகள் போல் ஆசைகள் சிறகடித்து பறக்கும் கனவுப் பருவமிது. ஆதலால் சில சமயங்களில் இவர்கள் கண்களை கண்மூடித்தனமான ஆசைகள் கட்டிப்போடுவதுமுண்டு. எனினும் ஆசைகளின்பால் ஈர்க்கப்பட்டு அவர்களை சீரழியவிடாமல் பாதுகாப்பது பெற்றோரின் வளர்ப்பில் கருத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

> “ உங்கள் பிள்ளைகளுடன் ஆற, அமர இருந்து மனம்விட்டுப் பேசவேண்டும். அவர்கள் கருத்துக்களையும், எண்ணங்களையும், பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும், உணர்ச்சிகளையும் செவிமடுக்க நீங்கள் தயாராக உள்ளீர்கள் என்பதனைத் தெரியப்படுத்த வேண்டும். ”

இவ்வயதுச் சிறாருள் சிலர் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்து கட்டவிழ்த்து எதிர்த்து நிற்பர். இத்தகைய சூழ்நிலைகளை எதிர்நோக்கும் பெற்றோர் அதிர்ச்சியும் வேதனையுமுற்று தளர்ந்து போவதுண்டு. ஆனால் இப்பருவத்தினருக்கேயுரிய எதிர்த்துப்பேசும் அசட்டுத்தைரியத்தின் வெளிப்பாடே இதுவாகும் என்பதனை பெற்றோர் புரிந்துகொண்டு அதற்கேற்ப தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும்.

உண்மையில் என்ன நடக்கிறது என ஆராய்ந்தோமானால் இவ்வயதினருள் ஏற்படும் அசட்டுத் துணிச்சலானது உடலில் ஏற்படும் ஓமோன் மாற்றங்களால் ஏற்படுகின்றது. அதனை அவர்கள் வெளிப்படுத்தும்போது தம் அறிவுக்கு வேலை கொடுப்பதில்லை. காரணம் அவர்கள் இன்னமும் அவர்கள் மனித வளர்ச்சியின் உயர் படிநிலையை எய்தவில்லை. ஆதலால் அவர்களுள் மனமுதிர்ச்சி உண்டாக வில்லை. எனவே அவர்களின் உணர்வு வெளிப்பாடானது பண்பாடற்ற செயலாகவோ, சொல்லாகவோ முதிர்ச்சியோ பக்குவமோ அற்ற வகையிலேயே வெளிப்படும்.

அவர்களின் உணர்ச்சிகளை மதித்து அவற்றை வெளிப்படுத்த அனுமதிப்பது மிக முக்கியமான விடயமாகும். அவர்கள் அவற்றை சரியான முறையில் நாகரீகமாக வெளிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மென்மையான போக்கில் அவர்களுக்குப் புரியும் வகையில் எடுத்துரைத்து அவ்வாறு பயில்வதற்கு ஊக்குவிப்பது பெற்றோரின் பணியாகும்.

“இளங்கன்று பயமறியாது” என்பர். இந்த துணிச்சல் பல சாதனைகளை மிக எளிமையாகச் செய்வதற்கு உதவுகின்றது.

இளையவர்களுள் தீயாய் கனன்று கொண்டிருக்கும் சிந்தைகளை ஆக்கத்திறன் மிக்க செயல்களின் பால் பாய்ச்சி ஊக்குவிக்க வேண்டும். எனின் அவை சமூகத்திற்கு பயனளிக்கும். மாறாக அடக்க முயன்றால் அவை எம்மையே அழித்திட துடிக்கும். சிறுவர்களை அடக்குவதைவிடுத்து தம்மை பக்குவப்படுத்துவதிலேயே பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

சிலவகையான குடும்ப ஒழுங்குவிதிகளை குடும்பத்தினரின் உறவாடலுள், கடைப்பிடிப்பது அவசியமாகும். முதன்மையாக ‘அடித்தல்’ போன்ற வன்முறைகளை இவ்வயதினர் மீது பிரயோகிக்கக்கூடாது. அடுத்ததாக ‘வார்த்தைகளால் மனங்களைக் காயப்படுத்துவதை முற்றுமுழுதாக தவிர்க்க வேண்டும். இதனை கண்டிப்பாக கட்டாயமாக குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருமே கடைப்பிடிக்க உறுதியெடுக்க வேண்டும். பெரியோர் தவறு இழைக்கின் பிள்ளைகளும் அவர்களை பின்பற்ற முயல்வர். ஆதலால் குடும்பத்திலுள்ள அனைவருமே ஒருவர் மனதை ஒருவர் காயப்படுத்துவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். ஒருவரை ஒருவர் வீழ்த்திப் பேசுதல், தாழ்வாக தரம் குறைத்து இழிந்துரைத்தல், கடும் சொற்களால் காயப்படுத்தல் போன்றன குடும்பத்தில் இருக்கக்கூடாது என்பதை குடும்பத்தில் ஒவ்வொருவரும் கருத்தில் கொண்டு வாழ வேண்டும்.


அடுத்து இப்பருவத்தினருடன் ஆற அமர இருந்து மனம்விட்டுப் பேசவேண்டும். குறிப்பாக அவர்கள் கருத்துக்களையும், எண்ணங்களையும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும், உணர்ச்சிகளையும் செவிமடுக்க நீங்கள் தயாராக உள்ளீர்கள் என்பதனைத் தெரியப் படுத்த வேண்டும். அங்ஙனம் கருத்துப்பரிமாறும்போது மரியாதையான முறையில் காயப்படுத்தாமல் பரிமாறினால் அதனை மதித்து அது குறித்து கலந்துபேச நீங்கள் தயாராக உள்ளதாகவும் சொல்ல வேண்டும். உங்களை (பெற்றோரை) காயப்படுத்தி பேசுவதனாலோ, கத்தி பயமுறுத்திப் பேசுவதனாலோ உங்கள் மனம் மாறப்போவதில்லை என்றும், மாறாக நியாயமான நோக்கோடு நேர்மையாக நேரடியாக கருத்துவாத முன்வைப்பு (Counter argument) செய்யின் கருத்திலெடுக்கப்பட சாத்தியமுண்டு என்பதையும் புரிய வையுங்கள்.

“என்னைப்பார்த்து நீ கத்திப்பேசுவதால் எனது ‘இல்லை’ என்ற பதில் மாறப்போவதில்லை. உன்னை அமைதிப்படுத்தியபின் என்னோடு பேசுவாயாக இருந்தால் உனது கருத்தை ஏற்கும் நிலை உருவாகலாம்” (“If you yell at me when I say no, the answer is still no. If you calm down and then talk to me about it, we might be able to work something out”) எனக் கண்டிப்பாகக் கூறவும்.

தமக்குத் தேவையானதைப் பெறுவதற்கு சிறுவர்கள் பெற்றோரை புரிந்துகொள்ளும் வகையில் பேசி மாற்றுபவர்களாக மென்போக்கானவராக இருக்க வேண்டுமானால் முதலில் பெற்றோர்கள் அவர்களுடன் எதையும் பேசித் தீர்க்கின்ற மென்பேச்சாளராக இருக்க வேண்டும். சரியான கோரிக்கைகளை தெளிவாகப் புரியவைக்கும் சிறாரின் கருத்து பரிமாற்ற பக்குவத்தின் வளர்ச்சியினை பெற்றோர் பாராட்டி ஊக்குவிக்கத் தவறக்கூடாது.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■



First step to get government rebate of up to **$ 11,000** is

# ENERGY AUDIT

**Prabha Sinna**
416.655.9464

info@energyan.com
energyan.com

## GOVERNMENT CERTIFIED ENERGY ADVISOR

***ENERGY AUDIT* செய்தபின் உங்கள் வீட்டை *ENERGY EFFICIENT* ஆக்குவதனால் அரசாங்கத்தின் *REBATE* பெறுவதோடு மட்டுமல்லாமல் உங்கள் மாதாந்தக்கட்டணத்தையும் குறைத்துக்கொள்ளலாம்.**

**ENERGY AUDIT செய்வதன் மூலமாக மட்டுமே இச்சலுகையைப் பெறமுடியும்.**

## Eligible Improvements/Retrofits

Get $150 rebate from the ontario government just for doing the first audit

| | Federal & Provincial | Toronto |
|---|---|---|
| Heating System | $1,580 | |
| Cooling System | $500 | |
| Ventilation System | $750 | |
| Tankless Water Heater | $750 | |
| Attic Insulation | upto $1,500 | $ 200 |
| Exterior Wall Insulation | upto $ 3,750 | $ 500 |
| Basement Insulation | upto $ 2,500 | $ 300 |
| Doors/Windows/Skylights | each $ 80 | |
| Toilet Replacement (Low Flush) | each $ 130 | |

Do the pre audit > Do the retrofit > Do the post audit > Get cheque in the mail

*You call us to do the audit.*

*We take care of all the paper work to get your rebate from the government.*

Want to save money on energy bills? Give me a call.

Visit **energyan.com** for more...


Cell tel Mobility
CELL TEL MOBILITY
For all your cellphone and accessory needs...
We sell new & used cellphones, Pagers and accessories for:
ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY
BLUETOOTH HEADSET
Starting From: $9.99
-Car charger
-Leather case
-Head sets
-Home charger
-Clear case
-Bluetooth headset
-Bluetooth dongle
-Data cables
-Batteries
-Belt clip/Holder
-Antenna booster
-Flashing antenna
-Flashing light
GSM UNLOCK
Call Toll free:- 1.877.312.5123
SHOP ONLINE @ www.celltelmobility.com
CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER
NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.
Display,Antenna Replacement and all other
Repairs (Software & Hardware).
2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818
5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776
5A - 1162 Morningside Ave
Morningside Ave/ Sheppard Ave
416.281.2355

# இயற்கை அழிவும் பொருளாதாரமும்



அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

இயற்கை அழிவை எவராலும் தடுக்க முடியாது ஆனால் அவற்றில் இருந்து குறைவான அழிவுடன் தப்புவதற்குச் சில பாதுகாப்பு வழிகளை வசதியுள்ள நாடுகள் செய்யக் கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக யப்பான் போன்ற நாடுகளில் அடிக்கடி நில நடுக்கம் வருவதுண்டு. ஆனால் அவர்கள் கட்டிடங்கள் குறைந்தபட்சமான அழிவுடன் நிலநடுக்கத்தில் இருந்து தப்புவதற்கான வழிமுறைகளைத் தற்போது கையாளுகின்றார்கள்.

Hurricane Katrina வந்தபோது அதனால் 1,836 மக்கள் உயிரிழந்தார்கள். அத்துடன் 100 billion dollarஇற்கும் மேலான பொருளாதார இழப்பையும் உருவாக்கியது. அப்போதைய நிலையில், பொருளாதார நிபுணர்களின் கணிப்பின்படி தொழிலாளர்களின் பற்றாக்குறையும் அதனால் சம்பளக் கொடுப்பனவின் செலவும் அதிகரிக்கும் என எதிர் பார்த்தார்கள். அதாவது வேலைவாய்ப்பு அதிகமாவதுடன், பொருளாதாரமும் வெகு விரைவாக முன்னேறிச் செல்லும் எனவும் எதிர்பார்த்தார்கள். காரணம் கட்டிடங்கள், இயந்திரங்கள் என்பன உடையும்போது அவற்றை தற்போதைய தேவைக்கேற்ப கட்டுவதுடன், இயந்திரங்களைப் புதிய தொழில் நுட்பத்துடன் வாங்கவும் சந்தர்ப்பம் கிடைக்கும். இப்படியான ஒரு நிலையில் பொருளாதாரத்தில் முன்தங்கிய நாடுகளுக்கு இப்படி யான சந்தர்ப்பம் சற்றுப்பொருந்தும். அதாவது அந்நாடுகளில் உள்ள சேமிப்பு, காப்புறுதி, அல்லது வங்கிகளிடம் கடன்பெறும் வசதி என்பன பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என நம்பலாம். ஆனால் இது வளர்ந்து வரும் நாடுகளுக்கு அல்லது வறிய நாடுகள் போன்ற Haiti என்பனபற்றிச் சற்றும் பொருந்தமாட்டாது.

அதன்படி வசதிபடைத்த நாடுகளின் அதாவது GDP (Gross Domestic Product) பெரிய அழிவுகள் வரும்போது பொருளாதாரத்தின் வளர்ச்சி அதிகமாக இருக்கும். ஆனால் வசதியற்ற நாடுகளின் GDP குறைந்து செல்வதற்குப் பெரிய வாய்ப்புக்கள் உண்டு.

தற்போது Haiti நாட்டை எடுத்துக்கொண்டால் அந்நாட்டின் பொருளாதாரம் பலவகையான பிரச்சினைகளை எதிர்கொண்ணடது. அதாவது ஊழல், இலஞ்சம் அத்துடன் நிலையற்ற வங்கிகளின் செயற்பாட்டாலும் பெரிதும் பாதிப்படைந்தது. இருந்தாலும் கடந்த 2005ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்கா போன்ற நாடுகள் ஏற்றுமதிக்கான வரிச் செலவுகள் எதனையும் Haiti போன்ற நாடுகளுக்கு அறவிடாததால் அதனது பொருளாதாரம் சிறிய வளர்ச்சியைக் கண்டது. அவர்களில் கூடுதலான பொருளாதாரம் சிறிய தோட்ட வேலைகளிலேயே தங்கி இருந்தது. ஆனால் Haitiஇல் அடிக்கடி வரும் சூறாவளிகளாலும், அதாவது 2008இல் நான்கு சூறாவழிகள் அந்நாட்டை உலுப்பியது மட்டும் அல்லது இதுவரைகாலும் வந்த பலத்த முப்பது சூறாவளிகளில் நான்கு சூறாவளிகள் Haiti இல் ஏற்பட்டது. இவற்றை நோக்கும்போது வறிய நாடாகிய Haiti எதுவித வங்கிக் கடனோ அல்லது காப்புறுதியோ இல்லாத நிலையில் அந்நாடு இவ் அழிவில் இருந்து மீள்வது மிகவும் கடினமாக இருக்கும். அது மட்டும் அல்லாது அடிக்கடி இயற்கை அழிவு வரும் நாடுகளில், கூடுதலாக வெளிநாடுகள் எந்தவித முதலீட்டையும் செய்வதற்கு மிகவும் தயங்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே இப்படிப்பட்ட நாடுகள் பொருளாதாரத்தில் தொடர்ந்தும் பின்தங்கிய நாடாகவே இருக்கும். இப்படியான நாடுகளில் 40 நாடுகளுக்கு உலக வங்கி கடன்களைக் குறைந்த வட்டியுடன் கொடுத்தும், சில நாடுகளுக்குக் கொடுத்த கடனை இல்லாமல் செய்தும் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் முன்னேறுவதற்கு உதவி புரிகின்றது.

> **“ அடிக்கடி நில நடுக்கம் ஏற்படும் யப்பான் போன்ற நாடுகளில் அங்குள்ள கட்டிடங்கள், குறைந்தபட்சமான அழிவுடனும், நிலநடுக்கத்தில் இருந்து தப்புவதற்கான வழிமுறைத் தொழில்நுட்பத்துடனும் வடிவமைக்கின்றது. ”**

இருந்தாலும் ஒரு நாடு வசதி அடைவதற்கு Man made resources என்று அழைக்கப்படும் Roads, factories, telephone system, மற்றும் human resources என்று அழைக்கப்படும், hard work and education அத்துடன் Technological resources என்று அழைக்கப்படும் Hightech இயந்திரங்களை எவ்வாறு பாவிப்பது போன்ற அடிப்படையான தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில், இப்படியான அடிக்கடி வரும் இயற்கை அழிவுகள் வறிய நாடுகளைப் பெரிதும் பாதிக்கும்.

முன்னைய நாட்களில் பெரிதும் வறிய நாடு களாக இருந்த China, Taiwan போன்ற நாடு களின் வளர்ச்சி, சில வருடத்தில் இலகு வாகவும், குறைந்த செலவிலும் கிடைக்கும் Technologyயே அதனது வளர்ச்சிக்குக் கார ணமாகும். ஆகவே இயற்கை அழிவு வராமல் இருந்தால் மட்டுமே வறிய நாடுகள், சிறிது என்றாலும் பொருளாதாரத்தில் வளர்ச்சி காண்பதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும்.

alan.sivasambu@thaiveedu.com

■ ■ ■

ஆயுட்காப்புறுதி
For all your Insurance needs...
Call: 416•522•3314
Sockalingam Prabaharan
Life Insurance Broker

- வயோதிபர்களுக்கான காப்புறுதி
- ஆயுட் காப்புறுதி (Life Insurance)
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- குழந்தைகளுக்கான
  உயர் கல்வி சேமிப்புத் திட்டம் RESP
  20% - 40% அரச மானியத்துடன்
  15% அதிக போனஸ்
- Disability Insurance
- Non Medical Insurance
- RRSP & Investments



$100,000. காப்புறுதிக்கு
$11.97
மாதாந்தக் கட்டணம்

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

LILAND INSURANCE INC.
759 Warden Ave. Toronto, ON M1L 4B5

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

Men's clothing store
For sale
22yrs in Business

---

Office space for lease
close to Subway.
Good location for Mississauga, Etobicoke and Down town clients.

Inprobus Realty Corporation
Call : Alan 647-504-2536

# சக்தி சேமிப்பில் Insulation

**கனடாவில் வீடுகளில் விரயமாகும் சக்தியைத் தடுத்துச் சக்தியைச் சேமிப்பதன் மூலம் சூழல் மாசடைதலைத் தடுத்தல், மாதாந்த செலவைக் குறைத்தல், வீட்டின் விலை மதிப்பையும் சௌகரியத்தையும் அதிகரித்தல், கனடாவின் மூன்று (மத்திய, மாகாண, நகர) அரசமட்டங்களிலுமிருந்தும் மானியமாக வழங்கும் சுமார் 11,000 டொலர் வரை பெறுதல் போன்ற நன்மைகளை அடைய முடியும். அதிலும் வீட்டிற்கு Insulation செய்வதன் மூலம் 8,750 டொலர் வரை பெற முடியும். (குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்) ஆகவே இம்முறை Insulation செய்தல் பற்றிப் பார்ப்போம்.**

- ரவி ரவீந்திரன் -

## வீட்டில் Insulation செய்தல்

நாம் எல்லோரும், நாம் வசிக்கும் வீடுகளை வெப்பப்படுத்தவும் மற்றும் குளிரூட்டவும் அதிகம் செலவிடுகிறோம். நாம் சற்று யோசித்தோமேயானால் இந்த செலவை வெகுவாக குறைக்க முடியும். எடுத்துக்காட்டாக ஒரு வீட்டில் குளிரூட்டும் வசதிக்காக செலவிடப்படும் தொகை மின்கட்டண செலவுகளின் பாதியை விழுங்கிவிடுகிறது. மீதமுள்ள பணம் தண்ணீரை உஷ்ணப்படுத்துதல், மின் விளக்கு வசதி மற்றும் மின் உபகரணங்களுக்கென செலவாகிறது.

எனவே வீட்டிற்கு தரமான Insulation செய்வதன் மூலம் சக்திக்கான செலவை சிக்கனப்படுத்தி, அதிக பணத்தை மிச்சப்படுத்த முடியும். மேலும் அதே வேளையில் சுற்றுச் சுழலையும் தூய்மைப்படுத்த முடியும். அதனால் வீட்டு உடமைக்காரர்களுக்கு தொடர்ச்சியாக நிறைய பணம் மிச்சமாவதுடன், பல வருடங்கள் சுகமாகவும், ஆரோக்கியமாகவும் வாழும் சூழ்நிலையும் கிடைக்கும். மேலும் பசுமை வாயுக்களின் வெளியேற்றமும் குறையும்.

### இந்த விரிவான கட்டுரை...

- Insulation எப்படி வேலை செய்கிறது என்பதை விவரிக்கும்.
- வீட்டு உடமைக்காரர்களும் மற்றும் புதிய வீடு வாங்குபவர்களும், தங்கள் வீடுகளுக்கு எவ்வளவு insulation தேவை என்பதை தீர்மானிப்பதற்கு உதவும்.
- வர்த்தகரீதியில் கிடைக்கக்கூடிய மாறுபட்ட Insulation வகைகளைப் பற்றி தெரிவிக்கும்.
- வீட்டில் எங்கு Insulation போடவேண்டும் என்பதை தெரிவிக்கும்.

### Insulation எப்படி வேலை செய்கிறது?

வெப்பம், இயற்கையாக வெப்ப நிலையில் உள்ள வித்தியாசத்தின் காரணமாக, ஒரு வெப்பமான பகுதியிலிருந்து ஒரு குளிர்ச்சியான பகுதிக்கு செல்லும். குறைந்த வெப்ப தடை உள்ள பாதையில் மிக அதிகமான வெப்பம் கடந்து செல்லும். குளிர்காலத்தின் போது உங்கள் வீட்டில் வெப்பப்படுத்தும் இடத்திலிருந்து, garage, attic, Crawl spaces அல்லது வெளியில் உள்ள இடம் போன்ற குளிர்ச்சியான பகுதிகளுக்கு வெப்பம் செல்லும். கோடைகாலத்தில் வெளியே உள்ள மிக அதிகமான வெப்பமும் மற்றும் சூரிய வெளிச்சமும் உங்கள் வீட்டின் உட்புறத்திற்கு வரும். இரண்டு வகைகளிலும் உங்கள் வீட்டின் வெப்பப்படுத்தும் மற்றும் குளிரூட்டும் அமைப்பு, வெப்ப இழப்பை ஈடுசெய்யவோ அல்லது வெப்ப அதிகரிப்பை குறைக்கவோ செய்ய வேண்டும். இதற்கு உங்கள் வீட்டின் attic, சுவர்கள் தரைகள் மற்றும் அடித்தளம் ஆகியன சரியான முறையில் Insulation செய்யப்பட்டிருக்க வேண்டும். அதன் மூலம் நீங்கள் வெப்ப இழப்பைத் தடுத்து, உங்கள் மாதாந்தர மின் கட்டண செலவுகளை கணிசமான அளவில் குறைக்கமுடியும்.

அனைத்து Insulation வகைகளும் அதன் வெப்ப தடுப்பு திறனை வைத்து R factor என்ற முறையில் மதிப்பிடப்படுகிறது. R factor எவ்வளவு அதிகம் உள்ளதோ அந்த அளவுக்கு அது வெப்ப ஓட்டத்தையும் தடுக்கும். வெப்ப ரீதியிலான Insualtion வகைக்கு, எந்த வகையான பொருள் பயன்படுத்தப்படுகிறது, மற்றும் அதன் கனம் அடர்த்தி ஆகியன பொறுத்தே R factor அமையும். உங்கள் வீட்டிற்கு கூடுதலாக Insulation செய்வதன் மூலம் R Valueஐ நீங்கள் அதிகரிக்கச் செய்ய முடியும், வெப்பம் கடந்து செல்வதையும் தடுக்க முடியும். R Value 19 மற்றும் R Value 11 கொண்ட இரண்டு அடுக்குகள் உள்ள Insulation, மொத்தமாக R Value 30 உள்ள (19 + 11) Insulationஐ தரும்.

ஆயினும் Insulationன் கூடுதல் மதிப்பு தானாகவே தரம் நிறைந்த Insualtion திறனை தந்துவிடாது. அதனால் மின்கட்டணச் செலவுகளையும் குறைத்துவிட முடியாது. அது உங்கள் உள்ளூர் தட்பவெப்ப நிலைகள் மற்றும் உங்கள் வீட்டின் கட்டுமான விதம், அளவு மற்றும் அமைப்பை பொறுத்தே அமையும்.

உங்கள் வீட்டின் வெப்பப்படுத்தும், குளிரூட்டும் வசதி மற்றும் எரிபொருள் செலவு ஆகியனவும் இதில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றன. தரமான ஜன்னல்களை அமைத்து, அவ்வப்பொழுது furnace மற்றும் குளிர்சாதன உபகரணத்தை பராமரிப்பதின் மூலம் அதிக அளவு பணத்தை மிச்சப்படுத்த முடியும். குறைந்த செலவில் தரம் நிறைந்த Insulation கூடுதலாக போடுவதற்கு, ஒவ்வொரு சூழ்நிலையையும் தனித்தனியாக மதிப்பிட வேண்டியது அவசியம்.

### பயனளிக்கும் வகையில் Insualtion போடுதல்.

Insualtionஐ பயனளிக்கும் வகையில் போடுவதில் தான் அதன் மதிப்பு உள்ளது. இல்லையென்றால் அதன் மூலம் வெப்ப இழப்பு ஏற்படுவதை தடுக்க முடியாது.



### சரியான முறையில் Insulation போடாமல் இருந்தால்...

சரியான முறையில் Insulation போடாமல் இருந்தால் ஏற்படும் சில சாதாரண பிரச்சினைகள் எவை எனில்:

- Batts Insualtion போடப்படுவதினால் அழுத்தம் ஏற்பட்டு R Value குறைந்து, காற்று மற்றும் வெப்பம் பரவி, வெப்பச் சலனம் உண்டாகும். அதனால் குறைந்த அளவு வெப்பகாப்பு தடையே உருவாகும்.
- Studகளுக் கிடையில் batts அல்லது Vapor barrier அறையப்பட்டிருக்கும் போது, studகள் மற்றும் Insulationக் கிடையே விரும்பத்தகாத காற்றோட்டம் ஏற்பட ஏதுவாகும். அதனால் studன் மேற்பகுதியின் மீது அவை எப்போதும் அறையப்பட வேண்டும்.
- Battன் மூலையில் உள்ள 1 முதல் 2 சதவீதமான Insulation பகுதி போன்ற சிறிய இடங்கள் கூட சரியாக முழுவதும் நிரப்பப் படவில்லை என்றால், கூட R Valueவில் 25 முதல் 40 சதவீதம் வரை இழப்பு ஏற்படும்.
- Insulationஐ Cellulose இழைச்சுருள் கொண்டு சரியாக அடைக்காமல் இருந்தால் வெப்ப இழப்பு ஏற்படும்.
- மேலும் வீட்டின் சுவர், தரை, உட்கூரை ஆகியவற்றின் மொத்த R Value, Insulation பொருளின் மீது அச்சிடிக்கப்பட்ட R Valueவை விட குறைவாக தான் இருக்கும். ஏனென்றால் studகள் மற்றும் joistகளின் மூலம் வெப்பம் கடத்தப்படும். மிகுந்த கவனத்துடன் சரியான முறையில் Insualtion செய்வதன் மூலம் குறுக்கு வெப்ப ஓட்டப் பாதையை வெகுவாக குறைக்க முடியும்.

### வீட்டில் எங்கெல்லாம் Insulation செய்யப்பட வேண்டும்?

உங்கள் வீட்டில் attic அறை, சுவர்கள், தரைகள், Crawl spaces மற்றும் அடித்தளத்தை சுற்றியுள்ள பகுதிகள் ஆகியன ஒழுங்கான முறையில் Insulation செய்யப்படவேண்டும். Attic அறையின் கதவு அல்லது மூடி போன்ற முக்கியமான இடங்கள் முதலில் Insulation செய்யப்பட வேண்டும். பின்னர் உஷ்ணப்படுத்தப்படாத இடங்களின் மேலே உள்ள தரைப்பகுதிகளின் கீழேயும், மற்றும் மரப் பலகைகளின் விளிம்புகளிலும் Insulation செய்வது அவசியம்.

முடிவுறாமல் இருக்கும் attic இடங்களில், உட்கூரையில் உத்தரங்களுக்கு இடையிலும் மற்றும் மேலேயும் Insulation செய்ய வேண்டும். முடிவுற்ற நிலையில் இருக்கும் attic இடங்களில் முட்டுச் சுவர்களின் (Knee walls) Studகளின் இடையிலும், அனைத்து வெளிப்புறச் சுவர்களின் மரக்கட்டைகளிலும் (rafters), attic அறையின் கூரையிலும், மற்றும் மேலே குளிர்ச்சியான இடம் கொண்ட உட்கூரைகளின் மேற்பகுதிகளிலும் Insualtion செய்ய வேண்டும். வசிக்கும் அறைகள் மற்றும் உஷ்ணப்படுத்தப்படாத garageகள் ஆகியவற்றின் இடைய உள்ள சுவர்கள், அஸ்திவார சுவர் போன்ற அனைத்து வெளிப்புற சுவர்களையும் Insulation செய்யுங்கள். crawl spaces, bay windows உள்ளிட்ட குளிர்ச்சியான இடங்களின் மேலே உள்ள தரைகள் மற்றும் தரையின் மீது நேரடியாக கட்டப்பட்ட கல்த் தரைகள் ஆகியன சரியான முறையில் Insulation செய்யப்படவேண்டும். மேலும் காற்று கசிவதை தடுப்பதற்கு கட்டட இணைப்புகளிலும் (band joists) Insulation செய்யுங்கள்.

### தற்போது வசிக்கும் வீட்டிற்கான சரியான அளவு Insulationl சரி பார்த்தல்.

பல எண்ணிக்கையிலான பழைய வீடுகள் இன்றைய தரநிர்ணய அளவுகளை காட்டிலும் குறைவான Insulationஐ தான் கொண்டிருக்கின்றன. சமீபகாலத்தில் (1990 முதல் தற்போதைய காலம் வரை) உங்கள் வீடு கட்டப் படவில்லை என்றால் attic அறை மற்றும் சுவர்களில் உள்ள Insulationஐ நீங்கள் சரி பார்க்க வேண்டியது சிறந்த தீர்வு. ஒவ்வொரு இடத்திலும் போடப்பட்டுள்ள Insulationன் கனத்தை நீங்கள் அளவிட்டு, அதன் திறனைப் பரிசோதனை செய்தாலே போதும். உங்கள் வீடு சமீபத்தில் கட்டப்பட்டு இருந்தால் வீட்டின் ஒவ்வொரு இடத்திலும் போடப்பட்டுள்ள Insulation அளவை கட்டிடம் கட்டியவரிடமிருந்து நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் attic அறை, சுவர்கள், வெளியே உள்ள இடத்திற்கு அருகே உள்ள தரைகள் உஷ்ணப்படுத்தப்படாத garage போன்ற இடங்கள், ஆகியவற்றை நீங்கள் சோதனை செய்து, அங்கு போடப்பட்டுள்ள சரியான அளவு Insulationஐ நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

உட்கூரை உத்திரங்கள் மற்றும் சுவர் குமிழ்கள் (studs) போன்ற கட்டமைப்பு சட்டங்கள் (Frames) வெளியே தெரியும்படி இருந்தால் அவற்றின் Insulationஐ சரி பார்ப்பது மிகவும் சுலபம். சுவர்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன் அதில் பொருத்தப்பட்டுள்ள ஒரு மின்சார Outletஐ எளிதாக நீங்கள் வெளியே எடுத்து (இதற்கு முதலில் நீங்கள் கண்டிப்பாக மின் இணைப்பை துண்டிக்க வேண்டும்) Outlet boxஐ சுற்றியுள்ள இடத்தை ஒரு flash light ஒளியின் மூலம் பிரகாசமாக்கி சோதனை செய்ய முடியும். உங்கள் வீட்டில் போடப் பட்டுள்ள தற்போதைய Insulation அளவை நீங்கள் தெரிந்து கொண்டதும். அவை பரிந்துரை செய்யப்பட்ட அளவுகள் போல உள்ளனவா என்பதை நீங்கள் கண்டு கொள்ள முடியும். Insulation இல்லாமல் இருந்தாலோ அல்லது பரிந்துரை செய்யப்பட்ட அளவுகளை விட கணிசமாக குறைந்திருந்தாலோ, ஒரு Insulation ஒப்பந்த பணியாளரை நீங்கள் கலந்தாலோசித்து கூடுதல் Insulationஐ போடச் செய்யுங்கள். முதலில் Attic அறையிலும், அதை தொடர்ந்து உஷ்ணப்படுத்தப் படாத இடங்களின் மேலே உள்ள தரைகளிலும் பின்னர் சுவர்களிலும் Insulation போடவேண்டும் என்பதை நினைவில் வையுங்கள்.

### Insulation செய்வதற்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டியவை

உங்கள் வீட்டின் கட்டுமானம் அல்லது புதுப்பிக்கும் பணிகளின் போது, நீங்கள் Insulation செய்வதற்கு முன் காற்று அல்லது ஈரம் புகாதவாறு தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை நீங்கள் சரி பார்க்கவேண்டியது மிக மிக அவசியம். கோடைகாலம் மற்றும் குளிர்காலத்தின் போது உங்கள் வீட்டில் காற்று கசிந்தொழுகினால், உங்கள் மாதாந்த மின்கட்டணச் செலவுகள் அதிகரித்து விடும். பொதுவாக Insulation இந்த கசிவுகளை தடுக்க முடியாது என்பதால், Insulation செய்வதற்கு முன்னரே காற்றுகசிந்தொழுகும் இடங்களை அடைத்துவிட வேண்டும். அதற்காக நீங்கள் செலவிடும் நேரம் உங்கள் எரிபொருள் செலவை மிச்சப்படுத்தி, உங்கள் வீட்டை மிக ஆரோக்கியமானதாக மாற்ற உதவும் உங்கள் வீட்டில் காற்று கசிந்தொழுகுவதை தடுப்பது சம்பந்தமான மேலும் கூடுதல் விவரங்களுக்கு தொடர்ந்து வரும் கட்டுரைகளில் பார்ப்போம். இது போன்று வீட்டில் ஈரம் புகாதவாறு தடுப்பதும் மிக முக்கியமான விடயம் ஏனென்றால் வீட்டினுள் வீசும் மித வெப்பமுள்ள காற்றில் நீராவி இருக்கும். இந்த நீராவி Insulationக்கு உள்ளே செல்லும் போது, குளிர்ச்சியடைந்து நீராக மாறிவிடும் என்பதால், Insulation சேதமடைய நேரிடும். மேலும் அதன் R மதிப்பும் குறைந்துவிடும் Mold மற்றும் Mildew வளர்ந்து வீட்டின் உட்புறத்திலுள்ள காற்றின் தரம் குறைந்து விடும். மேலும் மரப்பலகையிலான பொருள்கள் கெட்டுப்போகவும் மற்றும் வெளியே அடிக்கப்பட்டுள்ள Paint உரியவும் ஆரம்பித்து விடும். காற்றின் மூலம் ஈரம் வீட்டினுள்ளே வெகு தூரத்திற்கும் பரவிவிடும் என்பதால் காற்றுபுகாதவாறு தடுத்தால் மட்டுமே, ஈரம் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளை இல்லாமல் ஆக்க முடியும்.

இதற்கு ஈரம் ஊடுருவதை தடுக்கும் Paintஐ அடிக்கவேண்டும், அல்லது Insulation போடப்படவேண்டிய இடத்தில், வெப்பமான பகுதியின் மீது ஒரு Vapor barierஐ பொருத்த வேண்டும்.

ravi.raveendiran@thaiveedu.com

■ ■ ■

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்







Over **50 Years** Combined Experience

Even if you are:
- unemployed
- cyclist
- passenger
- pedestrian
- traveling in public transit
- student
- housewife

# FIREMAN WOLFE LLP

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

## MOTOR VEHICLE ACCIDENT

**FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY**
**SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH**

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள், அத்துடன் **$172,000.00** வரை இழப்பாகவும் மற்றும்பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறாகயிருப்பின் உங்களால் **$172,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும், இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

# தீபன்

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of Upper Canada)

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

## (416) 505-9804


இலவச ஆலோசனைகளுக்கு:

24 Hours Direct Line **(416) 624-4751**

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

"One of the best personal injury law firm in Ontario"

TORONTO SCARBOROUGH MISSISSAUGA



**Jack J. Fireman Q.C. LLM.**

Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**William C. Wolfe B.A. LLB**

Prior to 2000, Mr. Fireman and Mr. Wolfe defended insurance companies before changing their practices to representing injured people only.

IF YOU HAVE OPTIONAL INSURANCE, YOU CAN CLAIM UP TO **$1,000.00** IRB'S PER WEEK

வரை இழப்பதற்கு அனுமதிக்காதீர்கள்



**There are over 1 million homes with not enough attic insulation!**

# INSULATE YOUR ATTIC NOW

LET THE GOVERNMENT
PAY YOU TO INSULATE IT

## DON'T MISS THE OPPORTUNITY

**Fedetal (750) + Provincial (750) + Toronto (200) = $1700 (from R12 - R50)**

With us, it may cost you less then the government rebate to insulate them.

First step for government rebate is an ENERGY AUDIT. We can arrange one for you

YES YOU MAY GET SOME EXTRA CA$H

While making energy effient,
bring extra comfort to your living

***Topping up your home insulation will***

*Reduce the heat loss throught attic*

*Save on Heating & Cooling cost*

*Prevent Roof Rot and Mold in a well insulated & vented attic*

*Eligible for* ***HOME RENOVATION TAX CREDIT***

## Call for no obligation free quote

Rave Raveenthran
Direct : 416.939.9353, Office : 416.847.7171

# ENERecon Insulation

*info@enerecon.com - www.enerecon.com*

***Stay warm in winter. Be cool in summer***

some limitations apply, call for details

வட அமெரிக்காவிலிருந்து முதல் முறையாக நேரடி இணையப் பல்கலைக் கல்லூரி ஆரம்பம்

# VARNAM VIRTUAL ACADEMY

## Save Money ! Save Time ! Save Energy !

**Save 1500$ to 6500$ per year**

உங்கள் வீடுகளில் இருந்தே இணையம் மூலம் நேரடியாக கற்றுக்கொள்வதோடு மேலும் பல சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

* **Grade 1 - 12 Tutoring**
* **Kids & Adult Computer**
* **Western Music**
* **Indian Music**

*Further information visit -:* www.varnamonline.com

**You Can Learn From Your Home Face to Face ( Live )**

***Any Where in the World !!!***

* Vocal ( Carnatic ) * Violin * Veena* Mirudhangam * Tabla
* Piano * Keyboad * Guitar * Drums * Music Theory * Dance

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

* Midland & Ellesmere
* Dundas & Hwy 10
* McCowan & Denison
* Dixie & Meyer side
* Nellson & Finch
* Dixe & Bovaird

**Contact : Varna.Rameswaran 647.893.4010 / 416.265.8884**

# காப்புறுதியும் நம்பிக்கைத் தகைமை எண்ணும்

தொடர் - 07



செந்தூரன் புனிதவேல்

காப்புறுதி முகவர் -

நம்பிக்கைத் தகைமை எண் (Credit rating score) தற்போது ஒருவருடைய காப்புறுதிக் கட்டுப்பணத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. முன்பு ஒருசில காப்புறுதி ஸ்தாபனங்கள் மட்டுமே ஒருவருடைய நம்பிக்கைத் தகைமை எண் எவ்வளவு என்பதை தமது கட்டுப்பண நிர்ணயத்தில் கவனமெடுத்து வந்துள்ளார்கள். நம்பிக்கைத் தகைமை எண் அதிகமாக உள்ளவர்களுக்குக் கட்டுப்பணம் குறைவாக இருக்கும். இத்தகைய கணிப்பை வீட்டுக்காப்புறுதிக்குப் பெரிதும் பயன்படுத்தி வந்தாலும், கூடிய விரைவில் வாகனக் காப்புறுதியிலும் இதன் தாக்கம் இருக்கும் என நம்பப்படுகின்றது.

ஏன் நம்பிக்கைத் தகைமை எண் கவனத்தில் கொள்ளப்படுகின்றதெனில், நம்பிக்கைத் தகைமை எண் ஒருவர் தனது பணத்தில் எவ்வளவு பொறுப்பாக செலவு செய்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதுடன், பொறுப்பில்லாமல் பணத்தை செலவு செய்பவர்கள் மற்றைய விடயங்களிலும் பொறுப்பில்லாமல் இருப்பார்கள் என கணிக்கப்பட்டுள்ளது. எவ்வளவு வருவாய் என்பதிலும், வருவாயை எப்படி பாவிக்கிறீர்கள் என்பதை இந்த எண் காட்டும். பல சமயங்களில், குறைந்த வருவாய் உள்ளவர் கூடிய வருவாய் உள்ளவரிலும் கூடிய நம்பிக்கைத் தகைமை எண் உடையவராய் இருக்கலாம்.

உடனே உங்களுக்கு தோன்றலாம் எப்படி இந்த சுட்டு எண் அதிகரிக்கச் செய்யலாம் என்று.

முக்கியமாக வாகனக் காப்புறுதியில் இதன் தாக்கம் ஏற்படும் வேளையில் இது பெரும் கஷ்டமான விளைவை ஏற்படுத்தும்.

## நம்பிக்கைத் தகைமை எண் கூட்டுவதற்கு வழிவகைகள்.

நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எமது வாழ்வில் எண்களின் தாக்கம் இருக்கத்தான் செய்யும். எங்கள் மாத வருமானம், எங்கள் நாளாந்த செலவினம், எங்கள் மொத்தக் கடன் இவையாவுமே எம்மைப்பற்றிய கதைகளை வங்கிகளுக்கும், கடன் கொடுப்பவர்களுக்கும் சொல்லும். பலரும் கவனிக்கத் தவறுவது தங்கள் நம்பிக்கைத் தகைமை எண் என்பதுதான் உண்மை.

எவ்வளவு சம்பாதிக்கின்றோம் என்பதிலும் சம்பாதித்ததை எப்படி செலவு செய்கின்றோம் என்பதில் தான் வங்கிகளும், நிதிசார் நிறுவனங்களும் கவனமாய் இருக்கும்.

ஒருவரின் நம்பிக்கைத் தகைமை எண் 300 முதல் 850 வரை இருக்கலாம். இந்த எண் கூடியதாக இருக்கும் வேளையில் அவர்கள் கடன் பெறுவது சுலபம். மேலும் எதிர்காலத்தில் அவர்கள் காப்புறுதியும் குறைந்த கட்டுப்பணம் உடையதாயிருக்கும். 650க்கு குறையும் வேளைகளில் கடன்பெறுவதும் கடினம். காப்புறுதிக் கட்டுப்பணமும் அதிகமாயிருக்கும். இந்தச் சுட்டு இலக்கத்தைக் கூட்டுவதற்கு மூன்று எழிமையான வழிவகைகள் உண்டு.

- முதலாவதாக உங்கள் கடனட்டைகள், பில்களை உடனடியாக செலுத்த முன்வாருங்கள். தேவைப்படின் எந்த எந்த தினங்களில் கட்டவேண்டும் என்பதை நாட்காட்டியில் குறித்து அத்தினத்தில் கட்டிவிடுங்கள்.
- கடன் எடுத்து செலவு செய்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள். உதாரணத்திற்கு அடுத்த வருடம் வரை கட்டத்தேவை இல்லை என்று விளம்பரம் செய்வதனைப் பார்த்து பின்பு கட்டலாம் என்று கடன் பெறுவது மடமையாகும். இதனைத்தான் பலநூறு ஆண்டுகளுக்கு முன் ஔவைப் பாட்டிகூட "தேடாச் செல்வம் பாடாய் அழியும்" என்று சொன்னார். அவர் கூறிய அறிவுரை செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்கின்றது. மேலும் வந்தால் லாபம் என்று கடன் மனுக்களை அனுப்ப வேண்டாம். இவையாவும் அங்கு ஆவணப்படுத்தப்பட்டிருக்கும்.
- நீங்கள் பெற்றுள்ள கடனட்டையில் $10,000 வரை பெறமுடியுமானால் அதில் 35%வரை பாவியாது இருங்கள். அதாவது $3,500 இனை விட்டு வையுங்கள்.

இத்தகைய விதத்தில் நீங்கள் செய்ய முற்பட்டால் ஆறுமாதம் முதல் ஒரு வருடத்துக்குள் உங்கள் நம்பிக்கைத் தகைமை எண் கூடுவதனை அவதானிக்கலாம்.

குறிப்பிட்ட தவணைக்குள் பணத்தைக் கட்டாமையும் Collection Agencyஇற்கு செல்லவிடுவதும் உங்கள் எண்குறைவதற்கு முக்கிய காரணி. உதாரணத்திற்கு மூன்று டொலர் தானே என்று கட்டாமல் விட்டு அது Collection Agencyஇற்கு செல்லுமானால் நிச்சயம் அது நம்பிக்கைத் தகைமை எண் குறையக் காரணமாய் இருக்கும். இந்த எண் எவ்வளவு என்பதை மின் கணியத்தூடாக www.equitax.ca அல்லது www.transunico.caல் அறிந்து கொள்ள முடியும்.

பல வருடங்களுக்குமுன் "பாமா விஜயம்" எனும் நகைச்சுவை சினிமாப்படம் ஒன்று வந்தது. அதில் வந்த பாட்டை இங்கு தந்து இக்கட்டுரையை முடித்துக் கொள்கின்றேன்.

"வரவு எட்டணா, செலவு பத்தணா!
கடைசியில் தொந்தணா தொந்தணா!!"

வரவுக்கு மேல் செலவு செய்யாமல் வாழ்ந்திருங்கள்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■


LEARN TO EARN!! FREE REAL ESTATE CLASSES!!!


COMMERCIAL

INDUSTRIAL



$995+TMI for this rare ~1500 of warehouse and manufacturing space with Dock; 53' truck can load.

RETAIL/MEDICAL



500 sq.ft to 5000 sq.ft Zoned for medical & retail uses- Available Immediately- Affordable rent

MARKETING



Own a Business under $9,995 for this Print shop and Marketting Business- Cheap rent- Do not Miss

FISH & CHIPS




$89,000 for this money making Turn key Business- Earn your investment less than 2 years-

PARTY HALL



$199,000 for this established Business serving Indian cusine- Sales over $600,000/Y

RESIDENTIAL

WHY RENT??



2BR+2WRcondonear doctors office, shopping, Schools etc for under $499+; lease to earn possible.

LUXURY FOR LITTLE!



$1750 per month for large 3BR upscale condo overlooking Golf Course, near large mall and a Hiway

STARTER HOME!!



$309,000 for 4BR+4WR Home in an established neiborhood - near Hosptal, School,and Highway

ONE OWNER !!



$449,000 for 4BR+4WR Home in a desirable neiborhood - near Hosptal,School,University & Hiway

UNBELIEVABLE!!!



$499,000 for a Large 4BR+4WR Home in Scarborough near all Amneties - Corner lot 40' x 110'

WE OFFER AFFORDABLE PROPERTY MANAGEMENT SERVICES FOR YOUR INVESTMENT PROPERTIES!!

ஈட்டுக்கு ஒரு வீடு வாங்கத் தகுந்த தருணம்!!- வரலாறு காணாத வட்டி விகிதம் இப்போது கிடைக்கிறது!!!

சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் - உடனே அழையுங்கள்!!!

Uthayan Nadarajah
Real Estate & Business Broker
Direct: 416-727-9945

RE/MAX The Real Estate Leaders

Vijay Thiagarajah
Real Estate & Business Broker
Direct: 647-297-7144

RE/MAX Rouge River Realty Ltd., Brokerage, Independantly owned and operated

6758 Kingston Road, Toronto, ON. M1B 1G8 Office: 416-286-3993 Fax: 416-286-3348

***Every office is independantly owned and operated*** ****Not Intended to solicit any property under contract****

# ரெய்கி - Reiki

- பொன் குலேந்திரன் -

இதென்ன ரெய்கி? பெண்ணின் பெயராக இருக்கிறதே என்று யோசிக்காதீர்கள். சக்தியுடன் இணைந்தது இந்த ஜப்பானிய பெயர். "ரெய்" என்றால் ஜப்பானியப் பாஷையில் பிரபஞ்சம் என அர்த்தமாகும். எங்கும் நிறைந்தது. "கி" என்பது சீன வார்த்தை "சீ" யைப் போன்றது. "பிராணா" என்று பொருள்படும் இது சக்தியைக் குறிக்கும். ஆகவே ரெய் + கீ ஆகிய இரு சொற்களும் இணைந்தால் பிரபஞ்ச சக்தியாகும். பிரபஞ்ச சக்தியை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பதை நெறிப்படுத்தும் முறையே ரெய்கி எனப்படும். இந்த முறை 1900க்கு முன்னர் கலாநிதி மிக்காவோ Arap Dr Mikao Usui என்ற ஜப்பானியரால் கண்டுபிடிக்கப்பட்டது. Arap 1865 ஆகஸ்ட் 15ம் திகதி பிறந்தவர். பெரும் கஷ்டங்களுக்குள் அவர் பாடசாலையில் கல்விபயின்றார். சக மாணவர்களைவிட கல்வியில் முதன்மையாக திகழ்ந்தார். வளர்ந்தபின் அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்தார். ஒரு நாள் "குரொமா" என்ற மலையில் ஏறி அதன் உச்சியில் இருந்து தியானம் செய்யத் தொடங்கினார். திடீரென 21ம் நாள் அவர்தன் உச்சியில் ஒளிமயமான சக்தி ஒன்று தோன்றுவதை கண்டார். அதுவே குணப்படுத்தும் சக்தி தன்னை தழுவியள்ளதை உணர்ந்தார். தன்னிலும் தன் குடும்பத்திலும் ரெய்கி சக்தியைப் பிரயோகித்து உடலில் உள்ள பிணிகளைத் தீர்க்கத் தொடங்கினார். பின்னர் ஏழை மக்களுக்குத் தன் சேவையை அர்ப்பணித்தார். Arap மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்.

ஜப்பானிய காஞ்சி எனப்படும் எழுத்துக்களின் மூலம் ரெய்கி என்ற சொல்லை கீழேதரப் பட்டுள்ள படத்தில் காணலாம்.

## பௌதிகமும் சக்தியும்.

பௌதிகத்தில் சக்தியே எல்லா விதிகளுக்கும், தத்துவங்களுக்கும், கண்டுபிடிப்புகளுக்கும் மூலக் கரு. இயற்கையில் மறைந்து கிடக்கும் சக்தியின் மகிமைகளை கண்டுபடித்து மனிதன் நல்ல செயல்களுக்கும் தீய செயல்களுக்கும் பாவிக்கிறான். மின் சக்தி, அணுச்சக்தி, வெப்பச் சக்கி, இரசாயனச் சக்தி, உள் நிலைச் சக்தி (Potential Energy) இயக்கச் சக்தி (Kinetic Energy) போன்று பலவித தோற்றங்களில் இயற்கையில் இருந்து சக்தி உருவாகிறது. இவற்றின் தோற்றத்தின் கரு இயற்கை. இயற்கை தன் சக்தியை பிரபஞ்சத்தில் இருந்து பெறுகிறது. பிரபஞ்ச தோற்றத்தின் விளைவே சக்தியாகும். அச்சக்திகளை வெவ்வேறு செயல்களுக்குப் பயன் படுத்துவர் விஞ்ஞானிகள். இந்த தத்துவத்தை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்து வேதங்கள் சக்தி என்ற தெய்வத்தின் பல வடிவங்கள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளது. தியானத்தின் மூலம் இயற்கையுடன் ஒன்று கலந்த ரிஷிகள் அதன் இரகசியங்களை வேதங்கள் மூலம், குறி மொழி (Coded Language) வழி உலகிற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பிரித்து, ஆராய்ந்து, விளங்க நாசா (NASA) போன்ற ஸ்தாபனத்தில் உள்ள விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். பிரபஞ்சம் முழுவதும் மாயாசக்தியின் சொரூபம். இயற்கையில் புதைந்து கிடக்கும் உண்மையை விளக்குவது மாயை. இயற்கையின் சக்தி அழிவில்லை. இதை பௌதீகத்தில் (Conservation of Energy) என்பர். இத்தைகைய பிரபஞ்ச சத்தியை எவ்வாறு நல்ல முறையில் பயன்படுத்தி மனிதரை குணப்படுத்த ரெய்கி உதவுகிறது.

ரெய்கி என்ற ஜப்பானிய சொல்லின் தோற்றம் அதியுயர்ந்த பேரறிவையும் ஆன்மீக தத்துவத்தையும் உள்ளடக்கியுள்ளது. இந்தப் பேரறிவுக்கு தேவைப்படும் சக்தியானது இறைவன் எனப்படும் இயற்கையில் இருந்து பெறப்படுகிறது. இங்கு இறைவன் என்பவன் என்றும் அழியாத பிரபஞ்ச சக்தியாகிறான். ஒவ்வொரு மனிதனிதும் உணர்வுகளையும் உள்ளத்தையும் இதன் மூலம் உணர்ந்து கட்டுப்படுத்தக் கூடியதாகவிருக்கிறது.

இப்பூவுலகில் வாழும் உயிரினம் இயங்கும் இயந்திரம் போன்றது. இயந்திரம் செயல்பட சக்தி வேண்டும். அது போன்றதே மானிட உடலும். சக்தியை தீயவழிகளில் விரையம் செய்யும் போது செயலாற்றும் திறமை குறைகிறது. மனித உடலானது நோய்வாய்ப்படுகிறது. மனிதன் இறக்கும் போது சக்தி மறைகிறது. 'கீ' என்பது மனித உடலில் உள்ள உணர்வுகளின் பிரதான சக்தியெனவும் கருதலாம். கோபம், பொறமை, பயம், அகங்காரம், போன்ற உணர்வுகள் சக்தியை உள்ளடக்கும். செயலாற்றும் போது சக்தி விரையமாகும். கோபம், பயம் போன்றவையால் சக்தி கூடுதலாக விரையமாகிறது. சாந்தத்தின் போது சக்தியின் விரயம் குறைவு. யோகர் சுவாமிகள் "சும்மா இரு" என்று சொன்னது சக்தியை வீணாக விரையம் செய்யாதே என்பதை மறைமுகமாக எடுத்துச் சொன்னதைக் குறிக்கும். அதைத்தான் பல ஆன்மீகவாதிகளும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சீனர்கள் "சீ" என்ற சக்திக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளாக அதைப்பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார்கள். பலவிதமான முறைகளில் சக்தியை மனித உடலில் பிரயோகிக்கலாம் எனக் கற்றுவைத்திருக்கிறார்கள். 4,000 ஆண்டுகளுக்கு முன் மஞ்சள் பேரரசர் காலத்தில் இருந்து உளளூர் வைத்திய நூலில் 32 முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. போர்க்கலைகள் பயில்வோர்கள் தம் மனதை ஒரு நிலைப்படுத்தி சக்தியை பிரயோகிப்பர்.

## ஒளிவட்டமான சக்தியின் படலம் (Aura)

ஒளியானது சக்தியின் மறு ரூபம். ஒவ்வொரு ஒளியின் நிறத்துக்கும் ஒரு பெறுமானமுள்ள சக்தியுண்டு. குறைந்த அலை எண்ணையுள்ள ஒளிக்கதிரின் நிறம் கூடிய சக்தியைக் கொண்டது என்கிறது பௌதீகம். உயிர்வாழ்பவற்றைச் சுற்றியுள்ள சக்தியை உள்ளடக்கிய ஒளிவட்டமான படலத்தை ஆங்கிலத்தில் Aura என்பர். இது முட்டை (Oval) வடிவமானது. இப்படலம் மாறும் தோற்றமுடையது. சிலரிடம் பல அடிகள் தூரம் வரையில் இப்படலத்தின் சக்தியை உணரலாம்.

சக்திவாய்ந்த காந்தத்தின் சக்தியானது வெகு தூரம் உள்ள இரும்புப் பொருட்களை தம்பால் இழுக்கவல்லது. அதே போன்று தியானமூலம் இத்தகைய உயர்ந்த சக்தியை உள்ளடக்கியவர்கள் தம் பார்வையாலும் தம்மைச் சுற்றியுள்ள சக்தியின் படலத்தாலும் மற்றவர்களை தம்பால் கவர்ந்து இழுக்கிறார்கள். சிலர் அவர்களை கண்டவுடனே மெய்மறந்து போய்விடுகிறார்கள். அவர்களை சுற்றியுள்ள சக்தியின் ஒரு பகுதி அந்த படலத்துக்குள் இருப்பவர்களின் நோய்வாய்பட்ட உடலை குணப்படுத்திறது. 1940ல் ருஷ்யாவைச் சேர்ந்த Semyon Kirlan என்பவர் Aura படலத்தை படம் பிடித்துள்ளார். ரெய்கியை ஆன்மீக முறைமூலம் வழிநடத்திச் செல்லும் முறையெனலாம். உடம்பில் நோய் இருப்பின் அப் பகுதிக்கு சக்தி வாய்ந்த கதிர்வீச்சைப் பாவித்து குணப்படுத்துவர். அது போன்று உயர் சக்திவாய்ந்த ஒலி அலைகள், அலை நீளம், குறைந்த சிவப்பு கதிர் வீச்சினைப் பாவித்து நோய்வாய்ப்பட்ட தசைகளை குணப்படுத்துவர். இது போன்று ரெய்கி முறையும் சக்தியினை சுற்றாடலில் இருந்து பெற்று, ரெய்கி மூலம் சிகிச்சை அளிப்பவர் நோயாளியின் உடலுக்குள் ஏழு சக்கராக்களினூடாக செலுத்துவார்.

ஒளியை மனக்கண் முன் கொண்டு வந்து உடலின் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒத்தடம் கொடுப்பதன் மூலம் நோயை குணப்படுத்தலாம். இதைபற்றி டெக்ஸசில் உள்ள புற்றுநோய் வைத்தியர் ஒருவர் ஆராய்ச்சி செய்து மிகபிரபல்யமான Getting Well Again என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

## பார்வை பார்த்தல்

இந்த முறை நமது ஊர்களில் சில கோயில் பூசாரிகளால் கடைப்பிடிக்கப்படுகிறது. அதற்கு பார்வை பார்க்கிறது என்பார்கள். நோய்வாய்ப்பட்டவர் பூசாரி முன் நின்றவுடன் தியானத்தில் சில நிமிடங்கள் மனதை ஒரு முகப்படுத்தியபின் திருநீறைப் பாவித்து உடம்பை தம் விரல்களால் தடவி பார்வை பார்ப்பார்கள். சில சமயம் வேப்பம் இலையையும் பாவிப்பதுண்டு. இதில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு வியாதி வெகு விரைவில் குணமாவதுண்டு.

## சக்கராக்கள்

மனித உடலில் ஏழு சக்கராக்கள் உண்டு. இந்த வழிகளினூடக பிரபஞ்ச சக்தியானது உடலுக்குள் புகுந்து நமக்குத் தேவையான சக்தியினைக் கொடுக்கிறது. சக்தியை உட்கொண்ட இச்சக்கராக்கள் பல அதிர்வெண் களை உடைய சக்தி அலைகளாக மாற்றி நமது உடல் திடகாத்திரமாக இருக்க உதவுகிறது. ஒவ்வொரு சக்கராக்களும் ஒவ்வொரு செயல்பாட்டினைக் குறிக்கும். தலையுச்சியில் இருப்பது ஏழாவது சக்கரவாகும். அதையடுத்து ஆறாவது சக்கரா நெற்றிக்கண்ணைக் குறிக்கும். இங்கு ஞானம் பிறக்கும் நிலையைக் குறிக்கும். அடிமட்டத்தில் உள்ள சக்கராக்கள் குறைந்த அதிர்வெண்களையுடைய சக்தி அலைகளை உட்கொள்கிறது. இவை உடலின் திடகாத்திரத்திற்கு இவை அவசியம். தீய எண்ணங்களும் செயல்பாடுகளும் சக்தியின் தூய்மையை கெடுக்கிறது. இதனால் தேக ஆரோக்கியம் கெடுகிறது. இதனை ரெய்கி முறை மூலம் குணப்படுத்தலாம். சரிவர இயங்காத சக்கராக்களை குணப்படுத்துவதும் ரெய்கியின் செயல்பாடாகும்.

ரெய்கி ஒரு போதும் தீயதை செய்யாது. எவருக்கும் தேவைக்கேற்ப அது தன்னை சரிசெய்து கொள்ளும் வல்லமை படைத்தது. ரெய்கி செய்பவரின் சக்தியானது ரெய்கி செய்வதினால் விரையமாகாது. ரெய்கி மூலம் இருவரும் பயன் பெறுகிறார்கள். ஒருவரை குணப்படுத்துவதன் மூலம் ரெய்கி செய்பவரின் சக்தியும் அதிகரிக்கிறது. அதுவுமன்றி ஒரு இன்பகரமான சுற்றாடலை உணரமுடிகிறது. ரெய்கியை படிப்பதற்கு அறிவாளியாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. தியானம் தெரிந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ரெய்கி மூலம் குணப்படுத்துவது ஒருவரின் திறமையிலும் ஆர்வத்திலும் நம்பிக்கையிலும் தங்கியுள்ளது. சிலருக்கு இது இலகுவாக வரக்கூடியது. மற்றவர்களின் மேல் பாவிப்பது மட்டுமன்றி தம்மிலும் ரெய்கியை பாவிக்கமுடியும். இது தான் இந்த முறையின் முக்கிய பயனாகும்.


ரெய்கி ஒரு மதமல்ல. இது புனிதமானது. இயற்கையுடன் தொடர்புள்ளது. நீங்கள் நம்பிக்கை வைத்திருந்தாலும் இல்லாவிட்டாலும் அது செயல்படக்கூடியது.

இதை சிலர் நம்புவதில்லை. ரெய்கி முறையினைப் பாவித்து உடலில் நோய்கள் எந்தெந்தப் பகுதியில் உண்டு என்பதை அறிய முடியும். சிகிச்சை பெறுபவர் கண்களை மூடிக் கொண்டால் சிகிச்சை செய்பவர் தனது விரல்களை உடலில் தொடும்போது விதம் விதமான வர்ணங்கள் தோன்றுவதை உணரலாம்.

ரெய்கி சிகிச்சை முறை தமிழ்நாடு, சிறீலங்கா, கனடா, மற்றும் பல மேற்கத்திய நாடுகளில் பிரபல்யமாகி வருகிறது. இம் முறைக்கு நம்பிக்கை முக்கியம்.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■



# சமையலறையும் நாமும்

- வி. லோகன் -

‘தாய்வீடு’ வாசகர்களுக்கு வணக்கம். நாம் அன்றாடம், அறிந்த விடயங்களில்தான் அதிகம் அசட்டையீனமாகக் காணப்படுகின்றோம். அதுமட்டுமன்றி எமது தவறுகளை மற்றவர்கள் சுட்டிக்காட்டும் வேளையில்தான் எமக்குத் தவறு என்பதுகூடத் துலங்குகின்றது. அண்மைய காலங்களில் நான் அதிகம் அக்கறை கொள்வது, எவ்வாறு எமது வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பது தான். ஏனெனில் எமது வருங்காலச்சந்ததிக்கு நாம்தான் முன்னோடிகள். அந்தவகையில் இம்மாத இதழில் சமையலறையினை எவ்வாறு சுத்தமாக வைத்திருப்பதென்பது பற்றி எனது கருத்துக்களைப் பகிர்ந்துள்ளேன், நிட்சயம் பயன்படும் என்ற நோக்கோடு.

சமையலறையை வீட்டின் இதயம் என்று கூட கூறலாம். நாம் அங்கு சமையல் செய்கிறோம் குடும்பமாக உட்கார்ந்து சாப்பிடுகிறோம், சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்து கொண்டு வேடிக்கையாக பேசிபொழுது போக்குகிறோம், சில சமயம் வீட்டு பாடம் செய்கிறோம் மற்றும் இது போல் பல எண்ணிக்கையிலான விடையங்களில் ஈடுபடுகிறோம். ஒரு ஒழுங்கு இல்லாத சமையலறையில் இருந்து நாம் சமைக்கவோ மற்றும் சாப்பிடவோ முடியாது. பொருள்கள் தாறுமாறாக குவியலாக கிடக்கும் சூழ் நிலையில் நாம்வேடிக்கையாக பேசி மற்றவர்களை மகிழ்விக்க முடியாது. ஆகையால் சமையலறையை ஒழுங்கான முறையில்வைப்பது நம் முக்கிய கடமையாகும்.

சமையலறையை ஒரு நாளிலேயோ அல்லது ஒரு பகுதி நேரத்திலேயோ சீர்படுத்தி விட முடியாது. உங்கள் சமையலறை சீர்குலைந்து போய் இருந்தால் அதை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு நாளைவிட நிச்சயம் கூடுதல் நேரமாகும். பொறுமையுடன் முதலில் சிறிய சிறிய வேலைகளுக்கு நேரம் ஒதுக்கி அவற்றை செய்து முடியுங்கள். ஒவ்வொரு வேலையாக முடிய நீங்கள் இன்னொரு வேலையை செய்து முடிக்க உற்சாகத்துடன் ஆயத்தமாவீர்கள். எல்லா வேலைகளும் முடிந்த பின் உங்கள் சமையலறை ஒழுங்காக காட்சியளிக்கும். அதற்கு பிறகு குழப்நிலை இல்லை என்பதால் நீங்கள் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியாக கழிக்க முடியும்.

உங்கள் dish washerலிருந்து அனைத்தையும் நீக்கிவிடுங்கள். உங்கள் dish rackலுள்ள சுத்தமான உணவு பாத்திரங்களை வெளியே வைத்துவிட்டு, dish rackஐ counterக்கு அருகில் நகர்த்துங்கள். பின்னர் ஒரு காலியான dish panஐ sinkன் கீழ் வையுங்கள். இப்படி தொடர்ந்து சுத்தம் செய்யுங்கள்.

இப்போது counter topகள் மீது உங்கள் பார்வையை செலுத்துங்கள். அவை காகிதங்கள், கெட்டு போன உணவுகள் மற்றும் நீங்கள் வாரக்கணக்கில் அல்லது மாதக்கணக்கில் பயன்படுத்தாத உபகரணங்கள் முதலியவைகளுடன் கண்டபடி கிடக்கும்; குவியலாக காட்சியளிக்கிறதா? அவை குப்பை கூளமாக கறைபிடித்து காணப்படுகிறதா? அவற்றை சிறிய சிறிய பகுதியாக வெளியே எடுத்து ஒரு மேசை அல்லது ஏதாவது மேற்பரப்பின் மீது வையுங்கள். கெட்டு போன உணவுகளையும் சமையல் தட்டுகளையும் Dish washerல் போடுங்கள். உபயோகமற்ற தபால்களை குப்பை கூடையில் போடுங்கள் விலை ரசீதுகளை படிக்கும் அறையில் வையுங்கள். மற்ற நானாவிதமான பொருள்களையும் தனியாகப் பிரித்து அதனதன் பொருத்தமான அறைகளுக்கு கொண்டு செல்லுங்கள். பின்னர் வெற்று counter topஐ நோக்குங்கள் உங்களுக்கு பிடித்தமான ஏதாவது lysol போன்ற cleanerஐ தேர்ந்தெடுங்கள். ஒரு spray cleaner அல்லது ஒரு bleach cleanerஐ பயன்படுத்தி, அதை spray பண்ணுங்கள். ஒரு துணி கொண்டு பின்புறத்திலிருந்து, முன்புறம் வரை அனைத்தையும் துடைத்து எடுத்து விடுங்கள். சிறுதுண்டுகளையும், துணுக்குகளையும் பெருக்கி, குப்பை கூடையில் போடுங்கள். இப்போது தேவையான பொருள்கள் மட்டும் counterல் இருக்கும்படி விடுங்கள். coffeemaker போன்ற சிறிய உபகரணங்களை இப்போது அதன் மீது வைக்கலாம்.

கெட்டுபோன உணவு நிரம்பி உங்கள் dish washer மோசமாக காட்சியளித்தால், அதில் நிறைய தண்ணீரை ஓடவிடுங்கள். Detergentஐ அதில் போட்டு, அதிக அளவு தண்ணீர் விசையுடன் ஓடும்படி செய்யுங்கள். நீங்கள் drycycleஐ பயன்படுத்த வேண்டியதில்லை ஏனென்றால் உங்கள் dishes மிகவும் உஷ்ணமாக இருக்கும். Dish washer வேலை முடிந்ததும், கதவை திறந்து dishes குளிர்ச்சி அடைய விடுங்கள். பின்னர் அவற்றை வெளியேற்றுங்கள். சமையல் தட்டுகள் சுத்தமாக்கப்பட்டு உங்கள் dishwasher காலியானதாக இருந்தாலே போதும், உங்கள் சமயலறையின் பெரும் பகுதியை நீங்கள் ஒழுங்கு படுத்தி விட்டீர்கள். அதற்கு பிறகு உங்கள் dishpanஐ sinkல் வைத்து தண்ணீர் விட்டு கழுவிச் சுத்தம் செய்யுங்கள். அவை விரைவாக உலரும்படி விடுங்கள். பின்னர் இனி வரும் உணவுகளை சேகரிக்க dish panஐ sinkன் கீழ்வையுங்கள்.

இப்போது counter மீதுள்ள உங்கள் சமையலறை உபகரணங்கள் மீது உங்கள் பார்வையை செலுத்துங்கள். நீங்கள் எப்போதாவது தான் பயன்படுத்தும் அதிக எண்ணிக்கையிலான உபகரணங்கள் அங்கு அழுக்கடைந்து மற்றும் சமையல் கறைபடிந்து காணப்படுகிறதா? அவைகளில் இனிமேல் நீங்கள் பயன்படுத்த போகிற ஒவ்வொன்றையும் சரியாக மதிப்பிடுங்கள். உங்களுக்கு தேவையில்லாததை நன்கொடையாக கொடுத்துவிடுங்கள் அல்லது விற்றுவிடுங்கள். உங்கள் சமையலறை உங்களுக்கு பிடித்தமான பயனுள்ள உபகரணங்களுடன் தான் காட்சியளிக்கவேண்டும். குப்பை கூளங்களுடன் காட்சியளிக்க கூடாது.

இப்போது உங்கள் sinkஐ கவனியுங்கள். எவ்வளவு கறைபடிந்து அது காணப்படுகிறது? ஒரு steel wool soap pad கொண்டு அதை தேய்த்துக் கழுவி சுத்தமாக்குங்கள். உங்களிடம் உள்ளது porcelain sink என்றால் ஒரு steel wool padக்கு பதில் ஒரு மிருதுவான abrasiveஐ பயன்படுத்துங்கள். உங்கள் கைவசம் ஒரு cleaner இல்லை என்றால் உங்கள் sinkல் சிறிதளவு baking sodaவை தூவுங்கள். பின்னர் ஒரு ஈரமான துணிகொண்டு தேய்த்துச் சுத்தம் செய்யுங்கள். முழு sinkஐயும் நீங்கள் சுத்தம் செய்துமுடித்த பின் கீழேயுள்ள கழிவு நீர்க்குழாயை தண்ணீரால் அலசி சுத்தம் செய்யுங்கள். பின்னர் faucet மற்றும் sinkன் உட்பகுதியை window cleaner மற்றும் ஒரு உலர்ந்த துணி கொண்டு சுத்தம் செய்யுங்கள். உலர்ந்தவுடன் உங்கள் sink பளபளப்புடன் மின்னும்.

உங்கள் cabinetகள் மீது உங்கள் பார்வையை செலுத்துங்கள். அவை சுத்தமாக உள்ளனவா? அவை மீது கரிபடிந்திருந்தால், ஒரு cleaner மற்றும் rag கொண்டு அவற்றை துடைத்து சுத்தம் செய்யுங்கள் அதற்கு பிறகு அவை எவ்வளவு அழகான வித்தியாசத்துடன் காட்சியளிக்கிறது மற்றும் rag எவ்வளவு அழுக்கடைந்து காணப்படுகிறது என்பதை பாருங்கள்.

உங்கள் பெரிய உபகரணங்களின் முகப்பு பகுதியை இப்போது நாம் பார்ப்போம்.

fridgeல் கைவிரல் ரேகைகள் எப்படியும் பதிந்திருக்கும். ஒவ்வொரு உபகரணத்திலும் கொஞ்சம் window cleanerஐ ஒரு ஐந்து நிமிடங்கள் spray பண்ணுங்கள். பின்னர் ஒரு துணி கொண்டு நன்கு துடைத்து எடுத்துவிடுங்கள். சிறிய கீறல்களில் அடைத்துக் கொண்டிருக்கும் சிறு துணுக்குகளையும் அகற்ற மறந்துவிடாதீர்கள். பின்னர் உங்கள் சமையலறையில் உள்ள stove, dish washer, மற்றும் வேறு பெரிய உபகரணங்களின் வெளிப் பக்கங்களை நான் குறிப்பிட்டப்படி சுத்தம் செய்யுங்கள்.

இப்போது உங்கள் சமையலறையில் உள்ள table மற்றும் chairகளை பார்ப்போம். அவற்றின் மீதுள்ள அழுக்குகளை 15 நிமிடங்களுக்கு சற்று மேலான நேரத்திலேயே ஒரு rag மற்றும் ஒரு bottle cleaner கொண்டு அகற்றிவிட முடியும். chairல் கீழே உள்ள குறுக்கு சட்டங்களிலிருந்து இருக்கை வரை spray பண்ணுங்கள். அது 2 அல்லது 3 நிமிடங்கள் உலரவிடுங்கள். பின்னர் chairஐ துணி கொண்டு நன்றாக துடையுங்கள். அது சுத்தமாகவும் பளபளப்புடனும் மின்னுவதை பாருங்கள். இப்படி ஒவ்வொரு chairஐயும் சுத்தம் செய்யுங்கள். பின்னர் table கால்கள் மீது spray பண்ணுங்கள். அவை உலர்ந்த பின் துணி கொண்டு துடைத்து பளபளப்பாக்குங்கள். இப்போது உங்கள் chairகளும் மற்றும் tableம் உட்கார்ந்து சாப்பிடுவதற்கு ஏற்ற முறையில் அழகான எழிலுடன் காட்சியளிக்கும்.

இப்போது தரைமீது உங்கள் பார்வையை செலுத்துங்கள். அது மிக இருண்டு காணப்படுகிறதா? தரையை ஒரு துடைப்பத்தால் பெருக்குங்கள். சுவருக்கு முன்னால் உள்ள பொருள்களை வெளியே இழுத்து, இடைப்பட்ட பகுதியை நன்கு பெருக்குங்கள். ஒரு சாதாரண துடைப்பத்தை பயன்படுத்தி துப்பரவு செய்தாலே போதும். குப்பைகளை பெருக்கி குவியலாக ஒதுக்குங்கள். அதற்கு பிறகு அவற்றை குப்பைத்தட்டுகளில் எடுத்து எளிதாக வெளியே கொட்டிவிடலாம். இப்பொழுது ஒரு mopஐ எடுங்கள். அதுதரை மெழுகும் துணி குஞ்சமாகவோ அல்லது ஒரு swifter mop ஆகவோ இருக்கலாம். தரையில் தண்ணீர் விட்டு நனைத்ததும் துடைப்பானை கொண்டு அழுக்கை எல்லாம் துடைத்து எடுத்துவிடுங்கள். இந்த தரை மெழுகும் வேலையை நீங்கள் மிக சரியாக செய்யாவிட்டாலும், ஓரளவு செய்தாலே போதும். தரை உலர்ந்த பின் நன்றாக காட்சியளிக்கும்.

இப்பொழுது உங்கள் sinkன் கீழ் பகுதி. பெரும் பாலோர் அங்குதான் பற்பல cleaning பொருள்களை வைப்பார்கள். சிலர் குப்பை canகளையும் மற்றும் இன்னும் பலர் உபகரணங்களையும் அங்கு வைப்பது வழக்கம். Cleaning பொருள்கள் பயன்படுத்தாமல் உலர்ந்து போய் பழையதாகி இருந்தால் அவற்றை வெளியே வீசி எறிந்து விடுங்கள். நீங்கள் அடிக்கடி உபயோகப்படுத்தும் பொருள்களை முன் பகுதியிலும் மற்றும் எப்பொழுதாவது பயன்படுத்துவதை பின் பகுதியில் வைத்து உங்கள் cabinetஐ உங்களுக்கு மிகவும் பொருத்தமான முறையில் ஒழுங்கு படுத்துங்கள்.

அடுத்து நாம் கவனிக்க வேண்டியது உங்கள் dish cabinetகள், அவற்றில் பல உங்களிடம் இருந்தாலும், அனேகமாக அவற்றில் உள்ள ஒவ்வொன்றையும் நீங்கள் பயன்படுத்த மாட்டீர்கள். நீங்கள் இதில் மனிதத்தன்மை இல்லாத நேர்மையுடன் நடக்கவேண்டியது அவசியம். அவற்றை நீங்கள் சமீபகாலமாக பயன்படுத்தவில்லை என்றால் அனேகமாக அவை உங்களுக்கு தேவை இருக்காது தேவையுள்ள வேறுயாருக்காவது அவற்றை நீங்கள் கொடுத்து விடமுடியும். உங்கள் பகுதியிலுள்ள ஒரு free cyle குழுவினருடன் (http://www.freecycle.org/) சேர்வது பற்றி யோசியுங்கள். உங்கள் வீட்டில் அது உபயோகத்தில் இல்லாமல் இருந்தாலும், அடுத்த இடங்களில் அது உபயோகத்துடனும் மற்றும் உயிரோட்டத்துடனும் இருக்கும். உங்கள் dishகளை 8 முதல் 12 சிறிய, சிறிய பகுதிகளாக நீக்கி குறைத்துவிடுங்கள். செயற்பாட்டுக்கு போதுமான இடம் உங்களுக்கு இல்லாமல் இருந்தால், உங்கள் cabinetகளை திறந்து வைத்தாலே போதும். உங்கள் குடும்பத்தினரின் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் உங்கள் shelvesகள் மிக பயனுள்ள வகையில் இருக்கவேண்டும்.

அடுத்தது உங்கள் spice cabinetஐ சரிப்படுத்த வேண்டும். நான் சமீபத்தில் என்னுடைய spice cabinetஐ கவனித்தேன். அங்கு பயன்படுத்தத் தேவையில்லாத எவ்வளவு பொருள்கள் இருக்கின்றன என்பதை கண்டு நான் திகைப்படைந்தேன். நீங்கள் பயன்படுத்தாமல் ஒதுக்கி வைத்துள்ள அல்லது காலாவதியான பொருட்களை எல்லாம் வெளியே எறிந்துவிடுங்கள். அதற்கு பதில் சிறிய bottleகளை அடுக்கி வையுங்கள். உங்கள் cabinetல் போதிய இடவசதி இருந்தால் lazy-susansகளை பயன் படுத்துங்கள்.

கடைசியாக உங்கள் appliance cabinetஐ சோதனை செய்யுங்கள். உங்களிடம் உடைந்த உபகரணங்கள் உள்ளது என்றால் அவற்றை வெளியே எறிந்துவிடுங்கள். நீங்கள் அடிக்கடி பயன்படுத்துவதை முன் புறத்திலும் மற்றும் எப்போதாவது பயன்படுத்துவதை பின் புறத்திலும், ஆனால் கைக்கு எட்டிய தூரத்தில் வையுங்கள்.

நன்றி வாசகர்களே, சுத்தம் சுகம்தரும் என்பதுமட்டுமல்ல எமது மனதுக்கும் மகிழ்ச்சி தரும் என்று கூறி இனிவரும் இதழ்களில் இணைந்துகொள்வோம்.


karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

TRAFFIC TICKETS!

● SPEEDING ● STOP SIGN
● RED LIGHT ● ACCIDENT
● CARELESS ● TICKETS

TRAFFIC TICKETS $100 மட்டுமே



CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)

# உங்களுடைய நலனுக்காக பணிபுரியும் ஒரு காப்புறுதி முகவரைத் தேர்வு செய்யுங்கள்

## காப்புறுதி நிறுவனத்தின் நலனுக்காக பணிபுரிபவரை அல்ல...

ஒரு ஆயுட்காப்புறுதியைத் தேர்வு செய்வதற்கு முன் சரியான முறையில் திட்டமிடுங்கள். உங்களுக்கு எவ்வளவு தொகைக்கு ஆயுட்காப்புறுதி தேவை? எவ்வளவு தொகையை உங்களால் செலுத்தமுடியம்? எவ்வளவு காலத்துக்கு செலுத்தமுடியும்? மாதாந்த கட்டுத்தொகையில் மாற்றம் ஏற்படுமா? என்பவற்றை சரியான முகவரின் ஆலோசனையுடன் திட்டமிட்டு தேர்வு செய்யுங்கள். இதனால் நீங்கள் அடிக்கடி காப்புறுதியை மாற்றவேண்டி வராது.

- நிதி மற்றும் காப்புறுதித் துறையில் 25 ஆண்டுகால கனடிய அனுபவம்
- 3000க்கும் மேற்பட்ட பூரண மனத்திருப்பதியுடன் கூடிய வாடிக்கையாளர்கள்
- பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களுடனான சேவை
- 40க்கும் மேற்பட்ட தரமான காப்புறுதி முகவர்களை உருவாக்கியவர்
- அனுபவம், அறிவு, நம்பிக்கையுடன் கூடிய சேவை

-digi Media-



ROYAL BROKERS
Corporation

# Siva Kandiah

Insurance & Investments Broker

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

# Royal Brokers Award Ceremony 2009



Wednesday December 30, 2009 Toronto

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664

ROYAL BROKERS Corporation


from the firm foundations of creative photos
la photographie est un art
digimedia creations
karuna photography
• Wedding Photography
• Bridal Portrait Sessions
• Custom Reception Slideshows
• DVD Slideshows
• Custom Designed Albums
• Parent Albums
• Digital Proofs
• Digital Retouching
• Framed Prints & Canvases
facebook
www.facebook.com/digimediaphoto
elegant memorable real
www.digimediaphoto.com
416.467.4952

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3


Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.



# கடந்த மாதத்தில்...
# நினைவில் நிற்கும் சில நிகழ்வுகள்...



செந்தியின் தமிழன் வழிகாட்டி வர்த்தகக்கைநூல் 2010 வெளியீட்டு நிகழ்வின்போது

**Scarborough Rough River** தொகுதி **NDP** கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வின்போது. (17-01-2010)

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் (கனடா வளாகம்) 4வது ஆண்டுவிழா நிகழ்வின்போது. (31-01-2010)





**Neethan Shan- History in the Making** நிகழ்வின்போது.






கனடியத் தமிழர் பேரவையின் பொங்கல் விழா விருந்து நிகழ்வின்போது



ஹெய்ட்டியில் பாதிப்பிற்குள்ளான மக்களுக்காக கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் நடாத்திய நிதி சேகரிப்பு நிகழ்வின்போது.




**East Town Banquet Hall**இல் இடம்பெற்ற சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தின் கலைவிழா நிகழ்வில். (16-01-2010)





திரு. குமார் புனிதவேல் அவர்கள் ஆறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாறு (ஆங்கிலத்தில்) நூல் நூல் வெளியீட்டு நிகழ்வில் (23.01.2010)










கனடியத் தமிழ் மாணவர் சமூகமும் கனடியத் தமிழர் சமூகமும் **Everest Banquet & Convention Center**இல் ஏற்பாடு செய்திருந்த திரு. வேலுப்பிள்ளை அவர்களின் இதய வணக்க நிகழ்வில். (10-01-2010)

**புகைப்படங்கள்: www.ninaivukal.com**

இப் பகுதியில் உங்கள் விழாக்களின் படங்களும் இடம்பெறவேண்டுமாயின் விழா யாரால், எங்கு, எப்போது நடைபெற்றது என்னும் விபரங்கள் மற்றும் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

## உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும் www.inayam.net

# உள்ளங்களின் நுண்ணிய உணர்வெனும் அன்பு



உதயணன்

அன்பு என்பது ஓர் அகண்ட சமுத்திரம். அதில் எல்லோரும் நீராடலாம். ஒருவர்மீது ஒருவர் ஆழமாக வெளிப்படுத்தக்கூடிய நுண்ணிய உணர்வே அன்பு. அந்த அன்பு எனப்படுவது தொடர்புடைய உறவுகளிடத்து ஏற்படும் உருக்கமான உணர்வு; அருமையான அனுபவம்; இனிமையான இணக்கம். அது காதலர்களிடம் காதலாகும். பெற்றோரிடம் பணிதலாகும். பிள்ளையிடம் பாசமாகும். நண்பர்களிடம் நேசமாகும். உறவுகளிடம் பரிவாகும். உள்ளங்கள் ஈரமாகும். ஆனபடியால் காதலர் தினத்தை ''அன்பானவர்கள் தினம்'' என்றும் அழைக்கலாம்! உளவியல் ஆய்வுகள், காதல் என்பது ஒரு ''தோழமை அன்பு'' என்கின்றன. ஆங்கிலத்திலும் ''லவ்'' என்ற வார்த்தை, உறவுக்கு ஏற்றபடி அர்த்தப் படுகின்றது. ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படும் காதல் எனப்படும் அன்பை 'இன்டர்பேர்சனல் லவ்' என்கிறார் ஓர் அறிஞர். நியூரோ சயன்ஸ் வல்லுனரான மருத்துவ மேதை ஆன்றூ நியூபெர்க், 'காதல் என்பது மனித இனத்துக்கு ஒரு மருந்து போன்றது. அது இல்லாவிட்டால் மனித இனமே அழிந்து போகும்' என்கிறார்.

பண்டைய சீனர் காதலை, ஏற்றுக் கொள்ளுதல், உணர்ந்து கொள்ளுதல், புரிந்து கொள்ளுதல் ஆகிய மூன்று அழகு உணர்ச்சிகளும் ஒன்றாகக் கலந்து சங்கமித்து நிறையும் இதயம் என்றனர். காதல் என்பது ஆன்மாவை அறிதல், உள்ளத்தை உணர்தல், அழகை ஆராதித்தல் ஆகியவற்றின் கூட்டணி என்றனர் இன்னும் சிலர். அதே நேரத்தில், புலனுணர்வு சார்ந்த விருப்பத்தை, 'உடல்மேல் வந்த காதல்' என்றும் சொல்லி வைத்தனர்.

ஒரு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் நமது சமூகத்தில் 'காதல்' என்னும் வார்த்தை ஒரு 'கெட்ட' வார்த்தையாகக் கருதப்பட்டது. அந்தக் காலத்தில் ''காதல்'' என்றொரு தமிழ் மாத சஞ்சிகை வெளிவந்தது. அதன் ஆசிரியர் அரு. ராமநாதன் என்று ஞாபகம். அது 'ஆனந்த விகடன்', ''கல்கி'' போன்ற ஒரு சாதாரண பத்திரிகைதான். அதனைப் படிக்கச் சில வீடுகளில் பெற்றோர் தடை விதித்திருந்தார்கள். அந்தத் தடைக்குப் பத்திரிகையின் பெயரே காரணம்.

ஆனால் இன்று, காதலிப்பது, காதலனும் காதலியும் கைகோர்த்துக் கொண்டு திரிவது, பின்னர் கல்யாணம் செய்து கொள்வது அல்லது கைகளை உதறிவிட்டுப் போவது போன்ற அனைத்தையும் ஏற்றுக் கொள்வதோடு, பெரும்பாலான உலக நாடுகளிலுள்ள மக்கள் குதூகலமாகக் கொண்டாடும் காதலர் தினத்தை பலரும் ஏற்று ஆரவாரிப்பது அவரவரின் கலாசாரம் விரிவடைந்து வருவதையே காட்டுகின்றது என்று ஒரு சாரார் கூறுகின்றனர். அதே நேரத்தில், சில இந்தியத் தலைவர்களும் இந்தியாவில் சிவசேனா போன்ற இயக்கங்களும் காதலர் தினத்தைக் கொண்டாடுவது நமது கலாசாரத்தில் விழுந்த ஒரு பெரிய ஓட்டை என்று கடுமையாகக் கண்டிக்கின்றனர்.

உலகமெலாம் ஆண்டுதோறும் பெப்ரவரி 14ஆம் நாள், Valentine's Day என்னும் ''காதலர் தினம்'' கொண்டாடப்படுகின்றது. எல்லாச் சடங்குகள், சம்பிரதாயங்கள், கொண்டாட்டங்களுக்கும் ஒரு கதையும் ஒரு காரணமும் சொல்வார்களே! காதலர் தினத்துக்கும் சில கதைகளும் சில உபகதைகளும் இருக்கின்றன.

''Valentine's Day'' என்னும் காதலர் தினம் பண்டைய ரோமானியப் பேரரசில் ஆரம்பமானது. ஜூனோ என்பவள் ஆண் பெண் தெய்வங்களின் அரசியாவாள். அவளே பெண்களுக்கும் திருமணங்களுக்கும் அதிபதி என அறியப்பட்டாள். அவளை மதிப்பதற்கும் மகிழ்விப்பதற்கும் பெப்ரவரி 14ஆம் நாள் விடுமுறை நாளாக்கப்பட்டது. அதுவே காதலர் தினமாக நாளடைவில் மாறிற்று என்பர். அடுத்த நாளான பெப்ரவரி 15இல் ''ஓநாய் விழா'' கொண்டாடப்பட்டது.

இன்னொரு கதை. அந்தக் காலத்தில் ரோமானிய நாட்டில் ஆட்டு மந்தைகளுக்கும் சிறு குழந்தைகளுக்கும் ஓநாய்கள் அச்சுறுத்தலாக இருந்தன. ஓநாய் இனத்தின் அதிபதி என்று உருவகப்படுத்தப்பட்ட பெண் ஓநாயையும் ஏனைய தெய்வங்களையும் சாந்தப்படுத்துவதற்காக பெப்ரவரி 15இல் ஒரு விழா எடுப்பது வழக்கம். அதற்கு முதல் நாளான பெப்ரவரி 14 மாலையில் எல்லோரும் ஒன்று கூடுவார்கள். அதுவரை வாலிபர்களும் இளம் பெண்களும் தொடர்பு ஏதுமில்லாமல் தனித்தனியாகவே வாழ்ந்து வந்திருப்பார்கள். அன்றைக்கு எல்லா இளம் பெண்களின் பெயர்களையும் தனித்தனிச் சீட்டுகளில் எழுதி ஒரு சாடியில் போடுவார்கள். ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு சீட்டை எடுத்து, அதில் காணப்படும் பெயருள்ள பெண்ணுடன் அன்று தோழமையாக இருப்பான். அந்தத் தோழமை



சிலருக்கு அன்றுடன் முடியலாம். சிலருக்குச் சில நாட்களோ ஒரு சில வருடமோ தொடரலாம். சிலர் சில நாட்களுக்குப் பின்னர் காதல் வயப்பட்டுத் திருமணம் செய்து கொள்வார்கள். அந்த பெபரவரி 14 இப்படிக் காதலர் தினமாக மாற்றிற்று என்று வேறொரு சாரார் கூறுவர்.

இருங்கள், இன்னுமொரு கதை இருக்கின்றது. இதுதான் பலரால் பேசப்படும் கதை. ஆனால் இதிலும் சில சம்பவங்களில் முன்னே பின்னே ஓரிரு முரண்பாடுகள் காணப்படுகின்றன. கிறிஸ்துவுக்கு பின் 270க்கு முன்பின்னாக ரோமானிய இராஜ்ஜியத்தின் பேரரசனாக இருந்தவன் க்ளோடியஸ் என்பவன். அவனுடைய காலத்தில் ரோமானிய அரசு பல இன்னல்களையும் தோல்விகளையும் கண்டது. அதனால், அவன் பெரியதொரு இராணுவத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று கனவு கண்டான். அவன் ஒரு கொடுங்கோலன் என்பதால் மக்களின் அதிருப்திக்கும் வெறுப்புக்கும் ஆளாகியிருந்தான். எனவே மக்கள் எவரும் இராணுவத்தில் சேர முன்வரவில்லை. மன்னன் க்ளோடியஸ், ''ஓகோ, இவர்கள் வீடுகளில் காதலிகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டும் மனைவியரால் மகிழ்வடைந்து கொண்டும் இருப்பதால்தான் அவர்களைப் பிரிந்து இராணுவத்தில் சேர மறுக்கிறார்கள்'' என்று முடிவெடுத்து, தடாலடியாக ஒரு சட்டம் கொண்டுவந்தான். ''இனிமேல் யாரும் திருமணம் செய்யக் கூடாது'' என்பதுதான் அந்தச் சட்டம். அந்தச் சட்டத்தினால் ''அச்சச்சோ, வாழ்க்கையே போச்சப்பா!'' என்று வாலிபர்களும் யுவதிகளும் வயிறெரிந்த நேரத்தில்

புனித வாலண்டைன் என்னும் பாதிரியார் ஒருவர் இருந்தார். அவர் மனித நேயம் மிக்கவர். மக்கள் மகிழ்வாக வாழ வேண்டும் என்ற பரந்த மனம் கொண்டவர். ஏன், அவர் பொதுமக்களுக்காவே வாழ்ந்தவர் எனலாம். அவர் இரகசியமாக இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் திருமணம் செய்து வைத்தார். ஓர் அறையில் பாதிரியார், மணமகன், மணமகள் ஆகிய மூவர் மட்டுமே இருப்பார்கள். ஒரு மெழுகுவர்த்தி மெல்லிய ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும். திருமணச் சடங்குக்குரிய புனித வார்த்தைகள் மெல்லிய ஒலியில் ஓதப்படும். இப்படிப் பல திருமணங்களை நிறைவேற்றி வைக்கிறார் புனிதர் வாலண்டைன். ஒரு நாள்...!

ஓர் இரகசியத் திருமணம் நடந்துகொண்டிருந்தபோது இராணுவம் பாய்ந்தது. தம்பதிகள் தப்பிவிட்டனர். பாதிரியார் பிடிபட்டார். பாதிரியாரைச் சிறையில் அடைத்து மரண தண்டனை விதித்தான் மன்னன் க்ளோடியஸ்.

மக்கள் பாதிரியாரின் சிறைக்கூட யன்னலில் மலர்களையும் வாழ்த்து அட்டைகளையும் வீசியெறிந்து தங்கள் ஆதரவைத் தெரிவித்து ஆரவாரித்தனர். அவர்களில் ஒருத்தி அந்தச் சிறைக்கூடக் காவலரின் மகள். அவள் தந்தையின் உதவியுடன் அடிக்கடி சிறைக்கூடத்துக்கு வந்து பாதிரியாரை நேரில் சந்தித்து மணிக் கணக்காகப் பேசிக் கொண்டிருப்பாள். அவர்களுக்குள் ஓர் அன்னியோன்யமான அன்பு ஏற்பட்டது. இந்தச் சிறைக் காவலரின் மகளைப்பற்றிய தகவல்களில் சில பாடபேதங்களும் உண்டு. அவளுக்குப் பெயர் ஜூலியா என்றும், அவள் பார்வையற்றவள் என்றும், புனித பாதிரியார் வாலண்டைனின் பிரார்த்தனையால் பின்னர் பார்வையைப் பெற்றாள் என்றும் சில குறிப்புகள் கூறுகின்றன. கடைசியில் புனித பாதிரியார் வாலண்டைனின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டபோது, அவர் அவளுக்கு ஒரு துண்டுச் சீட்டை விட்டுச் சென்றார். ''உனது வாலண்டைனிடமிருந்து – அன்புடன்'' (''Love from your Valentine'') என்று அதில் எழுதியிருந்தது. அன்றைய தினம் கி.பி. 269 பெப்ரவரி 14!

சில நாடுகளில் காதலர்களின் தினம் என்ற அர்த்தத்தில் இத்தினம் கொண்டாடப் படுவதில்லை. பின்லாந்தில் பெப்ரவரி 14ஆம் நாள் ''நண்பர்கள் தினம்'' கொண்டாடப் படுகின்றது. இதனை பின்னிஷ் மொழியில் ''Ystävänpäivä'' என்று அழைக்கின்றார்கள். இதனை ஆங்கிலத்தில் ''Friends' Day'' என்று சொல்லலாம். அன்று நண்பர்கள் நினைவு கூரப்படுகின்றனர். மலர்கள், வாழ்த்து மடல்கள், விருந்துகள் நண்பர்களிடையே பரிமாறப் படுகின்றன. மொத்தத்தில் நாம் அனைவரும் நண்பர்களே என்ற சித்தாந்தம் சிந்தனையில் ஏற்றப்படுகின்றது. இதில் காதலன் காதலியும் அடங்கலாம். பின்லாந்தின் அயல்நாடான எஸ்தோனியாவிலும் பெப்ரவரி 14இல் ''நண்பர்கள் தினம்'' கொண்டாடப்படுகின்றது.

ஸ்கண்டிநேவிய நாடுகளான டென்மார்க்கிலும் நோர்வேயிலும் இத்தினம் பெரிய ஆடம்பரமாகக் கொண்டாடப்படுவதில்லை. மலர்கள், வாழ்த்து மடல்கள் பரிமாற்றத்தோடு தத்தம் சோடிகளுக்கு ஒரு விசேட உணவு கொடுப்பதுடன் முடிவடையும். சுவீடனில் ''அனைத்து இதயங்களின் நாள்'' என்ற பெயரில் பெப்ரவரி 14 கொண்டாடப்படுகின்றது. ஏனைய ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் பிரித்தானியாவைப் பின்பற்றி காதலர் தினத்தைக் கொண்டாடுகின்றார்கள்.

பெப்ரவரி மாதத்தைப்பற்றி ஸ்லோவெனியாவில் ஒரு பழமொழி உண்டு. ''வாலண்டைன் வேர்களின் திறவுகோல்களைக் கொண்டு வருகிறார்'' என்பது அதன் அர்த்தம். வசந்தத்தின் வருகையை அறிவிக்குமுகமாக இந்த மாதத்தில் விதைகள் வெடித்து நிலத்தைக் கீறிக்கொண்டு வெளியே வந்து சிரிக்கும். வேர்கள் உயிர்த்துத் தளிர்கள் துளிர்க்கும். மலர்கள் மலர்ந்து மங்களகரமான சூழ்நிலையை உண்டுபண்ணும். வயல்களிலும் திராட்சைத் தோட்டங்களிலும் வேலைகள் ஆரம்பமாகும். பறவைகள் வானத்தில் வட்டமடித்து கீச் கீச்சென்று இனிய ஒலியை எழுப்பித் தமது சோடிகளின் கவனத்தை ஈர்த்து இனப் பெருக்கத்துக்கு வழியமைக்கும். முன்னர் மார்ச் 12இல், ''விவசாய நாளா''க அல்லது அன்பின் அடையாளமாக, நேசத்தின் நினைவாக கொண்டாடப்பட்ட இந்தச் சிறப்பு நிகழ்வு, பெப்ரவரி 14க்குக் காதலின் நாளாக மாற்றப்பட்டது. வாலண்டைனை இங்கே வசந்தத்தின் பிதாமகன் என்றும் அழைப்பதுண்டு.

துருக்கியில் ''இனிய இதயங்களின் நாள்'' என்ற பெயரில் இதனைக் கொண்டாடுகிறார்கள். கவுதமாலாவிலும் எல் சல்வதோரிலும், அநேகமான தென் அமெரிக்க நாடு களிலும் ''காதலின், நட்புறவின் நாள்'' என்ற பெயரில் கொண்டாடுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் பொதுவாக பிரித்தானியாவையும் அமெரிக்காவையும் பின்பற்றி, தத்தம் நாடுகளுக்கேற்பச் சில மாற்றங்களுடன் கொண்டாடுகிறார்கள்.

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில், ஏனைய நாடுகளிலும் பார்க்க இந்தியாவில் எதிர்ப்பு அதிகம். 2001ஆம் ஆண்டில் ஆரம்பமான இந்த எதிர்ப்பு படிப்படியாக அதிகரித்து வருகின்றது என்றே சொல்லலாம். இந்துமத வாதிகள் இந்தக் காதலர் தினக் கொண்டாட்டம் மத, கலாசார அழிவுக்கு வித்திடுகின்றது என்று கூறுகின்றார்கள். இதன் காரணமாக அவ்வப்போது கைகலப்புகள் அடிதடிகள் எல்லாம் நிகழந்திருக்கின்றன.

சீனா, சிங்கப்பூர், தென் கொரியா நாடுகளில் பணத்தை அள்ளிக்கொட்டிச் செலவு செய்து பெரிய விழாவாக காதலர் தினத்தைக் கொண்டாடுகின்றனர். காதலர் தினத்தில் திருமணம் செய்து கொள்ளும் கலாசாரமும் பல நாடுகளில் வேகமாகப் பரவி வருகின்றது.

70ம் பக்கம் பார்க்க...

# சிந்திக்கச் சில நிமிடம்

- கதிர் துரைசிங்கம் -

திருமணம், பூப்புனித நீராட்டு, பிறந்தநாள், ஒன்றுகூடல் என்று பலவகை வைபவங்களை பெருஞ்செலவில் விமரிசையாகச் செய்கின்-




றோம். தலைக்கு இன்னும் சில டொலர்களை செலவு செய்து, அமர்ந்திருக்கும் மேசையிலே உணவு பரிமாறினால் உணவுக்காகத் தட்டை ஏந்தி வரிசையில் நீண்ட நேரம் நிற்கும் காட்சியைத் தவிர்க்கலாம்.

முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் ஆரம்பத்தில் பிரார்த்தனை. பின்னர் மதிய உணவு வழங்கப்படும். இந்த முழு நிகழ்ச்சியும் உங்கள் பிறகருமங்களுக்கு



இடையூறாகவும், உங்கள் நேரத்தை விரயம் ஆக்குவதாகவும் இருந்தால், ஆன்ம ஈடேற்றத்திற்காக நடைபெறும் பிராத்தனையில் மட்டும் கலந்துவிட்டுச் செல்லலாம்.

தொடர்பு சாதனங்களில் மின்னஞ்சல் வேகத்திற்கு நிகராக வேறு எதுவும் இல்லை. ஆனால், மின்னஞ்சலை பெறுபவர்கள் பார்க்க நேரமில்லாமலும், பார்க்க மறந்தும் விடுகிறார்கள். இதற்கு, மின்னஞ்சலை அனுப்பி



விட்டு பெறுபவருக்கு மின்னஞ்சல் அனுப்பியிருக்கிறேன் என்று கடிதம் ஒன்றை தபால் மூலம் அனுப்புவது நல்லது.

உங்களை அழைத்த திருமண வைபவங்களுக்கு அழைக்கப்பட்ட நேரத்திற்கு நீங்கள் போயிருந்தீர்களேயானால் உங்கள் வீட்டுத் திருமண வைபவம் ஆரம்பமாகும் போது அவர்களாவது அழைக்கப்பட்ட நேரத்திற்கு மண்டபத்தில் இருப்பார்களென்று எதிர்பார்க்கலாம்.

விழா நிகழ்ச்சி நிரலில் அங்குரார்ப்பண உரை, வரவேற்புரை, ஆரம்பஉரை, ஆசியுரை, வாழ்த்துரை, நட்புரை, பாராட்டுரை, தலைவர் உரை, சிறப்புரை, கௌரவஉரை, பிரதம விருந்தினர் உரை, நூலாசிரியர் அறிமுக உரை, நூல் அறிமுக உரை, வெளியீட்டுரை, ஆய்வுரை, விமர்சனஉரை, ஏற்புரை, நன்றியுரை, முடிவுரை என்று பிரிவு படுத்தாமல் வெறுமனே உரை என்று போட்டால் விழாவிற்கு வந்தவர்கள் உரைகளை இனங்கண்டு தரம்பிரித்து புரிந்து கொள்வார்கள்.

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■

# உள்ளங்களின்...

69ம் பக்கத் தொடர்ச்சி...

காதலர் தினத்தன்று கல்யாணம் செய்வதும், அன்றே இனிய இல்லறத்தை ஆரம்பிப்பதும் ஒவ்வொரு காதலர் தினத்திலும் தம்மைப் புதிய தம்பதிகளாக எண்ணித் திருமண நாளை நினவுகூர்ந்து கொண்டாடுவதும் இதயத்தை இனிப்பாக்கும் இதமான அம்சம் என்று எண்ணுகிறார்கள். தாய்லாந்து போன்ற சில நாடுகளில் சில மக்களிடம் வாக்கிய பஞ்சாங்கமும் கணித பஞ்சாங்கமும் செல்லுபடியாகாது. அங்கே காதலர் தினம்தான் முழு முகூர்த்த நாள். திருமணப் பதிவாளர்தான் பூணூல் போடாத புரோகிதர். காதலர் தினத்தன்று திருமணப் பதிவு அலுவலகங்களில் திருமணம் செய்யப் போகும் சோடிகள் நிரம்பி வழிவார்கள் என்றும், பல மணி நேரம் வரிசையில் காத்து நின்று திருமணம் செய்து கொள்வார்கள் என்றும் கூறப்படுகின்றது.

“காதலர் தினம்” என்பது ஒரு சிலரால் அமைதியாகக் கொண்டாடப்பட்டு வந்தது. வர்த்தகர்கள்தாம் தமது இலாபம் கருதி இதனை ஊதிப் பெருக்க வைத்து, சாமானியரைச் சுரண்டி முதலாளிகள் முதலைகள் ஆகின்றனர் என்ற ஓர் ஆதங்கமும் நிலவுகின்றது. நத்தாருக்கு அடுத்தபடியாக காதலர் தினத்தில் கோடிக் கணக்கான வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் “ரோமியோவும் ஜூலியற்றும்” இத்தாலியில் வெரோனா என்ற நகரில் வாழ்ந்தனர். ஒவ்வொரு காதலர் தினத்திலும் ஜூலியற்றுக்கு 1000 கடிதங்கள் வரை இன்னமும் அங்கே வருகின்றனவாம்! இது எப்படி இருக்கு?

கோடிக் கணக்கான ரோஜாப் பூக்களும் இதற்காக விற்பனையாகின்றன. ஒவ்வொரு காதலர் தினத்திலும் உலகம் முழுவதிலும் 50 மில்லியன் ரோஜாப் பூக்கள் பரிமாறப்படுகின்றன. ரோஜா மலர்கள் பல நிறங்களில் கிடைக்கின்றன. காதலர் தினத்தன்று எந்த நிற ரோஜாவை காதலனுக்கு அல்லது காதலிக்குக் கொடுக்க வேண்டும், அதற்கு என்ன அர்த்தம் என்றும் ஒரு வரைமுறை எங்கிருந்தோ எப்படியோ உருவாகியுள்ளது.

- சிவப்பு நிற ரோஜா = காதல் மற்றும் ஆழ்ந்த மன உணர்ச்சியைக் குறிக்கும்.
- வெள்ளை நிற ரோஜா = ஆத்மார்த்தமான காதல், உள்ளத் தூய்மை, பக்தி.
- மஞ்சள் நிற ரோஜா = நட்பு, மகிழ்ச்சி ஆரவாரம்.
- ரோஸ் நிற ரோஜா = நட்பு, இனிய இதயம், பாராட்டுதல்
- இளமஞ்சள் நிற ரோஜா = நட்பு, மகிழ்ச்சி, போற்றுதல்
- இளம் நாவல் நிற ரோஜா = கண்டதும் காதல், வசமாதல், அர்ப்பணம்
- பவழ நிற ரோஜா = விருப்பம், ஆர்வம்
- செம்மஞ்சள் நிற ரோஜா = ஊக்கம், ஆர்வம்
- கருப்பு நிற ரோஜா = அட போய்யா, ஆளை விடு!
- சிவப்பு + மஞ்சள் நிற ரோஜாக்கள் = மகிழ்ச்சி, கொண்டாட்டம்.
- சிவப்பு + வெள்ளை நிற ரோஜாக்கள் = நட்பு, இணக்கம், இசைவு
- மஞ்சள் + செம்மஞ்சள் நிற ரோஜாக்கள் = மன எழுச்சி, தீவிர உணர்ச்சி.

தமிழின மக்கள் காதலையும் காதல் கொண்டாட்டங்களையும் எப்படிப் பார்த்தார்கள்? மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்தும் வல்லமையுடைய காமதேவனுக்கு மன்மதன், மாரன், வசந்தன், மதனன், காதல் தெய்வம் என்று பல பெயர்கள் இருக்கின்றன. இவன் எல்லாத் தேவர்களிலும் அழகானவன். மகரக் கொடியை உடையவன். இவனுடைய வாகனம் கிளி. தேர், தென்றல், கரும்பு வில்லையும் வண்டு நாணையும் ஐந்து மலர்களினாலான அம்புகளையும் கொண்டவன். ஒரு காலத்தில் தமிழகத்தில் காமதேவனுக்குக் கோயில் இருந்தது. காமதேவனின் விழாவும் மாசி பங்குனி மாதங்களில்தான் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பின்னொரு காலத்தில் காமன் விழா நிறுத்தப்பட்டதால், இந்திரன் கோபம் கொண்டு சாபம் இட்டான் என்றும், அதனால் பூம்புகார் துறைமுகப் பட்டினத்தைக் கடல் கொண்டது என்றும் நூல்கள் கூறுகின்றன.

எனவே, காதலைக் கொண்டாடும் வழக்கம் தமிழ்நாட்டிலிருந்து ரோமுக்குப் போயிருக்கலாமோ என்ற கேள்விக்குறிகள் ஆங்காங்கு தோன்றத் தொடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் நிகழ்ந்த இந்திரவிழா எனப்படும் காமன்விழா போன்றவையே உலகெங்கனும் நடைபெறும் காதல்விழாவுக்கு அடிப்படை என்றும் சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இவற்றுக்கு ஆதாரமாக பண்டைய தமிழ் இலக்கியங்களில் இருந்து மேற்கோள்கள் காட்டப்படுகின்றன. சோழர்கள் காமனுக்கு விழா எடுத்த காலத்தில், ரோமானியர்கள் தமிழ்நாட்டில் படைவீரர்களாகவும் அரண்மனை மெய்க்காப்பாளர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ரோமாபுரி நாட்டினராகிய யவனரின் மரக்கலங்கள் முசிறித் துறைமுகத்திற்குப் பொன்னைக் கொண்டுவந்து இறக்கிவிட்டு, மிளகு மூட்டைகளை ஏற்றிச் சென்றதாக அகநானூறும், யவனர் புகார் நகரத்தில் தங்கியிருந்து வாணிபம் செய்ததாகச் சிலப்பதிகாரமும் கூறுகின்றன. யவனர் மதுரை மற்றும் புகார் நகரங்களில் கோட்டைக் காவலராகக் கடமையாற்றினர் என்று நூல்களில் சான்றுகள் இருக்கின்றன. எனவே, யவனர் வழியாகவும் தமிழ்நாட்டில் தங்கி வாழ்ந்த வேறு நாட்டவர் மூலமாகவும் தமிழ்நாட்டுக் கலாசாரமும் பழக்கவழக்கமும் ஏன் பிற நாடுகளில் பரவியிருக்கக் கூடாது என்ற கேள்வியை ஆய்வாளர்கள் முன்வைக்கிறார்கள்.

பழைய தமிழ் இலக்கியங்களிலும் காதலுக்கு முக்கிய இடம் தந்திருப்பது கவனிக்கத் தக்கது. கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருதப்படும் திருவள்ளுவரும் காதலைப் பற்றியும் இளம் நெஞ்சங்களின் உணர்வுகள் பற்றியும் ஒன்றரை அடிகளில் அறுத்து நிறுத்திக் கூறியிருக்கிறார்.

‘யான் நோக்குங்காலை நிலன் நோக்கும்
நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்’

நான் நோக்கும்பொழுது அவள் நிலம் நோக்குவாளாம். நான் நோக்காதபொழுது அவள் என்னை (கடைக் கண்ணால்) நோக்கிப் புன்னகை பூப்பாளாம்.

‘கண்ணொடு கண்ணினை நோக்குஒக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல’

கண்ணும் கண்ணும் கலந்த பின்னர் வாய்ச் சொற்கள் எதற்கு என்பது இதன் பொருள்.

இராமாயணத்தில் சீதை கல்யாணத்திற்கு இராமர் வருகிறார். மேல் மாடத்திலிருந்து சீதை அவரைப் பார்க்கின்றாள். இராமனும் அவளைப் பார்க்கின்றார். முதல் நோக்கிலேயே கண்கள் கலக்கின்றன. காதல் வசப்படுகின்றனர். ஒருவர் உள்ளத்தை ஒருவர் உள்ளம் ஈர்க்கின்றது. உள்ளங்கள் பேசுகின்றன. இராமரின் உள்ளத்தில் சீதையும் சீதையின் உள்ளத்தில் இராமரும் குடியேறுகின்றனர். அந்தச் சந்திப்பைக் கம்பர் இவ்வாறு வர்ணிக்கிறார்:

“எண்ணரும் நலத்தினாள் இளையள்
நின்றுழி
கண்ணொடு கண்ணினைக் கவ்வி
ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாமல் உணர்வும்
ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும்
நோக்கினாள்.”

கடந்த நூற்றாண்டு கவிஞர்கள் பலரும் காதலை உருகியுருகிப் பாடியிருக்கிறார்கள். அவர்களுள் பாரதியார் –

‘காற்றில் ஏறி அவ்விண்ணையும்
சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே!
நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி
பணியிலே!’

என்றார்.

பாரதிதாசனோ,

‘கண்ணின் கடைப்பார்வை காதலியர்
காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர்
கடுகாம்’

என்று பாடினார்.

இவை தவிர, காதல் உணர்வுகள் பாமர மக்களின் நெஞ்சங்களில் பல வடிவங்களில் ஊறியிருக்கின்றன. தமிழ்நாட்டில் கும்பகோணம் அருகிலுள்ள பட்டீஸ்வரம் துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஒரு வன்னி மரம் இருக்கின்றது. அந்த மரத்தை அப்பகுதி மக்கள் காதல் மரம் என்று அழைக்கின்றனர். இந்த மரத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டி வைத்தால் திருமணம் நிறைவேறும் என்ற ஒரு நம்பிக்கை இன்றும் இருக்கின்றது.

மானாமதுரை அருகே உள்ள முத்தரசன் கிராம எல்லையில் இரண்டு கற்றூண்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று உயரமாகவும் மற்றொன்று உயரம் குறைவாகவும் இருக்கின்றன. இதில் உயரமான கல் ஆண் என்றும் மற்றது பெண் என்றும் நம்புகிறார்கள். இந்த இரு கற்றூண்களும் காதல் கைகூடாமல் கல்லாக மாறியவர்கள் என்று அந்த வட்டார மக்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் காதலர் தினமான பெப்ரவரி 14இல் ஏராளமான இளைஞர்களும் யுவதிகளும் அங்கே போய் கை வளையல் களையும் காசுகளையும் இந்தத் தூண்களுக்கு நேர்த்திக் கடனாகச் செலுத்தி தத்தம் காதல் கைகூடப் பிரார்த்திக்கிறார்கள்.

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?
அன்புக்கு ஏது அளவுகோல்?
அன்பு அனைத்தையும் ஆட்கொள்ளும்.
அன்பான வாழ்த்துக்கள்!

uthayanan@thaiveedu.com

■ ■ ■

இணைந்து
கொள்ளுங்கள்
‘தாய்வீடு’
facebookஇல்
www.facebook.com/thaiveedu


# INCOME TAX

**Keele & Finch**
1315 Finch Ave. West, Unit 407
647-885-3012

**Markham & Denision**
23 Taplane Dr.
416-494-4777

LIFE INSURANCE | CRITICAL ILLNESS INSURANCE
NON MEDICAL INSURANCE | RESP | RRSP

- **ஆயுட்காப்புறுதி**
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **வயோதிபர்களுக்கான காப்புறுதி**
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்**
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- **ஈட்டுக்கடன் காப்புறுதி**
  Mortgage Insurance



Apex Creations - 416-297-0707

**வசந்த் விநாயகமூர்த்தி**
காப்புறுதி முகவர்
**647-885-3012**

LiLand Insurance Inc. | Industrial Alliance Insurance and Financial Services Inc.

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362

# சகல சட்டத் தேவைகளுக்கும்


**Real Estate Law**
Purchase, Sale & Mortgage

**Immigration Law**
Refugee Claim, Sponsorship, Work Permit & Student Permit

**Business Law & Commercial Law**

**Accident Benefit Claims**

**Translation Services**
Tamil, English & Sinhala languages



தமிழ் வழக்கறிஞர்
## Raphael Maharaja
Barrister, Solicitor & Notary Public

Tel: 416-847-7077
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave. East, Unit 219
Scarborough, ON
M1S 0C2

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**VICOTORAPARK & LINVALLY**
basement for rent
theyagen: 416-441-2586

**MAOIS & EGLINTON**
missisagua
2 B/r basement
Sekar: 905-501-8198

**MARKHAM & LAWERANCE**
hosue for sale
Suresh: 416-804-3220

**TAPSCOTT & MACLEVIN**
2 B/R Basement
Kala: 416-754-8947

**DONMILLS & VANCONE**
1 B/R basement
Jagatheswaran: 416-756-4365

**BRICHMOUNT & STEELS**
2 b/r basement
Raj: 905-944-9982 416-887-5315

**MCCLVAN & EGLINTON**
room for rent
Siva: 416-267-2821 647-701-0902

**NEILSON & FINCH**
1 bedroom for rent
Rajalingam: 416-412-7468

**MORNINGSIDE & LAWRENCE**
Bedroom basement
Mrs. Kathes: 416-554-6570

**DONMILS & SHEPPARD**
3 bedroom house for rent
Pathy: 416-502-8053

**KENNEDY & FINCH**
1 bedroom basement
Vanaja: 416-291-9305, 647-208-9305

**DONMILLS & SHEPPARD**
2 B/R house for rent
Pathi: 416-502-8053

**BRAMPTON**
room for rent
Thayanathan: 905-794-4771

**MARKHAM & LAWRENCE**
3 bedroom u for rent
Suresh – 416-804-3220

**DONMILLS & SHEPPARD**
3 bedroom bungalow house
Pathy – From January 416-502 8053

**MARKHAM & LAWRENCE**
2 bedroom basement
Kirupa- 416 430 0422

**MARKHAM & ELSON**
Upstairs 1 bedroom sale
Siva- 905 879 1476

**WARDEN & LAWRENCE**
1 bedroom house for rent
Vanathi – 416 997 6575

## HOUSE FOR SALE

**BRAMPTON**
5 B/R house for sale
Kumar: 416-400-2222

## OTHERS

**2002 TOYOTA ECO**
187km
Moorthy: 647-883-7702

**1994 HONDA ACC**
168km
Jeya: 416-441-2586

**2002 GMC**
130km - New break/ Blue
416-438-6972, 416-266-7794

**2003 TOYOTA CAMRY**
Fully loaded
Muruganantham: 416-464-2415

**1999 TOYOTA COROLLA**
180km
Karuna: 905-427-9357

**1994 TOYOTA**
Yalini: 416-412-3481

**2005 HONDA CIVIC**
Auto 71km
Deva: 647-206-6842

**2006 HONDA- CIVIC**

**MARKHAM & LAWRENCE**

Basement for rent

Chandiran: 647 219 4558

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

Kiruban: 416-456-6022

## OTHERS

**FOR JOBS**
Esan: 647-896-2634

**PAINTING & PLUMPING**
Babu: 647-836-3647

**DAY CARE**
Victoria Park and Ellesmere
Sakunthala – 416-439-5405

**MUSIC CLASSES**
Santhiran: 905-501-8198 416-659-8198

**McCowan & Eglinton**

Bedroom for basement

2 Bedroom,washroom,living room and kitchen
Separate entrance,Parking,laundry and cable facilities
Close to Bank,School and Plaza
Easy TTC facilities.

(416) 716 2918 (647) 436 7088

# துயர் பகிர்வோம்



## விஸ்வநாதர் சங்கரப்பிள்ளை

**கனடா சைவ சித்தாந்த மண்ற 'அன்புநெறி' சிறப்பாசிரியர்**

யாழ் பன்னாலை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் மொறட்டுவாவில் வசித்து வந்தவருமாகிய முன்னாள் பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை உபஅதிபர், சித்தாந்த வித்தகர், பண்டிதர், 'கனடா சைவ சித்தாந்த மண்ற அன்புநெறி மலரின்' சிறப்பாசிரியர் விஸ்வநாதர் சங்கரப்பிள்ளை 06-01-2010 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர் - இளைய பிள்ளை தம்பதிகளின் மூத்தமகனும் சௌந்தரநாயகியின் அன்புக் கணவரும், நடராஜன், உமாராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இறைவி, சங்கர், வேணு ஆகியோரின் பாட்டனாரும் ஆவர்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு 07-01-2010 கல்கிசை-யில் இடம்பெற்றது.

மகள் உமாராணி (இலங்கை) 94 11 263 6778
பெறாமகள் அனிதா (கனடா) 1 905 848 9650



## திரு. பெஞ்சமின் அந்தோனிப்பிள்ளை

**(செல்வநாயகம்)**

பண்டைத்தரிப்பை பிறப்பிடமாகவும் கரம்பொன்னை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவை வதிவிடமாக கொண்டிருந்தவருமான திரு. பெஞ்சமின் அந்தோனிப்பிள்ளை (செல்வநாயகம்) அவர்கள் தை 25, 2010 அன்று ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பெஞ்சமின், மரியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ் சென்றவர்களான மனுவேற்பிள்ளை, அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், பிரான்சிஸ்கம்மாவின் (பூமலர்) அன்புக் கணவரும், செல்வ தயாளன் (Germany), ஜீவொளி (Canada), தேமொழி (Germany), அருள்விழி (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான டியோனிஸ், டெய்சி சவிரிமுத்து, மற்றும் றூபி மரியாம்பிள்ளை,அலோசியஸ், புனிதம் மரியநாயகம், அன்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மங்களேஸ், ஜஸ்ரின் வில்லியம், கஷ்மீர் அந்தோனிப்பிள்ளை, றெஜினோல்ட் எட்வேட் ஆகியோரின் மாமனாரும், அமிர்தினி, ஜொகான், றொஷ்னி, றொஷாந், டெனிஷ்னி, ஜொசி, ஜொனத்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜனவரி 30ம் திகதி அன்று ரொறன்ரோவில் இடம்பெற்றது.

மனைவி, பிள்ளைகள் 416-299-6024



## திருமதி யோகலிங்கம் தங்கரத்தினம்

**(பேபி டீச்சர்)**

யாழ்ப்பாணம் இருபாலையைச் சேர்ந்தவரும் தற்போது கனடா ஸ்காபுறோவில் வசித்து வந்தவருமான இளைப்பாறிய ஆசிரியை திருமதி யோகலிங்கம் தங்கரத்தினம் (பேபி டீச்சர்) அவர்கள் ஸ்காபுரோவில் 24-01-2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் ஆசைப் பிள்ளை தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பறுபதபத்தினியம்மா தம்பதியினரின் மருமகளும், இளைப்பாறிய கிராம சேவகர் யோகலிங்கத்தின் மனைவியும் கைலாசநாதன் (Y.K.நாதன் - CTR வானொலி) கலாநிதி (அவுஸ்ரேலியா), Dr.கணேஸ்வரன் (UK), சிவகுமாரன் (பொறியிலாளர்) ஆகியோரின் தாயாரும் பவானி, ஸ்ரீ சுதர்சன் (பொறியிலாளர் - அவுஸ்ரேலியா), நிலானி (பொறியிலாளர் - UK), அன்னவதனி (பல் மருத்துவர்) ஆகியோரின் மாமியாரும் ஹர்ஷா, வர்ஷா, ஆதவன், வித்தகன், மிதுனன், கேஷினி, கவீன், ஜெஷான் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஜனவரி 31ம் திகதி அன்று ரொறன்ரோவில் இடம்பெற்றது.

யோகலிங்கம் 647 341 7016
றூபன் (Y.K.நாதன்) 416 347 1250

e-mail: yknathan@hotmail.com

# கணினிகளை வென்றிடும் அறிவும் ஆற்றலுமுள்ள செல்லிடத் தொலைபேசிகள்



பொன் பாலராஜன்

தகவல் தொழில்நுட்பம் மிக மிக வேகமாக வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றது. ஒரு வருடத்திலேயே பலவித நூதனமானதும் அதேசமயம், நமது நாளாந்த செயற் திறன்களை மேம்படுத்தும் விதமாகவும் பல சாதனங்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

1980களில் கணினியின் பாவனையும், 1990 களில் இணையத் தளங்களின் வளர்ச்சியும், 2000களில் தொலைத் தொடர்பு சாதனங்களின் மேம்பாடும், 2010களில் தனி நபர் செயற்திறன் அதிகரிப்புச் சாதனங்களும் உள்ளடங்கியதாக தகவல் தொழில்நுட்பமானது பொழுது போக்கு, அறிவியல், தேடல், நூலகங்கள் அனைத்தையும் கைக்குள் அடக்கிவிடக் கூடிய அறிவும் ஆற்றலும்மிக்க செல்லிடத் தொலைபேசிச் சாதனங்களுக்குள் கொண்டு வந்திருக்கின்றது.

இந்த வகையில் இத் துறையில் தற்போது Google ஆனது IBM, Microsoft, Intel போன்ற சர்வதேச நிறுவனங்களுக்குப் போட்டியாக ஏன், சில சமயங்களில் மற்றவைகளை மிஞ்சும் அளவிற்கு சேவைகளை இலவசமாகத் தந்திருக்கின்றது. Google mail, Google தேடுதளம் என்பவை இதற்கு உதாரணமாகும். Googleஇன் சகாப்தம் smartphoneஇன் வருகையினால் அழிந்துவிடும் என பலரும் நம்பினார்கள். ஏனெனில் ஒரு கணினி செய்கின்ற வேலைகள் அனைத்தையும் ஒரு Smartphone இனால் செய்ய முடியும்.

Smartphoneஇன் முன்னோடியாக இருந்த Blackberry, Iphone, Palm ஆகியவை பல இலட்சம் வாடிக்கையாளர்களை உள்வாங்கி மிக உச்சவளர்ச்சி நிலையில் இருந்தன. இதே காரணங்களுக்காக Googleஇன் வளர்ச்சி எதிர்காலத்தில் தடுமாறக்கூடும் என நினைத்தவர்களும் உண்டு. ஆனால் இந்த நிலைகளைத் தாண்டி கூகிள் தனது தொழில் நுட்ப வலுவை தற்போது காட்டத் தொடங்கியுள்ளது. தேடுதளத்திலும் மின்னஞ்சல் சேவைகளை இலவசமாக வழங்குவதிலும் முன்னோடியாக இருந்த கூகிள் Smartphoneக்கான வன்பொருளான Nexus Oneஇனைத் தயாரித்துவிட்டிருக்கின்றது. அதுமாத்திரமன்றி இதற்கு முதல் கூகிள் தனக்கே உரித்தான ஒரு இயங்கு தளமாக google chromeஇனைத் தயாரித்து Microsoft இயங்கு தளத்திற்குச் சவால் விட்டிருக்கின்றது. அதேபோல் NexusOne ஆனது Iphone, Blackberry போன்றவற்றிற்குச் சவாலாக வந்திருக்கின்றது. இந்த NexusOne ஆனது கூகிளின் Smartphone கைத்தொலைபேசிக்கான Android என்ற செயலியைக் கொண்டுள்ளது.

### நெக்சஸ்வண் (Nexus One) பற்றி இணையத்திலிருந்து பெற்ற சில குறும் தகவல்கள்

இதை கூகிள் உருவாக்கம் செய்திருந்தாலும், தயாரித்திருப்பது ஏற்கனவே HTC Magic போன்ற சிறப்பான செல்லிடத் தொலை பேசிகளை அளித்திருக்கும் HTC (High Tech Computer Corporation) நிறுவனம்.

ஐபோனை விட அதிக திரைத்தரம் கொண்டது இது 480x800 பிக்சல்கள். ஐபோன் 320x480 பிக்சல்கள் மட்டுமே.

ஐபோனை விட தொடுதிரை கொஞ்சம் பெரியது 3.7 அங்குலங்கள். ஐபோன் 3.5 அங்குலங்கள் மட்டுமே.

LED Flash வசதிகொண்ட கேமரா உண்டு மாற்றக்கூடிய வசதிகொண்ட பேட்டரி உள்ளது

அனிமேட்டட் பின்திரை.

YouTube, Picasa, Facebook போன்றவற்றில் நேரடியாக வீடியோ அல்லது ஒளிப் படங்களை ஏற்றம் செய்யலாம்.

இப்போதைக்கு அதிக பட்சமாக 32 கிகாபைட் மெமரிகார்டு வைத்துக்கொள்ள முடியும். அது வருவதோ 4 GB Memory Card

### இந்த NexusOneனில் மிகப் பெரிய பாதகங்களாக தெரிவது

கனடாவில் இதுவரையில் இல்லை.

இப்போதைக்கு G.S.M பதிப்பு மட்டுமே வெளியாகியுள்ளது.

Ringer அணைக்க வெளி பொத்தான் இல்லாததால் அதுமணியடிக்கும் போது அவசரமாய் அதை குறைக்க அல்லது அணைக்க தொடுதிரையை தான் தடவவேண்டியிருக்கும்.

அதிக பட்சமாக வெறும் 190 MB மட்டுமே இறக்கம் செய்யப்படும் பயன்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

Multi Tuch எனப்படும் பல விரல் தொடுகைகளை கண்டுபிடிக்கும் திரை இதில் இல்லை. இது கொஞ்சம் தொல்லையாகவே இருக்கும். படங்களை அல்லது பக்கங்களை பெரிது படுத்தி பார்க்க கஷ்டபடவேண்டியிருக்கும்.

pon.balarajan@thaiveedu.com

■ ■ ■



| Feature / Specificiation | Google Phone: Nexus One | iPhone 3GS | Winner |
|---|---|---|---|
| Operating System | Android 2.1 | iPhone OS 3.1.2 | -Tie- |
| Dimensions | Thinner than iPhone | 115.5 x 62 x 12.3 mm | Nexus One |
| Cellular | GSM (& CDMA possibility) 3G Triband, WiFi, Bluetooth | GSM 3G Triband, WiFi, Bluetooth | -Tie- |
| Processor and RAM | Qualcomm QSD 8250 Snapdragon 1Ghz Processor, 512MB RAM | ARM CortexA8 600Mhz, 256 MB RAM | Nexus One |
| Graphics / Gaming Hardware Potential | OpenGL ES 2.0. Snapdragon has a onboard graphics that Qualcomm claims to produce 22 Million triangles per second | PowerVR SGX running at 200Mhz clock, Hardware accelerated OpenGL ES 2.0. 7 Million triangles per second | Nexus One |
| Battery | 1400mAh* | 1219mAh | Nexus One |
| Display | 3.7" OLED Capacitive (Higher Resolution 800 x 480 ~ HTC HD2) | 3.5" LCD Capacitive (320X480) | Nexus One |
| Multitasking | Yes | No. Only via Jailbreaking [Multifl0w] | Nexus One |
| Multitouch | Hardware: Yes, Software: No | Yes | iPhone 3GS |
| GPS | AGPS+ Dedicated. Google Maps Navigation (Most superior in the industry) | AGPS+ Dedicated. Google Maps + 3rd party | Nexus One |
| App Store | 10,000+ apps | 1,00,000+ Apps | iPhone 3GS |
| Cloud Sync | Google Apps | Mobile Me | N/A |
| Sensors & Misc. | Accelerometer, Ambi-light sensor, Proximity sensor, Noise Canceller (Not Proven). | Accelerometer, Ambi-light sensor, Proximity sensor | -Tie- |
| Camera | 5 Megapixel with Flash, No HD Video recording 720?480 pixels at 20fps | 3 Megapixel, Tap to focus, Video: VGA quality 30fps 640?480 | Nexus one |
| Data Sync | Only Contacts, Emails. (3rd party apps like Missing sync for Android) | More Flexible sync with iTunes | iPhone 3GS |
| Ease of Use/ User Interface | Android Getting better Over time | Proven Edge over others | iPhone 3GS |




வீடு வாங்க விற்க

உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

Prudential Properties Plus Brokerage
Bus: 416.962.8113
Fax: 416.962.4615, Res: 416 964 5955
552 Parliament Street, Toronto, ON, M4x 1P6



Alfred Soosaipillai
Broker

# விமானநிலையத்துச் துச்சாதனன்கள்




குரு அரவிந்தன்

இப்பொழுதெல்லாம் விமானத்தில் பயணம் செய்வது மிகவும் கடினமான காரியமாகப் போய்விட்டது. பயணிகளின் பாதுகாப்புக் கருதி பொதிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது மட்டுமல்ல, மேலதிக பொதிகளுக்கு பணம் கட்ட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. 2001ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 11ம் திகதி நடந்த 911 என்று பரவலாகச் சொல்லப்படுகின்ற அந்த நிகழ்வின்பின் இப்படி எல்லாம் ஆகிவிட்டது. பயணிகள் இரண்டு மூன்று மணி நேரங்களுக்கு முன்பாகவே விமான நிலையத்திற்குச் சென்று சோதனைக்கு உட்பட வேண்டி இருக்கின்றது. பயணிகளின் எண்ணிக்கையும் தினசரி அதிகரித்துக் கொண்டே செல்வதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். விமானப் பயணத்தின் போது கையிலே கொண்டு செல்லும் சிறிய பொதிகளைக்கூட இப்பொழுது அனுமதிக்கிறார்கள் இல்லை. பாதுகாப்புக் காரணங்கள் கருதி இப்படியான பல கெடுபிடிகள் அனேகமான எல்லா விமான நிலையங்களிலும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. குறிப்பாக அமெரிக்கா செல்லும் விமானங்களுக்கும் அதன் பயணிகளுக்கும் கெடிபிடிகள் அதிகமாகவே இருக்கின்றன. அமெரிக்க விமான நிலையங்களுக்கூடாக வெளிநாடுகளுக்குப் பயணிப்பவர்களுக்கும் இதேகதிதான். விமான நிலையத்தில் இத்தகைய பாதுகாப்பை முன்னெடுப்பதற்குப் பலகாரணங்கள் பின்னணியில் இருக்கின்றன.

இத்தனை கெடுபிடிகளையும் மீறிச் சில சமயங்களில் சிலர் ஆயுதங்கள், வெடிமருந்துகள் போன்ற ஆபத்தான பொருட்களைத் தம்முடன் கொண்டு செல்லவே முயற்சிக்கிறார்கள். இப்படியான சிலரின் நடவடிக்கைகளால் விமானப் பயணிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விடுகிறது. அவர்கள் அகப்பட்டுக் கொள்ளும் பட்சத்தில் மேலும் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கின்றன. ஆரம்பகாலத்தில் விமானப் பயணம் என்பது மிகவும் இலகுவானதாகவே இருந்தது. குறிக்கப்பட்ட அளவு நிறையுள்ள இரண்டு பெட்டிகளும், கையிலே அவசர தேவைகளுக்கான பொருட்களைக் கொண்ட ஒரு சிறிய பெட்டியும் கொண்டு செல்ல அனுமதித்தனர். கையிலே கொண்டு செல்லும் பொதியின் பாரம் எவ்வளவாகவும் இருக்கலாம் ஆனால் மேலே உள்ள பொதி வைக்கும் தட்டில் பொருந்தக்கூடியதாக இருக்கவேண்டும். பொதுவாக அத்தகைய பெட்டியில் அழகு சாதனப் பொருட்கள், பல் துலக்குவதற்குரிய பொருட்கள், முகச்சவரம் செய்வதற்குரிய பொருட்கள், கதைப்புத்தகங்கள், நொறுக்குத் தீனிகள், மருந்துகள், முகம் துடைக்கும் துண்டு என்று பல பொருட்களும் அதற்குள் இருக்கும். விமான நிலையத்தில் தங்கி நின்று வேறுவிமானம் எடுத்துப் பயணம் செய்பவர்களுக்கு அது மிகவும் உதவியாக இருந்தது. ஆனால் இப்போது எல்லாம், கையிலே கொண்டு செல்லும் இப்படியான பொதிகளை அனுமதிக்க மறுக்கிறார்கள். பயணிகளின் பொழுது போக்கிற்காக லாப்ரொப் (Laptops) மட்டும் தங்களுடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கிறார்கள். அதைக்கூட ஏதாவது காரணங்காட்டி விரைவில் தடுத்து விடுவார்கள். இதைவிட அவசர தேவைக்கான மருந்து வகைகளையும் பயணிகள் தங்களுடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கிறார்கள். தண்ணீர்ப் போத்தலுக்குக்கூட அனுமதி இல்லை.

பொதுவாக உலோகப் பொருட்களையோ, சிறு ஆயுதங்களையோ கண்டுபிடிக்கக் கூடிய (Metal detector) கருவிகளையே விமான நிலையப் பாதுகாவலர்கள் இதுவரை காலமும் பாவித்து வந்தார்கள். உலோகப் பொருட்கள் எதையாவது ஆடைக்குள் மறைத்து வைத்திருந்தால், சோதனை செய்யும்போது அனேகமாக இக்கருவிகள் ஒலி எழுப்பிக் காட்டிக் கொடுத்து விடும். ஒரு முறை என்னோடு பயணம் செய்த ஒருவரை சோதனை செய்யும்போது அவரது இடுப்படியிலே அந்தக் கருவி ஒலி எழுப்பியது. அறுவை மருத்துவம் செய்தபோது அவருக்கு அந்த இடத்தில் ஒரு தகட்டை வைத்துப் பொருத்தியிருந்தார்கள். அந்த உலோகப் பொருள்தான் ஒலியை எழுப்பியது. பரிசோதனை செய்தவர் அதை நம்ப மறுத்து விட்டாலும், இவர் ஏதோ சொன்னவுடன் இவரைப் போவதற்கு அனுமதித்து விட்டார். நம்பிக்கை இல்லாவிட்டால் நீயே தடவிப்பார்த்துக் கொள் என்று சொல்லியிருப்பாரோ தெரியாது, ஆனால் அந்தப் பெண் பரிசோதகரின் முகம் நாணத்தால் சிவந்து போனதென்னவோ உண்மைதான். சில சமயங்களில் இத்தகைய கருவிகளைத் தாண்டியும் பயணிகள் தடுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு செல்ல முயற்சி செய்ததால், பயணிகளின் பாதுகாப்புக் கருதி நவீன தொழில் நுட்ப வசதிகளோடு கூடிய புதிய கருவிகளை பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் கனடிய விமான சேவை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் புதுவிதமான நவீன தொழில் நுட்ப வசதிகளோடு கூடிய கருவிகளைக் கனடிய விமான நிலையங்களில், விரைவில் அறிமுகம் செய்ய இருக்கிறார்கள்.




கனடாவில் உள்ள 44 விமான நிலையங்களிலும் இத்தகைய கருவிகளைப் பயணிகளைச் சோதிப்பதற்காக பாவனைக்குக் கொண்டுவர இருக்கிறார்கள். ஒவ்வொன்றும் சுமார் 250,000 டொலர் பெறுமதியானது. கூடு போன்ற ஒரு பாதுகாப்புப் பெட்டிக்குள் பயணிகள் கைகளை உயர்த்திக் கொண்டு நிற்க வேண்டும். அப்போது மில்லி மீற்றர் வேவ் (Millimeter Wave – MMW) என்று சொல்லப்படுகின்ற நவீன தொழில் நுட்ப முறையில் பாவிக்கப்படும் ரேடியோ கதிர்கள் ஆடைகளுக்கூடாகப் பாய்ச்சப்படும். அப்போது கணினியோடு இனைக்கப்பட்ட தரவுகள் பயணியின் முப்பரிமாணத்தையும் எடுத்து கணினித் திரையில் தெளிவாகக் காட்டும். உலோகப் பொருட்களையும், உலோகப் பொருட்கள் அல்லாதவைகளையும் இது தெளிவாக எடுத்துக் காட்டும். பக்கத்து அறையில் கணினியின் முன்னால் உட்கார்ந்து இருக்கும் பாதுகாவலர்கள் வித்தியாசமான ஏதாவது பொருட்கள் கடத்தப்படுகின்றனவா, பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அவை இருக்கின்றனவா என்பதை எல்லாம் கணினித் திரையில் அவதானிப்பர்கள்.

பயணிகளின் தனிநிலை உரிமை (Privacy) பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் பயணிகளின் முகம் தெளிவாக இல்லாமல் மங்கலானதாகவே திரையில் காட்டப்படும். பயணிகளைப்பற்றிய தனிப்பட்ட விபரங்களோ அல்லது வேறு தகவல்களோ கணினித் திரையைக் கண்காணிக்கும் இத்தகைய பாதுகாவலருக்குக் கொடுக்கப்படமாட்டாது. பயணிகள் மீது சந்தேகம் ஏற்படாத பட்சத்தில் அலகிடப்பட்ட இத்தகைய உருவப்படங்கள் உடனடியாகவே கணினியில் இருந்து அழிக்கப்பட்டுவிடும்.

இவை எல்லாம் நடைமுறையில் சாத்தியமாகுமா என்பது கேள்விக் குறியாகவே இருக்கும். உடம்பில் உள்ள அத்தனை பாகங்களையும் தெட்டத் தெளிவாக முப்பரிமாணத்தில் காட்டுவதால், சிறுவர், சிறுமியர் சம்பந்தப்பட்ட படங்கள் எடுக்கப்படும் போது, அத்தகைய படங்கள் உடனடியாக அழிக்கப்படாவிட்டால் தவறானவர்களின் கைகளில் சென்றடைய வாய்ப்புண்டு எனப் பயணிகளின் பெற்றோர்கள் பயப்படுகிறார்கள். அப்படித் தவறானவர்களின் கைகளில் அகப்படும் படங்களை வைத்து தவறான நடவடிக்கைகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் ஏற்படலாம் என்ற பயமும் சிறுவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் குழுவினரிடம் (Children's rights groups) இருக்கின்றது. எனவேதான் சிறுவர் சிறுமிகளின் நலன் பேணிகள் 18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு இத்தகைய பெயரளவில் துகிலுரியும் கருவிகளைக் (Vertual strip searches) கொண்ட சோதனை பயணத்தின்போது தேவையில்லை என்று வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

இனிவரும் காலங்களில் நீங்கள் விமானப் பயணம் செய்யும்போது, விமான நிலையத்தில் உங்களையும் இத்தகைய சோதனைக்கு உள்ளாக்குவார்கள். அப்படிச் சோதனை செய்யும் போது உங்களுக்கு இக்கட்டுரையின் முக்கிய பாத்திரமான (MMW) துகிலுரியும் துச்சாதனன் நினைவில் வந்து உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கலாம். வருவது வரட்டும் என்று பயப்படாமல் துச்சாதனனை எதிர்கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள். முதற்தடவை கொஞ்சம் வெட்கப்பட்டாலும், ஆயிரமாயிரம் பயணிகளில் நீங்களும் ஒருவர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். பயணிகளின் தனிநிலை உரிமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட உங்கள் பாதுகாப்புத்தான் மிகவும் முக்கியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். முடியாவிட்டால் கண்களை மூடிக்கொண்டு மாயக்கண்ணனை அழைத்துப் பாருங்கள். எங்கிருந்தாலும் உதவிக்கு ஓடோடி வராமலா போகப்போகிறான்?

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL

▸▸ வீடுகள்
▸▸ தொடர்மாடி வீடுகள்
▸▸ தொழிற்சாலைகள்
▸▸ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416•291•3997

Tutoring
Grade 1-7: English, Math, Science & Social science Grade
8- 11: English & Math
ஜீவா
B.A (Hons), M.Sc, Ph.D
(Kennedy & Ellesmere அருகாமையில்)
(647) 291 1357

# மறக்க முடியாத வழித்துணை

## குமார் புனிதவேல் பக்கம்

வாழ்க்கை ஒரு நெடும் பயணம் அந்தப் பயணத்தில் நாம் பலரைச் சந்திக்கிறோம். அதில் சிலர் எம்முடன் கூடவே வழித்துணையாக வருவார்கள், ஆனால் பலரும் சிறிது நேரத்தின் பின் மின்னல்போல் மறைந்து விடுவார்கள் இங்கு என்னால் மறக்க முடியாத இருவரை குறிப்பிடுகிறேன். இவர்கள் என்னுடன் நெடுந்தூரம் பயனிக்கவில்லை. சில மணி நேரம் தான் தொடர்பு வைத்தாலும் எனது நெஞ்சில் அழகான அழியாத கோலங்களை வரைந்து சென்றுள்ளார்கள். இவர்கள் வாழ்க்கைப் பயணத்துக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்குகள். எவ்வளவு காலம் உறவுவைத்தோம் என்பதிலும் எவ்வளவு ஆக்கபூர்வமாக மற்றவர்களுக்கு வழிகாட்டினோம் என்பதே முக்கியமாகும்.

இங்கு மறக்க முடியாத சகபயணியாக குறிப்பிடும் இருவரில் ஒருவர் ஆண் மற்றவர் பெண். ஆண் நடுத்தர வயதுடையவர், பெண் இளம் வயது அழகு மங்கை. இருவரையுமே ஒரு குறுகிய நேரம் வரையில் சந்தித்த பின் அவர்களை பின்பு சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. அவர்களை நான் சந்தித்து இரண்டரை வருடமாகின்றது. அவர்கள் எப்படி இருக்கிறார்கள் அல்லது இருக்கிறார்களா என்று என் மனம் சிந்திப்பதுண்டு.

முதலில் நான் நடுத்தர வயது ஆண் பற்றிய சந்திப்பை இங்கு குறிப்பிடுகிறேன். இவரை நான் சந்தித்தது இரவு ஒரு மணி இருக்கும். இரவு இரண்டு மணிக்கு MRI Test செய்வதற்கு ஒரு மணிக்கே sunny brook வைத்திய மனைக்கு வந்திருந்தார். என்ன இரவு இரண்டு மணிக்கு வைத்தியசாலை மூடி இருக்குமே என்று நினைக்கின்றீர்களா? ஆரோக்கியமாய் உள்ள நாங்கள் அர்த்தராத்திரியிலும் உடல் ஆரோக்கிய ஆய்வுகள் நடந்த வண்ணமுள்ளது என்பதை அறியத்தவறிவிடுகிறோம். அவருடன் இரண்டு மணித்தியாலங்கள் வரை கதைத்து நோம் போக்கிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதுவே என் வாழ்நாளில் நம்பிக்கை என்பதன் அர்த்தத்தை புரியவைத்தது.

அவரது பெயரை மைக்கல் என்று வைத்துக் கொள்வோம் (அவரது உண்மைப் பெயர் மறந்துவிட்டது) நம்பிக்கையின் சின்னமாக அவர் காட்சி தந்தார். நம்பிக்கையின் உயர்வை, சிறப்பை, முக்கியத்துவத்தை காட்ட ஒரு சிலை எடுப்பதானால் இவருக்குத்தான் எடுக்கவேண்டும். நம்பிக்கைதான் வாழ்வின் அச்சாணி, அதை சுற்றித்தான் வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது. புகழ்பெற்ற எழுத்தாளர் 'ஜியாஜ் பேனாட்ஷா' அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார், சிலர் எப்போவோ இறந்துவிடுகிறார்கள், அவர்களின் மரணச்சடங்குகள் பல காலம் கடந்து நடத்தப்படுகிறது என்று. என்று மனிதன் நம்பிக்கையை இழந்து விடுகிறானோ அன்றே அவன் இறந்து விடுகிறான் என்பது அவர் உறுதிப்பாடு.

சில வாரங்களுக்கு முன்புதான் மைக்கலுக்கு மூளையில் புற்றுநோய் வளர்கிறது என்று தெரியவந்துள்ளது. அவரைப் பார்த்தால் யாருமே ஒரு நோயளி என்று கூறமுடியாது. உற்சாகமாக தனது வருத்தத்தைப் பற்றி கதைத்தார். அவர் வதிவிடம் "Oakville" தனது வீட்டிற்கு அன்மையிலுள்ள ஒரு 'Bar' இற்கு சென்று இரண்டு போத்தல் பியர் குடித்துவிட்டு வீடு திரும்பும் வேளையில் வீட்டு வாசலில் விழுந்துவிட்டார்.

அளவு கணக்கில்லாமல் குடித்துவிட்டு வந்து விழுந்து கிடப்பதாக மனைவி அளவுக்கதிகமாக வசைபாடத்துவங்கிவிட்டார், என்றாலும் தலை அடிபட்டிருந்தமையால் 911இனை அழைத்திருந்தார்கள். வைத்திய அதிகாரிகள் இரத்தத்தில் மது அளவை கனித்துவிட்டு அவர் மதுபோதையில் விழவில்லை, வேறு ஏதோ காரணம் இருக்கவேண்டும் என்று கூறி உண்மையான காரணத்தை அறிவதற்கு Ambulanceஇல் வைத்திய சாலையிற்கு அழைத்து சென்றார்கள். அங்குதான் அவர்களுக்கு தெரியவந்தது அவர் தலையில் சவ்வு வளர்கிறது என்று.

தன்னிடம் இந்தச் செய்தியை அடுத்த நாள் அறிவித்த வைத்தியர், ஏதாவது உங்கள் வாழ்க்கையில் செய்ய ஆசைப்படுகிறீர்களா என்று கேட்டதாக சொன்னார். உடனே நான் கேட்டேன் நீங்கள் என்ன சொன்னீர்கள்? என்று. அதற்கு அவர் தன்னுடைய பேரனுடைய Convacation (பட்டதாரி பரிசளிப்பை) பார்க்க வேண்டும் என்று தான் சொன்னதாக சொன்னார். உடனே நான் உங்கள் பேரனுக்கு எத்தனை வயது என்று கேட்டேன், அதற்கு அவர் சிரித்துக்கொண்டு சொன்னார் இதே கேள்வியைத்தான் டாக்டரும் கேட்டதாக. பின்மேலும் சொன்னார் தன் மகள் இப்போ தான் "Boy Friend" பிடித்திருப்பதாக அந்த ஒரு பதில் அவரை மலைபோல் உயர்த்திவிட்டது.

அந்த வினோத மனிதனை கவலையுடன் நான் நோக்கிய போது அவர் சிரித்துக்கொண்டு சொன்னார் "What will be, will be, let us not worry and get on with our life" நடக்கப்போவது நடக்கத்தான் போகிறது. அதைப் பற்றியே சிந்திக்காமல் வாழ்வை தொடர்வோம் என்றார். இவர் போன்றோர் அழிவில்லாதவர்கள் என் மனதில் வள்ளுவர் பாடிய

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"

குறள் எண்: 625

என்ற குறள் தான் மனதுக்குள் தெரிந்தது. எல்லாருக்கும் வாழ்வில் சிரிக்கத் தெரியும் ஆனால் சாவிலும் சிரிக்கும் மைக்கல் ஒரு ஞானி, ஒரு கலங்கரை விளக்கம். எப்போதுமே என்ன நடக்குமோ என்று அஞ்சி அஞ்சி சாகும் மக்களைப் பார்த்து பாரதி பாடினார்

"நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்,
அஞ்சி அஞ்சி சாவார்
அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே"

என்று. ஆனால் மைக்கலோ சாவையும் பார்த்து சிரிக்கும் துணிவுடையவர் அவர் துணிவும் நம்பிக்கையும் என் மனதில் நீங்காத இடம் பிடித்துவிட்டது. மைக்கலை நான் பின்பு சந்திக்கவே இல்லை அவர் சுகமடைந்தாரா? அவன் மகள் திருமணம் நடந்ததா? இப்படி பல கேள்விகள் என் எண்ண அலையில் தோன்றி மறையும். இப்பிறவியில் அவற்றிற்கு விடை இல்லை, அவர் என் மதைவிட்டு நீங்கவும் இல்லை.

> "தனது பையிலிருந்து ஒரு *Quilt*இனை எடுத்து தன்னை போர்த்திக்கொண்டார். 'இந்த போர்வை எனது பெற்றோர், பாட்டன், பாட்டியர், சகோதரர்கள், சகோதரிகள் எல்லாருமாக சேர்ந்து தைத்தது. இதை போர்த்துக் கொண்டிருக்கும் வேளைகளில் அவர்கள் என் அருகில் உள்ள உணர்வு, மனத் தெம்பைத்தருகிறது' என்றார்."

அடுத்து எனது வழித்துணையாக இரு மனித்தியாலங்கள் வந்தவர் இருபத்தைந்து இளவயது மங்கை. மிக மிக அழகானவர் தலை மயிர் கட்டையாக வெட்டியிருபார். எல்லாரிடனும் சிரித்துப் பழகும் சுபாவமுடையவர், அவர் சிரிக்கும் வேளையில் கண்ணத்தில் குழிவிழும். அவர் பெயர் சிந்தியா. இவர் இருப்பது வான்கூவரில் விடுமுறையை கழிப்பதற்காக பெற்றோரிடம் ஒன்டாரியோவிற்கு வந்தவிடத்தில் இவருக்கு புற்றுநோய் உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர் வன்கூவரில் பல்கலைப்பட்ட படிப்பு முடித்துவிட்டு ஆசிரியத் தொழிலுக்காக கற்றுக்கொண்டிருப்பவர். இருவருடங்களுக்கு முன் ஜிவகாருன்யாரான புத்தரின் போதனைகளில் கவரப்பட்டு புத்த மதத்தை தழுவியுள்ளார்.

அன்றைய தினம் மலைப்பொழுது இரண்டு மணி இருக்கும் கீமோ எனும் மருத்துவத்துக்காக வந்துள்ளார். அவருடன் இரண்டரை மணிநேரம் நேரத்தை கழித்திருப்பேன். கீமோ வைத்தியத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அந்த வைத்தியம் நோயிலும் கொடியது என்பார்கள். ஆனால் இந்த இளம் மங்கையோ சலனம் ஏதும் இல்லாமல் தனது கதையைச் சொல்லிக்கொண்டிருந்தார். நடப்பது நடக்கட்டும் நான் மகிழ்ச்சியாய் இருக்கிறோன் என்றார். தான் புலால் உண்ணாமை பற்றிக் குறிப்பிடுகையில், நான் அவர் உடல் தெம்பாய் இருப்பதற்கு, வைத்தியம் முடியும் வரை உண்ணலாமே என்றதற்கு புன்னகைத்துக்கொண்டு 'அது தவறு' என்றார்.

சிலப்பதிகாரத்தில் தேவந்தி எனும் தோழிப்பெண் சோம குண்டம், சூரிய குண்டம் எனும் இரு பொய்கையில் மூழ்கிக் கரையில் உள்ள காமவேளைக்கும்பிட்டால் கணவனுடன் போய்ப் பூமியில் வாழலாம் என்று கண்ணகிக்கு சொன்னபோது, அந்த தமிழ்க்குலமாது கூறிய "பீடு அன்று" என்ற இருவார்த்தைகள் தான் என் மனக் கண்ணுக்கு முதல்தோன்றியது.

அவருக்கு கீமோ மருந்துவத்தை துவங்கும் வேளை தனது பையிலிருந்து ஒரு Quilt இனை எடுத்து தன்னை போர்த்திக்கொண்டு சொன்னார் இந்த போர்வை எனது பெற்றோர், பாட்டன், பாட்டியர், சகோதரர்கள், சகோதரிகள் எல்லாருமாக சேர்ந்து தைத்தது. இதை போர்த்துக் கொண்டிருக்கும் வேளைகளில் அவர்கள் என் அருகில் உள்ள உணர்வு மனத் தெம்பைத்தருகிறது என்றார். அவர் இப்படி கூறியவேளை என் கண்களில் தோன்றிய இருசொட்டுக் கண்ணிரை கஸ்டப்பட்டு மறைத்துக்கொண்டேன். மற்றவர்களுக்கும் அவர் வேதனையிலும் காட்டும் வைராக்கியம் புரிந்திருக்க வேண்டும் எல்லாரும் ஒரு தெய்வத்தை நோக்குவது போல் அந்த மங்கையை நோக்கினார்கள்.

தவம் எனும் சொல்லுக்கு விளக்கம் தருவதற்கு வள்ளுவர் கூறிய குறள்

"உற்றநோய் நோன்ற உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்க் குரு"

இந்தக் குறளுக்கு சிந்தியா ஒரு சிறந்த உதாரணம். அவரை நான் பின் எப்போதும் சந்திக்கவில்லை. ஆனால் அந்த மங்கைக்கு நான் வாழ்நாள் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு தவம் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் கற்றுக்கொடுத்த குரு. அவர் எங்கிருந்தாலும் வாழ்க!

இந்த இரு மனிதர்களும் வாழ்க்கைப் பயணத்தில் வழித் துனையாக இரண்டு மணித்தியாலம் மட்டும் வந்தாலும் என் மனதில் அழியாத அழகான கோலங்கள் வரைந்த ஓவியர்கள்.

அவர் எங்கிருந்தாலும் வாழ்க!

இவை போல நீங்களும் பலரைச் சந்திப்பீர்கள். அவர்களை இனம் கண்டு உறவாடி பயன் பொறுங்கள்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

**Driving School**

ஒட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி
General Driving School
Ministry of Transportation Approved Instructor

பேரின்பநாதன் வேந்தன்
416-731-2829

**Tution Classes**

(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)

தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help).
இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.
1 to 1 or Group classes

Please call

905-554-2496, 416-522-3314.

# மனித வாழ்வு எதற்காக?



- சத்குரு வாசுதேவ் -

மனித வாழ்வு, எதற்காகா ஏன் இந்தப் பிரபஞ்சம் இருக்கின்றது என்று கேட்கும்போதெல்லாம், நான் உங்களுக்குக் கதைகள்தான் சொல்லவேண்டும். ஒரு நாள் கடவுள் வேலையேதுமின்றி அமர்ந்திருந்தார். அப்போது அவர் கோலிகுண்டு விளையாடிக் கொண்டிருந்தார். ஒரு கோலி இங்கே விழுந்து அது பூமியானது. மற்றொன்று அங்கே விழுந்து சூரியன் ஆனது. வேறு ஏதோ செய்தார். மனிதர்கள் உருவானார்கள். இது போன்ற கதைகளை நான் உங்களுக்குச் சொல்லிக் கொண்டே போகலாம். நான் என்ன கதைகளை உங்களுக்குச் சொன்னாலும், சிலர் அவற்றை நம்பலாம். சிலர் அவற்றை நம்பாமலும் இருக்கலாம். நீங்கள் இந்தக் கதைகளை நம்பினாலும், நம்பாவிட்டாலும், உங்கள் வாழ்க்கை எந்த வழியிலும் வளமடையப் போவதில்லை. உங்களில் பலர் இதுவரையில் ஏதோவொன்றில் எப்போதுமே நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்.

இங்கே இருக்கும் உங்களில் எவ்வளவு பேர் கடவுள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்? (நிறைய பேர் கை தூக்குகிறார்கள்) சரி. எவ்வளவு பேர் கடவுள் மீது நம்பிக்கையின்றி இருக்கிறீர்கள்? மிகச் சிலர்தான். சிலர் கடவுளை நம்புகிறார்கள். சிலர் கடவுள்மீது நம்பிக்கையற்று இருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில், உங்களில் எத்தனைபேர், இரண்டு கைகள் உங்களுக்கு இருப்பதாக நம்புகிறீர்கள். அவர்கள் அனைவரும் ஒரு கையை உயர்த்துங்கள். உங்களுக்கு இரண்டு கைகள் இருப்பதாக நீங்கள் நம்புகிறீர்களா? அல்லது உங்களுக்கு இரண்டு கைகள் இருப்பது உங்களுக்குத் தெரியுமா. கைகளைக் காண்பதற்கு நமக்குக் கண்களே இல்லாவிட்டாலும் கூட, நமக்கு இரண்டு கைகள் இருப்பதை அனுபவப்பூர்வமாய் அறிவீர்கள், இல்லையா யாரேனும் உங்களிடம் ஒரு விவாதம் தொடங்கி, உங்களுக்குக் கைகளே இல்லையென நிரூபிக்க முடியுமா? அது சாத்தியமா? இந்த விவாதம் மிகவும் போகும்போது, அவருக்கு ஓங்கி ஒரு அறை கொடுத்தால், உங்களுக்குக் கைகள் இருக்கின்றன என்பதை அவர் அறிந்துகொள்வார். உங்களுக்குக் கைகள் இருப்பதை அறிவீர்கள். ஆனால் கடவுளை மட்டும் நம்புகிறீர்கள். இது ஏன்? நமக்கு எதுவெல்லாம் தெரியாதோ, அவற்றை நாம் நம்புகிறோம். சிலர் கடவுள் இருக்கிறார் என்று நம்புகிறார்கள், சிலர் கடவுள் இல்லையென்று நம்புகிறார்கள். நீங்கள் நம்பினாலும், நம்பாவிட்டாலும் அவற்றால் எந்தப் பயனும் இல்லை. எனக்குத் தெரியாது என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டால்தான் ஒரு தேடுதல் உங்களுக்குள் துவங்கும். தேடுதலுக்கான தேவை ஒருமுறை வந்துவிட்டால், அதற்கான விடை வெகுதூரத்தில் இல்லை. ஒரு முறை நீங்கள் ஏதாவது ஒன்றை நம்பத் தொடங்கிவிட்டால், உங்களுக்குள் உள்ள தேடுதல் அழிந்துவிடும். நீங்கள் ஒரு முடிவுக்கு வந்து விடுகிறீர்கள். ஏதாவதொன்றைப் பற்றி ஒரு முறை நீங்கள் முடிவு செய்து விட்டால், உண்மையைப் பற்றி அறிவதற்கான அடிப்படை வேட்கையே உங்களுக்குள் அழிந்துவிடும்.

நீங்கள் கௌதம புத்தரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஒரு முறை புத்தர் அதி காலைப் பொழுதில், சூர்யோதயத்திற்கு முன்பு தனது சீடர்களுடன் சத்சங்கத்தில் அமர்ந்திருந்தார். இன்னும் இருட்டாகவே இருந்தது. அப்போது ஒரு மனிதர் அங்கே வந்தார். அவர் ஒரு ராமபக்தர். அவர் வாழ்க்கை முழுவதும் சொல்லிக் கொண்டிருந்தது, "ராம், ராம், ராம்" தான். வேறெதையும் அவர் சொன்னதில்லை. அவரது ஆடைகளில் கூட முழுவதுமாக ராம், ராம் என்றே எழுதி இருந்தது. அவர் கோவிலுக்குச் செல்பவர் மட்டுமல்ல. நிறைய கோவில்கள் கட்டியவரும்கூட. வயதாக வயதாக ஒரு சிறு சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. "என் வாழ்க்கை முழுவதும் நான் ராம், ராம் என்றே சொல்லி வந்துள்ளேன். ஆனால் கடவுள் மீது நம்பிக்கை இல்லையென்று 3,040 பேர் இங்கே கை தூக்கினார்கள். அவர்களுக்கும்கூட சூர்யோதயம் நடக்கின்றது. சுவாசமும் நடக்கின்றது. அவர்களும் சந்தோஷமாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்விலும் பல சந்தோஷமான நிகழ்ச்சிகள் நடக்கின்றன. நான் வெறுமனே அமர்ந்து ராம், ராம் என சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஒரு வேளை இவர்கள் கூறுவதைப்போல கடவுள் இல்லையென்றால்... எனது வாழ்க்கை முழுவதும் வெறுமையாகிவிடும், ஒன்றுமில்லாமல் போய்விடுமே". கடவுள் இருக்கிறார் என்பது அவருக்குத் தெரியும். ஆனாலும் சிறு சந்தேகம் வந்துவிட்டது. அவ்வளவுதான்.

ஆனால் எப்படி இந்தக் கேள்வியை புத்தரிடம் அனைவர் முன்னிலையிலும் கேட்பது? எனவே அவர் அதிகாலையில் இருட்டாக இருக்கும்போதே வந்து ஒரு மூலையில் நின்றவாறு "கடவுள் இருக்கின்றாரா, இல்லையா" என்ற கேள்வியைக் கேட்டார். கௌதம புத்தர் அவரைப் பார்த்து "இல்லை" என்று கூறினார். இந்த பதிலைக் கேட்டவுடன் சீடர்கள் மத்தியில் ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது. கடவுள் இருக்கின்றாரா, இல்லையா என்ற போராட்டம் அவர்களுக்குள் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பலமுறை அவர்கள் இந்தக் கேள்வியை கௌதமரிடம் கேட்கும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் கௌதமர் அமைதியாகவே இருந்துவிடுவார். இப்போதுதான் முதன்முறையாகத் தெளிவாகவும், அழுத்தமாகவும் கடவுள் இல்லை என்று கூறியிருக்கிறார்.

கடவுள் இல்லாமல் இருப்பதென்பது எவ்வளவு மகிழ்ச்சியானது. உங்கள் வாழ்வில் நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யமுடியும். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், என்ன செய்யவில்லை என்பதை கவனித்துக் கொண்டிருக்க ஒருவரும் இல்லை. உங்களை நரகத்தில் தள்ளித் துன்புறுத்துவதற்கு யாருமே இல்லை. இது உங்களுக்கு முழுமையான சுதந்திரம், இல்லையா? கடவுள் இல்லையென்றால் உங்களுக்கு முழுமையான சுதந்திரம். சீடர்கள் மத்தியில் நிறைவான சந்தோஷம். அந்த நாள் சந்தோஷமான நாளாக இருந்தது.

மாலை வேளையில், புத்தர் அவருடைய சீடர்கள் மத்தியில் அமர்ந்திருந்தபோது, மற்றொரு மனிதர் அங்கே வந்தார். அவர் ஒரு சார்வாகர். அந்த நாட்களில் சார்வாகர்கள் என்றொரு பிரிவினர் இருந்தனர். அவர்கள் பொருளீட்டுவதில் மட்டுமே நாட்டம் உள்ளவர்கள். அவர்கள் பார்ப்பதை மட்டுமே நம்புபவர்கள். வேறு எதையும் நம்புவதில்லை. அவர்கள் உங்கள் நகருக்கு வந்து உங்களிடம் சவால் விடுவார்கள். "யாராவது கடவுள் இருக்கின்றார் என்று நிரூபித்தால் நான் நூறு பொற்காசுகள் தருவேன். இல்லையென்றால், நீங்கள் அனைவரும் சேர்ந்து நூறு பொற்காசுகளை எனக்குத் தரவேண்டும்." அவருடைய வாழ்க்கை முழுவதும் இந்த வழியில் மட்டும் சம்பாதித்தார். ஊர்ஊராகச் சென்று "கடவுள் இல்லை, கடவுள் இல்லை" என நிரூபித்து வந்தார். இது அவருடைய வேலை. கடவுள் இல்லையென்பதை ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிரூபித்து அவர் தனது துறையில் பெரிய மனிதராகத் திகழ்ந்தார்.

தற்போது வயது ஆக ஆக சிறு சந்தேகம் வந்துவிட்டது. "எனது வாழ்க்கை முழுவதும் கடவுள் இல்லையென்றே நான் மக்களிடம் கூறி வந்திருக்கிறேன். ஒரு வேளை கடவுள் இருந்தால்? நான் அங்கே போகும்போது அவர் என்னை விடுவாரா? நரகம் என்று ஏதோ இருப்பதாக மக்கள் சொல்கிறார்களே". சிறு சந்தேகம்... கடவுள் இல்லையென்று அவருக்குத் தெரியும். இதனை அவரது வாழ்க்கை முழுவதும் நிரூபித்தும் வந்திருக்கிறார். ஆனால் ஒரு சிறு சந்தேகம்... 'ஒரு வேளை கடவுள் இருந்தால்? எதற்கு வம்பு. நகரிலே ஞானமடைந்த மனிதர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் கேட்போம். ஆகவே மாலை வேலையில் இருட்டியபிறகு, அவர் கௌதமரிடம் சென்று, "கடவுள் இருக்கின்றாரா?" என்று கேட்டார். கௌதமர் அவரைப் பார்த்து "ஆமாம்" என்று கூறினார். மீண்டும் ஒரு மிகப்பெரிய போராட்டம் சீடர்களிடையே துவங்கியது. கடவுள் இல்லையென்று அவர் கூறியதால் காலை முதல் அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால் மாலையிலோ கடவுள் இருக்கின்றார் என்று கூறுகிறார். ஏன் இப்படி?

வளர்ச்சியடைவதற்கான தேவை உங்களுக்குள் ஆதாரமாக இருக்கும்போது, இது உங்களுடைய நோக்கமாக இருக்கும்போது, எது உங்களுடைய அனுபவத்தில் இருக்கின்றது, எது இல்லை என்பதைப் பற்றிய தெளிவு முதலில் உங்களுக்கு இருக்கவேண்டும். உங்கள் அனுபவத்தில் இருப்பது எது, இல்லாதது எது என்பதைப் பற்றித் தெளிவாக வரையறுத்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்தில் இருப்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் அனுபவத்தில் எது இல்லையோ அதனை இல்லையென நீங்கள் கூறத் தேவையில்லை. வெறுமனே "எனக்குத் தெரியாது" என்று கூறுங்கள். நீங்கள் "தெரியாது" என்று ஏற்றுக்கொண்டால், பிறகு வளர்ச்சி ஏற்படும். தற்போது உங்களுக்கு எதுவெல்லாம் தெரியாதோ, அவற்றை நம்பத் தொடங்குகிறீர்கள். உங்களுக்கு அனைத்துமே தெரிந்ததாக எண்ணுகிறீர்கள்.

இந்தியாவில் உங்களுக்குக் கடவுளைத் தெரியும். அவர் எங்கிருக்கிறார் என்று தெரியும். அவருடைய பெயரும் உங்களுக்குத் தெரியும். அவருடைய மனைவி யாரென்று உங்களுக்குத் தெரியும். அவருக்கு எத்தனை குழந்தைகள் என்று உங்களுக்குத் தெரியும். அவருடைய பிறந்தநாளும் தெரியும். அவருடைய பிறந்தநாளிற்கு அவர் விரும்பும் இனிப்பு என்ன என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் உங்களுக்குள் என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது. தற்போதைய முழுப்பிரச்சினையும் அதுதான். உங்களுக்கு சொர்க்கத்தின் முகவரி கூடத்தெரியும். ஆனால் இந்த கணத்தில் உங்களுக்குள் என்ன நடக்கிறது என்பதைப்பற்றிய விழிப்புணர்வு உங்களுக்கு இல்லை.

இப்போது உங்களுக்குள் வளர்ச்சி நடைபெற வேண்டுமெனில், இப்போது உங்கள் அனுபவத்தில் என்ன இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது உங்கள் அனுபவத்தில் என்ன இருக்கின்றது? உங்கள் உடலை ஓர் அளவிற்கு உணர்ந்திருக்கிறீர்கள். இந்த மனதை ஓரளவிற்கு உணர்ந்திருக்கிறீர்கள், இந்த உலகை ஓர் அளவிற்கு உணர்ந்திருக்கிறீர்கள். இந்த உடலையும், மனத்தையும் இயக்குகின்ற சக்தியினை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஒரு சில கணங்கள் நீங்கள் உணர்ந்திருக்க முடியும். இதைத்தாண்டி நீங்கள் எதையும் உணரவில்லை. மற்றவை எல்லாமே கற்பனைதான். இந்த சமூகம் எந்த வழியில் கற்பித்ததோ, அதே வழியில்தான் உங்கள் கற்பனையும் உள்ளது. உங்கள் அனுபவத்தில் எது இருக்கின்றது, எது இல்லை என்று பாருங்கள். உங்களது அனுபவத்தில் இல்லாததை எல்லாம் 'எனக்குத் தெரியாது' என்று நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். இது மிக மிக அவசியமானது. இல்லாவிட்டால் உங்கள் வாழ்க்கை முழுவதும் பாசாங்காகிவிடும்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

**SP Electronics**


**TV, VCR, DVD, Players-Telephone-Computers**

**உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்**

**416 264 6400**

**2641 Eglinton Avenue East**

**( Brimley & Eglinton)**



**நீங்கள் கனடாவுக்கு புதிதாய் வந்திருக்கும் அகதியா?**

சட்ட உதவிப் பத்திரத்துடனிருக்கும் பதிய அகதிகளுக்கு

குடிவரவு சம்மந்தமான சேவைகள் அனைத்தும்

**இலவசம்**

20 வருடங்களுக்கு மேற்பட்ட குடிவரவாளர் சேவை

தமிழில் தொடர்புகளுக்கு

**என். பொன்னா**

**LANK-CAN LINK Ltd.**

106 Rough River Drive.,
Scarborough, ON
(Morningside & Sheppard)

Tel: **416.269.5883**

Fax: 416.281.3404

# லெமூரியா கண்டம்

## (குமரிக் கண்டம்)

முருகேசு
பாக்கியநாதன்



திராவிடர்கள் என்போர் யார்? தமிழ், தெலுங்கு, கன்னடம், மலயாளம், துளு ஆகிய மொழி பேசும் இனக்குழுமங்களைச் சார்ந்தவர்களையே திராவிடர்கள் என அழைக்கின்றனர். சென்ற மாத இதழில் ஆரம்ப காலத்தே திராவிடர்கள் யாவரும் தமிழ்மொழியையே தமது மொழியாகக் கொண்டிருந்தனர் என்பதனைப் பார்த்தோம். இவர்கள் ஒரு உயரிய சீரிய நாகரீக சமுதாயமாக இற்றைக்கு 6,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆசியாவின் நாகரீக வழிகாட்டியாக, பிதாமகர்களாக சிந்துவெளி நாகரீகத்தில் வாழ்ந்தார்கள் என்பது பலவித மான அகழ்வாராச்சிகளின் மூலம் நிறுவப்பட்டுள்ளது. இது பற்றிய ஒரு விரிவான கட்டுரையினை பின்பு ஒரு இதழில் நோக்குவோம்.

இன்றைய இந்தக் கட்டுரையானது தமிழர்களின் இன்னொரு நாகரீகம் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு கடல்கோளால் காவு கொள்ளப்பட்டு மறைந்த குமரிக்கண்டத்தில் சிந்துவெளி நாகரீகத்திற்கு முன்பு தமிழர்களின் சிறந்த நாகரீகமுடைய மக்கள் வாழ்ந்ததாக அறியப்படுகின்றதென ஆராச்சியாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதனை லெமூறியா கண்டம் என்றும் சுண்டலான்ட் என்றும் மேற்கு நாட்டு அறிஞர்களாலும், குமரிக் கண்டம் என்று இந்திய அறிஞர்களாலும் அழைக்கப்படுகின்றது. முழுவதுமாக கடல்கோளினாலும் (Tsunami) கண்ட நகர்வினாலும் (continental Drift) அழிக்கப்பட்ட ஒரு பெருங்கண்டமே இதுவாகும். இது தற்போதைய இந்து சமுத்திரத்தில் இந்திய பெருநிலப் பரப்பு அடங்கலாக இலங்கை, மாலைதீவுகள் உட்பட தொடங்கி தென் கிழக்கே அவுஸ்ரேலியா வரை நீண்டு, தெற்கே அவுஸ்ரேலியாவிலிருந்து மேற்கே மடகஸ்கார் வரையும் அகன்று, கிழக்கே மடகஸ்காரிலிருந்து வடகிழக்கே இந்திய உபகண்டம் வரை நீண்டு அகன்ற கண்டமாக திகழ்ந்தது. இதன் இட அமைவுத் தோற்றத்தினை படத்தில் பார்த்து அறியவும். இங்கு தமிழர்கள் (திராவிடர்கள்) வாழ்ந்தார்கள் என்பதற்கு பலவிதமான இலக்கியச் சான்றுகளும் தொல்லியற் சான்றுகளும் மனித உடற்கூற்றியற் சான்றுகளும் காணப்படுகின்றன. வெளிநாட்டறிஞர்கள் உட்பட பல அறிஞர்கள் இதற்கான ஆதாரங்களை முன்வைத்துள்ளனர். ஆகவே தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் 10,000 ஆண்டுகளுக்கு முன்பே கணக்கிடப்பட வேண்டும்.

லெமூறியாக் கண்டம் பற்றி ஆராயும் போது இதனை முழுமையான நிறுவப்பட்ட ஒன்றாக கருதாமல் இதனை ஒரு கருதுகோளாக (presumption) வெளியிடுபவர்களும் உண்டு. எனினும் இக்கட்டுரை மூலம் பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகினறன. சிந்துவெளி நாகரீகத்தில் அகழ்வாராச்சிகள் மூலம் அப்பியொரு நாகரீகம் இருந்ததற்கான ஆதாரங்களுடன் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் இக்கண்டத்தினை பாரிய கடல்கோளானது கடல் கொண்டதனால் கடலின் மிகப்பெரிய ஆழத்தினுள் தேடி ஆராச்சி செய்வதென்பது பாரி செலவினதாகும். இதனைப் பொறுப்பெடுத்து செய்வதற்கு எந்த அரசாங்கங்களும் இதுவரை முன்வரவில்லை. குறிப்பான காரணம் இதில் தமிழன் தொடர்புபட்டிருப்பதனால் அரசியல் பூகோள காரணங்கள் காரணமாகவிருக்கலாம். எனினும் இருக்கக் கூடிய ஆதாரங்களுடன் இக்கட்டுரையினைத் தருவதே எனது கடமையாகும்.

இக்கண்டம் பற்றி பண்டைய இலக்கியங்கள் பலவற்றில் குறிப்பிடப்படுகின்றது.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"
- தொல்கப்பியம்


வடவேங்கடம் தொடங்கி தென் குமரிக்கண்டம் வரை வரையும் அமைந்ததே தமிழ்கூறும் நல்லுலகமாகும். என கிமு 200 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளதென்றால் இக்கடல்கோள் எவ்வளவு பன்நெடுங்காலத்திற்கு முற்பட்டதாகவே இருந்திருக்க வேண்டும் என்று குறிப்படுவர்.











"ப.்றுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"
சிலப்பதிகாரம் - 11 20 – 21

பகுறுளி ஆற்றோடு சேர்த்து தொடர் மலைகளாகிய வேங்கடமலையோடு இருந்த குமரிக் கண்டத்தினை கொடிய கடல் மூழ்கடித்து என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுகின்றார்.

"செந்நீர் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் ப.்றுளி மணலிலும் பலவே"
- புறநானூறு

"நெடியோன் குன்றமும் தொடியோன்
பௌவமும்
தமிழவரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு"
- சிலப்பதிகாரம்

"மலிதிரை யூர்ந்து மண்கடல் வவ்வலின்
மேலிவின்றி மேற்சென்று மேவார் நாடிடம்பட"
- கலித்தொகை

"குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனு
நான்கெல்லையின் இருந்த தமிழ்க்கடலுள்"
- நன்னூல்

"வடதிசை மருங்கின் வடுகுவரம்பாகத்
தென்திசை உள்ளிட்டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருதுகிடந்த"
- காக்கை பாடினியார்

இக்கூற்றுக்களை கூர்ந்து நோக்குவோமாயின் இங்கே குமரிக்கண்டம் என ஒன்று இருந்ததற்கான ஏதோவொரு ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை ஆராச்சிக்கான ஆதாரமாக இல்லாதுவிட்டாலும் இக்கண்டம் பற்றிய செய்திகள் கிமு200 ஆண்டுகளுக்கு பின்பும் கடைச்சங்க காலத்திலும் இயற்றப்பட்ட காவிங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவை. இக்கருதுகோளிற்கு உறுதி சேர்ப்பதாகவேயுள்ளது. அத்தோடு அவைகள் மேலும் ஆராச்சிக்குட்படுத்தப்பட வேண்டியனவாகும். இதுபற்றிய சில ஆதாரங்கள் தமிழ் நாட்டின் தெற்கே கடலில் ஆழ்ந்த தென்மதுரை பற்றிய சில தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. தென்மதுரை பற்றி சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய காப்பியங்களில் குறிப்பிடப்படுகின்றது.

கலாநிதி கொன்றாட் இலஸட் என்னும் ஆராச்சியாளன் ஸ்ரீபன் ஒபன்ஹீமர் அவர்களின் கிழக்கின் ஈடன் என்னும் நூலைப் பற்றி ஆராந்தபோது பின்வருமாறு கூறுகின்றார். "தமிழ் இலக்கியத்திற்கு ஒரு நீண்டகால பாரம்பரியம் உண்டு. அது சங்காலம் உட்பட 10,000 ஆண்டுகள் தொன்மையானவை. தொடர்ச்சியான பாரிய கடல்கோள்களினால் தமிழ் கூறு நல்லுலகின் தலைநகர் மூன்று முறைகள் இடம் பெயர்ந்தது. இந்தியபெருநிப்பரப்பு இலங்கை மாலைதீவுகள் மடகஸ்கார் அவுஸ்திரேலியா உட்பட்ட நிலங்கள் யாவும் தொடர்புபட்டிருந்ததனை ஸ்ரீபன் ஓபன்ஹீமர் சுங்கன் - சுண்டலான்ட் என்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார். இங்கிருந்துதான் இந்தியா தனது பல காலாச்சாரங்களைப் பெற்றுக் கொணட்டதாகக் குறிப்பிடுகின்றார்.

இந்துசமய காவியங்களான யதுர் வேதத்திலும் பாஹக வேதத்திலும் முடிவுற்ற நான்கு யுகங்களின் முடிவுகளில் நீரினாலும் காற்றினாலும் பாரிய அழிவுகள் உண்டானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு காணப்படும் படம் லெமூறியாக்கண்டத்தின் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஆரம்பத் தோற்றத்தினையும், அதில் தற்போதைய இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா அகியன அமைந்திருந்த இடங்களையும், அதனைச் சுற்றியிருந்த ஏனைய நாடுகளும் இருப்பதனை அறியக் கூடியதாகவுள்ளது. இக்கண்டமானது பூகோளத்தின் மத்தியிலிருந்து லெமூறியாகண்டத்தில் அண்மையில் ஏற்பட்ட சுனாமியினை விட பலப்பல மடங்கு வீரியம் கூடிய பாரிய கடல் பெருக்காகிய ஆழியின் ஊழிக்கூத்தினாலும் அழித்துச் சிதைக்கப்பட்டதுவே தமிழ்கூறு நல்லுலகமாகிய குமரிக் கண்டமாகும்.

இக்கண்டமானது பாரிய கண்ட நகர்வினால் எதிர் மணிக்கூட்டு நோக்கில் (Anti Clockwise move) நகர்ந்தது. இக்கண்டம் நகர்ந்தபோதோ இப்பாரிய கடல்கோள் ஏற்பட்டது. அண்மையில் இந்தோநேசியக் கடலில் ஏற்பட்ட 8.6 றிச்டர் அளவினான புவிநடுக்கத்திற்கே டிசம்பர் 26, 2005ல் நடந்த சுனாமி ஏற்பட்டது. ஆனால் பாரிய தூரத்திற்கு இழுவிசையாக இழுபட்ட கண்ட நகர்வு எவ்வளவு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தமுடியும் என்பதனை ஊகிக்கமுடியும். இதனாலேயே அவுஸ்திரேலியா, யாவா, சுமாத்திரா அடங்கலான தென்கிழக்கு ஆசிய நாடுகள் தென் கிழக்கு நோக்கி இழுபட்டு இருப்பதனை படத்தில் நோக்க முடியும். அத்துடன் இந்தியாவிலிருந்து பிரிந்துள்ள இலங்கையும் இப்படியாக தென்கிழக்காக இழுபட்டுப் பிரிந் திருப்பதனை செய்மதிப்படங்களைப் பார்ப்பதன் மூலம் அறிய முடியும்.

எதிர் மணிக்கூட்டுத் திசையில் நிகழ்ந்த கண்ட நகர்வினால் ஏற்பட்ட இழு விசையினால் இழுபட்ட இலங்கையினையும் தென்கிழக்காசிய தீபகற்பங்களும் தீவுகளும் எதிர் மணிக்கூட்டுத் திசையில் இழுபட்டிருப்பதனை நோக்குக. இப்படியான ஒரு பாரிய இடநகர்வுகளை உண்டாக்கிய கண்ட நகர்வினால் எவ்வளவு வீராவேசத்துடன் அழிவினையும் ஏற்படுத்தக் கூடிய ஆழிப்பேரலை ஏற்படுத்தப்பட்டே லெமூறியாக் கண்டம் கடலில் ஆழ்த்தப் பட்டது.

79ம் பக்கம் பார்க்க...

**ABC Private Tutoring & Homework Help**

**French -** For grade 4 to grade 10 By a native French speaking teacher from France **Math -** For grade 5 to grade 12 In English or French medium Intersection

**Victoria park & Ellesmere**

**Mr. Shanthakumar**

**Tel: 647 262 9430**

# Canadian Tamils' Chamber of Commerce

# NOMINATION PACKAGE

# 12th ANNUAL ENTREPRENEUR AWARDS

## INFORMATION

**Purpose**
To provide public recognition and education about outstanding business carried on by Tamil Canadians and their achievements in commerce and community development.

**Preamble**
Enclosed is a nomination package for The Entrepreneur Awards in Business. These awards were created to recognize the outstanding efforts by Tamil Canadians in the business community. The Chamber Award Selection Committee asks that the information be provided as it pertains to your Canadian operations only. The Chamber has made best efforts to design this nomination form so that nominated businesses can provide the Selection Committee with appropriate facts without divulging any information that the company deems confidential. All nominees are permitted to provide additional attachments wherever necessary. It is the sole responsibility of the nominee to make sure that all information submitted is correct to the best of its ability and provided to the Chamber on or before the specified deadline for receipt of nominations. The Selection Committee will only see your form. All information listed in your nomination form will be held in the strictest of confidence.

**Method of Selection**
A selection committee, approved by the Board, will be responsible for the selection of the winners for these awards. The committee will consist of 5 persons, two from within the board and three from within the members or the public. The selection committee will study suggestions and nominations made, independently review the nominations and supporting documentation, visit the businesses, and ultimately select the winners. The selection committee reserves the right to request additional information, relating to the nominated business, if necessary. The Selection Committee, if it deems appropriate, may recommend that an award may not be presented when there are no qualified candidates.

**Time Deadlines to Remember**
All nominations should be mailed to the CTCC office, or submitted through the CTCC website. Letters sent to the CTCC office should be marked "private & confidential" and should be put in a mailbox before February 25th, 2010, giving enough time for it to be received before March 1st 2010. When submitting through our website, nominations can be made up until 5:00 pm on March 1st, 2010.

**Exclusions**
Members of the Board of Directors, Advisory Council Members and Entrepreneur Awards 2010 Selection Committee Members are not eligible to be nominated for theses awards.

**Contact**
For further inquiries, contact CTCC office at 416-335-9791 or Ken Kirupa at 416-294-9322 or by e-mail to kenkirupa@gmail.com or through CTCC e-mail: webmaster@ctcc.ca

**BUSINESSES MAY ONLY BE HONORED ONE TIME IN ANY ONE OF THE CATEGORIES**




## AWARD CATEGORY AND ELIGIBILITY CRITERIA

**Best Entrepreneur Award**
- In business for minimum of 4 years.
- # of Employees.
- Business should demonstrate overall stability and growth, employment increases and increase in customer radius.
- When compared to others in the industry or field of competition, business nominated should have a leadership position.
- Business should enjoy good visibility and image in the community.
- Company employees should enjoy good "quality of life" in the work environment.
- Civic and/or volunteer work by the owner or employees will be considered as well.
- Business nominated is not required to be a past or present member of The Chamber.
- Evidence of innovation in product development or marketing
- Community orientation

**Best Woman Entrepreneur Award**
- In business for minimum of 4 years.
- Business should demonstrate overall stability and growth, employment increases and increase in customer radius.
- When compared to others in the industry or field of competition, business nominated should have a leadership position.
- Business should enjoy good visibility and image in the community.
- Company employees should enjoy good "quality of life" in the work environment.
- Civic and/or volunteer work will be considered as well.
- Business nominated is not required to be a past or present member of The Chamber.
- Evidence of innovation in product development or marketing
- Community orientation

**Best Young Entrepreneur Award**
- In business for at least 2 years
- Wide market for product or service
- # of Employees
- Evidence of innovation in product development or marketing
- Good reputation
- Community orientation
- Should be less than 30 years of age

**Marketing Award**
- Individual business or service
- In business for at least 2 years
- Unique methods to target audiences
- Utilizes innovative and traditional methods of marketing creatively
- Use of website, stationary, TV/radio, print ads – 3 out 5
- Corporation – 50 people or more are not eligible

**Most Outstanding Professional Award**
- Nominated by the Board of Directors
- Displays evidence of individuality

**Most Outstanding Community Service Person Award**
- Nominated by the Board of Directors

*Acts as a community leader and offers support to various organizations*

## NOMINATION FORM (2010) FOR THE 12TH ANNUAL ENTREPRENEUR AWARDS

Award being nominated for (please choose one):

☐ Best Entrepreneur Award
☐ Best Woman Entrepreneur Award
☐ Most Outstanding Professional Award
(Please fill 1-6 only & if applicable)

☐ Best Young Entrepreneur Award
☐ Best Marketing Award
☐ Most Outstanding Community Service Person Award
(Please fill 1-6 only & if applicable)

1) Name of Nominee: ____________________

2) Age (Only if applying for the Best Young Entrepreneur Award): ____________________

3) Name of Business: ____________________

4) Type of Business: ____________________

5) Address: ____________________

6) Tel: (Business) ____________________ (Home/Cell) ____________________

7) Start Date of Business: ____________________ Number of Employees: ____________________

8) Net Asset Value of Business: $ ____________________ Annual Sales: $ ____________________

9) Reasons for Recommendation:
- ____________________
- ____________________
- ____________________
- ____________________
- ____________________

10) Additional Comments:
- ____________________
- ____________________
- ____________________
- ____________________
- ____________________

11) I hereby consent to my nomination for the award category listed above: ____________________
(Signature of Nominee)

ACKNOWLEDGEMENT & AUTHORIZATION

I certify that the information contained herein is true and correct to the best of my knowledge. I agree to allow the Chamber Selection Committee to contact appropriate agencies or individuals only to verify any statements made on my nomination form. I consent to provide additional information and/or documentation as required, plus an on-site review by the Selection Committee if requested. By signing this form, I allow the Chamber to use my name and/or my business's name in promoting this program. In consideration for my nomination and possible selection as The Canadian Tamils' Chamber of Commerce Entrepreneur Award winner, I agree to hold harmless The Canadian Tamil's Chamber of Commerce, its officers and employees, and the Selection Committee of the Chamber along with all of its subcommittees.

____________________ Signature of Nominee
____________________ Date

### Conditions of Entry

1. The closing date for receipt of completed entry forms is Monday March 1st 2010 at 5pm.
2. Entries may be made in more than one category (for multiple entries please submit each entry on a separate form).
3. The Awards are only open to organizations and individuals operating within Canada
4. Entries must address the criteria established for each category and against which the Selection Committee must make their decision.
5. Short listed organizations in each category may be visited by representatives of the Selection Committee to validate their entry and assist with their final decision.
6. In certain cases, short listed organizations may be invited to give a short presentation on their entries.
7. Finalists will be invited to the Entrepreneur Awards Gala Night to be held on Saturday April 10th 2010 when the winner in each category will be announced..
8. The Selection Committee's decision is final and no correspondence will be entered into.
9. All information will be treated as confidential. It will not be used for any purpose other than judging the competition.

To be filled by Nominator:


Name: ____________________ Designation: ____________________

Signature: ____________________ Date: ____________________

**Mailing Address for the Completed Nomination Forms:**

**Selection Committee**
**Entrepreneur Awards Gala-2010**
**CTCC**
**209-5200 Finch Ave East, Scarborough, Ontario. M1S 4Z4**

# மாறவிருக்கும் வாசித்தல் முறை: அப்பிள் அறிமுகப் படுத்தும் iPad


- கருணா

பேருந்தில் பயணித்துக்கொண்டிருக்கிறீர்கள். ஒரு பத்திரிகையை எடுத்து வாசிக்கத் தொடங்குகிறீர்கள். பத்திரிகையிலுள்ள எழுத்துரு உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதே நேரம் பத்திரிகை 4 கொலம்களைக் (Column) கொண்டதாக உள்ளதும் உங்களுக்கு சுவாரசியமின்றி இருக்கிறது. சில கட்டளை அழுத்தங்களுக்குப் (கிளிக்) பின் எல்லாம் மாறி உங்கள் விருப்பத்துக்கேற்றபடி அமைந்து விடுகின்றன. இப்போது பத்திரிகையில் வெளிவந்திருக்கும் வீடியோ ஒன்றைப் பார்க்கத் தொடங்குகிறீர்கள். கொஞ்சம் பொறுங்கள்... இதெல்லாம் எப்படி சாத்தியம் என்று யோசிக்கிறீர்களா? அப்பிள் நிறுவனம் அறிமுகப்படுத்தியிருக்கும் iPad சாதனத்தின் மூலம்தான் இவை சாத்தியமாகப்போகின்றன.

கடந்த மாதம் 27ம் திகதி சான்பிரான்ஸிஸ்கோ நகரில் அப்பிள் நிறுவன அதிபர் Steve Jobs அறிமுகப்படுத்தியிருக்கும் iPad, வாசிக்கும் முறையை மாற்றப்போவதாகவே பலரும் கூறுகிறார்கள். அப்பிள் நிறுவனத்தின் iPhoneக்கும் ஒரு மடிகணினிக்கும் (Laptop) இடைப்பட்டதாகவே இந்த iPad அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 10அங்குல திரையைக் கொண்டதாகவும், தொடுகை மூலம் கட்டளைகளைப் பிறப்பிக்கும் வசதி கொண்டதாகவுமே இது அமைக்கப்பட்டிருக்கிறது. மிக மெல்லியதாக (தடிப்பம் குறைந்ததாக) இருப்பதால் கவர்ச்சியாக இருப்பதாகவும், இளையதலைமுறையை இலகுவாக ஈர்க்கும் என்றும் நம்பப்படுகிறது.

சரி! எந்தவகையில் இது மடிகணினியிலிருந்து வேறுபடப்போகிறது. பத்திரிகைகளை ஏற்கனவே கணினிகளிலும், மடிகணினிகளிலும் வாசிக்கமுடியுமென்றாலும் அவற்றை நீண்ட நேரம் பயணிக்கும்போதோ, படுக்கையிலிருக்கும்போதோ வாசிப்பது சிரமமானது. அத்துடன் அவை அச்சில் வெளிவரும் பத்திரிகைகளின் அமைப்பிலும் இருப்பதில்லை. ஒரு தலையங்கமும், தொடரும் கட்டுரையும் போன்றே அவை அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் iPadஇல் அச்சில் வெளிவரும் பத்திரிகையின்போது வடிவமைப்புப் போன்ற வடிவிலேயே பத்திரிகைகளை வாசிக்கமுடியும். நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை iPad அறிமுகநிகழ்வில் காண்பித்த டிஜிடல் பத்திரிகை அப்படித்தான் இருந்தது.

இந்த iPad சாதனத்துடன் புத்தகங்களை டிஜிட்டல் முறையில் வாசிக்கும் வசதியையும் அப்பிள் தருகிறது. ஏற்கனவே புத்தகங்களை டிஜிட்டல் முறையில் வாசிக்கும் சாதனங்களான Sony Reader, Amazon Kindle போன்றவை சந்தையிலிருந்தாலும், iPad தொழில்நுட்பரீதியில் பலமடங்கு உயர்ந்தது என்றே நம்பப்படுகிறது. அத்துடன் ஏற்கனவே இருந்தவை கறுப்பு வெள்ளைத் திரைகளை மாத்திரம் கொண்டிருந்தன. அவை வேறு பணிகளைச் செய்யும் நோக்குடன் உருவாக்கப்படவில்லை. iPadஇல் நீங்கள் இணையத்தில் வலம்வரலாம். இணைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கி மூலம் பாடல் கேட்கலாம். திரைப்படங்களைப் பார்க்கலாம். மின்னஞ்சல்களை வாசிக்கலாம். இப்படி ஏராளம் வேலைகளைச் செய்யலாம். ஏற்கனவே உள்ள 140,000 appsமூலம் எல்லைகளற்ற தேவைகளை நிறைவேற்றலாம்.



அப்பிள் நிறுவனம் 2001ம் ஆண்டு iPodஐ அறிமுகப்படுத்தியபோது, 'பாடல் கேட்கும் முறை" இந்த உபகரணத்துடன் மாறப்போகிறது என்றே கூறியது. அதன்படியே உலகம் பாடல் கேட்கும் முறையை iPodஉடன் அப்பிள் மாற்றியமைத்தது. இப்பொழுது வந்திருக்கும் சாதனம் 'வாசிக்கும் முறை"யை மாற்றப் போவதாகக் கூறுகிறார்கள். iPad அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து பெரும்பாலான தொழில்நுட்ப இணையத்தளங்களும், பத்திரிகைகளும் இது பற்றியே ஏராளமான செய்திகளை வெளியிட்டுவருகின்றன.

எல்லாம் எதிர்கால உலகத்தின் தேவையையும் சுவையையும் துல்லியமாகக் கணிப்பதில்தான் இருக்கிறது. இப்போது ஒரு சுவாரசியமான செய்தி. அப்பிள் நிறுவனத்தை ஆரம்பித்தவர்களில் முக்கியமானவர் Steve Jobs. இடையில் சிறுதுகாலம் அவர் அப்பிள் நிறுவனத்திலிருந்து விலகியிருந்தார். அந்தக் காலப்பகுதியில் அப்பிள் நிறுவனம் பெரும் பொருளாதார சரிவைக் கண்டது. அந்த நேரத்தில் Dell நிறுவனம் பெரிய வளர்ச்சியைக் கண்டிருந்தது. Dell நிறுவன அதிபர் Micheal Dellஇடம் அப்பிளின் பொருளாதார நெருக்கடி பற்றி 1997இல் கேட்கப்பட்டபோது அவர் இவ்வாறு பதிலளித்தார். 'நானாக இருந்தால் அப்பிள் நிறுவனத்தை மூடிவிட்டு, எஞ்சியிருக்கும் பணத்தை பங்குதாரர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிடுவேன்" என்றார். அப்பிள் விற்பனை செய்யும் பொருட்கள் இனி எடுபடாது என்றே அவர் நம்பினார்.

அப்பிள் நிறுவனத்துக்கு மீண்டும் திரும்பிய Steve Jobs கொஞ்சம் கொஞ்சமாக நிறுவனத்தை முன்னணிக்கு கொண்டுவந்தார். 2006ம் ஆண்டு எட்டு ஆண்டுகளுக்குப்பின் அப்பிள் நிறுவனத்தின் சந்தைப்பெறுமதி Dellஐ விட அதிகரித்தது. அப்போது Steve Jobs தனது பணியாளர்களுக்கு அனுப்பிய மின்னஞ்சல் ஒன்றில் Michael Dell எதிர்காலத்தைக் கணிப்பதில் வல்லமையுள்ளவராகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டார். 2010ம் ஆண்டு ஜனவரியில் Dellஇன் சந்தைப்பெறுமதியிலும் அப்பிளின் சந்தைப்பெறுமதி ஏழு மடங்காகிவிட்டது. ஆம், எல்லாம் எதிர்கால உலகின் தேவையையும் சுவையையும் துல்லியமாகக் கணிப்பதில்தான் இருந்தது, இருக்கிறது.

karuna@thaiveedu.com

■ ■ ■

# லெமூரியா கண்ட...

77ம் பக்கத் தொடர்ச்சி...

இங்கு நாம் மேலே காணப்படும் நாசாவினால் எடுக்கப்பட்ட செய்மதிப் படங்களை நோக்கும் போது, இந்தியாவின் குடாவிற்குள் யாழ்தீபகற்பம் உள்ளே அடங்கியிருந்ததனை அறியமுடிகின்றது. எதிர்மணிக்கூட்டு விசையில் இழுபட்டதனாலேயே இலங்கையில் தோற்றம் இந்தியாவிலிருந்து பிரிந்த எஞ்சிய பாகமாகக் காணப்படுகின்றது. பாம்பனுக்கும் தலைமன்னாருக்கும் இடைப்பட்ட பகுதி வெறும் மணற் திட்டுக்களாலானதே இது மிகவும் ஆழம் குறைந்த பகுதியாகவே காணப்படுகின்றது. சிறு உதாரணத்தில் கூறமுடியுமாயில் இழுபட்ட பகுதியை நோக்கும் போது 'பீட்சா'வினை நாம் பிரித்து எடுக்கும்போது அதில் உள்ள 'சீஸ்' இழுபட்டு வருவது போலவே காணமுடியும். அத்தோடு இலங்கையில் காணப்படும் மணல்களின் தன்மை, மிருகங்களான யானை, சிறுத்தை, மான், மயில் மற்றும் ஏனைய பறவைகள் ஒரே தன்மையதாகவும், ஒரேயினத்தைச் சேர்ந்தவையாக இருப்பதுவும், அத்துடன் மரம் செடி கொடிகள் யாவும் ஒற்றுமைத் தன்மையயும் மனிதர்களின் தோற்ற வடிவங்கள் யாவும் ஒற்றுமையாகவிருப்பது இதற்கான ஆதாரத்திற்கு வலுச் சேர்க்கின்றது. ஆய்வாளர்களின் முடிவின்படி இந்தியாவும் இலங்கையும் ஒன்றாகவேயிருந்தது. ஆழிப்பேரலைப் பிரளையத்தின்போது எஞ்சிய பகுதியே இந்து சமுத்திரத்தில் தெற்கிலும் தென்கிழக்கிலும் காணப்படும் நாடுகளாகும்.

மடகஸ்காரில் லெமூர் என்னும் ஒரு மிருகம் இன்றும் காணப்படுகின்றது. இது லெமுறியா என்னும் காரணப்பெயரால் அமைந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அவுஸ்ரேலியாவில் வடமேற்குப் பகுதியில் தற்போதும் வாழும் கறிபியா என்னும் ஆதிக் குடிகள், ஆதித் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் என அறியப்பட்டுள்ளது. குமரிக் கண்ட நிலத்தொடர்பு இருந்த காலத்திலேயே ஆதித் திராவிடர் குமரிக் கண்டத்திலிருந்து புலம் பெயர்ந்து உணவு தேடி வேட்டையாடும் நோக்கோடு வேறொரு பிரதேசத்திற்குச் சென்றுள்ளார்கள். இந்த ஒரு ஆதாரமே லெமூறியாவில் தமிழன்தான் வாழ்ந்தான் என்பதாகும். இங்கு வாழ்ந்தவனின் இறுதிக் குடிகளே லெமூறியாவின் எச்சமாகிய இலங்கையின் 10,000 ஆண்டுகளுக்கு முந்திய ஆதிக்குடிகளாவர் என்பது நிருபணமாகின்றது. இக்கண்ட நகர்வினால் பிரிக்கப்பட்ட இந்தியாவின் தென் பகுதியில் வாழ்ந்த தமிழன் அங்கு மண்ணின்மைந்தனாகவும், இலங்கையில் வாழ்ந்த தமிழன் இலங்கையின் மண்ணின் மைந்தனாகவும் வாழ்ந்தான்.

தொடரும்...

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

இணைந்து கொள்ளுங்கள்

'தாய்வீடு' facebookஇல்

www.facebook.com/thaiveedu

இணையத்தளம்
www.thaiveedu.com


# திருக்குறள் 1330 குறளும் ஒலியுடன்!

5 பொழிப்புரைகள்

3 தமிழ் (பரிமேலழகர், மு.வரதராசனார், மணக்குடவர்)

2 ஆங்கிலம் (Shuddhananda Bharatiar, G. U. Pope)




☎ - 416 273 5811 / 647 427 6155

NRT World

புலம்பெயர் தமிழர் உலகம்

NRT World Inc.

ஆரம்ப தயாரிப்பு: Dream Solutions (Pvt.) Ltd. - நிலவு




# எமது கொல்லைப்புறத்துப் பலா

பொ.கனகசபாபதி



கிணற்றடியில் கமுகு என்று எழுதியிருந்தோம். கமுகுக்கு அடுத்தபடியாக நீர் அதிகம் தேவைப் படுவது பலாவினுக்கு. ஆகவே வழக்கமாக நாம் குளிக்கும் பொழுது மேலிலும் தலை-யிலும் ஊற்றும் தண்ணீர் கமுகுவின் கால்-களைக் கழுவியது போக அடுத்து அரவ-ணைப்பது பலாவின் பாதங்களையே. பலாவின் முக்கிய உறவினனான ஈரப்பலா பயங்கரப் பேர்வழி. அது நீர் விசயத்தில் கமுகுக்கு எக்கச்சக்க போட்டி. அது மாத்திரம் வீட்டு வளவில் இருந்தால் அதுவே செல்லப் பிள்ளை. எமது வீட்டில் நாளாந்தம் ஐந்து பேராவது உடம்பில் தண்ணீர் ஊற்றிக் கொள்வோம். ஆகவே நமது பலாமரத்துக்கு மனம் பூரிக்-குமளவுக்கு நீராகாரம் கிடைக்கும். அந்த ஆனந்தத்தை அது தனது கிளைகளில் நிறைந்த பச்சைப் பசேலென்ற இலைகள் மூலம் உலகுக்கு அறிவித்து விடும். மரம் படர்ந்து பரந்து கனிசமான பரப்பளவினை தனது உடமையாக்கிக் கொண்டு ஆஜானு-பாகுவாக நிற்கும். தனது ஆதிக்கப் பரப்பி-னிலே ஒரு அளவுக்கு வாழைக்கு மாத்திரம் ஈடும் கொடுக்கும். முக்கனியில் அதுவும் என்ற காரணத்தினாலோ?

நீள்வட்டமான அமைப்புடைய இலைகள் தோல் தன்மை உடையவையாகவும் நீரிழப்-பினைத் தடுப்பதற்காக மெழுகுத் தன்மை-யான பரப்பினைக் கொண்டவையாகவும் காணப்படுவதால் மரம் எப்பொழுதும் பச்சைப் பசேலென இலைகளால் நிறைந்து காணப்-படும். மரத்தின் கீழே விழுந்து காணப்படும் மஞ்சள் நிறப் பழுத்த இலைகளுக்கும் நல்ல கிராக்கி. எமது பக்கத்து வீட்டிலே வசிப்பவர்-கள் பொருளாதாரத்தில் கொஞ்சம் நலிந்த-வர்கள். அவர்கள் மூன்று நான்கு ஆடுகளை வளர்த்தார்கள். ஆடுகளுக்கு பழுத்த பலா இலைகள் நல்ல தீனி என்பார்கள். ஆகவே காலையில் பக்கத்து வீட்டுப் பையன் ஒரு நீண்ட இரும்புக் குத்தூசியுடன் வந்து விடு-வான். குத்தூசியால் பழுத்த இலைகள்யாவற்-றையும் குத்தி எடுத்துக் கொண்டு போய்விடு-வான். எமது வீட்டிலே அதற்கொன்றும் எதிர்ப்பில்லை, வீட்டில் கூழ் காய்ச்சுகின்ற சில நாட்களில் மாத்திரம் நாங்கள் தேவை-யான இலைகளை தேர்ந்தெடுத்த பின்னர் தான் அவனுக்கு குத்தூசி பிரயோகிக்கும் உரிமை. பலா இலையினைக் கரண்டி போல மடித்து சின்ன ஈர்க்கினால் மடித்த பகுதியில் குத்தி அம்மா தருவார்.

மற்ற நாட்கள் எப்படியோ, கூழ் காய்ச்சுகின்ற நாளில் குடும்பத்தவர் அத்தனை பேருமே கட்டாயமாக ஒன்றாக உணவருந்துவோம். கூழ் நிரம்பிய சட்டி நடுவே இருக்க, நாம் எல்லோரும் சுற்றிவர உட்கார்ந்து அகப்பை-யால் அள்ளி எடுத்து, பலா இலைக் கரண்டி-யில் ஊற்றி உறிஞ்சி உறிஞ்சிக் குடித்ததை இப்பவும் நினைத்துப் பார்க்கையில் இன்பமாக உள்ளது.

பொதுவாகவே பலாவிலே இரண்டு பிரதான வகை. ஒரு வகை நல்ல பெரிய சதைப் பற்றுடைய சுளைகளைக் (Pulp) கொண்டது. மற்ற வகையினைக் கூழன் பலா என்பார்கள். பழுத்தவுடன் சுளைகள் யாவும் ஒரு சிதம்பிய தன்மை உடையவையாக மாறிவிடுவதுண்டு. சுளைகள் சுவையாக இருந்தாலும் முழுச் சுளைகளாக எடுத்துச் சாப்பிட முடியாது. நாம் பயிரிட்டு உண்டாக்குகின்ற மரங்களிலே மிகப் பெரிய பழங்களை தருவதாகப் பலா மரத்தினையே கூறுவார்கள். சில மரங்களில் பழங்கள் 3 அடி நீளமானதாகக் கூட இருக்கும்.

> பூவாதே காய்க்கும் மரமும் உளமக்கள்
> உளும்
> ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே
> - தூவா
> விதைத்தாலும் நன்று ஆகா வித்தெனவே
> பேதைக்கு
> உரைத்தாலும் தோன்றாது உணர்வு.
> ( நல்வழி -35)

(பூக்காமல் காயக்கும் மரங்களும் (பலா) உண்டு. மக்களிடையேயும் சொல்லாமலே தாமாகவே அறிந்து செய்யக் கூடியவர்களும் இருக்கின்றனர். நன்றாகத் தூவி விதைத்தா-லும் முளையாத விதைபோல மூடனுக்கு விளக்கமாகச் சொன்னாலும் அறிந்து கொள்ள மாட்டான்.)

பலாவினைப் பூவாமல் காய்க்கின்ற மரம் எனப் புலவர்கள் வகைப்படுத்திக் கூறினாலும் அது உண்மை அல்ல. மற்றைய பூக்களைப் போல் ஆடம்பரமாக அழகிய கவர்ச்சியான நிறமோ, காந்தமென இழுக்கும் மணமோ இல்லாமல் அப்படியே பெருத்துக் காயாகி விடுவதால் பலாவுக்கு இப்படியான அபவாதம். பலாவின் பூ பச்சை நிறமானது. அதனை ஒரு மஞ்சரி (Inflorescence) என்பார்கள். கூட்டுக் காம்பிலி (compound spike) என விசேடமான பெயர் சொல்லியும் அழைப்பார்கள். ஆண்பூ வேறா-கவும் பெண்பூ வேறாகவும் காணப்படும். ஆண்பூக்கள் ஒல்லியாய் ஓரலாய்க் காணப்பட, பெண்பூக்கள் தளுக்கு மினுக்காக உருவிலே பெரிதாகக் காணப்படும். ஆனால் இரண்டு வகைப் பூக்களும் ஒரே மரத்திலேயே காணப்-படுகின்றமையால் இந்த நிலையினை ஓரில்ல-முடையவை (Monoeceous) என்பார்கள். கமுகு, தென்னை போன்றவையும் ஓரில்லமுடைய-வையே என்றாலும் அவற்றிலே ஒரே மஞ்சரி-யிலே ஆண்பூ மேலேயும் பெண்பூ அடியிலேயும் காணப்படும் பலாவிலே ஆண்பூக்களும் பெண்பூக்களும் ஒரே மஞ்சரியில் காணப்பட மாட்டா. ஆண்பூக்களைக் கொஞ்சம் கொஞ்ச-முடியாத தூரத்திலேயே வைத்துள்ளது. பொதுவாக ஆண்பூக்கள் மேலே பெரும்பாலும் கிளைகளிலே காணப்படுகின்றன. சில நாட்-களிலேயே உதிர்ந்தும் விடுகின்றன. பெண் பூக்கள் அடிமரத்திலே பிரதானமாகக் காணப் பட்டாலும் கிளைகளிலும் கூடச் சில காணப்-படும். இங்கே ஒரு விசயத்தினை விளக்க வேண்டும். பலாமரத்தின் அடியிலேதான் பெரும்பாலும் காய்கள் காய்ப்பது உண்டு என்றோம். ஆனால் பலாவேரிலே கூடக் காய்க்கிறது என்ற ஒரு தப்பான தகவலும் நிலவி வருகிறது புரட்சிக் கவிஞர் பாரதி-தாசன் கூட அதே கருத்தினிலே தான் கீழ் உள்ள பாடலைப் பாடியுள்ளார்.

> கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே
> வேரிற்பழுத்த பலா - மிகக்
> கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே
> குளிர்தரும் வட்ட நிலா.
> (பாரதிதாசன்)

உண்மை அதுவல்ல. ஒரு மரத்திற்குப் பிர-தானமாக இரண்டு பகுதிகள் உள்ளன. தண்டுப் பகுதி மண்ணுக்கு மேலே காணப்-படுகிறது. இலைகள், பூக்கள் பழங்களைக் கொண்டது இப்பகுதி. மண்ணின் கீழே உள்ள பகுதி வேர்த் தொகுதி. இது நீரினையும் கனிப் பொருட்களையும் உறிஞ்சுவதற்கான பகுதி. பொதுவாக இத்தகைய ஒரு வரையறை இருந்தாலும் கூட தண்டின் ஒரு பகுதி எப்-பொழுதும் மண்ணின் கீழே காணப்படவே செய்கிறது. அப்பகுதியில் இருந்து தோன்றிய முகையில் வருகின்ற பெண்பூ பழமாக விருத்தியுறுகின்றபோது அந்த முகையினைப் பழக்காம்பு அல்லது புன்னடி (Pedicel) என்-பார்கள். அது வேரில் இருந்து தோன்றியது போலத் தெரிகிறதே அன்றி பலாக்காய் ஒரு பொழுதும் வேரில் இருந்து தோன்ற முடியாது. தண்டின் அமைப்பு வேரின் அமைப்பில் இருந்து வேறுபட்டமையே இதற்குக் காரணம்.

யாழ்ப்பாணத்தில் பலா பொதுவாக இரண்டரை அல்லது மூன்று வருடங்களில் காய்க்குமாம். எமது வீட்டுப் பலா உண்டாகி நான்கு வரு-டங்களையும் தாண்டிவிட்டது. நிறைய ஆண் பூக்கள் காணப்படும். சிறிது நாட்களில் அவை கீழே விழுந்துவிடும். பொதுவாக மாசி, பங்குனி மாதங்களில் பலாபூக்கும். ஆடிமாதவாக்கில் பழம் சுவைக்கலாம். அம்மா ஆவலுடன் அடிக்கடி போய் மரத்தைப் பார்ப்பா. அம்மாவை கிழே விழுந்து கிடக்கும் ஆண்பூக்கள் வரவேற்கும். ஆனால் ஒரு பெண்பூவாவது வந்தால் தானே. அம்மாவுக்கு மனம் பெரிதும் ஒடிந்து போயிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவரை அறிமுகம் செய்ய வேண்டி உள்ளது.

அவரைக் கோடாலிச் சாமியார் என அழைப்-போம். நீண்ட காலமாக எம் வீட்டிற்கு அவர் வந்து போனாலும் அவரது இயற்பெயர் எம்மொருவருக்கும் தெரியவில்லை.. அதனைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் நம்மெவ-ருக்கும் இருந்ததில்லை. ஐந்து அடி உயரம் தான் இருப்பார். ஒல்லியான தேகம். சடாமுடி. தாடி கரிய உடல். மஞ்சள் நிறத்தில் உடல் முழுவதையும் மறைக்கின்ற நீண்ட சட்டை. நெற்றி நிறையத் திருநீறும் அதன் மத்தியில் சந்தனத்தின் மத்தியில் குங்குமத்தில் அமைந்த பொட்டுடன் ஒரு சிவப் பழமாகக் காட்சி தருவார். கண்டங்கோடாலி என அழைக்கப்-படும் ஒரு நீண்ட தண்டில் பொருத்தப்பட்டு ஒரு புறம் தட்டையாயும் மறுபுறம் கூர்மை-யாயும் உள்ள கோடாலி ஒன்றுடனேயே அவர் விஜயம் செய்வார். அதில் ஒரு செப்பு வாளியினைத் தொங்க விட்டிருப்பார். இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது எம் ஊருக்கு வர அவர் தவறியதில்லை. எமது ஊருக்கு வருகின்ற சமயங்களில் அனேகமாக எமது அம்மாவின் விருந்தாளியாக இருப்பார். ஒவ்-வொரு வீடு வீடாகப் போவார். கதிர்காமத்தில் நடைபெறுகின்ற உற்சவக் காலத்தில் அங்கே தண்ணீர்ப் பந்தல் வைப்பதற்கு உதவி தேடியே அவர் ஊர் ஊராகப் போகிறார் என அம்மா சொல்வார். கிடைப்பது எல்லாவற்றினையும் சேர்த்துக் கொண்டு போவார். என்ன செய்-கிறாரோ தெரியாது. ஆனால் கதிர்காமம் உற்சவம் நடக்கின்ற மாதத்தில் அவரை எமது ஊரில் காண முடிவதில்லை.

வழமைபோன்று அன்றும் கோடாலிச் சாமி-யார் வந்திருந்தார். ஆச்சரியமாக அன்று அப்புவும் வீட்டில் இருந்தார். அம்மாவும் அப்புவும் சாமியாரோடு பலதும் பத்தும் பேசிக் கொண்டிருந்தார்கள். அகஸ்மாத்தமாக அம்மா, ‘ஏன் சுவாமி, எங்கடை பலா மரம் இத்தனை வளர்ந்தும் இன்னும் காய்க்கவில்லை’ எனத் தனது விசாரத்தை எடுத்துரைத்தார். சாமியார் சற்று யோசித்தார். ‘நிறைய ஆண்பூக்கள் பூத்துச் சொரிகின்றன இல்லையா’ என்றார். ‘அவை ஆண்பூக்களா? நாம் பொய்ப்பூக்கள் என்றுதான் சொல்லுகிறோம்’ என்றார் அம்மா. ‘அது தான் அம்மா ஆண்பூ. அதன் பரப்பிலே மஞ்சள் நிறமான துகள்கள் காணப்படுமே, அவைதான் மகரந்த மணிகள். உங்களுடைய பலாவிலே இன்னும் பெண்பூக்கள் பூக்கவில்-லை. அதனால்தான் காய் இல்லை’ என்றார் சுவாமி. ‘அதற்கென்ன செய்யலாம் சாமி’ என அம்மா கேட்டார். சாமி எனது அப்புவைப் பார்த்து ‘நான் ஒன்று சொல்கிறேன் அதனைச் செய்வாயா’ என்றார். ‘அதற்கென்ன சாமி பலாவைக் காய்க்கப் பண்ணுவதற்கு என்னவும் செய்யலாம் தானே’ என்றார் அப்பு. ‘நாளை வெள்ளிக்கிழமை அல்லவா. நல்லதாகப் போச்சு. காலை 4:00 மணி. அதனைப் பிரம்ம

தொடர்தல் 82ம் பக்கம்

81ம் பக்கத் தொடர்ச்சி

முகூர்தம் என்பார்கள். பிரமன் என்றால் யார்? அவன் படைப்புக்கடவுள். ஆகவே படைத்தலுக்குரிய நேரம் இந்தப் பிரம்ம முகூர்த்தம். அந்த நேரத்தில் நீ கோடாலியின் புறப் பக்கத்தாலே பலாமரத்தின் மேல் நன்றாக அடிக்க வேணும்' என்றார் சாமியார். 'செய்து விட்டால் போச்சு' என்றார் அப்பு. 'ஆனால்...' என்றார் சாமி. 'என்ன சாமி ஆனால்' என்கிறீர்கள்' என்றார் அம்மா. 'ஆம் நீ அடிக்கின்ற போது பிறந்த மேனியனாய் நின்று அடிக்கவேணும்' என்றார் சாமி. 'சீ' என்றார் அம்மா லச்சையுடன். 'நான் சொல்லுவதைச் சொல்லி விட்டேன். இனி உங்கள் விருப்பம்' என்றார் சாமி. அப்பு அமைதியாக இருந்தார்.

மறுநாள் காலை பலாவினைப் போய்ப் பார்த்த பொழுது அப்பு தன் கைவரிசையைக் காட்டி விட்டது தெரிந்தது. பலா பல விழுப்புண்களுடன் அழுது வடிந்தபடி (பால் ஒழுகியபடி) பரிதாபமாகக் காட்சி தந்தது. நாம் எல்லோரும் காலையில் உறங்கிவிட்ட காரணத்தால் அப்பு சாமியாரின் ஏவலை நிறைவேற்றிய அற்புத காட்சியையோ, அப்புவின் அழகுக் கோலத்தையோ காணமுடியவில்லை. ஆனால்...

'அடி இல்லாவிட்டால் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்' என்பார்கள். அப்புவின் அடி நிறையவே வேலை செய்திருந்தது. எங்களுடைய பலா எக்கச்சக்கமாகக் காய்களை பெற்றெடுத்தது. அடி மரத்தில் மாத்திரமல்லாமல் சில காய்களைக் கிளைகளிலும் காண முடிந்தது. எங்கள் எல்லோருக்கும் சுற்றுவட்டாரத்தில் உள்ளோர்கள் அத்தனை பேருக்கும் சொல்லி மாளவில்லை. அப்புவுக்கோ தர்மசங்கடமாய்ப் போய்விட்டது அக்கம் பக்கத்துப் பெண்கள் அப்புவை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். (உங்களுக்கு மாத்திரம் பலா காய்த்ததற்காக நான் அறிந்த இரகசியம் ஒன்றினைச் சொல்கிறேன். எப்பொழுதும் புதிய அரும்புகள் மரத்தில் இருந்து முளைத்தே (pedicel) அதன் முனையில் பெண்பூக்கள் தோன்றும். பலாவில் அடித்துக் காயம் ஏற்பட்ட இடங்களில் காயம் மாறுகின்ற பொழுது அங்கே புதிய அரும்புகள் தோன்றுகின்றன. கோடாலி அடியினால் ஏற்பட்ட காயங்களிலும் இருந்து புதிய அரும்புகள் தோன்றியமையால் நிறையவே காய்கள் தோன்றின.)

ஆடி முதற் செவ்வாய் எமது வைரவர் கோவில் பொங்கல். நாங்கள் தான் நாசகபானை கட்டுகிறது. படையலில் பெரிய மடை. இம்முறை எமது பலாப்பழம் படையலில். நல்ல சுவையான பழமாக இருந்தது. சுளைகள் பெரியவையாகவும் செழிப்பான நீர்த்தன்மை உடையவையாகவும் காணப்பட்டன. பலாப்பழம் ஏனைய மஞ்சரிப் பழங்களிலும் வித்தியாசமானது. திராட்சையும் மஞ்சரியில் இருந்தே தோன்றியது. ஆனால் அங்கே ஒரு குலையாகப் பல பழங்கள் இருப்பதைக் காணமுடியும் பலாவில் அப்படி அல்ல. பலாப் பழத்தினை ஒரு திரள்பழம் (Aggregate Fruit) அல்லது கூட்டுப்பழம் (Compound Fruit) என்போம். உள்ளே காணப்படுகின்ற சுளைகள் ஒவ்வொன்றும் ஒரு பூவில் இருந்து தோன்றியவை. கருக்கட்டப்படாத பூக்கள் பொச்சாகக் காணப்படும். சில சுளைகள் நன்கு விருத்தியுறாமையால் போலிச் சுளைகள் என்பார்கள். சுளைகள் வேறோன்றும் இல்லை. சாதாரண பூக்களிலே காணப்படும் அல்லி, புல்லி என்பார்களே அவை இரண்டினையும் சேர்த்து பூவுறை (Perianth) என்பார்கள். அப்பூவுறை தான் சுழைகளின் சதைப்பற்றான பகுதியாகின்றன. சுளைகளின் எல்லாவற்றினையும் பூக்களையும் சூழ தடல் காணப்படும்.

சுளைகளின் சதை நல்ல நீர்பாங்குடையதாக உள்ளமையால் பழத்தின் உள்ளேயே சில விதைகள் முளைத்தே விடுவதுண்டு அதன் விளைவாகப் பழம் சிலசமயம் வெடித்துவிட அதன் மணம் பக்கத்து வீடுகளுக்குத் தண்டோரா போட்டு அறிவித்து விடுவதும் உண்டு.

அடுத்த வீட்டுப் பையன் காலையில் குதுதூசி சகிதமாக எமது பலா இலையை குத்திக் கொண்டிருந்தான். அம்மா அடுப்படியில் ஏதோ காரியமாக இருந்தார். நான் தலைவாசலில் இருந்து ஏதோ வாசித்துக் கொண்டிருந்தேன். 'ஐயோ அம்மா' என்ற குரல் கொல்லைப் புறத்தில் இருந்து கேட்டது. அங்கே ஓடினேன். அந்தப் பையன்.
தலைமுழுவதும் பலாப்பழத்தின் சுளைகளும் கொட்டையுமாக கையில் பிடித்த குத்தூசியுடன் நின்றான். எனக்கோ கோவிலில் ஐயர் பஞ்சாதமிர்தத்தினை வீரபத்திரசாமியின் உருவத்தில் கொட்டியமாதிரி இருந்தது. கடகட எனச் சிரித்து விட்டேன். பையன் போட்ட அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த அம்மா என்னைப் பார்த்த பார்வை - ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டது என்பார்களே - அது!. நின்ற பையன் படாரென நிலத்தில் விழுந்தான். கிளையில் பழுத்திருந்த பழம் பையனின் தலையைப் பதம் பார்த்து விட்டது.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகமதி
யார் அ.ஃ.து அறிந்திசினோரே சாரல்
சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு, இவள்
உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே.

- கபிலர் - குறுந்தொகை -18

(பலாமரத்தின் சிறிய கிளையினிலே பெரிய பழம் தொங்கிக் கொண்டிருப்பது போன்று எமது தலைவியின் உயிர் மிகச் சிறியது. சிறு கிளையில் தொங்கும் பலாப்பழம் நன்கு பழுத்துத் தானாகவே உதிர்ந்து விழும் - அல்லது யாராலேயாயினும் வெட்டிப் பெறப் படும் அதே போன்று தலைவி காதல் நோயினால் உயிர் விடவும் நேரலாம் - அல்லது இன்னொருவரை மணக்கவும் நேரலாம்.)

அம்மா ஓடிச் சென்று செம்பில் நீர் கொண்டு வந்து அவன் முகத்தில் தெளித்தும் அவன் அறிவு திரும்பவில்லை. செய்தியை அடுத்த வீட்டிற்குச் சொல்வது என் வேலையாய் விட்டது. அழுது குழறியபடி அவனது பெற்றோர்கள் ஓடிவந்தனர். வேகவேகமாகக் காரியம் நடந்தது. அவனுக்குச் சிறது நேரத்தில் அறிவு வந்தாலும் பேசுவதற்கு முடியாதவனாய் மிரளமிரள அங்கும் இங்கும் பார்த்தான். அவன் தாய் போட்ட ஒப்பாரியில் பக்கத்து வீடுகளும் கூடிவிட்டது. பையனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். வைத்திய சாலையிலிருந்து சில நாட்களில் பையன் வீடு திரும்பினான் ஆனால் அவன் முன்போல் இல்லை. பேச்சில் ஒரு கொன்னை இருந்தது. நன்றாகப் பேசக் காலம் எடுக்கும், படிப்படியாகத்தான் பேச்சுத் தெளிவடையும் எனக் கூறி வைத்தியர்கள் அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்களாம்.

இதனால் எமது வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் உறவு முன்போல் இல்லை. அப்புவின் கோடாலி அடி தெய்வக் குறைபாடு, அதனால் பையனைப் பழிவாங்கிவிட்டது என்பது பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லோரும் சம்மேளனம் வைத்து, வாக்கெடுப்பு நடத்தி, ஏகமனதாக எடுத்த தீர்ப்பு.

நமது பலா தொடர்ந்தும் காய்த்துக்கொண்டு வருகிறது, கோடாலியை மீண்டும் உபயோகிக்கின்ற தேவை வரவில்லை.

(இலக்கியத்தில் வேண்டுவன வேண்டும்போது எனக்கு ஈவான் பேராசிரியர் சுப்பிரமணியன். அவருக்கு நன்றி).



kanagasabapathy.p@thaiveedu.com

இணைந்துகொள்ளுங்கள்
'தாய்வீடு' facebookஇல்
www.facebook.com/thaiveedu

TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
● EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✓
● 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✓
● 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✓
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்

DIPLOMA முடித்தவர்கள்
- ACCOUNTS CLERK
- COST CLERK
- AUDIT CLERK
- PAYROLL CLERK
- ACCOUNTS RECEIVABLE
- ACCOUNTS PAYABLE
- ACCOUNTS ASSISTANT
- BOOK KEEPER

போன்ற பதவிகளைப் பெற்று
உங்கள் எதிர்காலம் மிளிர்வதைக் காண்பீர்

INSTRUCTORS
★PUSHPA ★ SP ★ RAM

CERTIFICATE COURSES
Buy One Get One Free
Windows, Word, Excel, Power Point, Access, Outlook
Photo Shop, Quick Books, Simply Accounting
Sage Accpac GL, AP & AR
Day, Evening, Week Ends

CANADIAN SECURITIES COURSE
Exam 1 & 2
By Arun Senathirajah, ACIB, MBA
Weekends
Start Date: Jan.30th
Ideal for Bank Employees

★FREE PARKING★SMALL CLASS SIZE
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH, ON, M1S 5H9
t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 06

K.S. பாலச்சந்திரன்

# நடிக்காத நாடகம்

என் இளமைக்காலம். கொழும்புக்கு வேலை கிடைத்து வந்த புதிது. சினிமாத்துறைக்கு வந்த புதுமுகநடிகன் (ஒரு உதாரணம் தான்) சின்னவேஷம், பெரியவேஷம் என்றெல்லாம் பார்க்காமல், கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, நடிப்பதுபோல நானும் யார் கேட்டாலும் விசுவாமித்திரர் தொடக்கம் வில்லன் பாத்திரம் வரை மேடை-நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்த காலம். (விசுவாமித்திரர் கூட புராணநாடகங்களில் வில்லன் மாதிரித்தான் வந்துபோவார் என்பது வேறு விஷயம்).

எதிர்பாராத இடத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. அழைத்தவர் ஒரு பன்மொழிப்புலமையாளர். தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவரின் மகன் சோ. நடராஜன். இலங்கை வானொலியின் ஆரம்பகாலத்தில் அதன் நிர்வாகியாக இருந்தவர். 500 ஆண்டுகளுக்கு முன்பு ராகுலதேரர் எழுதிய 'செலகினி சந்தெச' (பூவைவிடுதூது) என்ற சிங்களநூலை தமிழில் மொழிபெயர்த்தவர். அக்கால இலக்கியகாரர்கள் மத்தியில் எழும் வாதப்-பிரதிவாதங்களில் இவர் பெயர் அடிக்கடி சொல்லப்படுவதை அறிந்திருக்கிறேன். பௌத்த மதம் சம்பந்தமாக நூல்களை எழுதிய இவர் பௌத்தமத துறவியாகக்கூட சிலகாலம் இருந்தவர் என நினைக்கிறேன்.

ஆங்கிலப்புலமை உள்ள இவர் ஆங்கில நாடக ஆசிரியர் ஜெகசிற்பியரின் (ஷேக்ஸ்-பியரின்) நாடகம் ஒன்றை தமிழாக்கம் செய்தி-ருந்தார். “பன்னிரண்டாவது இரவு” என்பது அதன் பெயர். அது ஒரு சுவையான நாடகம். ஆணும், பெண்ணுமாக இரட்டையர்கள். இரு-வரும் சந்தர்ப்பவசத்தால் பிரிந்து போகிறார்கள். புதிய இடத்தில் தன்னைக்காப்பாற்றிக்-கொள்ள சகோதரி ஆண்வேடம் தரித்துக் கொண்டு அங்கு ஒரு பிரபுவிடம் வேலைக்கு அமர்கிறாள். இனித்தான் சுவையான திருப்பம் வருகிறது. ஆண்வேடத்தில் வரும் இந்தப் பெண்ணை இன்னுமொரு பெண் துரத்தி, துரத்திக்காதலிக்கிறாள். இப்படிப்போகிறது கதை. இதே கதை “கன்னியின் காதலி” என்ற பெயரில் தமிழ்த்திரைப்படமாகவும் அறுபது ஆண்டுகளுக்கு முதல் (1949ல்) வெளிவந்தது. நான் சிறுவயதில் பார்த்த இந்தத்திரைப்-படத்தில் ஆண்வேடம் போடும் சகோதரியாக மட்டுமல்ல, அவரது இரட்டைச்சகோதரனாக, ஆணாகவும் மாதுரிதேவி நடித்திருந்தார். ஆண் பாத்திரத்துக்கு பிரபலநடிகர் வி. கோபால-கிருஷ்ணன் குரல் கொடுத்தாராம். அந்தக் காலத்திலேயே இப்படி ஒரு முயற்சி!

எனவே அந்தக்கதைதான் என்றறிந்ததும் ஒரு புதுமையான அனுபவம் கிடைக்கப்போகிறது என்ற சந்தோசத்துடன் நடிக்கச் சம்மதம் தெரிவித்தேன். நான் நடிக்கப்போகும் முதலாவது ராஜா - ராணிக்கதை நாடகம். போதும் போதாதற்கு நாடகத்தின் எழுத்துப்பிரதிகளை நடிகர்களுக்கு வழங்கும் வைபவத்தினை வெள்ளவத்தையில் சற்று உயர்நிலை மக்கள் போசன, பானம் (அந்தப்பானம் தான்) அருந்தும் (எங்கள் சம்பளத்திற்கு எட்டாத) உயர்மட்ட போசனசாலையில் வைத்திருப்பதாக அழைப்பு வந்திருந்தது. தினமும் அதைக்கடந்துதான் நான் வழக்கமாக சாப்பிடும் “முருகன் லொட்ஜ்”க்கு போயிருக்கிறேன். என்றாலும் சுகந்தமணங்கள் வீசும் அந்த போசனசாலைப்-பக்கம் திரும்பியும் பார்ப்பதில்லை. அதன் வாசலில் சற்றுத்தரித்து நிற்பதைக்கண்டாலே அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் ரிக்கெற் செலவைப்பாராமல் ஊருக்கு 'யாழ்தேவி' எடுத்துப்போய், எங்கள் வீட்டுக்கேற்றைத்தட்டி, வீட்டுக்காரரிடம் 'பத்த'வைத்துவிட்டுப் போய்விடுவார்கள். பிறகென்ன. பனைமரத்துக்கு கீழே நின்று பால்குடித்தவர்களுக்கு ஏற்படும் கதையாக... ஊரே அல்லோலப்படும்.

இருந்தாலும் உத்தியோகபூர்வ அழைப்படன் வந்த, இந்த அரிய சந்தர்ப்பத்தை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற என்ற எண்ணத்துடன் (ஓசிச்சாப்பாட்டை ஒருகை பார்த்துவிடவேண்டுமென்ற எண்ணந்தான்) நானும் மற்றக்கலைஞர்களும் நேரகாலத்துக்கே அங்கே போய்விட்டோம். வந்தவர்கள் எல்லோருமே, வெவ்வேறு நாடகமன்றங்களைச் சேர்ந்தவர்கள். தயாரிப்பாளர் (சோ.நடராசா) தான் பார்த்த வெவ்வெறு நாடகங்களில் தனக்குப்பிடித்த ஒவ்வொருவரை அழைத்து, கிரிக்கெற்றில் வருவது போல, ஒரு 'தேர்வு அணி'யைத் தெரிவு செய்திருந்தார் என்று மட்டும் புரிந்தது. இதனால் ஒரு இனம்புரியாத 'அதிர்வு' அங்கு நிலவியது. ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர் அல்ல என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயம் எல்லோரினதும் மனதில் இருப்பது தெரிந்தது. முகமனுக்கு ஆளையாள் பார்த்துச் சிரித்துக் கொண்டாலும் வேட்டை நாய்களைப்போல மனதளவில் இருந்தோம். சந்தர்ப்பம் கிடைத்தவுடன் பாய்ந்து, கடித்துக் குதறி... வசனங்களைத்தான்... தயாராக இருந்தோம்.



எங்கள் ஒவ்வொருவரையும் எழுந்து நிற்கவைத்து, அறிமுகப்படுத்தி நாங்கள் நடிக்கப்போகும் பாத்திரத்தையும் சொல்லி நாடகப் பிரதிகளை வழங்கினார்கள். எனக்கு அவர்கள் வழங்கிய பாத்திரம். அந்த இரட்டைப்பிறவிகளில் ஒருவனான ஆண்பாத்திரம். என் இரட்டைச்சகோதரியாக நடிக்க கொழும்பு கொச்சிக்கடை பகுதி நாடகமன்றத்தின் நடிகை வந்திருந்தார். (பெயரை மறந்து விட்டேன்.) ஒல்லியான தோற்றம். சிவந்த நிறம் கொண்ட அந்தப்பெண்ணின் அருகில் நிற்கச்சொன்னார் இயக்குனர். அசப்பில் இருவரும் இரட்டைப்-பிறவிகள் போலிருப்பதாக பேசிக்கொண்டார்கள். இதுவே நாடகத்தின் வெற்றிக்கு காரணமாக இருக்கப்போகிறது என்று இயக்குனர் கூறினார். சிலர் கைதட்டினார்கள். எனக்கு சந்தோசமாகவிருந்தது.

இத்தனைக்கும், எங்களை ஒரக்கண்ணால் பார்த்தபடி, பலர் படிக்கட்டுக்களில் ஏறி, அந்த போசனசாலையின் மேல்மாடிக்குப் போவதும், வருவதுமாக இருந்தார்கள். பானம் அங்குதான் பரிமாறப்படுகிறது என்று யூகித்துக்கொண்டோம்.

எங்களுக்கு சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. “காய்ந்த மாடு கம்பிலை விழுந்த மாதிரி..” (கம்பு என்பது கால்நடைகளுக்கு உணவாகும் ஒருவகைப்பயிர்). எல்லாவற்றையும் காலி செய்து விட்டு ஒவ்வொருவராக களத்தில் இறங்கினோம். மொழிபெயர்ப்பு நாடகத்தில் தமிழ்வசனநடையே சற்று கரடுமுரடானதாகத்-தான் இருக்கும். அதுவும் சோ.நடராசன் பண்டிதத்தமிழில் எழுதியதை சீர் பிரித்து வாசிப்பதில் அநேகருக்கு மூச்சுத்திணறிப்போய் விட்டது.


இருந்தாலும் சளைக்காமல், 'பராசக்தி' வசனப்பாணியில் உச்சஸ்தாயில் பிளந்து கட்டினோம். நடிப்பென்றால் அடுக்குவசனம் பேசுவது என்று நினைத்துக்கொண்டிருந்த காலமல்லவா அது. இந்தச்சந்தடியில் மேலே யாரோ 'குடிமகன்' ஒருவர் உரத்துச்சொன்னதும் தெளிவாகக்கேட்கவில்லை. ஆள் மாறி, ஆள் மாறி.. கருமமே கண்ணாக.. நடிப்பு தொடர்ந்தது.

யாரோ ஒருவர் படிகளில் 'தடதட'வென்று இறங்கிவந்து, கடைசிப்படியில் நின்று எங்களைப்பார்த்தார். தலை கலைந்து, கண்களில் கண்ணீர் அரும்ப, மூக்கு சிவந்திருக்க, எங்களைப் பார்த்துச்சொன்னார். சொன்னார் என்பதைவிட கதறினார் என்று சொல்லலாம். “நீங்கள் எல்லோரும் தமிழர்கள்தானா.. எனக்கு இப்படிச்செய்து விட்டார்களே.. பார்த்-துக்கொண்டு இருக்கிறீர்களா?” என்று நியாயம் கேட்பதுபோல கேட்டார். வீரவசனம் பேசிக்கொண்டிருந்த நாங்கள் எல்லோரும் கப்சிப். வாய் திறக்கவில்லை. பல இனத்தவரும் வரும் அங்கே அவருக்கு தீங்கு ஏதோ இழைக்கப்பட்டுவிட்டதை யூகித்துக்கொண்டாலும் தலைகுனிந்து, கையாலாகாதவர்களைப் போல வெட்கித்து இருந்தோம். எவரும் அசையவில்லை. ஒரே மௌனம்.

சிலவினாடிகள் சென்றன. மேலிருந்து யாரோ வந்து அவரை அழைத்தார்கள். “மச்சான்.. வா.. நடிச்சது காணும்.. பாவம் பிள்ளைகள் கலங்கிப்போயிட்டினம்” என்று சொல்ல, அவர் எங்களைப்பார்த்து ஒரு கொடுப்புச் சிரிப்பு சிரித்துவிட்டு சாவதானமாக மேலே ஏறிப் போனார். நாங்கள் ஸ்திரநிலைக்கு மீண்டும் வர காலஅவகாசம் தேவைப்பட்டது. வியர்த்-துப்போன முகங்களை துடைத்துக்கொண்டு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம். ஒரு விஷயம். எங்கள் தலைகளைச் சுற்றி நாமே போட்டிருந்த 'திறமான நடிகர்' என்ற ஒளிவட்டங்கள் சற்று மங்கிப்போயிருந்தன.

கடைசியில் சோ. நடராசனார், 'கன்னியின் காதலி' நாடகத்தை போடாமலே கைவிட்டு-விட்டார். சிலவேளை 'அவரை' வைத்து நாடகம் எதாவது போட்டாரோ தெரியவில்லை.

இன்று இணையத்தில் உலாவியபொழுது, கவிஞர் கண்ணதாசன் எழுதிய முதல் திரைப் படப்பாடல் “கலங்காதிரு மனமே”, இடம் பெற்ற படம்: “கன்னியின் காதலி” என்று வாசிக்க, கூடவே நாங்கள் நடிக்காமல் போன அந்த நாடகத்தின் நினைவுகளும் வந்தன.



ksbala@thaiveedu.com

'தாய்வீடு' இப்போது இணையத்திலும்
www.thaiveedu.com

## மூலிகைத் தயாரிப்புக்கள்




The ERVAMATIN™ HAIR LOTION

உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.



Tel: 416•264•8787

## புதிய டிசைன்களில் சபோனா காப்புகள்




SABONA & Gift




**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும் வழிவகுக்கிறது.

**டயபீனா** இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியது. கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.







**கொன்சிடாப்** மலச்சிக்கலுக்கு எதிராக போட்டியிடும் சக்திவாய்ந்தது. உடலிலிருந்து கழிவுப் பொருட்களை இயற்கையான முறையில் வெளியேற்றுவதற்கு உதவுகிறது.

**இயற்கை மூலிகையிலான தலை முடி மை**




இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.




**லோங்லைஃப்** இதனை தினமும் அருந்துவதன் மூலம் எமது சரீரத்தின் வெளித்தோற்றத்தையும் திடகாத்திரதன்மையையும் விருத்தி செய்து கொள்ளலாம்.

www.dreamron.ca

www.mediherbs.ca

**இங்கேயும் விற்பனையாகின்றன!**

**மிக விரைவில் ஐரோப்பா எங்கும் விற்பனையாகவிருக்கின்றன**

| | | |
|---|---|---|
| New Spicy Land<br>416 292 9769 | Jaffna Super Store<br>416 289 8812 | Eera Super Market<br>416 269 2622 |
| Daily Needs<br>416 490 7703 | M&S Convenience<br>416 444 8202 | Durcaa Supermarket.<br>905 796 6762 |

Amazon Health Care www.amazonhealthcare.com 2602, Eglinton Ave East (Midland/ Eglinton)

JayaCS416•275•0070

# Thank You



TopGun Award Winner 2009
Million Dollar Round Table Qualifier 2009

என்னிடம் காப்புறுதி சேவை பெற்ற
வாடிக்கையாளர்கள்,

ஆதரவு நல்கிய நண்பர்கள், வானொலி,
பத்திரிகை, தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள்
அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

- digi -

Assumption Life
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Canada Life
Unity Life of Canada
RBC Financial Group
LiLAND INSURANCE INC.

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407





# S.P. IMPORTERS
## Furniture

SP



அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்


**NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077**

கொள்வனவு விலையில்
## மலிவு விற்பனை



Sealy Posturepedic

Special Sealy Mattress on SALE



ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
**(Brimley & Lawrence சந்திப்பில்)**


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSI
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு
50% செலுத்துவோம்
* condition apply
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
CSA# 232467
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்...
60 Vanture Drive, Unite 15, Toromto Ontario, M1B 3S4
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி

# அ. முத்துலிங்கம்



# கடன்

என் வாழ்க்கையில் நான் பட்ட கடன்களை வரிசைப் படுத்தும்போது பல கடன்களை நான் தீர்க்கவில்லை என்பது இப்போது தெரிகிறது. சிறுவயதில் பக்கத்து மேசை நண்பனிடம் பென்சில் கடன் வாங்கி அதை திருப்பிக் கொடுக்கவில்லை. கோயிலுக்கு நேர்ந்து கடவுளுக்கு இது செய்வதாக, அது செய்வதாகச் சொல்லி செய்யாமல் விட்டது. புத்தகங்கள் கடன் வாங்கிப் படித்தால் தவறாமல் திருப்பிவிடுவது என் வழக்கம். ஒரு முறை என் புத்தகத் தட்டை ஆராய்ந்தபோது யாரோ ஒருவரிடம் கடன் வாங்கிய புத்தகம் ஒன்று இன்னும் திருப்பிக் கொடுக்காமலே இருப்பது தெரிந்தது. ஆனால் யாரிடம் புத்தகத்தை இரவல் வாங்கினேன் என்பது மறந்துவிட்டது.

உரிய நேரத்தில் கடனை அடைக்காவிட்டால் அதை திருப்பிக் கொடுக்கும் வாய்ப்பே சமயத்தில் நழுவி விடக்கூடும். சில நாட்களுக்கு முன்பு ஒரு சிறுகதை படித்தேன். காதலித்து கல்யாணம் செய்துகொண்ட தம்பதிகள் மத்தியில் சிறு விரிசல் விழுகிறது. ஆற்றிலே தண்ணீர் வற்றுவதுபோல அவளுக்கு கணவனிடத்தில் காரணமில்லாமல் அன்பு குறைந்து கொண்டே வருகிறது. திடீரென்று ஒருநாள் அவன் நெஞ்சு வலியில் அவதிப்படுகிறான். அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் போது அதுவரை பாதி படித்த நாவலையும் தன்னுடன் எடுத்துப் போகிறான். அவசர சிகிச்சையளித்தும் அவன் இறந்துவிடுகிறான். ஒருநாள், பல வருடங்கள் கழித்து புத்தகத்தட்டில் அவன் படித்த நாவலை மனைவி தற்செயலாக காண்கிறாள். அவன் கடைசியாகப் படித்த பக்கத்தை மடித்துவிட்டிருக்கிறான். தான் அவனிடம் உதாசீனமாக நடந்து கொண்டதை நினைத்து வருந்துகிறாள். அவளுக்கு அவன் மீது கனிவு மேலிட்டு அவனுக்காக ஏதாவது செய்யவேண்டும் என்று தோன்றுகிறது. அவன் முடிக்காமல் விட்ட பக்கங்களை அவனுக்காக படித்து முடிக்கிறாள்.

நான் யாழ்ப்பாணத்தில் 175 வருட பாரம்பரியம் கொண்ட அமெரிக்க மிஷன் பள்ளிக்கூடத்தில் படித்தேன். இங்கேதான் சி..வை. தாமோதரம் பிள்ளையும் ஒருகாலத்தில் படித்தவர். இது பெயர்பெற்ற பாடசாலை என்றபடியால் மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் இருந்தெல்லாம் மாணவர்கள் வந்து படித்தார்கள். கொழும்பில் இருந்துகூட மாணவர்கள் படிக்க வருவதுண்டு. இது ஒரு கலவன் பாடசாலையானபடியால் ஆண்களும் பெண்களும் வித்தியாசமில்லாமல் பழகினார்கள். வழக்கமாக பள்ளிக்கூடத்து மாணவர்கள் ஒரு வகுப்பில் உட்கார்ந்து படிப்பார்கள். ஆசிரியர்கள் மாறிமாறி வருவார்கள். இங்கே அப்படியில்லை. ஒரு வகுப்பு முடிந்ததும் நாங்கள் நடந்து இன்னொரு வகுப்புக்கு செல்வோம். அங்கே ஆசிரியர் இருப்பார். அது முடிந்ததும் இன்னொரு வகுப்புக்கு செல்வோம். அங்கு இன்னொரு ஆசிரியர் வருவார். இப்படி எடுக்கும் பாடத்துக்கு தக்கமாதிரி வகுப்பர்களும், ஆசிரியர்களும், வகுப்பறைகளும் மாறிக்கொண்டே இருக்கும்.

முதலாம் தவணை முடிந்து இரண்டாவது தவணை தொடங்கியபோது ஒருமுறை கொழும்பில் இருந்து புதிய மாணவி ஒருத்தி வந்து சேர்ந்தாள். அவளுடைய பிரதானமான பாடம் உயிரியல் என்பதால் அவள் எங்களுடன் இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களுக்கு மட்டுமே வந்து சேர்ந்துகொண்டாள். இந்தப் பெண்ணின் பெயர் அங்கயற்கண்ணி. சில நாட்களிலேயே அவளுடன் படித்த மாணவிகள் அவளை 'அங்கி' என்று அழைக்கத் துவங்கிவிட்டனர். இந்தப் பெண் சேர்ந்த அன்றே முழுப்பள்ளிக்கூடமும் மாறி விட்டதுபோல ஒரு தோற்றம் உண்டானது. நெற்றியிலே கறுப்பு பொட்டு வைத்திருப்பாள். அது அநேகமாக கண்ணுக்கு தெரியாது ஏனென்றால் அந்தப் பொட்டைப் போலவே அந்தப் பெண்ணும் கறுப்பாக இருந்தாள். கொடிபோன்ற உயரம். வசீகரமான முகம். பெரிய கண்கள். ஒரு பல்லின் நுனி கொஞ்சம் தள்ளிக்கொண்டு இருந்ததால் எப்பவும் சிரிப்பதுபோன்ற தோற்றம்.

அவள் வகுப்பிலே சேர்ந்த அடுத்த நாளே சிலர் பொத்துபொத்தென்று இயற்பியல், கணிதம் போன்ற பாடங்களை போட்டுவிட்டு உயிரியல் வகுப்பில் சேர்ந்துகொண்டார்கள். இந்தப் பெண் நடக்கும்போது மற்றப் பெண்களைப்போல கால் பெருவிரலைப் பார்த்து நடக்கவில்லை. தடிபோல நிமிர்ந்துகொண்டு நேராகப் பார்த்து நடந்தாள். தண்ணீர் பூச்சிபோல சட்சட்டென்று திரும்பினாள். புத்தகங்களை அள்ளி மடித்த வலது கையில் அடுக்கி மார்புகளை மறைத்தபடி வகுப்புக்குள் நுழைவதில்லை. வலது தோள்மூட்டில் ஒரு துணிப்பையை மாட்டி அதற்குள் புத்தகங்களை நிரப்பி கைகளை கவர்ச்சியாக ஆட்டிக்கொண்டு வந்தாள். யாராவது மாணவன் பார்த்து சிரித்தால் அவளும் திருப்பி சிரித்தாள். பேசினாலும் பேசுவதற்கு தயாராக இருந்தாள். ஆனால் மாணவர்கள்தான் கிலிபிடித்து தூர ஓடினார்கள்.

வகுப்பில் ஆசிரியர் கேட்கும் எந்தக் கேள்விக்கும் முதலில் கையை தூக்குவது அந்தப் பெண்தான். படிப்பில் மட்டும்தான் முதலிடம் என்றில்லை. நூறு யார் ஓட்டப்பந்தயத்திலும் அவள்தான் முதலாவதாக வந்தாள். நீளப்பாய்ச்சலிலும் அவள்தான் முதல். கூடைப்பந்து குழுவில் சேர்ந்த சில மாதங்களிலேயே அவள் காப்டனாகத் தெரிவுசெய்யப்பட்டாள். பந்து கையிலே கிடைத்ததும் நுனிச் சப்பாத்தில் நின்று சுழன்று லாவகமாக கூடைக்குள் பந்தை எறிந்து வெற்றியீட்டிவிடுவாள்.

ராஜகுமாரன் என்று ஒரு மாணவன் இன்னொரு வகுப்பில் படித்தான். அவனுக்கு தான் ராஜவம்சம் என்றுதான் நினைப்பு. கொழுத்த பணக்காரன். ஒவ்வொருநாளும் காரில் வருபவன் ஒரு நாள் பார்த்தால் வெள்ளைக் குதிரை ஒன்றில் ஆரோகணித்து வந்து இறங்கினான். பள்ளிக்கூடத்தில் குதிரை கட்ட இடம் இல்லை என்பதால் பின்னாலே தலைதெறிக்க ஓடிவந்த குதிரைக்காரன் குதிரையை பிடித்து திரும்பவும் வீட்டுக்கு கொண்டுபோனான். இதுவெல்லாம் அவன் செய்தது அங்கி என்ற அங்கயற்கண்ணிக்காகத்தான். ஒரு நண்பனிடம் எப்படி அவளுடன் பேசலாம் என்று கேட்டிருக்கிறான். அதற்கு அவன் 'கொய்யாப் பழத்தில் முதல் கடிதான் கஷ்டம். அதற்குப் பிறகு இலகுவாக உண்டுவிடலாம்' என்று கூறியிருக்கிறான். அவன் திடுக்கிட்டு 'என்னைக் கடிக்கச் சொல்கிறாயா?' என்று கேட்க அவன் 'இல்லை இல்லை, பேசச்சொல்கிறேன்' என்றான். அடுத்த நாள் நடு மைதானத்தில் நின்று ராஜகுமாரன் அவளுடன் தனியப் பேசினான். கதை முடிந்து என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் மறுநாள் அங்கி அதே மைதானத்தில் புல்லு வெட்டும் அந்தோனியுடன் பத்து நிமிட நேரம் சிரித்தபடி பேசினாள். அவள் மட்டில் ஒரு வித்தியாசமும் தெரியவில்லை. அவளுக்கு இருவரும் ஒன்றுதான். பள்ளிக்கூடம் மறுபடியும் சீராக மூச்சு விடத் தொடங்கியது.

ராஜகுமாரனைத் தொடர்ந்து இன்னும் சில மாணவர்கள் அவளுடன் துணிச்சலாகப் பேசினார்கள். அவள் பதில் சொல்லும்போது பிரார்த்தனை செய்வதுபோல தலையை குனிந்து கேட்டார்கள். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை. இந்தப் பெண்ணுடன் நான் இரண்டு வருடங்கள் ஒரே வகுப்பில் ஒரே ஆசிரியரிடம் படித்தேன். ஒரே புத்தகத்தை படித்தேன். ஒரே காற்றை சுவாசித்தேன். மற்ற மாணவர்களைப்போல எனக்கும் இந்தப் பெண்ணிடம் இரண்டு வார்த்தை பேசவேண்டும் என்ற ஆர்வம் இருந்தது உண்மைதான். ஆனால் என் இரண்டு முழங்கால்களும் அடிக்கும் சத்தம் அவளுக்கு கேட்டுவிடுமோ என்ற பயத்தில் அது தள்ளிப் போய்க்கொண்டே இருந்தது.

பல்கலைக்கழகத்துக்கு நாங்கள் எல்லோரும் ஒன்றாகவே எடுபட்டோம். அங்கயற்கண்ணி மருத்துவக் குழுவிலும், நாங்கள் எங்கள் பாடங்களுக்கு தக்கமாதிரி வெவ்வேறு குழுக்களிலும் இருந்தோம். அதன் பிறகு அவளைப் பார்ப்பது அரிதாகி விட்டது. ஒரு கட்டத்தில் மறந்தும் போனேன்.

இருபது வருடங்களுக்கு பிறகு நான் கனடாவுக்கு ஒரு வேலையாக மொன்றியல் நகரத்துக்கு போனபோது உச்சமான பனிக்காலம். ஒரு நண்பர் பகலில் பிரதானமான காட்சிகளை காட்டிவிட்டு இரவு வேறு ஒன்றுக்கு கூட்டிச் சென்றார். பனிப்புயல் அடித்த இரவு என்றபடியால் குளிர் என் சருமத்தை தாண்டி, தசையை தாண்டி எலும்பை தொட்டது.

மொன்றியலின் பழைய பகுதியிலும் எலும்பை தொடுகிறமாதிரி ஒரு கதை இருந்தது. 250 வருடங்களுக்கு முன்னர் மேரி ஜோசெப் என்ற கறுப்பு அடிமை இருந்தாள். காதலனிடம் போவதற்காக வீட்டுக்கு தீ வைத்துவிட்டு அவள் தப்பி ஓடியபோது அவளை வெள்ளை எசமானர்கள் பிடித்துவிட்டார்கள். சிறையில் அவளை சித்திரவதை செய்து தூக்கிலிட்டு எரித்து சாம்பலை தெரு வீதிகளில் எறிந்தார்கள். அவளுடைய ஆவி இப்பவும் அதே வீதிகளில் உலாவுவதாக நண்பன் சொன்னான். நான் பார்த்தபோது பனி தூவிய இடங்களிலெல்லாம் அந்த அடிமையின் ஆவியும் மிதந்ததுபோலவே எனக்கு தோன்றியது.

அடுத்த நாள் காலை மொன்றியலில் விமானம் ஏறியபோது எனக்கு மெல்லிய காய்ச்சல் காய்ந்தது. மொன்றியலின் குளிரோ அடிமையின் ஆவியோ என்னைப் பிடித்துவிட்டது. ஆப்பிரிக்காவின் லைபீரியா தேசத்தில் விமானம் இறங்கியபோது எனக்கு காய்ச்சல் 103 - 104 டிகிரியை தாண்டியிருக்கும். அங்கே ஏற்கனவே பதிவு செய்த ஒரு ஹொட்டல் வரவேற்பறையில் என் லைபீரிய நண்பருடைய தொலைபேசி எண்ணை கொடுத்தது ஞாபகம் இருக்கிறது. அறைக்கு வந்து படுத்ததும் தூங்கிப் போனேன். நடுச்சாமம் போல குளிர் என்னைத் தூக்கி தூக்கி அடித்தது. அங்கே இருந்த அத்தனை போர்வைகளை போர்த்தியும் போதவில்லை. அப்போது பார்த்தால் ஏசி முழு வேகத்தில் வேலைசெய்து கொண்டிருந்தது. கட்டிலில் இருந்து இறங்கி மெல்ல மெல்லத் தவழ்ந்து நகர்ந்து ஏசி சுவிட்சை நிறுத்தியது கடைசியாக நினைவிருக்கிறது. நான் மயக்கம் போட்டு விழுந்தேன்.

காலையில் நான் கண் விழித்தபோது முற்றிலும் பரிச்சயமில்லாத ஒரு வீட்டு அறையில் படுத்திருந்தேன். சுவரில் மாட்டியிருந்த படங்கள் யாருடையவை என்பது தெரியவில்லை. கணவர், மனைவி குழந்தை படம் ஒன்றும் தொங்கியது. புத்தகத் தட்டில் நான் முன்பின் பார்த்திராத பெரிய பெரிய மருத்துவ புத்தகங்கள். பிரம்பில் செய்த கூடைபோன்ற கதிரை ஒன்று கூரையிலிருந்து கயிற்றில் தொங்கியது. ஆங்கிலப் படங்களில் வருவதுபோல அந்தக் கூடையில் உட்கார்ந்து ஊஞ்சல்போல ஆடுவார்கள் போலும். மூலையில் இருந்த நிலைக்கண்ணாடியில் சற்று தாடி வளர்த்த மெல்லிய முகம் ஒன்றைக் கண்டு நான் திடுக்கிட்டேன். அது நான்தான். இன்னும் நான் எங்கேயிருக்கிறேன் என்ற கேள்விக்கு விடை தெரியாமல் குழம்பியிருந்த நிலையில் ஒரு பெண் வந்தார். சிரித்த முகம். மருந்து தந்தார், குடித்தேன். குடிப்பதற்கு கஞ்சி தந்தார், ஒரு கதை பேசாமல் அதையும் குடித்தேன்.

88ம் பக்கம் பார்க்க...

87ம் பக்கத் தொடர்ச்சி

மறுபடியும் தூங்கிவிட்டேன்.

முதல் நாள் இரவு என்னுடைய லைபீரிய நண்பர் என் நிலைமையை பார்த்துவிட்டு என்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லவே நினைத்தார். ஆனால் அந்த ஆஸ்பத்திரியில் தலைமை மருத்துவராக வேலை பார்த்தவர் ஓர் இலங்கைப் பெண், பெயர் அங்கயற்கண்ணி. அவர் தான் என்னை தன் வீட்டிற்கு கொண்டுவரச் சொல்லியிருக்கிறார். வீட்டிலே தன்னால் இன்னும் கவனமாகப் பார்க்கமுடியும் என்று அவர் நினைத்ததுதான் காரணம்.

அந்தப் பெண்ணைப் பார்த்தபோது அமெரிக்க கவி எமிலி டிக்கின்ஸன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. 'ஒவ்வொரு புது நாளும் உன் வயதைக் கூட்டுவதில்லை மாறாக உன்னைப் புதுப்பிக்கிறது.' இருபது வருடமாகியும் அங்கயற்கண்ணி வயது முதிர்ந்து தோற்றமளிக்கவில்லை. புதிப்பிக்கப்பட்டிருந்தார். ஒரு பல் சற்று வெளியே தள்ள சிரித்தபடி என்னை கவனித்தார். காலை உணவை அவரே சமைத்து எடுத்துக் கொண்டுவந்து தந்தார். மருந்தையும் கையிலே கொடுத்து நான் அதை சாப்பிடும் வரைக்கும் பொறுமையோடு காத்திருந்தார். மத்தியான வேளை ஆஸ்பத்திரியிலிருந்து இதற்காகவே வந்து என்னைக் கவனித்தார். மாலையிலும் அப்படியே. முதல் நாள் அவர் ஆஸ்பத்திரிக்கு போகவில்லை என்பதை பின்னால் அறிந்தேன். வேலைக்கு போவதற்காக வெளிக்கிட்டு பின்னர் என் நிலைமையை யோசித்து மனதை மாற்றி நின்றுவிட்டார் என்று சொன்னார்கள். சங்கப்பாடலில் 'செலவழுங்குதல்' என்று சொல்வார்கள். அப்படி இருந்தது அவர் செய்கை.



**250 வருடங்களுக்கு முன்னர்
மேரி ஜோசெப் என்ற கறுப்பு அடிமை இருந்தாள்.
காதலனிடம் போவதற்காக வீட்டுக்கு தீ வைத்துவிட்டு
அவள் தப்பி ஓடியபோது அவளை
வெள்ளை எசமானர்கள் பிடித்துவிட்டார்கள்.
சிறையில் அவளை சித்திரவதை செய்து
தூக்கிலிட்டு எரித்து சாம்பலை
தெரு வீதிகளில் எறிந்தார்கள்.**

அந்த வீட்டில் என்னைக் கவனித்தது அங்கயற்கண்ணி மட்டுமே. வேலைக்காரர்கள் இருந்தார்கள் ஆனால் அவர்கள் என் அறைக்குள் வரக்கூடாது என்ற கட்டளை இருந்திருக்கலாம். பத்திரிகைகளில் 'பல் திருத்துவதற்கு முன்' 'பல் திருத்தத்திற்கு பின்' என்று இரண்டு படங்கள் வரும். அதில் 'பல் திருத்துவதற்கு முன்' என்ற படத்தில் வருவதுபோல முகத் தோற்றம் கொண்ட ஒரு வேலைக்காரனுக்கு நான் அங்கே தங்கியது புதிராக இருக்க வேண்டும். எப்பொழுது பார்த்தாலும் ஓடிய நாய் இளைப்பதுபோல இளைத்துக்கொண்டே இருந்தான். காலையிலும் மாலையிலும் சாப்பாட்டு மேசையில் பிளேட்டுகளை முறையாக வைப்பது அவன் பொறுப்பு. இரண்டு கைகளிலும் கோப்பைகளை அடுக்கி கிளாசை வாயிலே கவ்விப் பிடித்து கொண்டுவந்து வைப்பான். விளம்பர இடைவேளைபோல சரியாக பதினைந்து நிமிடத்துக்கு ஒருதடவை அறை வாசலில் வந்து தலையை மட்டும் நீட்டி என்னை எட்டிப் பார்ப்பான். நான் இன்னும் இருக்கிறேனா என்று கண்காணித்தான் என்று நினைக்கிறேன்.

பேசுவதற்கு தெம்பு வந்ததும் ஒருநாள் மாலை அங்கயற்கண்ணி வழக்கம்போல மருந்து தந்தபோது 'நான் உங்களுடன் படித்திருக்கிறேன், ஞாபகமிருக்கிறதா?' என்றேன். அவர் 'அப்படியா?' என்றார். 'கூடைப்பந்து விளையாடும்போது சப்பாத்து நுனியில் நின்று சுழன்று பந்தை கையில் எடுத்தால் நிச்சயம் அதை கூடைக்குள் போட்டுவிடுவீர்கள்' என்றேன். 'அப்படியா?' 'தோளிலே துணிப்பையை மாட்டி புத்தகம் காவிவரும் பழக்கத்தை பள்ளிக்கூடத்தில் ஆரம்பித்ததே நீங்கள்தான்' என்றேன். அவர் அதற்கும் 'அப்படியா?' என்றார். முன்பல் கொஞ்சம் தெரிய அவர் தேன் வடிவதுபோல மெள்ள மெள்ள இதழ் விரித்தது அழகாக இருந்தது.

இரண்டு வருடம் இவருடன் ஒரே வகுப்பில் படித்த என்னை இவருக்கு அடையாளம் தெரியவில்லையே என்று நினைத்தபோது கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது. அந்த வகுப்பில் அப்பொழுதெல்லாம் என்னுடைய இருப்பு ஓர் இலையானுக்கும் கீழானதுதான் என்று கண்டபோது சிறிது வருத்தமாகவும் இருந்தது. என்னை இவ்வளவு கரிசனையாகப் பார்த்தாரே என்பது நினைவுக்கு வந்து யோசித்தபோது நடுத்தெருவில் ஒரு வழிப்போக்கர் விழுந்து கிடந்திருந்தால் அவரையும் இப்படியே கவனித்திருப்பார் என்று தோன்றியது. அவர் இயல்பு அப்படி.

ஒருநாள் காலை நண்பரும் அங்கயற்கண்ணியும் என்னை விமான நிலையத்துக்கு கூட்டிச் சென்றார்கள். லைபீரியாவில் சமிக்ஞை விளக்குகள் வீதியில் ஒரு அழகுக்காகத்தான். நண்பர் ஒரு சிவப்பு விளக்கிலும் நிற்காமல் காரை ஓட்டினார். விமான நிலையத்தில் அங்கயற்கண்ணியிடம் அவருடைய தொலைபேசி நம்பரைக் கேட்டேன். அவர் பரிசு விழுந்த பரிசு சீட்டு இலக்கத்தை சொல்வது போல நிதானமாக ஒவ்வொரு எண்ணாகச் சொல்ல நான் குறித்துக்கொண்டேன். அன்று நான் எப்படியோ விமானத்தை பிடித்து வீடு போய்ச் சேர்ந்தேன். வீட்டிலே மேலும் இரண்டு நாள் ஓய்வெடுத்து என்னைத் தேற்றிக்கொண்டேன். எங்கேயோ இருக்கும் ஆப்பிரிக்க கண்டத்தில் இந்தப் பெண் மருத்துவராகப் பணியாற்றியிருக்காவிட்டால் என் கதி என்னவாகியிருக்கும் என்று யோசித்தபோது துணுக்கென்றது.

முதலில் ஒரு நன்றி மடல் வாங்கி அனுப்பலாம் என்று நினைத்தேன். அனுப்பவில்லை. தொலைபேசியில் அவரை அழைத்து நன்றி கூறுவோம் என்று நினைத்தேன், ஆனால் கூறவில்லை. நீண்ட கடிதம் ஒன்று எழுதுவோம் என்று நினைத்தேன். எழுதவில்லை. புதுவருடம் வருகிறது அப்பொழுது ஒரு வாழ்த்து அட்டை வாங்கி அதில் 'நன்றி' என்று ஒரு வார்த்தையை கூட்டி எழுதி அனுப்புவோம் என்று திட்டமிட்டேன். அதுவும் நடக்கவில்லை. நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி பல வருடங்கள் ஓடிவிட்டன.

சமீபத்தில் அங்கயற்கண்ணி என்ற அங்கி இறந்து போய்விட்டதாக செய்தி கிடைத்தது. கொடிய ஒரு வியாதியால் பீடிக்கப்பட்டு பல நாள் வேதனை அனுபவித்து இறந்தார் என்று அறிந்தேன். 'அப்படியா, அப்படியா' என்று நான் சொன்னதற்கெல்லாம் அவர் பதிலாக சொன்னது நினைவுக்கு வந்தது. என் மனம் நோகும் என்றோ என்னவோ நேரடியாக என்னைத் தெரியவில்லை என்று அவர் கூறவே இல்லை. இனிமேல் நான் அவருக்கு என் நன்றியை சொல்ல-முடியாது.

என்றென்றைக்குமாக.



muththulingam.a@thaiveedu.com


# JRS COLLEGE

OUR COMMITMENT IS QUALITY TRAINING

## English Class

(Business Communication)

Starts on Jan 30th @01:00PM

## Cashier Training

Starts on Jan 30th @9:00AM

FREE

CPA EXAM PREPARATION

(For former JRS College Computerized Accounting students)

FREE TRAININGS

Cashier

Or

Bank Teller

Or

Food Handling

(If you enroll in any diploma course at JRS College,
Also Business Communication is free for our JRS College students)

DIPLOMA COURSES

Health Office Administrator (HOA)

Office Assistant





Accounting and Payroll Administration

Computerized Accounting





✱ Some Courses are not available in Etobicoke Campus

| Scarborough Campus | Etobicoke Campus |
|---|---|
| (Midland & Finch)<br>PH 16-4168 Finch Ave East<br>Scarborough, ON M1S 5H6<br>☎: 416-292-2455 | (Kipling & Dundas)<br>300-5359 Dundas St West<br>Etobicoke, ON M9B 1B1<br>☎: 416-207-9975 |

# கலாபன் கதை 08

## கப்பலைத் தூக்கி அப்பால் இறக்கிவிட்ட விந்தை

மூன்றாவது கப்பல் பொறியாளராக கலாபன் வேலைசெய்ய ஏறிய M.V.SEA BIRD என்ற அந்தக் கப்பல் அவனது வாழ்வில் மறக்க முடியாத ஓர் அனுபவத்தைக் கொடுத்திருந்தது. உலகத்தின் முக்கியமான இரண்டு கால்வாய்களினூடான பயணம் மறக்க முடியாததுதான்.

இவையெல்லாம் திட்டமிட்டோ, எதிர்பார்த்தோ நடப்பதில்லை. எங்கேயும் இதுவே நிலைமையெனினும், கப்பல் வர்த்தகத் துறையில் இது சத்தியமான வார்த்தை. எல்லா பயண அனுபவங்களையும் விழுங்கிவிடுகிற மாதிரி ஓர் அற்புதம் எதிர்பாராததும், திட்டமிட்டுமிராத ஒரு தருணத்தில் நடக்கச் செய்கிறது. அப்போது அதை அனுபவிப்பதுதான் விவேகம். கலாபன் அதை நன்குணர்ந்திருந்ததாகவே தெரிந்தது.

சுயஸ் வழியைக் கடந்து கப்பல் மத்தியதரைக் கடலுள் பிரவேசிதுக்கொண்டிருந்த பொழுதில்தான் இரவு 12 - 04 வேலையை முடித்துக்கொண்டு தூங்கச் சென்ற கலாபன் எழுந்து மறுபடி வேலைக்குத் தயாராக வெளியே வந்திருந்தான். சுயஸ் கால்வாயின் மேற்புறமுள்ள நைல்நதி தீரத்து அழகில் எகிப்திய அழகுராணி கிளியோபாத்திரா அன்னப்படகில் ஏறி நிலவெறிக்கும் இரவுகளில் ஓரிரு சேடிகளுடன் மட்டும் மிதந்து களித்த அழகை, தன் மெல்லிய போதையின் உந்துதலில் கற்பனைசெய்து வரலாற்றின் பக்கங்களில் பயணித்துச் சுகித்த கலாபன், வெளியே வந்தபொழுதில் விரிந்திருந்த உலகம் வித்தியாசமானதாக இருந்தது.

கிழக்கிலே சினாய் வெளி பரந்து கிடந்தது. பாலஸ்தீனத்துக்கும் மற்றும் அராபிய நாடுகளுக்கும் எதிராக இஸ்ரவேல் தொடுத்திருந்த யுத்தத்தில் எழுந்த கந்தக வெடிப்புகையை மானசீகமாக தன் நாசியில் உணர்ந்தான் அவன். நிகழ்காலச் சரித்திரத்தில் அராஜகங்களுக்கும், அநீதிகளுக்குமான ஓர் அடையாளம் இஸ்ரவேல் எனில், சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் தீராத போர்க்குணத்துக்கும் அடையாளமாக அவனளவில் பாலஸ்தீனம் இருந்தது. சரித்திரம் தன் பெருவெளி முழுக்க நிறையநிறைய ஓரவஞ்சனைகளைக் கொண்டிருக்கிறது. அதில் நிகழ்காலத்தின் மகா துயரமான பாலஸ்தீனம் ஒன்று.

சரித்திரத்தில் மகாதுயரங்களைப்போல மகாசாதனைகளும் காணக்கிடைக்கின்றன. அவன் மகாதுயரங்களிலிருந்து தன்னை விடுவித்து, மகாசாதனைகளில் நினைவை ஆழ்த்தினான்.

சுயஸ் கால்வாய் மகாசாதனைகளின் உச்சங்களில் ஒன்று என்பதில் யாருக்கும் கருத்துவேற்றுமை ஏற்பட முடியாது. அதன் தொடக்கமே பல்வேறு ரசனைகளின் நிகழ்வுகளைக் கொண்டிருந்தது. ஆசியா, ஆபிரிக்கா ஆகிய இரண்டு கண்டங்களையும் துண்டாக்கிக்கொண்டு, செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைத்த அந்த மகா முயற்சி பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஆரம்பித்ததை அவன் தன் நெடிய வாசனையில் அறிந்திருக்கிறான்.

லெப்டினன்ட் டி லெஸெப்ஸ் என்கிற பிரான்சிய அரசியலாளருக்கும், அப்போதைய எகிப்திய அரசர் முஹமட் சேத்துக்கும் இடையே ஏற்படும் ஓர் உடன்படிக்கையின் பின் சுயஸ் கால்வாயின் கட்டுமானப் பணி 1859இல் ஆரம்பிக்கிறது. இதற்கு முன் இரண்டு தடவைகள் இதுபோன்ற முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும், எகிப்திய பழங்குடி மக்களின் எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட நேர்கின்றன. அதன் காரணத்தை அறிந்தபோதிலேயே கலாபன் அதிர்ந்துபோனான்.

உலக வரைபடத்தில் மேலே இருப்பது மத்தியதரைக் கடல். அதன் கீழே எகிப்து நாடு. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைப்பதற்காக இடையிலுள்ள நிலம் வெட்டப்பட்டால், மேலே மத்தியதரைக் கடலின் நீர் எகிப்துள் புகுந்து அதை அழித்துவிடாதா என்று அப் பழங்குடி இனம் சிந்தித்ததாம். பொதுப் புத்திக்கு தர்க்கரீதியாகப்படும் இந்தக் காரணம் உண்மையில் சரியானதில்லை என்பதோடு, மேலேயுள்ள மத்தியதரைக் கடலைவிட, கீழே அதனுடன் இணைக்கப்படவிருந்த செங்கடல்தான் ஒன்று - ஒன்றரை மீற்றர் உயரமானது என்பதே நிலவியலின் வரையறை.



- தேவகாந்தன் -

இந்த உண்மையை விளக்கி எகிப்தியப் பழங்குடியினரின் எதிர்ப்பினை வெல்ல டி லெஸெப்ஸ் நிறையப் போராடவேண்டியிருந்தது. தெற்கே சுயஸ் துறைமுகமும், வடக்கே போர்ட் சேத் துறைமுகமுமாய் இரண்டு துறைமுகங்களிலும் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்பும், கால்வாயில் பன்னூற்றுக்கணக்கான கப்பல்களின் பயணத்தில் கிடைக்கும் வருவாயுமாக எகிப்திய மக்கள் நிறைந்த பொருளாதாரப் பயன்களைப் பெறுவர் என ஆசை வார்த்தைகள் கூறப்பட்டன. இறுதியில் கால்வாயின் கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்பட்டபோதும் பல்வேறு பணச் சிரமங்களால் அத் திட்ட நிறைவேற்றத்துக்கு பத்தாண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன. 1869இலேயே கப்பல்களின் பயணத்துக்கு கால்வாய் தயாராகவிருந்தது.

டி லெஸெப்ஸின் நோக்கம் உன்னதமானதுதான். ஆனாலும் சுயஸ் கால்வாயின் உரிமை பிரான்ஸ் மற்றும் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் இருந்ததில் எகிப்து எதிர்பார்த்ததுபோல் பயனேதும் பெறமுடியாது ஏமாற்றப்பட்டுப் போகிறது. நிர்வாகமெல்லாம் சர்வதேச உரிமைகளின் சட்டப் பிரகாரமே இருந்ததெனினும், ஒரு நாட்டின் வளத்தில் இன்னொரு நாடு பயனடைதல் என்பது சட்டங்களின் முரண். சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டதும் உலகம் இன்னும் சுருங்கிப்போனது. அத்திலாந்து சமுத்திரத்துக்குள் பிரவேசிக்க வேண்டிய அய்ரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள கப்பல்கள் இனி ஆபிரிக்க முனையைச் சுற்றிச் செல்லவேண்டிய அவசியமிருக்கவில்லை. நேரமும், எண்ணெயும் மிச்சமாகின. கால்வாயைக் கடப்பதற்கு பணம் செலுத்தவேண்டியிருந்ததெனினும் அது மிச்சமாகும் நேரத்தையும் எண்ணெய்ச் செலவையும் ஒப்பிடுகையில் பெரிதானதில்லை. கப்பல் வர்த்தகத்தில் மகத்தான மாற்றங்களை உருவாக்கிய முக்கியமான நிகழ்வு 101 மைல் நீளமான சுயஸ் கால்வாயின் திறப்பு. இவ்வாறான முக்கியமான ஒரு கால்வாயினூடான பயண வருமானம் உண்மையில் எகிப்திய மக்களைச் சேரவில்லையென்பது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா? அதனால்தான் சுயஸ் கால்வயை எகிப்திய அரசு 1956இல் தேசியமயமாக்கியது.

பிரான்சிய பிரிட்டிஷ் அரசுகள் கிளர்ந்தெழுந்தன. சுயஸ் கால்வயை உடனடியாக மூடியது எகிப்து. சுருக்க வழி மறுபடி நீண்ட கடல்பயண வழியாக மாறியது. பிறகு ஒரு சமரசத்தில் கால்வாய் திறக்கப்பட்டபோதும், எகிப்துவுக்கும் மற்றும் இஸ்லாமிய நாடுகளுக்கும் இஸ்ரவேலுக்குமிடையிலான ஆறுநாள் யுத்தத்தில் மறுபடி அது 1967இல் மூடப்படுகிறது. மறுபடி கால்வாய் திறக்கப்பட எட்டு ஆண்டுகள் ஆகின்றன.

சுயஸ் கால்வாயின் நீளம் 101 மைல்களானாலும் செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைத்த தரைவழி 75 மைல்களாகவே இருந்தது. அதாவது 75 மைல்கள் தூரத்தையே வெட்டவேண்டியிருந்தது. மீதி 26 மைல்களும் நதிவழிகளாகும். மன்சாலா, திம்கா, பிற்றர் நதிகள் போன்றன இக் கால்வாயின் வழிகளைப் பங்குபோட்டுக்கொண்டன. சராசரியாக கால்வாயின் அகலம் 179 அடியெனவும், ஆழம் 40 அடியெனவும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. தினசரி 50 கப்பல்கள் போக்கும் வரத்துமாய் இக்கால்வாயை உபயோகிக்கின்றன. ஒரு தொன்னுக்கு கடவைக்கூலி ஆறு பிராங்குளாக ஆரம்ப காலத்தில் இருந்ததாம். அது தேசியமயமாக்கப்பட்ட பின்னரும் ஏறக்குறைய அதேயளவான எகிப்திய நாணயமே அறவிடப்பட்டது.

கலாபன் பின்தளத்தில் நின்று பார்த்துக்கொண்டேயிருந்தான். கப்பல் மெதுவாகப் பயணித்துக்கொண்டிருந்தது. பொருத்தமான இடத்தில் அது எதிர்வரும் கப்பலுக்கு ஒதுங்கி நின்று வழிவிட்டுக் கொடுத்தது. அதுபோல் ஏற்கனவே வந்துவிட்ட கப்பல் ஒரு பொருத்தமான இடத்தில் ஒதுங்கிநின்று அதற்கு வழி கொடுத்தது. துறைமுகத்தை அண்மியதும் கப்பலை மத்தியதரைக் கடலுக்குள் இறக்குகிற வேளையில் அதனை இரண்டு பக்கங்களிலும் தொடுக்கப்பட்டிருந்த பாரக்கயிற்றின் மூலம் இழுத்தெடுத்தார்கள்.

மேலே அவன் வேலைக்கு நேரமாக சாப்பிட்டுவிட்டு இயந்திர அறைக்கு இறங்கிவிட்டான். நான்கு மணிக்கு அவன் மறுபடி மேலே வந்தபோது மத்தியதரைக் கடலில் போர்ட் சேத் அணையைக் கடந்துவிட்டிருந்தது கப்பல். நூற்றுக்கணக்கான கப்பல்கள் கால்வாயைக் கடப்பதற்கான தங்கள் நேரம் வரும்வரைக்கும் போர்ட் சேத் வாயிலில் காத்துநின்றன. கலாபன் பிரமித்துப்போனான்.

தொடர்தல் 90ம் பக்கம்

www.inayam.net

# கலாபன் கதை 08

89ம் பக்கத் தொடர்ச்சி

எத்தனை எத்தனை நாடுகளில் பதிவுபெற்ற எத்தனை எத்தனைவிதமான கப்பல்கள்! ஜேர்மன் கொடியேந்திய மேர்ஸ்க் லைன் கப்பல்கள், பிரிட்டிஷ் கொடி கட்டிய P&O Line கப்பல்கள், கிரேக்கக் கொடி பறக்கும் கப்பல்கள் என கப்பல்கள் நூறு நூறு! தானிய வகை ஏற்றும் Bulk carriers, எண்ணெய் எடுத்துச்செல்லும் Oil tankers, வாகனங்கள் கொண்டுசெல்லும் Car carriers என கப்பல்களின் பெரு அணிவகுப்பு அது. அப்படியான ஒரு கப்பலில் என்றைக்காவது தான் ஏறி வேலைசெய்யும் வாய்ப்பு வருமா? ஓர் ஆற்றாமை சூழ்ந்தது அவனில்.

மறுநாள் ஸ்பெயின் துறைமுகத்தை அடைந்தது அவனது கப்பல். அடுத்து லண்டன் துறைமுகம்.

லண்டன் துறைமுகத்தை ஒரு மாலையில் அடைந்த கப்பலில் முதலில் ஏறியது அக் கம்பெனியின் முகவரெனின், அடுத்ததாக ஏறியது ரிஸா என்ற பெண்தான். காரிலே வந்தவள் காரை துறைமுக ஓரமாக நிறுத்தி விட்டு விறுவிறென மேலே ஏறியிருந்தாள். இரண்டாம் நிலை அலுவலர் அலெக்ஸின் அறை அவளுக்குத் தெரிந்திருந்தது. நேரே அங்கேயே சென்றுவிட்டாள். அலெக்ஸி கிரேக்கன். அவளோ ஈரான்காரி. அவள் ஒரு விலைமாதாக இருக்கலாம் என எண்ணிய கலாபனுக்கு அப்போதுதான் தெரிந்தது அவள் அலெக்ஸியின் சிநேகிதியென்பது.

பின்னால் வேறு ஊழியர்கள் சொல்லி ரிஸா ஒன்றும் விலைமாதிலிருந்து பெரிதாக வித்தியாசப்பட்டவளில்லையென அவன் அறிந்து கொண்டான். அந்தக் கப்பலிலேயே மூன்றாண்டுகளாக வேலைசெய்யும் மொரிஷியஸை சேர்ந்த ஜோர்ஜ் என்ற சமையற்காரன் ரிஸா முதன்முதலில் அந்தக் கப்பலில் ஒரு விலைமாதாகத்தான் அடியெடுத்து வைத்ததை உறுதியாகச் சொன்னான். ஆனாலும் அலெக்ஸ் அவளை தன் சிநேகிதியாக்கி, லண்டன் வரும்போதெல்லாம் முன்னதாகவே அறிவித்து அவளைச் சந்தித்துக்கொண்டிருந்தான். அப்படியொரு விருப்பம் ஒரு கடலோடிக்கு ஏற்படுவதும், அதுபோன்ற இணக்கம் ஒரு விலைமாதுக்கு உண்டாவதும் சகஜம்தான் என்று ஜோர்ஜ் விளக்கினான். அவ்வாறான சிலர் சேர்ந்து வாழ்வதும், கல்யாணம்வரை கூட சென்றதும் உண்டு என்றான் அவன்.

கலாபனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்படியான தொடர்புகளை அங்கீகரித்த அளவுக்கு, அவ்வாறான தொடர்புகளில் விளையும் உறவுகளை ஏற்றுக்கொள்வது அவனுக்குக் கடினமாக இருந்தது. அதை அவன் ஜோர்ஜுக்குச் சொல்லவும் செய்தான்.

'கடலோடிகளை Merchant Nevy என்று ஆங்கிலத்திலே சொல்லுகிறார்கள். வர்த்தகக் கடலோடிகள் எனினும் அவர்களது தொழில் முறையானது ஏறக்குறைய மரபுவழியான கப்பற்படை ஊழியருக்குச் சமமானதுதான். அவர்களும் உறவுகளைவிட்டு விலகியிருக்கிறார்கள். சிலபேர் அந்த உறவுகளின்மீதான காதலுடன் காத்திருக்கவே செய்கின்றனர். ஆனாலும் சிலருக்கு காதல் எப்போதும் வேண்டியிருக்கிறது. காதலே தேவை என்பதால் மட்டுமில்லை, சிலபேர் தொழில்முறைப் பிரிவின்போது காதலில் ஏமாற்றப்பட்டதால் ஒரு வஞ்சமாகவும் அந்த மீகாமக் காதலில் விழுந்து சுகிக்கிறார்கள். அலெக்ஸுக்கும் ரிஸாவுக்கும் காதலில்லையென்று யார் சொல்லமுடியும்? அது தற்காலிகமானதாக ஆரம்பித்ததாய் இருக்கலாம். அதுவே நிரந்தரமானதாக ஆக நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன, தம்பி. பாலியல் தொழிலாளருக்கு அழகிய உடம்புகள்போல அழகிய மனங்களும் இருக்கக்கூடும். அந்த அழகிய மனத் தரிசனம் கிடைக்கிறவன் காதலனாக மட்டுமில்லை, கணவனாகவும் ஆகிவிடுவான்' என்றிருந்தான் ஜோர்ஜ்.

கலாபனுக்கு கிளியோபாத்திரா தந்திருந்த அருட்டுணர்வு முழுதுமாய் அற்றுப் போனது. காதல்பற்றிய நினைவுகளே மேலெழுந்துகொண்டிருந்தன. நீண்டநாட்களாக மனோவின் கடிதம் அவனுக்கு வரவில்லை. லண்டன் துறைமுகத்தில் எதிர்பார்த்திருந்தான். அங்கேயும் கிடைக்கவில்லை. அனுப்பிய கடிதம்தான் தாமதமாகின்றதா? அல்லது அவள் எழுதவே இல்லையா? ஏன் எழுதவில்லை? அவனது மனம் குழம்பியது. எல்லாவற்றையும் மறக்க அன்று நிறையக் குடித்துவிட்டுப் படுத்து விட்டான்.

மறுநாள் காலையில் தெரிந்தது அடுத்த பயணம் ஜப்பானை நோக்கியென்பது. அங்கிருந்து தென்கொரியா. அந்தப் பயணம் முக்கியமானது. அதில்தான் உலகத்தின் நான்கு ஐந்து முக்கியமான தொடுப்புக் கால்வாய்களில் அடுத்து முக்கியத்துவம் வாய்ந்த பனாமாக் கால்வாயைக் கடக்கவேண்டியிருக்கும்.

கப்பல் புறப்பட்டது. கலாபன் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அந்த நிகழ்வின் கணம் வந்தது. அத்திலாந்திலூடாக லண்டன் துறைமுகத்திலிருந்து பனாமாக் கால்வாயின் கீழை வாயிலை அடைந்த கப்பல் தன் முறைக்காக நங்கூரமிட்டுக் காத்துநின்றது.

மறுநாள் காலையில் மூன்று மணிக்கு இயந்திரத்தை Stand-By வைத்திருக்க கட்டளை மணி ஒலித்தது. கலாபனே அதைப் பயணத்துக்குத் தயார் நிலையில் வைத்தான். சுயஸ் கால்வாயைக் கப்பல் கடந்தபோது அதன் முழுப்பயணத்தையும் அனுபவிக்காத குறையை, பனாமாக் கால்வாய அது கடக்கும் பொழுதிலும் இழந்துவிடக்கூடாது என்ற அவதானத்தில் தன்னை கப்பல் புறப்படும்போதில் எழுப்பிவிட மெஸ் ஊழியனிடம் சொல்லிவைத்திருந்தான். அதனால் கப்பல் பதினொரு மணியளவில் புறப்படத் தயாரான பொழுதில் மேலே நின்றிருந்தான் கலாபன்.

சுயஸ் கால்வாய் போன்று நீளமானதல்ல பனாமாக் கால்வாய். அதன் மொத்த நீளமுமே 50 மைல்கள்தான். ஆனால் சுயஸ் கால்வாய் செய்த பூகோள மாற்றத்தினைப்போல் அதுவும் செய்தது. தொடுப்புண்டிருந்த வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் கூறாக்கியது. அத்துடன் அத்திலாந்திக் சமுத்திரத்தையும் பசுபிக் சமுத்திரத்தையும் இணைத்தது.

1914இல் திட்ட நிறைவேற்றம் பெற்ற பனாமாக் கால்வாய் ஆகக்கூடுதலான பொறிநுட்பம் வாய்ந்தது. அது தன் முந்திய கால்வாயின் அனுபவத்தினைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தமை தெற்றெனத் தெரிந்தது.

பூகோளத்தின் அந்த விந்தையை கலாபனால் விளங்கிக்கொள்ள முடியவில்லையெனினும், அதை அவன் அனுபவித்தான்.

பனாமாக் கால்வாய் எண்பத்தைந்து அடி உயரமான மூன்று கட்ட அணைகளைக் கொண்டிருந்தது. அவை Locks எனப்பட்டன. முன்கதவு பூட்டியிருந்த முதல் அணைக்குள் கப்பல் புகுந்ததும் பின் கதவு பெரிய இயந்திரங்களின் உதவியினால் இழுத்து மூடப்படுகிறது. நீரிறைக்கும் ராட்சத பம்புகளின் மூலம் சர்சர்…என நீர் அணைக்குள் கொட்டப்படுகிறது. கப்பல் அங்குலம் அங்குலமாக மேலே எழும்புகிறது. ஏற்கனவே இரண்டாம் அணையில் குறிப்பிட்ட ஓர் உயர்மட்டத்தில் நீர் நின்றுகொண்டிருக்கும். இந்நிலையில் அதன் அளவுக்குச் சமமான மட்டத்துக்கு முதல்கட்ட அணையின் நீர் வந்ததும், ராட்சதப் பம்புகள் நிறுத்தப்பட்டு, முன்பக்கமாக உள்ள வாயில் திறக்கப்படுகிறது. கப்பல் அப்படியே இரண்டாம் அணைக்குள் வலித்திழுக்கப்படுகிறது.

இரண்டாம் கட்டத்துள் விஷேசம் எதுவும் நடப்பதில்லை. உள்ளே வந்த கப்பல் இரண்டாம் கட்டத்தின் பின்கதவு பூட்டப்பட்டு, முன்புறக் கதவு திறக்கப்பட அதேயளவு நீர் உயரமுள்ள மூன்றாம் கட்டத்துள் நகர்த்தப் படுகிறது.

ஆனதும் மூன்றாம் கட்டத்தின் பின்கதவு பூட்டப்படுகிறது. கப்பல் ஓர் அடைப்புக்குள் இருப்பதுபோலானதும் அதிலிருக்கும் நீர் இறைத்தெறியப்படுகிறது. கப்பல் அங்குலம் அங்குலமாக கீழே இறங்குகிறது. நீர் கடல் மட்டத்துக்கு வந்ததும் மூன்றாம் அணையின் முன்கதவு திறக்கிறது. கப்பல் மெதுமெதுவாக வெளியே வலித்திழுக்கப்படுகிறது.


கப்பல் மூன்றாம் கட்டத்தைத் தாண்டியதும் ஒரு சிறிது தூரத்துக்கு அதே பகுதியில் நிறைந்த அனுபவம் வாய்ந்த பைலட்டின் கட்டுப்பாட்டில் கப்பல் எடுத்துச் செல்லப்படுகிறது. பிறகு கப்பல் கப்ரனிடம் அது கையளிக்கப்பட்டு பூம் பூம் என சைரன் அடித்துப் பின்தொடர்ந்து வரும் Pilot Boardஇல் பைலட் இறங்கிச் செல்கிறார். கப்பல் தன் சுயாதீனப் பயணத்தைத் தொடங்குகிறது.

அந்தக் கப்பலின் Net tonnage 18,000 தொன். Gross tonnage 14,000 தொன். ஆக மொத்தம் 32,000 தொன் நிறையையும் ஒரு பொறி முறையில் ஏற்றி இறக்கிய விந்தை அற்புதமாக இருந்தது கலாபனுக்கு. பொறியியல் விஞ்ஞான வளர்ச்சிகள் செய்திருக்கும் இன்னும் எத்தனை விந்தைகளைக் காணமுடியப்போகிறதோ! மனித வரலாறானது அரசர்களினதும் நாடுகளினதும் யுத்தங்களும் மரணங்களும் அழிவுகளும் மட்டுமானதில்லை, அது விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளாலும் தான் படைக்கப்படுகின்றதென்ற உண்மையை முதன்முதலாக உணர்ந்தான் கலாபன்.

உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சி சமூக உறவுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது எவ்வளவு நிஜமோ, அதுபோல் மனித சமூகத்துக்கு அயராது சிந்திக்கும் விஞ்ஞானிகளாலும் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன என்பதும் நிஜம். நாம் வீரர்களைப் போற்றுகின்றோம். வீரர்களைக் கொண்டாடாத தேசத்தில் வீரம் மறைந்துபோகுமென்றான் பாரதியும். ஆனாலும் உரிமைக்காகக் குரல் கொடுத்து, நாட்டுக்காகப் போரிட்டு மாண்ட அத்தனை போராளிகளும் வீரர்களும்போலவே மருத்துவ, விஞ்ஞான மற்றும் புவியல் ஆய்வாளர்களும் போற்றப்படவேண்டும் என்ற பிரக்ஞை மிகக்கொண்டான் கலாபன்.

லண்டனிலிருந்து கலாபன் அனுப்பியிருந்த கடிதம் கிடைத்த நான் அதைத் திறந்து படித்தபோது அதிர்ந்துபோனேன். காமமும் காதலும் என்ற தலைப்பிடாவிட்டிருந்தாலும் கடிதம் அந்த விஷயத்தைத்தான் பேசியது. தன் கப்பலில் வேலைசெய்யும் இரண்டாவது அதிகாரிக்கும் லண்டனில் வசிக்கும் ஓர் ஈரான் நாட்டுக்காரிக்கும் இடையிலான காதலை அவ்வளவு அற்புதமாக விளக்கியிருந்தான் கலாபன். 'சரீரமுடான யாத்திரைகளில் சில பேர் மனங்களைக் கண்டடைகிறார்கள். மனங்கள் கண்டடையப்பட்ட பின் சகதியில் கிடந்ததானாலும் அச் சரீரங்கள் ஆராதனைக்குரியனவாகி விடுகின்றன. இந்த மகிமையைச் செய்ய காமத்துக்குத் தவிர வேறு எதற்குச் சக்தி உண்டு?' என அந்தக் கடிதம் முடிந்திருந்தது.

அந்தக் கடிதத்தை மூன்றாவது தடவையாக படுக்கும்போதும் ஒரு தரம் படித்தேன்.



devakanthan@thaiveedu.com

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

பெப்பிரவரி மாதக் குறிப்புகள்

- நீண்ட விடுமுறை (long Weekend)ஐ கொண்டாடும் முகமாக குடும்ப நாள் இம்மாதம் 15 ஆம் திகதி (Family day Holiday) ஆகும். இதனைக் குடும்பத்துடன் கொண்டாட ஆயத்தமாகுங்கள்.
- இம்மாதம் 14ஆம் திகதி வலன்ரைன் நாள் (Valentines day) காதலருக்கு மட்டுமே உரிய தினமல்ல. இந்நாள் உங்கள் வாழ்வில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் அன்பைத் தெரிவிக்கும் நாளாகும். இதனை வெளிக்காட்டுமுகமாக உங்கள் வீட்டை அலங்கரித்து வலன்ரைன் நாளின் சந்தோஷத்தை உங்கள் வீட்டினுள் கொண்டுவாருங்கள்.
- வரப்போகும் வருமானவரி காலத்திற்காக ஒரு கோவையை (File) ஆரம்பிப்பதுடன் உங்கள் வரி வேலைகளை செய்வதற்காக வரி ஆலோசகருடன் ஆலோசிப்பதற்காக ஒரு நேரத்தைக் குறித்துக் கொள்ளுங்கள் (Appointment).
- உங்கள் வருமான வரியை E-File மூலம் அனுப்புவதாக இருந்தால், அது பெப்ரவரி 15ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றது.
- நீங்கள் RRSPஐ வாங்குவதாக இருந்தால், கடைசி வரை பொறுத்திராமல் கடைசிநாளான (Deadline) இம்மாதம் பங்குனி (March) மாதம் 1ஆம் திகதிக்கு முன் வாங்குவதன் மூலம் 2009 வரியினை சேமியுங்கள்.
- உங்கள் வீட்டில் காணப்படும் கம்பளி மற்றும் நிலப்பகுதிகளை பரிசோதியுங்கள். நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு கம்பளியைச் சுத்திகரியுங்கள். பருவகாலத்திற்குப் பின் இடம் பெறும் மலிவு விற்பனையில் கம்பளிகளை வாங்கிப் பயன்பெறுங்கள்.
- வசந்தகாலத்திற்கு ஆயத்தம் செய்யுமுகமாக விளையாட்டு உபகரணங்களான துவிச்சக்கரவண்டி, டெனிஸ் மட்டைகள் ஆகியவற்றை நல்ல நிலையில் வைத்திருக்குமுகமாக துப்பரவு செய்யுங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி, யன்னல்களைத் துப்பரவு செய்து அதன் பிணைச்சல்களை ஈரலிப்பாக்குங்கள்.
- சுவர்கள், தளம் (Floor), தளபாடம், நிலம் ஆகியவற்றை Vacuum செய்யுங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி, சலவை இயந்திர குழாய்களில் உள்ள வெடிப்புகள், கசிவுகளை பரிசோதியுங்கள். உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி அவசியமெனின் அவற்றை மீள அமையுங்கள்.
- வீட்டிலுள்ள அலுமாரிகளை சுத்தமாக்குங்கள்
- உங்கள் வீட்டுக் கூரைகள், பீலிகள் என்பவற்றில் கசிவு காணப்படுகின்றதா என்பதைப் பரிசோதிக்கவும். திருத்தங்கள் இருந்தால் அதற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கள.
- வீட்டுக்கூரைகளில் பனியும் உறைபனியும் தொங்கிக் கொண்டிருந்தால் அவற்றை அகற்றுங்கள்
- வீட்டைச் சுற்றி நடைபாதையோரங்களில் பனிக்கட்டி படர்ந்திருந்தால் அவற்றை அகற்றுங்கள்.
- வீட்டின் வெளிப்புறத்தில் மரங்களையும் புதர்களையும் அளவாக வெட்டி இறந்த மற்றும் நோயுற்ற கொப்புகளை அகற்றுங்கள்.
- மண் காய்ந்திருந்தால் வெறுமையான பூந்தோட்ட படுக்கைகளை கிளறி விடுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**






Medical Office,
Professional Finished
Kennedy/Finch
**List: $399,000**



BRAMPTON
Bovaird/Chinguacoucy
1,211 Sq Ft
$ 320 for sale OR
**$30.00 Per Sq Ft for lease**



MARKHAM
**$25.00** Sq Ft Net
Markham/Highland



MARKHAM
Riverwalk Dr/9th Line
4 Bedroom 4 Washroom
**$629,900**



TORONTO
**$ 240,000** 1,440 Sq Ft
Markham Rd
Steeles Ave



**ESA PARA ESANANDA**
Real Estate Broker (Full Time)

*Residential / Commercial*
*Homelife / Superstars*
*Real Estate Ltd. Brokerage*
(Each office is independently Owned and Operated)

www.esapara.com
email: pesananda@trebnet.com

Cell: 416.833.5887
416.768.4213
Toronto: 416.740.4000
Brampton: 905.792.7800
Mississauga: 905.629.0000
Fax: 905.712.4504


**HomeLife Superstars Real Estate Limited Brokerage**





**Fieldgate Video - Multi-Media International Video Store - Mississauga**
Location: Dixie / Bloor
A Well Established Business Since 1989. Same Owner For 21yrs. Surrounded By Over 1000 Rental Apartments. Large European Clientele. Multi Media Transfers, Conversions, Rent, Sell Balkan DVD (Large Inventory), English DVD, Indian DVD, Polish DVD and Phillipino DVD Potential To Add: Sale & Repair of Cell Phones, Accessories, Editing Room, Money Transfer and Many More.
**Asking Price: $89,900.00**
**(Includes All Chattels, Equipment and Large Inventory)**




**Mike Cleaners - Full Alterations & Repairs - Mississauga**
Location:
Creditview / Bristol
Excellent Opportunity For Entrepreneurs.
Same Owner For 12yrs.
Established Large Clientele.
Plaza Surrounded by residential homes
**Asking Price: $ 83,999.00**



**Dollar & Deal Store - Mississauga**
Location:
Creditview / Bristol
Great Opportunity To Have Your Own Business.
Potential to add other services.Large Inventory.
Plaza Surrounded by residential homes
**Asking Price: $79,900 Plus Stock**



**Fast Food / Take Out Restaurant- Mississauga**
Location:
Dundas /Hurontario
Take Out SriLankan / Indian Restaurant With Established Clientele.
Great Potential To Double Sales
Motivated Vendor
**Asking Price: $69,900**

## காதல் வாழ்க்கை - 14

# வறுமை வரினும் வற்றாது அன்பு

வி. கந்தவனம்

இல்லற ஓடம் என்றும் இன்பக் கடலில் ஓடுவதில்லை. வருவாய் ஒருசீராக எப்பொழுதும் வருவதில்லை. வருவாய் குன்றியவிடத்தும் விருந்தோம்பல், சுற்றம் ஓம்பல் முதலாய இல்லறக் கடமைகளை வழுவாது செய்தல் வேண்டும். இதனால் இருக்கின்ற கைப்பொருளும் இல்லாது போகும். வெறுமை வறுமையாகும்.



வறுமையிலும் கொடியது ஒன்றுள்ளது. அது யாதெனில் விருந்தினரை உபசரியாது விடுதல்.

'இன்மையுள் இன்மை விருந்தொரால்' என்பது திருக்குறள். விருந்தினரை உபசரிக்கும் மேன்மக்கள் வறுமை வந்தக்கால் முதலிற் செய்வது தமது சுகபோகங்களைத் துறத்தல்.

தனிமனை நடத்தும் தலைவியின் சிறப்புகளைக் காணச் சென்றாள் செவிலித்தாய். அவளது இல்லம் வறுமையின் பிடியில் வாடுவதைக் கண்ணுற்றாள். தலைவி முன்பு சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தவள். அவற்றையெல்லாம் அவள் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. மூன்று வேளை உண்ணுதற்கு வழி இல்லாத காரணத்தால் பொழுது மாறி உண்கின்றனர் தலைவனும் தலைவியும். என்றாலும் ஒரு விடயம் அவளுக்கு மகிழ்ச்சியை அளித்தது. வறுமையிலும் அவர்களது அன்பு வற்றவில்லை. ஒற்றுமையாகவே குடும்பம் நடத்துகிறார்கள். தலைவன் கூற்றைத் தட்டாதவளாக அவனது குறிப்பறிந்து நடக்கிறாள் தலைவி.

இவற்றைக் கேட்ட தலைவியின் தாய் தன் மகளின் இயல்புகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு வியக்கின்றாள். வியப்பை உண்டுபண்ணியது முன்பு நடந்த ஒரு சம்பவம்.

'முன்பு ஒரு நாள் மகள் சிறியவளாக இருந்த போது, அன்பிற் சிறந்த செவிலி தேன் போன்ற இனிய சுவையுடைய பாற்சோற்றை ஒளி பொருந்திய பொற் கலசத்தில் இட்டு அவளுக்கு ஊட்ட முனைந்தபோது, அவள் உணவிற் கவனம் செலுத்தாது விளையாடிக்கொண்டிருந்தாள். செவிலி பூப்போன்ற மெல்லிய சிறிய கோலைக் காட்டிச் சோற்றை உண் என்று அதட்டினாள். அதனைக் கண்ட மகள் முத்துப் பரல்களையுடைய சிலம்பொலிக்க ஓடுகின்றாள். முதுமையுற்ற செவிலியால் தொடர்ந்து ஓட முடியவில்லை. மகள் முன்றலில் இருந்த முல்லைப் பந்தரின்கீழ் நின்றவாறு, 'நான் உண்ண மாட்டேன்' என்று மறுத்துக்கூறி மீண்டும் விளையாட்டில் ஈடுபட்டாள். அப்படிப்பட்ட சொல்வழி கேளாச் சிறுவிளையாட்டுப் பெண் இன்று கணவன் சொல்லைக் கேட்டு நடக்கும் அறிவையும் ஒழுக்கத்தையும் எங்ஙனம் உணர்ந்துகொண்டாள்? கட்டிய கணவன் வறுமையுற்ற போதும் தன்னைப் பெற்று வளர்த்த தந்தையின் செல்வச் சிறப்பில் உண்ட உணவையும் நினையாது, நேரகாலத்துக்கு உண்ணாது இருக்கும் சிறு வன்மையும் உடையவளாக இருக்கிறாளே!'

பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஓக்குபு புடைப்பத்
தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீ இ மெலிந்தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்குஞ் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு
உணர்ந்தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறள்
உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ் சோறு
உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கு ஆறல்போலப்
பொழுது மறுத்து உண்ணுஞ் சிறுமது
கையளே.

(நற்றிணை 110)

இத் தாயினுடைய சிந்தனையால் நாம் அறியும் பொருள் 'வறுமை வந்துற்றாலும் தலைவனுடன் கூடிவாழும் இன்பத்தையே தலைவி பெரிதாகக் கருதுவாள்' என்பது. இந்த உண்மையைத் தனது சொந்த மகளின் நடத்தைமூலம் அவள் தெளிந்து கொண்டதையும் பார்க்கிறோம்.

'இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்றில்லை' என்பது அவ்வையாரின் மூதுரை. நல்ல குணம் உள்ள அன்புள்ள மனைவி வீட்டில் இருந்தால் அவ்வீட்டில் இல்லாத பொருள் ஒன்றும் இல்லை என்பது இதன் பொருள். அதாவது, அவ்வீட்டில் எல்லாப் பொருளும் இருக்கும்.

தமிழர் குடும்பங்களிலே கணவன் மனைவியர்கிடையில் இன்று காணப்படும் பலவகையான பிரச்சினைகளுக்கு அடிப்படையாக உள்ள காரணம் அன்பு இல்லாமையேயாகும்.

> **"நல்ல குணம் உள்ள அன்புள்ள மனைவி வீட்டில் இருந்தால் அவ்வீட்டில் இல்லாத பொருள் ஒன்றும் இல்லை"**

அன்பு இன்மைக்குப் பேச்சுத் திருமணம் ஒரு காரணம் என்று சமூகவியலாளர் கருதுகின்றனர். தமிழ் ஈழத்து மக்கள் மத்தியில் பேச்சுத் திருமணங்கள் பெரிதும் மாப்பிளை - பெண்பிளை சம்மதத்துடனேயே நடைபெறுகின்றன. சம்மதம் அன்பு உணர்ச்சியின் அடிப்படையிலேயே கொடுக்கப்படுகின்றது. திருமணத்தின் பின் அந்த அன்பை வளர்த்தல் தமிழர் மத்தியில் இனறிமையாத குடும்பக் கலையாகி விட்டது. இந்தக் கலை தெரியாதவர் திருமணங்கள் தோல்வி அடைகின்றன.

தோல்விக்குக் காரணம் அன்பு பெரிதும் ஒருவழிப்பட்டிருத்தல். கணவன்மீது மனைவி மட்டும் அன்புடையவளாக இருந்தாற் போதாது. கணவனும் மனைவியிடத்து அன்பு பாராட்டுதல் வேண்டும். அதாவது, அன்பு இருவழிப்பட்டதாக இருத்தல் வேண்டும். காதல் என்பது உள்ளப் புணர்ச்சி, இரண்டு உள்ளங்களும் ஒன்றோடொன்று கலந்து எந்நாளும் உறவாடுதலே இல்லறத்தின் இரகசியமாகும்.

அன்பே உயர்ந்த செல்வம். அது அனைத்தையும் ஈட்டவல்ல அற்புத சக்தி. இல்லறத்தில் அதனை வளர்க்க வேண்டியது கணவனதும் மனைவியினதும் கூட்டான கடமையாகும்.



kandavanam.v@thaiveedu.com

**TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL**

**தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி**

- Standard First Aid & CPR Level "C" - 2 Days Program
- Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program
- CPR Level "A" - 4 Hours Program (Adult)
- CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant)
- CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

**Dr. Kandiah Senthilathan**

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)


647-801-9252
416-502-9252

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

Century 21
Affiliate Realty Inc. Brokerage
Off: 416.290.1200
Dir: 416.908-6003

Ellesmere/Morningside
Investment Propety

2+1 BR, 2 WR

16th Ave.& 9th Line
Freehold Endtownhouse

3 BR, 3 WR

Salem & Taunton
Brand New House

4 BR, 3 WR

Salem & Tauton

4 BR, 3 WR



CALL 416.908.6003 SAVE MONEY

பகீரதன் சகாதேவன்
முழுநேர விற்பனை முகவர்

# வீடு, வியாபாரம், காணி

## வாங்க விற்க அழையுங்கள்!










*Call Pat to Sell Your Home…for TOP DOLLARS*

**NEED MORE HOMES FOR BUYERS**
**2.5% com**

**EXPERIENCE! COMMITMENT! RESULTS!**

## Pat Pushpakanthan 416- 894-1187



email: rpushpakanthan@trebnet.com

## Pat Pushpakanthan

**Real Estate BROKER**

**CENTURION AWARDS 6 yrs**
**Top producer 7 years**
**Masters Hall of Fame 07**

Century 21
Brokerage AFFILIATE REALTY INC.
80 CORPORATE DR. TORONTO, ONT. M1H 3G5
416-290-1200

## 416 490 7653 (SOLD)

email: rpushpakanthan@trebnet.com

**East Scarborough**

BRAND NEW HOME
3BM 3 WSRM

**Stoufville**

Detached home newer home , 9' ceiling 4 bm 3 wsrm

**Markham/14 th ave**


Executive home
4 bm/ 5 wsrm green park built home bsmnt finished rented for 1350/-


**Markham Steeles**


Newer Home 1950 sq ft hardwood,oak stares school shoping

**Mccowan/steeles**

3 bm 3wsrm home
**Bsmnt apartment rent and live**

**Stoufville**

**One Of A Kind 5200Sqft Custom Built House On 2 Acre Lot**

Kennedy/ steeeles

3 bm/ 3 wsrm bsmnt finished

Nielson/Mclevin
**2 BM /2wsrm CONDO APT FR SALE**

**$153 900**
0% down pymnt
**670/- mo pymnt** mortgage call fr detail


**Warden /Stoufville**

**25 Acre Lot**

**Shepard Scar.**


S.Detached Home w attached garage, 3 bm/ 23washroom
Sep entrance


Kennedy/Ellesmere
**2 bm condo apt 119 000/-**

**Ellesmere/Scarborugh**


Luxurious Tridel Condo
2 bm/ 2 wsrm
**Mortgage pymnt 428/-**
bi week.. call for detail


Markham/Steeles

Retail location for
**sale or Lease**

Scarborough

**Business**
Successful Textile southasian for sale in Scarrborough

**Ajax/rosland**


Detached home
4 bm/ 34wsrm 389 000/-

Ajax/Rosland

Scarborough east
3 bm/ 3wsrm
**260 000/-**


**Ellesmere/ scar**
3bm 4 wsrm
Luxuary home finished bsmnt with kitchen
399900

Brimly/Steeles

**Close To All Amenities. Fully Fenced Yard, Enclosed Front Porch, New Paint. Pot Lights**

Scarborough
**Business**
**Bar fr sale**
**Excellent income**

Markham/Denison

Markham/Denison
Retail Location for Sale or Lease close to cotsco canadian tire and Home depot
**249 900/-**

# Mortgage 2.19% ..Refinance also.

**E**
**Your SOLD AGENT**

*This certificate entitles you to a complementary market analysis of your home's current value*

*some condition applies ** not intended to solicit to the buyers under contract *Each office independently owned and operated ** not intended to solicit property currently listed for sale *individual performance** Also available

### இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர் - 5

# ஆழத்து முத்துக்கள்

நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக்காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S.* பாலச்சந்திரன்

## 'சங்கீதபூஷணம்' சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்



ப.ஸ்ரீஸ்கந்தன்

**சங்கீதபூஷணம் சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் - ஒரு இசை சகாப்தத்தின் பதிவு**

வெள்ளை வேட்டி, வெளீரென்ற அரைக்கைச் சட்டை, மேவி இழுத்த சுருளான பாகவதர் முடி, மலர்ந்த வசீகரமான முகம், எப்போதும் சங்கீதத்தையே முணுமுணுக்கும் அல்லது விசில் இசைக்கும் உதடுகள் என்று சைக்கிளில் அவர் எங்கள் வீதிகளில் வலம் வருகின்ற காட்சி மிகவும் அலாதியானது. அரியாலை மக்களுக்கு அது ஒரு இனிய அனுபவமாக இருக்கும்.

அரியாலை மண்ணில் வித்தூன்றிப் பின்னர் தாயக மண் எங்கும் வேர் பதித்த சங்கீத-பூஷணம் ச.பாலசிங்கம் அவர்களைப் பற்றி எழுதுகிற போது கொஞ்சம் படபடப்பாகவே இருக்கிறது. இந்த மாபெரும் கலைஞன் மீது நான் கொண்டிருக்கும் அளவு கடந்த அன்பும், மரியாதையும் இதற்குக் காரணமாக இருக்-கலாம்.



பாலசிங்கம் மாஸ்ரின் கலைவாழ்வு ஆரம்-பத்தில் ஒரு நாடகக் கலைஞனாகவே அமைந்திருந்தது. இதற்கு அடிகோலியவர் இவரது தந்தையரான அண்ணாவியார் சபாபதி அவர்களாகும்.

அரியாலையூரின் பழம்பெருங் கலைஞர்-களிடம் குறிப்புகள் எடுத்த போதெல்லாம் அவர்கள் அடிக்கடி உச்சரித்த பெயர் அண்ணாவி சபாபதியார் என்பதாகும். பெரிய-தம்பி சபாதிப்பிள்ளை என்ற அண்ணாவி-யார் சபாபதி அவர்கள் அரியாலையிலும், யாழ்குடா நாட்டின் பலபாகங்களிலும் இசை நாடகங்களை மேடையேற்றிப் பெருமை சேர்த்தவர். சதி அனுஷியா, பவளக்கொடி, கிருஷ்ணன் தூது, இளங்குமரன், தூக்குத் தூக்கி, நளன் தமயந்தி, மனோகரா, பனை-யரசன், காத்தவராஜன், ஜயாதி, பதிபக்தி, அபிமன்யு, பூதத்தம்பி என்பன அண்ணாவி-யார் நெறியாள்கை செய்த நாடகங்களில் சில.

இவ்வாறு புகழ் பூத்த நாடகக் கலைஞனின் ஆறாவது புத்திரரான பாலசிங்கம் அவர்கள் ஆரம்பத்தில் நாடகங்களில் பெண் வேடங்-களை ஏற்று சிறப்பாக நடித்து வந்தார். 1950இல் அரியாலை சனசமூக நிலையத்தில் மேடையேறிய நளன் தமயந்தி நாடகத்தில் தமயந்தியாக வேடமேற்றுப் பெரும் புகழ் பெற்றுக் கொண்டார். அண்ணாவியார் சபாபதி அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட இந்நாடகத்தில் ஒலிபொருக்கி இல்லாமலேயே நடிகர்கள் பாடி நடித்தது குறிப்பிடத்தக்கது. இதில் பிரபல நடிகர்கள் ஈ.கே.குமரையா, பாலசுந்தரம், பொன்கை ஆறுமுகம் போன்றோர் நடிந்தி-ருந்தனர்.

மேலும் மந்திரிக்குமாரியில் தளபதியாகவும், மனோன்மணியில் நடராஜனாகவும் தோன்றிய காட்சிகள் இவருக்குச் சிறப்புச் சேர்த்தன. மனோன்மணி நாடகத்தில் காலம் சென்ற வீரமணி ஐயரும் நடித்திருந்தார்.

நாம் இருவர், உண்மையின் வெற்றி போன்ற மேலும் சில நாடகங்களில் நடித்திருந்தாலும் தனது தந்தையின் நாடகங்களுக்கு ஆர்-மோனியம் வாசிப்பதை பெரும் பாக்கியமாகப் பெற்று தன் இசை அறிவை வளர்த்துக் கொண்டார்.



பாலசிங்கம் மாஸ்ரர் மிகவும் அமைதியா-கவே இருப்பார். அதிகம் பேசமாட்டார். ஆயினும் நானும் அவரும் பேசுவதற்கு இந்த நாடக்கலையே காரணமாக அமைந்துபோனது. அரியாலை சனசமூக நிலைய ஆண்டு விழா-வில் பிரதான நாடகமாக "ஆத்மாவின் இராகம்" என்ற எனது நாடகம் மேடையேறி-யது. கலைகளில் கால் பதித்தவர்கள் புனித மாக வாழவேண்டும் என்ற கருவை, ஒரு சங்கீத வித்துவானை மையப்படுத்தி எழுதிய நாடகம். அவருக்குப் பிடித்திருக்க வேண்டும். நாடகம் பற்றி நிறையவே என்னுடன் பேசினார். அன்றிலிருந்து இன்று வரை அந்தத் தொடர்பு இருந்து வருகிறது.

நிற்க, தமிழிசை உலகம் அறிந்த இந்தக் கலைஞனின் இசையோடிணைந்த வாழ்வின் பக்கங்களை சற்று விரிவாகப் பார்ப்போம்.

கீர்த்தனைகள் என்றால் தெலுங்கில் இருக்க வேண்டும் என்ற நிலையை மாற்றி தமிழிசை-யை முன்னிலைப்படுத்திய இவரது முயற்சியே ஒரு முக்கியமான கலைஞராக இவரை அறிய வைத்தது.

இவரது இசைப்பயணம் ஒரு நீண்ட பரிமா-ணத்தைக் கொண்டது.

சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நான்கு வருடங்கள் கர்நாடக இசையை முறைப்படி பயின்ற இவர் 1959ஆம் ஆண்டு "சங்கீத பூஷணம்" பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். அங்கு இசை பயிலும் காலத்தில் இசையரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர், சங்கீத பூஷணம் ரி.கே.ரங்காச்சாரியார், மன்னார் குடி இராஜ கோபால்பிள்ளை, ரி.என்.சிவசுப்பிரமணியம் பிள்ளை, மயிலம் பி.வஜ்ரவேல், எஸ்.பார்த்த-சாரதி ஆகியோரிடம் பயின்று தனது கலை-யை வளர்த்துக் கொண்டார்.

இவரது இசை அரங்கேற்றம், 1959 புரட்டாதி 2 ஆம் திகதியன்று யாழ் நகரசபை மண்ட-பத்தில் அப்போதைய அரசாங்க அதிபர் ம.ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இசை ஆசிரியராகப் பணியாற்றிய இவர் சங்கீதபூஷணம் பால-சிங்கம் அவர்கள், பின்னர் சங்கீதபூஷணம் ஆ.நமசிவாயம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க யா/அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் இசை ஆசிரியராக பதவி ஏற்றார். 1959இலிருந்து 1995 வரை அங்கு தமிழிசை யைக் கற்பித்தார்.

இந்தக் காலகட்டத்தைத் தமிழிசையின் பொற்-காலமாகக் கொள்ளலாம். குறிப்பாக குடா நாட்டுத் தமிழர்களுக்கு இது பொருந்தும். இசை வகுப்புகள், இசைப் பரீட்சைகள், இசைப் போட்டிகள், இசை விழாக்கள் என்று நல்லூரும் அதனை அண்டிய பகுதிகளும் களைகட்டியிருந்த காலம். நல்லூர்க் கந்தசாமி கோயில் வீதியில் மக்கள் நிறைந்திருக்க இசை விழாக்கள் கோலகமாக நடந்தேறின.

தந்தையார் அண்ணாவியார் சபாபதி அவர்கள் அரியாலையூர் நாடகக்கலைக்கு ஆற்றிய பங்களிப்புப் போல பாலசிங்கம் அவர்களும் அரியாலையின் இசை வளர்ச்சிக்குப் பெரும் பாடுபட்டார். அரியாலை சித்தி விநாயகர் ஆலயச் சூழலில் விசுவநாதன் இசைக்கல்-லூரியை ஆரம்பித்து இசை வகுப்புகளையும் இசை விழாக்களையும் நடாத்தி வந்தார். கோயில் முன் வீதியில் நடைபெற்ற இவ்-வாறான ஒரு இசைவிழாவில் சங்கீதபூஷணம் ராம் குமாரசாமி அவர்கள் பாடிய "ராமனுக்கு மன்னன் முடி தரித்தானே" என்ற பாடல் இன்னும் என் நினைவில் இருக்கிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் அதிவிசேட பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழிசைக் கச்சேரிகளை நடாத்திப் பிரபலம் பெற்ற பாலசிங்கம் அவர்கள் உருவாக்கிய பல மாணவர்கள் இன்று பல பகுதிகளிலும் இசை வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருவது சிறப்பான அம்சமாகும்.

இவரது மாணவர்களில் திருமதி.குணபூஷணம் நாகராஜா (நோர்வே), சங்கீத வித்துவான் மா.யோகேஸ்வரன் (லண்டன்), சங்கீத வித்துவான் வை.யாதவன் (லண்டன்), சங்கீத கலாவித்தகர் சி.நாகராஜா (கொழும்பு), இசைக்கலைமணி உதயராணி முனீஸ்வரன் (முள்ளியவளை), சங்கீத வித்தகர் மகேஸ்வரி சுப்பிரமணியம் (யாழ்), இசைக்கலாவித்தகர் நவமணி பத்மநாதன் (கொழும்பு), சங்கீத வித்துவான் தில்லைமணி (யாழ்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தற்போது பாலசிங்கம் அவர்களது புதல்வி-களும் கலைப்பரம்பரையின் நீட்சியாக இசைப் பாரம்பரியத்தைப் பேணி வருகின்றனர். மூத்த புதல்வி இசைக்கலைமணி கல்யாணி சுதர்சன் அவர்கள் கனடாவில் வீணை, இசை வகுப்பு-கள் நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே.

சங்கீதபூஷணம் ச.பாலசிங்கம் அவர்களது இசைத்தொண்டினைப் பாராட்டி யா/திருமறைக்-கலா மன்றம், கனடா இளங்கலைஞர் மன்றம் விழாவெடுத்துக் கௌரவித்துள்ளனர். 80 வயதை நிறைவு செய்துள்ள இவர் தமிழிசை வளர்ச்சியையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இனிதே வாழ்ந்து வருகின்றார்.

2003 இல் கனடா வந்த போது அரியாலை மக்கள் எடுத்த பாராட்டு விழாவில் இவர் பாடிய தண்டபாணி தேசிகரின் "தாமரை பூத்த தடாகமடி – எங்கும் தமிழ் மணம் தேன் பொங்கிப் பாயுதடி" இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இந்த இசைத் தடாகத்தில் மென்மேலும் தமிழிசை என்றென்றும் பெருகிப் பாய வேண்டும்.

sriskanthan.p@thaiveedu.com

தொடர்தல் 87ம் பக்கம்

இணைந்துகொள்ளுங்கள்!
இப்போது
facebookஇலும்
'தாய்வீடு'
www.facebook.com/thaiveedu

# THINKING OF BUYING OR SELLING!!



Mccowan/Finch (Scarborough)
B/R 2+1, W/R 2



Middlefield/Finch (Scarborough)
B/R 2+1, W/R 2



Middlefield/Finch (Scarborough)
B/R 4+1, W/R 4



Neilson/Mclevin (Scar)
B/R 2+1, W/R 1



Mccowan/Eglinton (Scar)
B/R 3+1, W/R 2



Brimley & Steeles (Scar)
B/R 3+1, W/R 2



Meadowvale/Sheppard (Scar)
B/R 2, W/R 1



Williams Parkway/Norht Park Dr
B/R 3, W/R 4



Victoriapark & Finch (Scar)
B/R 4+1, W/R 4



Mccowan/401 (Scar)
B/R 1, W/R 1

**Also Contact in Regards to Investing in**
**Newly Built HOMES - CONDOS - COMMERICAL PROPERTIES**

## INCREASING AMOUNT OF POWER OF SALE PROPERTIES ARE AVAILABLE

*Full Time Realtor* முழுநேர விற்பனை முகவர்

**Thanks to all my clients for their continuous support**



CLUB AWARDS WINNER

HomeLife Higher Standards

**HomeLife/Future Realty Inc.,**
**Brokerage***
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
**B: 905.201.9977 F: 905.201.9229**
*Independently Owned and Operated, REALTOR



**Raja V.S. Rajagopal**
Sales Representative
**Dir : 416.727.8647**
**Email : sinnahrajagopal@gmail.com**

**www.sinnarajagopal.com**



# மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்

## The Gore Rd/ Hwy 7




**$1,100,000**


Detached 2- Storey,
4+2 Bedrooms,
5 Washrooms

**Hwy 10/Bovaird**





**$272,750**
Semi-Detached 2 Storey

**Vankirk / Mayfield**




**$363,500**
Detached 2-Storey

**Brisdale/Sandalwood**




**$370,000**
Detached 2-Storey

**Bovaird/Worthington**




**$428,000**
Detached 2-Storey

**Cottrelle /Gore**




**$469,000**
Detached 2-Storey

**The Gore/Ebenezer**




**$535,000**
Detached Bangalow

**The Gore/Ebenezer**




**$680,000**
Detached 2-Storey

**Gore/Ebenezer**



**$339,000**
Att/Row/Twnhouse 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**Castlemore Blvd / Goreway Dr.**



**$374,905**
Semi-Detached 2-Storey, 4 Bed-rooms, 3 Washrooms

**Mcvean / Castlemore**



**$479,900**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms

**Mcvean/Hunts Point**




**$479,900**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms

**Castlemore/ Mcvean**



**$529,900**
Detached 2-Storey, 4 Washrooms, 4 Bedrooms

**Airport Rd/Mayfield**



**$572,990**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms

**Mcvean/ Hwy 7**



**$719,990**
Detached 2 Storey, 5 Bedrooms, 4 Washrooms

**Castlemore & Goreway**



**$969,900**
Detached 2-Storey, 5 Bedrooms, 5 Washrooms

-digi Media-

**Call before you list, See the Difference!!!**



**TOP PRODUCER - 2009**

# Ruby Thambiah

Sales Representative

Dir: **416-999-5337**

Tel: 905-201-9977
Fax: 905-201-9229

rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com

HOMELIFE
HIGHER STANDARDS

## HomeLife/Future


**Realty Inc. Brokerage**

Independently Owned and Operated

205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

# ‘வில்லிசை வேந்தன்’ சின்னமணி

**‘சோக்கெல்லோ’ சண்முகம்**



### வில்லிசைக்கு ஒரு வேந்தன் சின்னமணி

கண்ணகி, சத்தியவான், சாவித்திரி, பட்டினத்தார் இவரது புகழ் சேர்த்த வில்லிசை சில.

வில்லுப்பாட்டில் சின்னமணி ஒரு வரலாற்று நாயகன். திறமையை இவர் வளர்த்துக்கொண்டவர் என்று சொல்வதைவிட இவருக்கு இசையும் நளினமும் உடம்போடு ஒட்டிப் பிறந்தன என்றே கூறலாம். கறுத்த உருவம், திருநீற்றுக்குறியும், சந்தனப் பொட்டும், பூனூலும் பளிச்சென்று தெரியும். குங்குமம் இவருக்கு வாலாயம்.

சின்னமணி ஐயா இப்போது எழுபத்துமூன்று வயதைத் தாண்டிச்சென்று கொண்டிருக்கிறார்.

எனக்கு அவரைவிட ஒரு வயது கூட. ஆனால் இன்றும் என்னைத் ‘தம்பி’ என்று ஆசையோடு கூப்பிடுவார். நான் அதைத் திருத்த முயலவில்லை. கலையுலகில் என்றும் அவர் தம்பியாகவிருக்கவே நான் ஆசைப்படுகின்றேன் - இராம இலட்சுமணர்கள்போல்.

### “பல்லும் சொல்லும் போகாத கலாவிநோதன்”


மாதனையில் பிறந்த இவர் இன்றும் அச்சுவேலயில் வாழ்கின்றார். மாதனை கலைகளின் பிறப்பிடம். அங்குள்ள அம்மனிடம் மாறாத பக்தி பூண்டவர். கண்ணகி இவரது குலதெய்வம். மகளுக்கு கண்ணகி, அச்சகத்திற்குக் கண்ணகி. தென் இந்தியாவில் கண்ணகி சிலை இடம்மாற்றியபோது கண்ணகியாகவே மாறினார். இடதுசாரி என்று தன்னைக் காட்டிக்கொள்ளாவிட்டாலும் இடது பக்கமே இதயமுள்ள ஒரு போற்றுதலுக்குரிய கலைஞர். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் இவரின் மானசீகக் குரு. கலைவாணர் வில்லிசைக் குழு சின்னமணியை தலைமைப் புலவராகக் கொண்டது. கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களுடைய குழுவில் ஆறு மாதங்களுக்கு மேல் தமிழகத்தில் பணியாற்றியவர். மணிலாவும், சிந்தாமணிக் கடலையும் இன்றுவரை இவரது பிரியமான சாப்பாடு. கடலை கொறித்துச் சாப்பிடும் அளவுக்கு இவரது பல் உறுதியாகவிருக்கிறது, தமிழ்ச் சொல்லைப்போல். என்னுடைய கிராமமாகிய ஏழாலை, மத்தி அரச மகா வித்தியாலயத்தில் படித்தவர். வியக்கும் வண்ணம் ஆங்கிலம் பேச வல்லவர். இங்கு நிகழ்ச்சிக்காக வந்தபோதுகூட கனடா கடுங் குளிரிலும் காற்சட்டை அணியாதவர். மயானகாண்ட அரிச்சந்திரன் வீ.வீ.வைரமுத்து, சத்தியவான் - சாவித்திரி யமன் சின்னமணி இரண்டும் இரண்டு முத்துக்கள்.

### இன்றும் யாழ் மண்ணில் “நாம் இருவர்”

மாஸ்டர் சிவலிங்கம், திருப்பூங்குடி ஆறுமுகம், சிறிதேவி வில்லிசைக் குழு, இராஜம் புஸ்பவனம்(காயத்திரி அம்மா) வில்லிசைக் குழு, சபா சதாசிவம் வில்லிசைக் குழு, லடீஸ் வீரமணி வில்லிசைக் குழு, உடப்பு சோமாஸ்கந்தர் வில்லிசைக் குழு, சோக்கெல்லோ சண்முகம் வில்லடிப்பாட்டுக் குழு, சின்னமணி ஐயாவின் கலைவாணர் வில்லிசைக் குழு இவற்றோடு, செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி சுலோசனா பாலசுப்பிரமணியம் போன்ற பெண் வில்லிசையாளர்கள் இந்த மங்கிவரும் கலைத்துறைக்கு வந்தாலும் தொடர்ந்து இயங்கவில்லை. இவ்வளவு பேர் இருந்தபோதும் இப்போது இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து வில்லிசைக் குழுவை நடாத்திவருகின்ற சின்னமணி, சிறிதரன் மிகவும் பாராட்டுக்குரியவர்கள். ‘நாம் இருவர்’ என பல இடங்களில் நிகழ்சிகளை நடாத்தி வருகின்றனர்.



கலாவிநோதன் சின்னமணி அவர்கள் 1996 முற் பகுதியில் இலங்கை நீர்கொழும்பில் தனது குழுவினருடன் “கண்ணகி” கதையை வில்லிசையில் சொல்கின்றார். ஹார்மோனியக் கலைஞர் புவி (தற்போது கனடாவில்) பக்கப்பாட்டு கொழும்பு கதிரேசன் தாளத்துடன். கட்டுரை ஆசிரியர் சோக்கெல்லோ சண்முகம் மற்றும் இளம் கலைஞர்கள்



சுமார் ஐம்பது வருடங்களுக்குமேல் வில்லிசைக் குழுவை நடாத்தி வருவதென்பது ஒரு மகத்தான சாதனை. அதுவும் பேரோடும் புகழோடும் அசைக்கமுடியாத ரசிகர் கூட்டத்தோடும் நடாத்தி வருவதென்பது சாதனைமேல் சாதனை.

கனடாவில் அமரரான வில்லிசைக் கலைஞர் திருப்பூங்குடி ஆறுமுகம் குழுவினரோடு இந்த நா.கணபதிப்பிள்ளை என்ற இளைஞர் பக்கப்பாட்டு, தாளம், நகைச்சுவை என்று இணைந்திருந்தார். வெள்ளை சேட்டும், வேட்டியும் சயிக்கிளுமாக யாழ்.வீதிகளில் இவரைப் பல தடவைகள், நான் பார்த்திருக்கின்றேன். அன்றிலிருந்து இன்றுவரை எனக்கும் உன்மேல் விருப்பம், உனக்கும் என்மேல் விருப்பம் என்று இணைந்திருக்கிறோம். அப்போது அவருக்கு ‘மில்க் போர்ட்’ பால்சபையில் வேலை.

இலங்கையில் வில்லிசையின் பிதாமகன் மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம். இதை சின்னமணி அவர்களே பல தடவைகள் சொல்லி நான் கேட்டிருக்கின்றேன். ஆனால் வில்லிசையில் இன்றுவரை முடிசூடா மன்னனாகத் திகழ்பவர் சின்னமணி அவர்களே. காண்டாமணிபோல் ‘ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே’ என்றிருப்பவருக்கு ஏன் சின்னமணி என்று பெயர் வைத்தார்கள் என்று ஒரு நாண்பர் கேட்டார். நானும் அதையேதான் கேட்கிறேன்.

நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களுக்கு நடனம், இசை, நடிப்பு இம்மூன்றும் அவர் எடுத்துக்கொண்ட பணிக்கு நன்கு கைகொடுக்கின்றது. இவரது மாமனார் கீதாஞ்சலி வீ.கே.நல்லையா நன்கு நடனம் தெரிந்தவர். அவரிடம் சின்னமணி நடனம் பயின்றவர். காத்தவராயன் கூத்து உட்பட பல நாட்டுக் கூத்துக்களிலும் இசை நாடகங்களிலும் நடித்து நன்கு மெருகேறியவர் சின்னமணி. அவர் உடம்பிலுள்ள ஒவ்வொரு தசைகளும்கூட தாளம்போடும். அம்மன் உடுக்கு இவர் கைக்கு மாறுகின்றபோது பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் கலை வரும்.

வேட்டைக்குப் போன இராசாவும் குழுவினரும் பொழுதுபோக்காக வில்லையும் அம்பையும் கிடைத்த பொருட்களையும் வைத்துத் தட்டி தாளம் எழுப்பி, பாடிய பாட்டு இன்று வில்லிசையாக தமிழரின் கலைவடிவமாக மாறியுள்ளது. இத்துறைக்கு வருகின்ற அனைவரையும் நாங்கள் கைகூப்பி வரவேற்கின்றோம்.

இலங்கை இந்து கலாச்சார திணைக்களம் கொழும்பிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் நடாத்திய பெருவிழாவொன்றிற்கு தென்னிந்தியாவிலிருந்து வில்லிசைக் கலைஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் வரைவழைக்கப் பட்டிருந்தனர். ஏதோ காரணத்தால் அவர்கள் வரமுடியாது போய்விட்டது. அந்த இடத்தை யாழ்ப்பாணத்திலிருந்து விமானமூலம் சின்ன மணி குழுவினர் வரவழைக்கப்பட்டு ஈடுசெய்யப்பட்டது.

ஆளுனர் விருது, கலாபூஷணம் விருது உட்பட பல்கலைக்கழகம், தமிழ் மன்றங்கள் இவருக்கு விருது வழங்கி தாம் பெருமை பெற்றன.

மாதனை மக்கள் மலர் வெளியிட்டு இவரது பவள விழாவை கொழும்பில் கோலாகலமாகக் கொண்டாடினர். காத்தவராயன் கூத்து, வில்லிசை அங்கு இடம் பெற்றது.

இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களுமாக (நான்கு) குழந்தைகள். கலைமதி என்றும், கண்ணகி என்றும், கலைச்செல்வன் என்றும், கலைரூபன் என்றும் பெயர் வைக்குமாறு அன்று யாரும் இவரை வலியுறுத்தியிருக்க முடியாது.

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இவரது வில்லிசை நிகழ்ச்சி மாதக் கணக்கில் நடைபெற்றது. மலேசியாவில் வைத்து சுப்பு ஆறுமுகம் அவர்கள் இவரை வெகுவாகப் பாராட்டினார். பூவோடு கூடிய நார்களாகிய நாங்களும் மணம்பெறுவோம்.

ஆசான்பற்றி எழுதக் கிடைத்தமைக்காக ‘தாய்வீடு’ பத்திரிகைக்கு நன்றிகள்.

sanmuganathan@thaiveedu.com

■ ■ ■

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்த கிராமத்தின் வளர்ச்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலகறியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■



# காப்புறுதி நிறுவனங்கள் காப்புறுதி திட்டங்கள் காப்புறுதி முகவர்கள் குழப்பங்கள்



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பு காப்புறுதியின் வகைகளும் அவை எவ்வாறு செயல்படும் அல்லது பயனளிக்கும் என்பது பற்றிய விடயங்களையும் நன்கு அறிந்து கொள்ளவேண்டும்.

சாதாரணமாக எம்மவர்களில் பலர் நண்பர்களுடன் அல்லது குடும்ப அங்கத்தவர்களுடன் பேசும்போது காப்புறுதி பற்றிய உரையாடல்களில் மிகவும் தவறான கருத்துக்கள் கொண்டிருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

உதாரணமாக: நண்பர் ஒருவர் அவரது நண்பரிடம் காப்புறுதிக்கு எவ்வளவு பணம் செலுத்துகின்றார் என்று கேட்க அவர், நான் மாதம் 80 டொலர் கட்டுகின்றேன் என்றார். அதற்கு மற்ற நண்பர் பதில் சொன்னார் நான் 40 டொலர் மட்டுமே செலுத்துகின்றேன். எனக்கும் உனக்கும் ஒரே வயது தான் ஏன் வீணாகப் பணம் செலவு செய்கிறாய் என்றார்.

இவர்கள் இருவரும் என்ன திட்டம் வைத்திருக்கின்றார்கள் என்று தெரியாது. அத்துடன் எவ்வளவு தொகைக்கு காப்புறுதி செய்திருக்கின்றனர், எவ்வளவு காலம் பணம் கட்ட வேண்டும், எவ்வளவு காலத்திற்கு திட்டம் நீடிக்கும் போன்ற விடயங்களைத் தெரிந்து கொள்ளாமல் 'கூடிய பணம் கட்டுபவரின் காப்புறுதி சரியில்லை' என்ற முடிவிற்கு வருவார்கள். அல்லது 'குறைந்த பணம் கட்டுபவரின் காப்புறுதி பிழையானது' என்று முடிவு வருவார்கள். எவ்வளவு பணம் கட்டுகின்றீர்கள் என்பதை விட என்ன திட்டம், எவ்வளவு காலம் நீடிக்கும், எவ்வாறு பயனளிக்கும் திட்டம் போன்ற தகவல்கள் அவசியமானது.

இன்னுமொரு வகையான நண்பர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு காப்புறுதி என்றாலே பிடிக்காது. காப்புறுதியால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களிடம் கேட்டால் காப்புறுதிக்கு பணம் கட்டுவதே தப்பானது என்று கூறுவார்கள். காப்புறுதி நிறுவனங்கள், காப்புறுதி முகவர்கள் எல்லாமே சுத்துமாத்து என்றும் கூறுவார்கள். காரணம் இவர்கள் பிழையான தகவல்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்கள். காரணங்கள்:

- சரியான காப்புறுதி திட்டத்தைத் தரமான நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளாதவர்கள்.
- தவறான அல்லது உண்மைக்கு மாறான தகவல்களை காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது கொடுத்ததால் பணம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டவர்கள்.
- முகவர்களின், உண்மைக்கு மாறான தகவல்களை நம்பி தவணைக் காப்புறுதியை வாங்கி (Term Insurance) ஆயுட் காலம் வரை நீடிக்கும் என நம்பி பாதிக்கப்பட்டவர்கள்.
- பல வருடங்களாகப் பணத்தை செலுத்திய பின்பு கடைசி நேரத்தில், தொடர்ந்து இரண்டு மாதம் பணம் கட்டாமல் காப்புறுதி ரத்துச் செய்யப்பட்டு கட்டிய பணமும் போய் காப்புறுதியும் இல்லாமல் போனவர்கள்.
- காப்புறுதி பெறும்போது மட்டும் முகவரின் சேவையைப் பெற்று, முகவரிற்கு சேவைப் பணம் கிடைத்தபின்பு, முகவரின் சேவை கிடைக்காமல் பாத்க்கப்பட்டவர்கள்.

இப்படி காப்புறுதி சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்கள் பலர் இருக்கின்றனர். காப்புறுதியால் நன்மையடைந்தவர்கள் பல மடங்கு அதிகமாக இருக்கின்றார்கள். ஆனால் பலன் அடைந்தவர்கள் தங்கள் தங்களுக்கு எவ்வளவு பணம் கிடைத்தது என்பதை பகிரங்கமாக கூற மாட்டார்கள். பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் விட்ட தவறுகளையும் பகிரங்கமாக கூற மாட்டார்கள். காப்புறுதி நிறுவனத்தையும் காப்புறுதி முகவரையும் குறை கூறுவார்கள். எனவே காப்புறுதி பெறுவதற்கு முன்பு காப்புறுதி பற்றி நன்கு அறிந்து கொள்ளுங்கள்.

முதலில், ஒவ்வொரு காப்புறுதித் திட்டங்களும் எவ்வாறு செயற்படும் அல்லது எவ்வாறு உபயோகமாகும் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

> "எந்த முகவர் மூலமோ,
> அல்லது எந்த நிறுவனத்தின் மூலமோ
> நீங்கள்
> ஒரு ஆயுட்காப்புறுதித் திட்டத்தை பெற்றாலும்
> உங்கள் மாதாந்தக் கட்டணத்தில்
> பெரிய அளவில் வேறுபாடு இருக்காது."

### அடிப்படையாகத் தேவைப்படும் காப்புறுதித் திட்டங்கள்

- ஆயுட்காப்புறுதி (Life Insurance)
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness Insurance)
- ஊனமுற்றோருக்கான காப்புறுதி (Disability Insurance).

### ஆயுட்காப்புறுதி (Life Insurance)

ஒருவர் இறந்தால் மட்டுமே பணம் கிடைக்கும் அல்லது, சில திட்டங்களில் உள்ள பணத்தின் சேமிப்புத்தொகையை (Cash Value) மட்டும் இறப்பதற்கு முன்பு பெற்றுக் கொள்ள முடியும்.

### கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness Insurance)

ஒருவர் காப்புறுதி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்பட்ட கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் காப்புறுதி தொகையை பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் காப்புறுதி பெறுவதற்கு முன்பு நோய்களால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். காப்புறுதி பெற்றுக்கொண்ட பின்பு கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டதற்கான ஆதாரம் மருத்துவர் மூலம் நிரூபிக்கப்படவேண்டும். நோய் ஏற்பட்டு 30 நாட்களுக்கு உயிருடன் இருக்க வேண்டும். 30 நாட்களுக்குள் மரணம் ஏற்பட்டால் கட்டிய பணம் மட்டுமே கிடைக்கும்

### வலுவிழந்தோருக்கான காப்புறுதி (Disability Insurance)

ஒருவர் நோய் ஏற்பட்டு அல்லது விபத்து ஏற்பட்டு வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டால், மாதாந்த வருமானத்தின் ஒருபகுதி அல்லது குறிப்பிட்ட மாதாந்த இழப்பீடு காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்படும். இந்த காப்புறுதி பெறுவதற்கு 65 வயதுக்குட்பட்டவர்கள் மட்டுமே இணைந்து கொள்ளலாம்.

### அடைமானக்கடன் காப்புறுதி (Mortgage Insurance)

ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து வீடு அல்லது வியாபாரம் வாங்கும் போது ஏற்படும் கடன் தொகையை ஈடுசெய்வதற்காக பெறப்படும் காப்புறுதி. ஒருவருக்கு மரணம், கொடிய நோய், அல்லது வேலை செய்ய முடியாது ஊனமடைந்தால், அடமானக்கடன் பெற்றுக்கொண்ட யாராவது ஒருவர் மரணமடைந்தால், அல்லது கொடிய நோயால் பாதிக்கப்பட்டால் இந்தக் காப்புறுதித் திட்டம் அவர்களின் கடன் தொகையைச் செலுத்தும்.

**அடிப்படையாக ஒருவருக்குத் தேவைப்படும் காப்புறுதிகளில் இவை நான்கும் மக்கியமானவை. இவை அனைத்தும் ஒரு தனிப்பட்டமனிதனின் தேவைகளுக்காக எடுக்கப்படும் முன்னேற்பாடு.**

- காப்புறுதியைப் பொறுத்த வரையில் எந்த திட்டம் சிறந்தது என்பதில் ஒவ்வொரு தனிமனிதருக்கும் மாறுபட்டிருக்கும். ஒவ்வொருவரும் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய திட்டங்களை தெரிவு செய்ய வேண்டும்.
- மரணம் என்பது எல்லோருக்கும் எப்போதாவது ஒருநாள் வரும் என்பதால், ஆயுட் காப்புறுதித் திட்டம் எல்லோருக்கும் பயனளிக்கும்.
- ஆயுட் காப்புறுதித் திட்டங்கள் பல காப்புறுதி நிறுவனங்களாலும், பலவிதமான திட்டங்கள் வேறுவேறு பெயருடன் விற்பனை செய்யப்படுகின்றது.
- எந்த முகவர் மூலமோ, எல்லது எந்த நிறுவனத்தின் மூலமோ நீங்கள் ஒரு ஆயுட் காப்புறுதித் திட்டத்தை பெற்றாலும் உங்கள் மாதாந்தக் கட்டணத்தில் பெரிய அளவில் வேறுபாடு இருக்காது.

ஆனால் உங்களுக்கு எந்தத் திட்டம் அவசியமானது. அதை எந்த நிறுவனத்தில் பெற்றுக்கொண்டால் உங்களுக்கு பிரதிகூலமாக இருக்கும் என்பன போன்ற விடயங்களை அலசி ஆராந்து சரியான திட்டத்தை தெரிவு செய்வதே ஆயுட் காப்புறுதி முகவரின் கடமை.

### ஒரு ஆயுட் காப்புறுதித் திட்டத்தை தெரிவு செய்யும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள்.

- உங்கள் தற்போதைய பொருளாதார நிலை.
- உங்கள் உடல் ஆரோக்கியம்.
- உங்கள் எதிர்காலத் திட்டங்கள்.
- உங்கள் குழந்தைகளின் வயது.
- அவர்களின் எதிர்காலத் தேவைகள்.
- உங்களில் நீண்டகால நித்திட்டமிடல்.

இந்த விடயங்களை உங்கள் நிதித்திட்டமிடல் ஆலோசகர், அல்லது ஆயுட் காப்புறுதி முகவர் தெரிந்து கொண்டபின்புதான் ஒரு சரியான காப்புறுதித் திட்டத்தை உங்களுக்கு அவரால் தெரிவு செய்ய முடியும்.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



RBC Insurance
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Unity Life of Canada
Canada Life

# ஆயுட்காப்புறுதிகளும் சேமிப்புத்திட்டங்களும்

## LIFE INSURANCE & RESP

- 50,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்துகொள்ளலாம்
- நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

| | Age 30 Male | Age 30 Female | Age 40 Male | Age 40 Female | Age 50 Male | Age 50 Female |
|---|---|---|---|---|---|---|
| Term 10 (R & C) $100,000 | $11.25 | $9.00 | $13.77 | $12.33 | $24.48 | $19.77 |
| Whole Life $100,000 | $38.17 | $33.63 | $57.16 | $47.36 | $106.64 | $81.75 |

### Critical Illness Insurance

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால்
2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம்
நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

•

### Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

•

### Term Insurance

குறைந்த கட்டணத்தில் அதிகூடிய தவணைக் காப்புறுதி

## RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

Canada Learning Bond upto $500.00
Government Grant upto $40%
Industrial Alliance Education Bonus 15%

TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life · RBC Financial Group · LiLAND INSURANCE INC.

இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

- ddg Media -

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

வீடு வாங்கவும், விற்கவும்.......
Ramanan Ramachandran
Real Estate Broker
Office: 416.298.3200
Cell: 416.670.6467
I ❤ Referrals
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
HOMELIFE
HIGHER STANDARDS
*INDEPENDENTLY OWNED AND OPERATED







**இம்மாதப் புகைப்படக் கலைஞர்**

## குகன் தம்பிராஜா

கனடா ரொறன்ரோவில் Building Operatorஆகக் கடமையாற்றும் திரைப்பட, நாடக நடிகராகிய இவர் தனது ஓய்வுநேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi